# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மே 2022

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ............ 12
தமிழ்நாடு செய்திகள் ............ 19
- தோட்டக்கலை மற்றும் வேளாண் கல்லூரிகள் ............ 19
- சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ............ 19
- மூன்று புதிய சரணாலயங்கள் ............ 20
- இறந்த உடலில் இருந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை ............ 20
- உணவு தானிய உற்பத்தியில் நிறைவுற்ற நிலை ............ 20
- குட்டை வகை நாட்டு மாடுகளுக்கான வளங்காப்பு மையம் ............ 21
- மலேரியா அற்ற நிலையை நோக்கி நகரும் தமிழகம் ............ 21
- புதிய முறைசார் வேலைவாய்ப்புகள் ............ 21
- அதிக வரி வருவாய் ............ 22
- இதுவரை இல்லாத அளவிலான அதிகபட்ச மின்சார நுகர்வு ............ 22
- ஐந்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் ............ 22
- காலைச் சிற்றுண்டி திட்டம் ............ 23
- தமிழகத்தில் இரும்புக் காலம் ............ 23
- சொத்து வரி உயர்வு ............ 24
- தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் - 1998 ............ 24
- மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு துணை வேந்தர் நியமனம் ............ 25
- ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு ............ 25
- மேட்டூர் அணை திறப்பு ............ 26
- 12,000வது லிங்க் ஹாப்மன் புஷ் இரயில் பெட்டி ............ 26
- 124வது ஊட்டி மலர்க் கண்காட்சி ............ 27
- கலைஞர் கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டம் ............ 27
- முன்கூட்டியே வார்த்தெடுக்கப்பட்ட அமைப்பைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட வீடுகள் ............ 27
- மு.கருணாநிதி சிலை ............ 28

தேசியச் செய்திகள் ............ 28
- 19 லட்சம் சந்தை மூலதனத்தினை எட்டிய முதல் இந்திய நிறுவனம் ............ 28
- உள்நாட்டு வழிகாட்டு அமைப்பு - ககன் ............ 28
- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா - SEHAT திட்டம் ............ 29
- மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பு காப்பீடு பற்றிய உலக மதிப்பாய்வு 2022 ............ 29
- டிஜிட்டல் இந்தியா RISC-V திட்டம் ............ 30
- MSME நிறுவனங்களுக்கான நிலைத்தன்மை சான்றிதழ் திட்டம் ............ 30
- மலேரியா ஒழிப்புக்கான தேசியக் கட்டமைப்பு ............ 31
- அசுர்கர் கோட்டைக் குடியிருப்பு ............ 31
- ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் ............ 32

மிக அதிகளவில் பொருளாதாரச் சவால்கள் நிறைந்த நாடுகள் .......... 32
இராணுவப் பணியாளர்களின் துணைத் தளபதி .......... 33
அதிகபட்ச சரக்கு மற்றும் சேவை வரி வசூல் .......... 33
கர்மயோகி திட்டத்திற்கு உலக வங்கி நிதி .......... 34
தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்பின் உறுதிப்பாட்டு ஆவணம் .......... 35
உஜ்வாலா திவாஸ் .......... 35
இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 2021-22 .......... 35
பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான மரபணு வங்கி .......... 36
பிளாஸ்ட்இந்தியா 2023 .......... 36
நிரந்தர லோக்பால் அலுவலகம் .......... 37
சதாரக் நடவடிக்கை .......... 37
இந்தியாவின் குடிமைப் பதிவு முறை பற்றிய அறிக்கை .......... 38
தேசியக் குடும்பநல சுகாதாரக் கணக்கெடுப்பு- 5 .......... 38
இந்தியாவின் முதலாவது மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பு .......... 39
திரைப்பட மீள்புதுப்பித்தல் திட்டம் .......... 40
நடமாடும் கொள்கலன் மருத்துவமனை .......... 40
PM MITRA திட்டம் குறித்த தேசிய மாநாடு .......... 41
தேசிய இளைஞர் கொள்கையின் புதிய வரைவு .......... 41
உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகள் .......... 41
வருடாந்திரத் தொழிலாளர் வளம் மீதான கணக்கெடுப்பு .......... 41
துதி நடவடிக்கை .......... 42
கலாம் இணையதளம் .......... 42
தேசத் துரோகச் சட்டம் 124A பிரிவு மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு .......... 42
PMJJBY, PMSBY மற்றும் APY ஆகிய திட்டங்களின் 7 ஆம் ஆண்டு நிறைவு .......... 43
15 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குக் குறைந்த கோதுமை கொள்முதல் .......... 44
வீரதீர மற்றும் பிற இராணுவ விருதுகள் .......... 45
100 இரயில் நிலையங்களில் அருகலை வசதி .......... 46
குழந்தைப் படுக்கை வசதி - வடக்கு இரயில்வே அறிமுகம் .......... 46
ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்ளாட்சி தேர்தல் .......... 46
தேசிய முக்கியத்துவம் வாய்ந்த போட்டிகள் .......... 47
AIM-PRIME Playbook .......... 47
புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் .......... 47
உயிரி எரிவாயு மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் மின்சார வாகன மின்னேற்ற நிலையம் .......... 48
SSR மற்றும் SRIMAN வழிகாட்டுதல்கள் .......... 48
தகைசால் கதர் மையம் .......... 48
பிரதமர் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம் நீட்டிப்பு .......... 48
கால்நடைகள் மற்றும் வளர்ப்புக் கோழிகள் பற்றிய இன வாரியான அறிக்கை .......... 49
நாட்டின் முதல் புலனுணர்வுப் பூங்கா .......... 49
தேசிய இணையவெளித் தடயவியல் ஆய்வகம் .......... 50

தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளம்.......50
கதிசக்தி சஞ்சார் போர்டல்.......50
இந்தியப் பருத்திச் சபை.......51
இந்தியாவின் முதல் 5G சோதனை அமைப்பு.......51
வியத்தகு இந்தியா சர்வதேச பயணிகள் கப்பல் மாநாடு.......52
நவ்தூத் இன்ஜின்.......52
சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் பரிந்துரைகள்.......52
எத்தனால் கலந்த பெட்ரோல்.......53
பாரத் குழாய் திட்டம்.......53
BioRRAP தளம்.......54
25 நாடுகளில் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் கூட்டு நுழைவுத் தேர்வு.......54
CORPAT ரோந்துப் பயிற்சி.......54
முதலாவது பல் மருத்துவக் காப்பீடு திட்டம்.......54
இந்தியாவில் சமத்துவமின்மை நிலை அறிக்கை.......55
ஓமைக்ரான் BA.5 திரிபின் முதல் பாதிப்பு.......55
WARDEC திட்டம்.......56
குதுப்மினாரின் அந்தஸ்து.......56
தபால் அலுவலகச் சேமிப்பு முறையில் NEFT மற்றும் RTGS வசதி.......56
புதுப்பிக்கப்பட்ட ABHA கைபேசிச் செயலி.......57
பாலியல் தொழிலுக்கு தொழில் அந்தஸ்து.......57
பாரத் ஆளில்லா விமானங்கள் மஹோத்சவ்.......57
மாநிலங்களுக்கு இடையேயான குழு அமைப்பு.......58
CUET 2022 விதிமுறைகள்.......58
முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தம்.......58
இந்திய எரிவாயு பரிமாற்றச் சந்தையில் ONGC.......58
பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைப்பு.......59
அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்கள்.......59
மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியம்.......60
இருதரப்பு போங்கோசாகர் பயிற்சி.......60
முதலாவது தேசிய மகளிர் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாடு.......60
ஸ்வச் சர்வேக்சன் 2023.......61
தேசியச் சாதனை ஆய்வு அறிக்கை.......61
கூடுதல் உர மானியம்.......61
இந்தியாவின் முதல் ஒலிம்பிக் மதிப்புசார் கல்வி.......61
சர்வதேசச் செய்திகள்.......62
ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகத்தின் உலக மதிப்பீட்டு அறிக்கை.......62
பொது வான்வெளியில் ஆளில்லா விமானங்கள்.......62
கோவிட்-19 தடுப்பூசி நிறுத்தம்.......63
உலகப் பட்டிதார் வணிக உச்சி மாநாடு 2022.......63

உலக நிலக்கரி மின் நிலையச் செயல்திறன் ..... 63
சாகர் IX திட்டம் ..... 64
உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பு ..... 64
இணையவெளிக் குற்றங்கள் குறித்த கட்டாய அறிக்கைத் தாக்கல் ..... 64
உலக சுகாதார அமைப்பின் தொற்றுநோய் ஒப்பந்தம் ..... 64
சூரிய ஒளிச் சேமிப்பு நேரம் ..... 65
ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் டிஜிட்டல் உத்தி 2022 ..... 66
வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் பயிற்சிகள் ..... 66
பேரிடர் தாங்கும் நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்பு பற்றிய மாநாடு ..... 66
பாக் லாங் நடைபாதை மேம்பாலம் ..... 66
நொடித்தல் மற்றும் திவால்நிலை பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு ..... 67
பசுமை மற்றும் நீடித்த மேம்பாட்டிற்கான இந்திய- ஜெர்மானியக் கூட்டாண்மை ..... 67
இரண்டாவது இந்திய-நார்டிக் நாடுகள் உச்சி மாநாடு ..... 67
2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆற்றல் செயல் திட்டம் ..... 68
ஹாங்காங்கின் அடுத்த தலைவர் ..... 68
அரேபிய பயணச் சந்தை ..... 68
பசிபிக் கடல்பகுதியில் மஞ்சள் நிற செங்கல் சாலை ..... 68
வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் இணையவெளிப் பாதுகாப்பு குழுமத்தில் இணைந்த முதல் ஆசிய நாடு ..... 69
ஆசியத் தேர்தல் ஆணையங்களின் சங்கத் தலைமை ..... 69
கடுமையான தேசிய அவசரநிலை அறிவிப்பு ..... 70
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ரஷ்யாவிற்கு மாற்று ..... 70
உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம் ..... 70
இன்டர்சோலார் ஐரோப்பா 2022 ..... 71
வெளிநாட்டுப் பண வரவினை அதிகம் பெறும் 7வது நாடு ..... 71
மகோலின் உடன்படிக்கை ..... 71
ஐக்கிய நாடுகள் சபையில் இந்தி மொழிப் பயன்பாட்டிற்கான ஊக்குவிப்பு ..... 72
தொங்கும் பாலம் 721 ..... 72
SCO - பிராந்தியப் பயங்கரவாத எதிர்ப்பு அமைப்புச் சபையின் சந்திப்பு ..... 73
முதலாவது சர்வதேசப் புலம்பெயர்வு மதிப்பீட்டு மன்றம் ..... 73
பிரான்சு நாட்டின் முதல் பெண் பிரதமர் ..... 73
4வது பெரிய வாகனச் சந்தை ..... 73
பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு ..... 74
இந்தியா-ஜமைக்கா நட்புறவுப் பூங்கா ..... 74
ஜனநாயகத்திற்கான உச்சி மாநாடு ..... 74
பருவநிலை மாற்றம்: பசுமை இல்ல வாயு, கடல் மட்ட உயர்வு ..... 75
இந்தியாவில் புதிய மேம்பாட்டு வங்கி ..... 75
உலகளாவிய உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான அழைப்புக் கூட்டம் ..... 75
இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு ..... 76

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ..... 76
குரங்கு காய்ச்சலுக்குக் கட்டாயத் தனிமைப்படுத்தல் ..... 76
ஆளில்லா விமானங்கள் மற்றும் பறக்கும் கார்களுக்கான முதல் விமான நிலையம் ..... 77
தேசிய மேம்பாட்டு வங்கியின் ஆளுநர்கள் குழு சந்திப்பு ..... 78
நேட்டோ உறுப்பினர் அந்தஸ்து - பின்லாந்து மற்றும் ஸ்வீடன் ..... 78
இலங்கையில் வங்கி திவால் நிலை பிரகடனம் ..... 78
போலியோ வைரஸ் பாதிப்பு ..... 79
உதவிகர உபகரணத் தொழில்நுட்பம் பற்றிய உலகளாவிய அறிக்கை ..... 79
உலகின் மிக உயரமான வானிலை நிலையம் ..... 80
75வது உலக சுகாதார கூடுகை ..... 80
குவாட் உச்சி மாநாடு 2022 ..... 81
உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர அமர்வு ..... 81
3வது உலக இயற்கைப் பொருள்கள் பொருட்காட்சி ..... 81
ஆப்கானிஸ்தான் தொடர்பான 4வது பிராந்தியப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை ..... 81
ஐரோப்பாவில் சாதனை அளவில் அணைகள் அகற்றல் ..... 82
உலக வர்த்தக அமைப்புக் குழுவின் புதிய தலைவர் ..... 82
பொருளாதாரச் செய்திகள் ..... 83
உலகின் மிகப்பெரிய நிகழ்நேர பணப் பரிவர்த்தனைகள் ..... 83
நிதிக் கொள்கைக் குழுவின் புதிய உறுப்பினர் ..... 83
நாடு வாரியாக இணைய சங்கேதப் பணம் மூலம் பெற்ற இலாபங்கள் ..... 83
வருவாய்ப் பற்றாக்குறை மானியம் ..... 84
UPI வழியாக 5.58 பில்லியன் பரிவர்த்தனைகள் ..... 84
சில்லறை விற்பனை பணவீக்கம் ..... 85
கோதுமை, வெங்காய விதைகள் ஏற்றுமதி ..... 86
ஏப்ரல் மாத மொத்த விற்பனை விலைக் குறியீடு (WPI) ..... 86
அந்நிய நேரடி முதலீட்டு வரவானது வரலாறு காணாத உச்சம் ..... 87
சூரியகாந்தி மற்றும் சோயா எண்ணெய் மீதான இறக்குமதி வரி ..... 87
மத்திய அரசுக்கு உபரித் தொகைப் பரிமாற்றம் ..... 87
ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்தின் பங்குகள் விற்பனை ..... 88
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 89
சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான முதல் தனியார் பயணம் ..... 89
பழமையான மற்றும் தொலைதூர நட்சத்திரம் ..... 89
புதிய ரக மீக்கடத்திப் பொருள் ..... 89
கோள்களின் அணிவகுப்பு ..... 90
உலகின் மிகப்பெரிய இணையவழிப் பாதுகாப்பு பயிற்சி ..... 90
மெத்தனால் கலந்த பெட்ரோல் சோதனை ..... 90
இந்த ஆண்டின் முதல் சூரியக் கிரகணம் ..... 91
PK2 மூலக்கூறு ..... 92
ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் மின்சாரக் கப்பல் ..... 92

இந்தியக் கடலோரக் காவல்படைக் கப்பல் 'கமலா தேவி' ... 92
P-75I மற்றும் காற்று சாரா உந்துவிசைத் தொழில்நுட்பம் ... 93
நாசா மனித ஆய்வு ஊர்திக் கல சவால் 2022 ... 93
வெள்ளிக் கோளுக்கான இஸ்ரோவின் திட்டம் ... 94
ஷிகெல்லா பாக்டீரியா ... 94
செவ்வாய்க் கோளில் நிலநடுக்கம் ... 95
டபிள்யூ போசான் மூலக்கூறு ... 96
கருந்துளையின் முதல் புகைப்படம் ... 96
நிலவின் மண்ணில் வளர்க்கப்பட்ட தாவரங்கள் ... 97
பூமியைக் கடந்து சென்ற குறுங்கோள் ... 97
அமல்தியா ... 98
திட ஏவுகல உந்திகள் சோதனைகள் ... 98
ஐஎன்எஸ் சூரத் & ஐஎன்எஸ் உதயகிரி ... 99
இரட்டை வளிமண்டலவியல் ஆய்வுக் கலன் ... 99
லித்தியம்-சல்பர் மின்கலங்கள் ... 100
கப்பல் எதிர்ப்பு ஏவுகணை ... 101
சூப்பர் ஃப்ளவர் ப்ளட் மூன் சந்திர கிரகணம் ... 102
உலகின் முதல் உயிர்வாழத் தகுந்த கிரகம் ... 102
புளூட்டோவில் பனிக்கட்டி எரிமலைக் குழம்புகள் ... 103
கருந்துளையின் தோற்றம் ... 103
மரபணு மாற்றப்பட்டப் பயிர்களுக்கான ஆராய்ச்சி விதிமுறைகள் ... 104
பயிற்சி விமானம் HANSA-NG ... 104
பரம் பொருள் மீத்திறன் கணினி ... 105
சுற்றுச்சூழல் செய்திகள் ... 105
உலக நிலக் கண்ணோட்ட அறிக்கை 2 ... 105
இயற்கை அன்னை - ஒரு 'உயிருள்ள நபர்' ... 106
சிமெண்ட் கலவையில் ஒற்றைப் பயன்பாட்டு முகக்கவசங்களின் பயன்பாடு ... 106
உலக காடுகளின் நிலை அறிக்கை – 2022 ... 106
தீவிர வெப்பக்காற்று ... 107
புதிய மின்மினிப் பூச்சி இனங்கள் ... 108
மிகப்பெரிய மெகாராப்டர் டைனோசர் ... 108
உலகின் மிகச்சிறிய கடல்வாழ் பாலூட்டி இனம் ... 109
உலகப் பறவைகளின் நிலை ... 109
பாண்டனல் ஈரநிலம் ... 110
UNCCD COP15 ... 110
Drought in Numbers 2022 – அறிக்கை ... 111
உலகளாவிய வருடாந்திரம் முதல் பத்தாண்டு கால பருவநிலை தகவல் அறிக்கை ... 111
பட்டைகள் கொண்ட வெளிர்நிற சிறுபாம்பு ... 112
சியோல் வனப் பிரகடனம் ... 112

இந்தியாவின் 52வது புலிகள் காப்பகம் ... 112
'நகராட்சி திடக் கழிவு மற்றும் திரவக் கழிவுகளின் மறுசுழற்சி பொருளாதாரம்' பற்றிய அறிக்கை . 113
பல்லுயிர்ப் பெருக்கப் பதிவேடு ... 113
நீல நிற வயிருடைய குக்ரி வகை பாம்பு ... 114
தலைமை நிர்வாக அதிகாரிகளின் பருவநிலை நடவடிக்கைக்கான தலைவர்களின் கூட்டணி ... 114
செலா மக்காக் குரங்கு ... 115
மாநிலச் செய்திகள் ... 115
மலேரியா அற்ற மாநிலமாக மாற கர்நாடகா இலக்கு ... 115
இந்தியாவின் முதல் அமிர்த சரோவர் ... 116
இந்திய ஆட்சிப் பணி அதிகாரியை மீண்டும் பணியமர்த்திய அரசு ... 116
இந்தியாவின் முதல் எத்தனால் ஆலை ... 116
10 ஜிகாவாட் செயல்திறன் கொண்ட சூரிய சக்தி ஆலைகளை நிறுவிய முதல் மாநிலம் ... 116
ஜம்மு & காஷ்மீர் எல்லை நிர்ணய ஆணையம் ... 117
பசவா ஜெயந்தி 2022 ... 118
முதல் பழங்குடியினர் சுகாதாரக் கண்காணிப்பகம் ... 118
இந்தியாவின் முதல் 'பாய்வு வேதியியல் தொழில்நுட்ப மையம்' ... 118
மால்பே மிதவைப் பாலம் ... 118
ஹாதி மித்ராஸ் ... 119
டெல்லி தொழில் தொடக்க நிறுவனங்கள் கொள்கை ... 119
நேரடி நெல் விதைப்பு முறைக்கு ஊக்கத் தொகை ... 120
தக்காளி காய்ச்சல் ... 120
ஷைலி செயலி ... 120
முதல் 'புகை இல்லாத மாநிலம்' ... 121
அசானி மற்றும் கரீம் சூறாவளி ... 121
புத்தவனம் திட்டம் ... 121
பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் அமல் ... 121
உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சேமிப்பு நிலையம் ... 122
லோக் மிலினி திட்டம் ... 122
அரசுக்கு சொந்தமான இணையதள ஒளிபரப்புச் சேவை வழங்கும் தளம் ... 122
நேரடி நெல் விதைப்புக்கு ஊக்கம் ... 122
சுகாதாரச் சேவையில் ஆளில்லா விமானங்களின் பயன்பாடு ... 123
4வது ஷிருய் லில்லி திருவிழா ... 123
காட்டுப்பன்றிகளை வேட்டையாடுதல் ... 123
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ... 124
பத்ம பூஷன் விருது பெற்ற வினோத் ராய் எழுதிய புத்தகம் ... 124
இந்திய ஹஜ் குழு – தலைவர் ... 124
இந்திய மருந்து மற்றும் இந்திய மருத்துவச் சாதனங்கள் விருதுகள் 2022 ... 124
ஃபோர்ப்ஸ் கோடீஸ்வரர்கள் பட்டியல் 2022 ... 125
விட்லி தங்க விருது ... 126

சிறந்த உள்கட்டமைப்புத் திட்ட விருது ........ 126
பெரு நாட்டின் உயரிய இராஜதந்திர விருது ........ 127
தலைவர்கள், அரசியல்வாதிகள், குடிமக்கள் - புத்தகம் ........ 127
ENBA விருது 2021 ........ 127
உலக உணவுப் பரிசு 2022 ........ 127
ஐந்து சிகரங்களில் ஏறி சாதனைப் படைத்த முதல் இந்தியப் பெண் ........ 128
கமி ரீட்டா ஷெர்பா ........ 128
ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் உறுப்பினர் அந்தஸ்து ........ 128
ரோமெய்ன் ரோலண்ட் புத்தகப் பரிசு 2022 ........ 129
புலிட்சர் பரிசு 2022 ........ 129
சிறப்பு வங்காள அகாடமி விருது ........ 129
உலகின் மூத்த செஸ் கிராண்ட்மாஸ்டர் ........ 130
Modi @20: Dreams Meeting Delivery - புத்தகம் ........ 130
அரசத் தங்கப் பதக்கம் 2022 ........ 130
டெம்பிள்டன் பரிசு ........ 131
உலகின் சிறந்த செவிலியர் ........ 131
புனிதராக அறிவிக்கப்பட்ட முதல் இந்தியப் பாமரர் ........ 131
பில்போர்டு இசை விருதுகள் 2022 ........ 131
வங்காரி மாத்தாய் வன சாம்பியன் விருது ........ 132
வாழ்நாள் சாதனையாளர் விருது ........ 132
கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் ........ 132
வில்லியம் E. கோல்பி விருது 2022 ........ 133
அமேசான் சம்பவ் தொழில்முனைவோர் சவால் 2022 ........ 133
உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் ........ 133
CII EXCON உறுதியான தலைவர் விருது ........ 133
எவரெஸ்ட் தாழ்மட்ட முகாமை அடைந்த ரிதம் மாமேனியா ........ 134
ராம் மோகன் ராய் அவர்களின் 250வது பிறந்தநாள் ........ 134
சங்கீத கலாநிதி விருதுகள் 2020-22 ........ 135
75வது கேன்ஸ் திரைப்பட விருது விழா ........ 135
முதல் தலித் பெண் மேயர் ........ 136
வாஸ்விக் தொழில்துறை ஆராய்ச்சி விருது 2020 ........ 136
விளையாட்டுச் செய்திகள் ........ 136
வில்வித்தை உலகக் கோப்பை முதல் நிலைப் போட்டி ........ 136
2022 ஆம் ஆண்டின் லாரஸ் விளையாட்டு வீரர் ........ 137
ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி ........ 137
ஏழாவது சந்தோஷ் டிராபி போட்டி ........ 137
கேலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகள் 2021 ........ 138
IWF உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி ........ 138
உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி 2022 ........ 138

காது கேளாதோருக்கான 24வது ஒலிம்பிக் போட்டிகள் ..... 139
மாட்ரிட் ஓபன் போட்டி 2022 ..... 139
தாமஸ் கோப்பை இறகுப் பந்து இறுதிப் போட்டி 2022 ..... 139
ஆசிய வில்வித்தை கோப்பை போட்டி 2022 - 2வது கட்டம் ..... 140
ISSF இளையோர் உலகக் கோப்பைப் போட்டி ..... 140
அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் பட்டியல் 2022 ..... 140
இத்தாலிய ஓபன் போட்டி 2022 ..... 141
36வது ரெய்காவிக் ஓபன் போட்டி 2022 ..... 141
சர்வதேச தொழில்முறை குத்துச்சண்டைப் போட்டி ..... 142
ஆஸ்திரேலிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் உலகச் சாதனை ..... 142
ஐபிஎல் 2022 ..... 142
**முக்கிய தினங்கள் ..... 143**
மே தினம் – மே 01 ..... 143
மகாராஷ்டிரா தினம் - மே 01 ..... 143
உலக சிரிப்பு தினம் - மே 01 ..... 143
உலக சூரை மீன் தினம் - மே 02 ..... 143
உலகப் பத்திரிகைச் சுதந்திர தினம் – மே 03 ..... 144
உலக ஆஸ்துமா தினம் – மே 03 ..... 144
நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் தினம் - மே 04 ..... 145
சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - மே 4 ..... 145
உலகப் போர்த்துகீசிய மொழி தினம் - மே 05 ..... 145
சர்வதேசப் பேறுகால உதவியாளர் தினம் - மே 05 ..... 145
உலக கை மீதான சுகாதார தினம் - மே 05 ..... 146
உணவுமுறை எதுவும் பின்பற்றாத சர்வதேச தினம் - மே 06 ..... 146
இரவீந்திரநாத் தாகூர் ஜெயந்தி - மே 07 ..... 146
உலக தடகள தினம் - மே 07 ..... 147
சர்வதேச வானியல் தினம் - மே 07 ..... 147
இரண்டாம் உலகப் போரின் போது உயிர் இழந்தவர்களுக்கான நினைவு மற்றும் நல்லிணக்க நேரம் - மே 08/09 ..... 148
உலகச் செஞ்சிலுவை தினம் - மே 08 ..... 148
அன்னையர் தினம் - மே 08 ..... 148
உலக தலாசீமியா தினம் – மே 08 ..... 148
உலக லூபஸ் தினம் - மே 10 ..... 149
சர்வதேச அர்கானியா தினம் - மே 10 ..... 150
தேசியத் தொழில்நுட்ப தினம் – மே 11 ..... 150
சர்வதேச செவிலியர் தினம் - மே 12 ..... 150
சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் - மே 12 ..... 151
உலக புலம்பெயர் பறவை தினம் - மே 14 ..... 151
சர்வதேச குடும்ப தினம் - மே 15 ..... 151

வெசாக் தினம் - மே 16 ..... 152
தேசிய டெங்கு தினம் - மே 16 ..... 152
அமைதியுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான சர்வதேச தினம் - மே 16 ..... 152
சர்வதேச ஒளி தினம் - மே 16 ..... 153
சிக்கிம் மாநில உருவாக்க தினம் – மே 16 ..... 153
உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினம் – மே 17 ..... 154
உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17 ..... 154
உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் - மே 17 ..... 155
சர்வதேச அருங்காட்சியக தினம் - மே 18 ..... 155
உலக தேனீ தினம் - மே 20 ..... 155
உலக அளவியல் தினம் – மே 20 ..... 155
அருகி வரும் உயிரினங்களுக்கான தேசிய தினம் – மே 20 ..... 156
பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத்தன்மைக்கான உலக தினம் – மே 21 ..... 156
பயங்கரவாத எதிர்ப்புத் தினம் – மே 21 ..... 156
சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் – மே 22 ..... 157
மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - மே 23 ..... 157
உலக ஆமை தினம் - மே 23 ..... 157
காமன்வெல்த் தினம் - மே 24 ..... 158
உலக  மனச் சிதைவு நோய் தினம் – மே 24 ..... 158
உலகளாவிய அணுகல் விழிப்புணர்வு தினம் – மே 19 ..... 159
சுயாட்சி அல்லாத பிரதேசங்களின் மக்களுடனான சர்வதேச ஒற்றுமை வாரம் - மே 25 முதல் 31 வரை ..... 159
உலக தைராய்டு விழிப்புணர்வு தினம் - மே 25 ..... 160
காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - மே 25 ..... 160
பெண்களின் ஆரோக்கியத்திற்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மே 28 ..... 160
உலக மாதவிடாய் சுகாதார தினம் – மே 28 ..... 161
உலக பட்டினி தினம் – மே 28 ..... 161
ஆப்பிரிக்கா தினம் – மே 25 ..... 161
ஐக்கிய நாடுகளின் அமைதி காப்பு வீரர்களுக்கான சர்வதேச தினம் – மே 29 ..... 161
கோவா மாநில உருவாக்க தினம் - மே 30 ..... 162
உலகப் புகையிலை எதிர்ப்புத் தினம் – மே 31 ..... 162
இதரச் செய்திகள் ..... 163
டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பல்கலைக்கழகத் தாக்கம் குறித்த தரவரிசை 2022 ..... 163
உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீடு 2022 ..... 163
கேன்ஸ் திரைப்பட விழா 2022 ..... 164
உலக உணவு நெருக்கடிகள் பற்றிய அறிக்கை ..... 164
எல்லைப்புற  சாலைகள் அமைப்பின் 62வது நிறுவன தினம் ..... 165
ராக்கிகர்ஹி ஹரப்பா தளம் ..... 165

மகாராணா பிரதாப் ஜெயந்தி 2022 .......... 166
மிகப்பெரிய வெள்ளைநிற வைரம் .......... 166
மாதவிடாய் விடுப்பு .......... 166
திறன்மிக்க ஆற்றல் மாற்ற மேம்பாட்டு அறிக்கை 2022 .......... 167
அரிய வகை பாம்பின் 35 மில்லியன் ஆண்டுகள் பழமையான படிமம் .......... 167
உலகளாவிய நோய்த் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பற்றிய அறிக்கை .......... 167
உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2022 .......... 168
உலகளாவிய 2000 பொது நிறுவனங்களின் பட்டியல் .......... 168
உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் .......... 169
முக்கியப் பயிர்களின் உற்பத்தி குறித்த மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகள் .......... 169
உலக விமானப் படை திறன் குறியீடு 2022 .......... 170
வேலை நிலை பற்றிய அறிக்கை .......... 170
டைம் இதழின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களின் பட்டியல் .......... 171
பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2021 .......... 171

# TNPSC துளிகள்

- தேசிய சுகாதார இயக்கத்தின் 2021-22 ஆம் ஆண்டிற்கான 'காயகல்ப்' என்ற திட்டத்தில் மாநில அளவில் 'தூய்மையான மருத்துவமனை' என்ற ஒரு பிரிவில் மணப்பாறை அரசு மருத்துவமனை முதலிடம் பெற்றது.
- டாடா சன்ஸ் குழுமத்தின் செயல் தலைவர் N. சந்திரசேகரன், டாடா டிஜிட்டல் நிறுவனத் தலைவராக அதிகாரப் பூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார்.
    - அயல்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து நிதியைத் திரட்டுவதற்கான எதிர்காலத் திட்டங்களைக் கருத்தில் கொண்டு இந்த நியமனமானது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.
- ப்ளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் பட்டியலில், அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி உலகின் நான்காவது பணக்காரர் ஆக இடம் பெற்றுள்ளார்.
- ரஷ்ய ராணுவம் உக்ரைனின் மரிய போல் எனும் முற்றுகையிடப் பட்ட துறைமுக நகரை அண்மையில் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் தேதி அன்று, அகில இந்திய அளவில் மின் தேவை என்பது அதிகபட்ச அளவான 201.066 ஜிகாவாட் எனற அளவில் பதிவு செய்யப் பட்டது.
    - இது 2021 ஆம் ஆண்டு ஜூலை 07 அன்று பதிவான 200.539 ஜிகாவாட் என்ற அதிக பட்ச மின் தேவையை விஞ்சியுள்ளது.
- மாநில நெடுஞ்சாலைகள் மேம்பாட்டில் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் ஆற்றியப் பங்களிப்பை போற்றும் வகையில் சென்னை – மகாபலிபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை என்று பெயர் சூட்டப்படும் என்று தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார்.
- சென்னை மாநகராட்சியானது சென்னையில் உள்ள ஒரு தெருவிற்கு மறைந்த நடிகரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான விவேக் அவர்களின் பெயரை சூட்டியுள்ளது.
    - அவர் வாழ்ந்த வீடு உள்ள சென்னை விருகம்பாக்கம் தெருவிற்கு சின்னக் கலைவாணர் விவேக் சாலை எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- பொதுப் பிரிவினரின் கடைசி மதிப்பெண்ணை விட அதிக மதிப்பெண்கள் பெறும் இட ஒதுக்கீடுப் பிரிவினைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் பொதுப் பிரிவின் கீழ் இட ஒதுக்கீடு/பதவியைப் பெறத் தகுதியுடையவர்கள் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2022 ஆம் ஆண்டு செமிகான் இந்தியா என்ற மாநாட்டினைத் தொடங்கி வைக்க உள்ளார்.
    - மூன்று நாட்கள் வரை நடைபெறும் இந்த மாநாட்டினைப் பெங்களூரு ஏற்பாடு செய்கிறது.
- ரவீந்திர ஜடேஜா ஏப்ரல் 30 ஆம் தேதியன்று, தான் வகித்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமைப் பொறுப்பினைத் துறந்ததையடுத்து, 2022 ஆம் ஆண்டு மே 01 அன்று அந்த அணியின் தலைவராக M.S.தோனி மீண்டும் பொறுப்பேற்றார்.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளிடையே 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் தேதியன்று கையெழுத்தான விரிவானப் பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தமானது 2022 ஆம் ஆண்டு மே 01 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது.

- இந்த ஒப்பந்தமானது பல்வேறு பொருட்கள் மீதான சுங்க வரிக்கு விலக்கு அளித்து உள்ளது.

❖ அமெரிக்காவின் மத்தியப் புலனாய்வு அமைப்பானது, இந்திய-அமெரிக்கத் தகவல் தொழில்நுட்ப நிபுணரான நந்த் முல்சந்தனி என்பவரை அதன் முதலாவது தலைமைத் தொழில்நுட்ப அதிகாரியாக நியமித்துள்ளது.

❖ 'மைதானம் - கேரளாவில் கால்பந்தாட்டப் போட்டிகளின் கதை' எனும் முதல் இந்திய விளையாட்டு குறித்த ஆவணப் படமானது 2022 ஆம் ஆண்டு மே 01 அன்று FIFA+ ஊடகத்தில் நேரலையாக ஒளிபரப்பப் பட்டது.

❖ ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவினைச் சேர்ந்த P.V. சிந்து தனது இரண்டாவது ஆசிய வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

❖ இந்தியாவின் புதிய வெளியுறவுத் துறைச் செயலாளராக வினய் மோகன் குவாத்ரா பொறுப்பேற்றுள்ளார்.

- இப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவினை அடுத்து இவர் இப்பொறுப்பினை ஏற்றுள்ளார்.

❖ எந்தவொரு தனிநபரையும் தடுப்பூசி போடுவதற்கு கட்டாயப்படுத்த கூடாது என்றும், அரசியலமைப்பின் 21வது சட்டப்பிரிவின் கீழ் ஒரு நபரின் உடல் மீது அவர் கொண்டு உள்ள கண்ணியம் அவரது உரிமை என்றும், இது தடுப்பூசியை மறுக்கும் ஒரு உரிமையையும் உள்ளடக்கியது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

❖ யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியானது கணக்குத் தொகுப்புச் சூழல் அமைவில் செயல்படத் தொடங்கிய முதல் பொதுத்துறை வங்கி ஆக மாறியது.

❖ எஸ்பான்யோல் என்ற அணிக்கு எதிராக நடைபெற்ற 35வது ஸ்பானிஷ் லீக் கால்பந்துப் போட்டியில் ரியல் மாட்ரிட் என்ற அணி வெற்றி பெற்றது.

❖ ரோனி ஓ சுல்லிவன் தனது ஏழாவது உலக ஸ்னூக்கர் பட்டத்தை வென்று சாதனைப் படைத்தார்.

- இதன் மூலம், 1999 ஆம் ஆண்டில் ஏழு உலக ஸ்னூக்கர் பட்டங்களை வென்ற ஸ்டீபன் ஹென்ட்ரியின் சாதனையை இவர் சமன் செய்துள்ளார்.

❖ ஓபன் எனப்படும் ஒரு புதிய வணிகமுறை நிதித் தொழில்நுட்பத் தளமானது, அதன் மதிப்பை ஒரு பில்லியன் டாலர்களுக்கு மேல் உயர்த்துவதற்காக புதிய மூலதனத்தை திரட்டியதைத் தொடர்ந்து இந்தியாவின் 100வது யூனிகார்ன் நிறுவனமாக இது மாறி உள்ளது.

❖ இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவானது, ரெப்போ விகிதத்தை 40 புள்ளிகள் உயர்த்தி 4.40 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்த்தி அந்த உயர்வானது உடனடியாக அமலுக்கு வருவதாகவும் ரிசர்வ் அறிவித்ததுள்ளது.

❖ சர்வதேச சமணர் வர்த்தக அமைப்பின் JITO இணைப்பு 2022 என்ற நிகழ்வின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றினார்.

❖ TVS மோட்டார் நிறுவனமானது, சுதர்சன் வேணு என்பவரைத் தனது நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக பதவி உயர்த்துவதாக அறிவித்துள்ளது.

❖ மணிப்பூர் மாநிலத்தில் வாழும் பௌமாய் பழங்குடியினர், போதைப் பொருளுக்கு எதிரான அம்மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக, பௌமாய் மக்கள் வசிக்கும் பகுதிகள் போதைப் பொருள் இல்லாத ஒரு மண்டலமாக திகழும் என்று அறிவித்துள்ளனர்.

- மே 09 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட வர்த்தகத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அதன் மதிப்பிழப்பினை அதிகரித்து வரலாறு காணாத அளவில் 77.42 என்ற குறைந்த மதிப்பினைத் தொட்டது.
- இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்சே மே 09 ஆம் தேதியன்று ராஜினாமா செய்ததையடுத்து, இலங்கை அரசியலமைப்பின் படி அந்நாட்டு அமைச்சரவை கலைக்கப் பட்டது.
- இந்தியக் கிராண்ட்மாஸ்டர் D.குகேஷ், புன்டா ப்ரைமாவில் நடைபெற்ற முதலாவது செசபிள் சன்வே ஃபார்மென்டெரா ஓபன் செஸ் போட்டியில் (2022) சாம்பியன் பட்டம் வென்றார்.
  - இது இவர் பெற்ற தொடர்ச்சியான மூன்றாவது (ஹாட்ரிக்) பட்டம் ஆகும்.
- லார்சன் & டியூப்ரோ குழுமத்தின் கீழான பட்டியலிடப்பட்ட இரண்டு சுயாதீன தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்களான L&T இன்போடெக் மற்றும் மைண்ட் ட்ரீ ஆகியவை இந்தியாவின் ஐந்தாவது பெரிய தகவல் தொழில்நுட்பச் சேவை வழங்கு நிறுவனமாகத் திகழ உள்ள ஒரு மாபெரும் நிறுவன இணைப்பு குறித்து அறிவித்தது.
  - இந்த ஒருங்கிணைந்த நிறுவனமானது, "LTIMindtree" என்று அழைக்கப்படும்.
- தங்களது நெருங்கிய உறவினர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக கைதிகளுக்குத் தற்காலிக விடுப்பு வழங்கும் நடைமுறையை எளிதாக்கும் வகையில், 1982 ஆம் ஆண்டு குண்டர் சட்டத்தின் விதியைத் திருத்தி அமைப்பதற்கான ஒரு சட்ட மசோதாவினைத் தமிழக அரசு சட்டசபையில் தாக்கல் செய்தது.
- அதானி வில்மர் லிமிடெட் என்ற நிறுவனமானது, ஹிந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் என்ற நிறுவனத்தை விஞ்சி இந்தியாவின் மிகப்பெரிய அதிகமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்கள் நிறுவனமாக மாறியது.
- பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 'INDO-PAK WAR 1971- Reminiscences of Air Warriors' என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- சந்தூர் வித்வான் பண்டிட் ஷிவ்குமார் சர்மா சமீபத்தில் காலமானார்.
  - இவர் 1991 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதினையும் 2001 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் விருதினையும் பெற்றவர் ஆவார்.
- அயோத்தி நகரில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கடவுப் பாதை உருவாக்கப்பட்டு, அதற்கு மறைந்த புகழ்பெற்றப் பாடகி பாரத ரத்னா லதா மங்கேஷ்கரின் நினைவாக பெயரிடப் படும்.
- இந்திய உணவு மற்றும் சுற்றுலாச் சேவைக் கழகமானது தனது முதலாவது பாரத் கௌரவ் சுற்றுலா இரயிலை நேபாளத்தின் ஜனக்பூரில் ஒரு நிறுத்தத்துடன் இயக்கத் தொடங்கியுள்ளது.
  - இந்த இரயில் ஸ்வதேஷ் தர்ஷன் என்ற திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள இராமாயண வட்டாரப் பகுதியைச் சுற்றியப் பகுதிகளில் இயக்கப்படும்.
- இந்தியாவின் அவினாஷ் சேபிள், 5000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பகதூர் பிரசாத் 1992 ஆம் ஆண்டு படைத்திருந்த ஒரு 30 ஆண்டுகாலச் சாதனையை முறியடித்து, ஒரு புதிய தேசியச் சாதனையைப் படைத்தார்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் வருவாயானது 2022 ஆம் நிதியாண்டில் 100 பில்லியன் டாலர்களைத் தாண்டி, இந்த மைல்கல்லை எட்டிய முதல் இந்திய நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

- தற்போது நடைபெற்று வரும் 24வது காது கேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில், இந்தியாவினைச் சேர்ந்த அபினவ் தேஷ்வால் இந்தியாவிற்கான இரண்டாவது தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- நான்காவது AFI இந்திய ஓபன் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்று உத்தரப் பிரதேசத் தடகள வீராங்கனை அன்னு ராணி தான் படைத்த சொந்தத் தேசியச் சாதனையை முறியடித்தார்.
- புகழ்பெற்ற ஒடியா இலக்கிய எழுத்தாளர் ரஜத் குமார் கர் சமீபத்தில் காலமானார்.
  - இலக்கியம் மற்றும் கல்வி ஆகியவற்றிற்காக 2021 ஆம் ஆண்டில் இவர் பத்மஸ்ரீ விருதினைப் பெற்றார்.
- F1 பந்தய உலகச் சாம்பியனான மேக்ஸ் வெர்ஸ்டெப்பன் 2022 ஆம் ஆண்டு தொடக்க மியாமி கிராண்ட் பிரிக்ஸ் பட்டத்தை வென்றுள்ளார்.
- முன்னாள் இந்தியக் காவற்பணி அதிகாரி பிரகாஷ் சிங் எழுதிய "The Struggle for Police Reforms in India: Ruler's Police to People's Police" என்ற புத்தகத்தை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் வெளியிட்டார்.
- மாநிலப் பல்கலைக்கழகமான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தரை நியமிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு சட்ட மசோதாவினைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில அரசு தாக்கல் செய்தது.
- 2022 ஆம் ஆண்டு சைப்ரஸ் சர்வதேச தடகளப் போட்டியில், பெண்களுக்கான 100 மீட்டர் தடை ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவினைச் சேர்ந்த ஜோதி யர்ராஜி தங்கப் பதக்கத்தை வென்று தேசியச் சாதனையைப் படைத்தார்.
- 12வது IBA மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியானது, துருக்கியின் இஸ்தான்புல் நகரில் தொடங்கியது.
- மேடவாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள 2.3 கிமீ நீளமான மூன்று தடங்கள் கொண்ட சென்னையின் மிக நீளமான ஒருவழிப் பாதை மேம்பாலத்தினை தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
  - இது தாம்பரத்திலிருந்து வேளச்சேரி வரை வாகனங்கள் நெரிசலின்றி வேகமாகச் செல்வதற்கு வழி அளிக்கும்.
- இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் நாஜிப் படைகளுக்கு எதிரான தனது வெற்றியைக் கொண்டாடும் வகையில் சோவியத் யூனியன் மே 09 ஆம் தேதியினை ரஷ்யாவின் வெற்றி தினமாகக் கொண்டாடுகிறது.
- ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரி (CEO) மற்றும் மேலாண்மை இயக்குனராக (MD) காம்ப்பெல் வில்சன் என்பவரை டாடா குழுமம் நியமித்துள்ளது.
- சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் போது உக்ரைன் நாட்டினை விடுதலைப் பெறச் செய்து அதன் முதல் அதிபராகப் பணியாற்றிய லியோனிட் கிராவ்சுக் காலமானார்.
- 2022 ஆம் ஆண்டு தாய்லாந்து டேலண்ட் கோப்பை போட்டியில் முதலிடத்தைப் பிடித்து, சென்னையைச் சேர்ந்த இளம் வாகன ஓட்டியான சர்தக் சவான், ஹோண்டா ரேசிங் இந்தியா நிறுவனத்தின் சார்பாக புதிய சாதனையைப் படைத்தார்.
- கோவிட்-19 தொடர்பாக அமெரிக்கா நடத்திய இரண்டாவது உலகளாவிய காணொளி வாயிலான உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றினார்.

- இம்பாலில் உள்ள குமான் லம்பாக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 12வது இந்திய சப்-ஜூனியர் (மிக இளையோருக்கான) தேசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஷிப் (2022) போட்டியை மணிப்பூர் முதல்வர் N.பிரேன் சிங் தொடங்கி வைத்தார்.
- மகிந்த ராஜபக்சே பதவி விலகியதை அடுத்து இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே, இலங்கையின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்தியப் பிரதேச மாநிலத்தின் தார் மாவட்டத்தில் உள்ள போஜ்ஷாலா நினைவுச் சின்னம் தொடர்பான சர்ச்சை குறித்த மனு மீது இந்தியத் தொல்லியல் துறை, மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றுக்கு மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளது.
  - போஜ்ஷாலா என்பது வாக்தேவியின் (சரஸ்வதி தேவி) கோவில் என்று இந்துக்கள் கூறும் சமயத்தில் முஸ்லீம் சமூகத்தினர் இதனைக் கமல் மௌலா மசூதியாகக் கருதுகின்ற வகையில் இது இந்தியத் தொல்லியல் துறையினால் பாதுகாக்கப்பட்ட 11 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஒரு நினைவுச் சின்னமாகும்.
- மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி, உத்தரப் பிரதேச மாநிலம் ராம்பூர் நகரில் இந்தியாவின் முதல் 'அமிர்த சரோவர்' திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- லூயிஸ் உய்ட்டன் என்ற ஆடம்பர நுகர்வுப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனத்திற்கான இந்தியாவின் முதல் விளம்பரத் தூதராக நடிகை தீபிகா படுகோன் அறிவிக்கப் பட்டு உள்ளார்.
- லக்பா ஷெர்பா 10வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளார்.
  - இவரது இந்த 10வது முறையிலான சாதனையானது இத்தகைய சாதனையைப் படைத்த முதல் பெண்மணி என்ற பெருமையை அவருக்குப் பெற்று தந்தது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் கலீஃபா பின் சயீத் அல் நஹ்யான் சமீபத்தில் காலமானார்.
  - எனவே ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒரு புதிய அதிபராக முகமது பின் சயீத் அல் நஹ்யான் நியமிக்கப் பட்டுள்ளார்.
- குஜராத் மாநிலம் பருச் நகரில் நடைபெற்ற உத்கர்ஷ் சமரோ என்ற நிகழ்வில் பிரதமர் அவர்கள் உரையாற்றினார்.
  - தேவையுள்ள நபர்களுக்கு உடனடி நிதியுதவி வழங்க உதவும் வகையில் அந்த மாநில அரசு தொடங்கிய நான்கு முக்கிய முன்னெடுப்புகளில் இந்த மாவட்டம் 100 சதவீதம் நிறைவு செய்ததை இந்த நிகழ்வு நினைவு கூறுகிறது.
- பஜாஜ் ஃபின்சர்வ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் தலைவரான சஞ்சீவ் பஜாஜ் என்பவர் இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பின் (CII) தலைவர் பொறுப்பினை (2022-23) ஏற்று உள்ளார்.
- மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (CBSE) தலைவராக மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நிதி சிபெர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடியப் பாதுகாப்பான மற்றும் நீடித்தப் போக்குவரத்து மீதான 6வது சாலைப் பாதுகாப்பு மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.
- ஆஸ்திரேலியவைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் ஆல்ரவுண்டர் வீரரான ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் சமீபத்தில் காலமானார்.

- இவர் 26 டெஸ்ட் போட்டிகளிலும், 198 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

❖ மே 15 ஆம் தேதியன்று திரிபுரா மாநிலத்தின் புதிய முதலமைச்சராக மாணிக் சாஹா பதவியேற்றார்.

- பிப்லப் குமார் தேப் என்பவர் பதவி விலகியதையடுத்து இவர் முதல்வராக நியமிக்கப் பட்டார்.

❖ குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் ஜமைக்காவிற்குப் பயணம் மேற்கொண்டு ள்ளார்.

- இந்தக் கரீபிய நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் இவரே ஆவார்.

❖ ராஜீவ் ரஞ்சன் மற்றும் சித்திகாந்தா பட்டநாயக் ஆகியோரை இந்திய ரிசர்வ் வங்கி அதன் நிர்வாக இயக்குநர்களாக நியமித்துள்ளது.

❖ தென்மேற்குப் பருவமழை மே 16 ஆம் தேதியன்று அந்தமான் & நிக்கோபார் தீவுகளை நோக்கி நகரத் தொடங்கியது.

❖ தென் கொரிய அணியானது சீன அணியை வீழ்த்தி 2022 ஆம் ஆண்டு பேட்மிண்டன் உபெர் கோப்பையை வென்றது

❖ ரஷ்ய அச்சுறுத்தலுக்கு எதிராக நேட்டோ அமைப்பின் உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பிப்பதாக ஸ்வீடன் அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

❖ இண்டர் குளோப் எனப்படும் வான்வழிப் போக்குவரத்து (இண்டிகோ) நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவானது, பீட்டர் எல்பர்ஸை அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்துள்ளது.

❖ முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையரான சுனில் அரோரா, கிராம் உன்னதி வாரியத்தின் புதிய நிர்வாகம் சாரா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ வரலாற்றில் முதன்முறையாக, 96 வயதான இராணி எலிசபெத்துக்குப் பதிலாக பிரிட்டன் இளவரசர் சார்லஸ் இங்கிலாந்து பாராளுமன்றத் கூட்டத்தின் தொடக்க விழாவில் வழக்கமாக இராணி வழங்கும் உரையை வழங்கினார்.

❖ ஸ்விட்சர்லாந்தில் உள்ள ஹோல்சிம் எனப்படும் பன்னாட்டு நிறுவனம் அம்புஜா சிமெண்ட்ஸ் போன்ற இந்திய நிறுவனங்களின் மீது கொண்டுள்ள பங்குகளை அதானி குழுமம் வாங்க உள்ளது.

❖ பிரிட்டன் நாட்டினைச் சேர்ந்த மலை ஏறும் வீரரான கென்டன் கூல் என்பவர், உலகின் மிக உயரமான மலையை 16வது முறையாக ஏறி, அதிகமுறை எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் வெளிநாட்டு மலை ஏறும் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

❖ இராஜஸ்தானிப் பாடகர் மாமே கான், கேன்ஸ் திரைப்பட விழாவில் இந்தியாவின் சார்பாக சிவப்புக் கம்பள வரவேற்பு பெற்ற முதல் நாட்டுப்புற பாடகர் ஆனார்.

❖ 2022 ஆம் ஆண்டு, 12வது இந்திய ஹாக்கி சீனியர் மகளிர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் ஒடிசா அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

❖ 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற பஜ்ரங் புனியா மற்றும் ரவி குமார் தாஹியா ஆகியோர் இருவரும் 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் மல்யுத்த அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- பிளஸ்இ லிமிடெட் நிறுவனமானது, S.S. முந்த்ரா என்பவரை அந்நிறுவனத்தின் தலைவராக நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்தது.
- ப்ரீத்தி ஷெனாய் “A Place Called Home” என்ற புதிய நாவலை வெளியிட உள்ளார்.
  - இந்தப் புதிய நாவல் ‘இரகசியங்கள், குடும்பம் மற்றும் சுய தேடல்’ ஆகியவற்றைப் பற்றியது ஆகும்.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், லடாக்கின் லே நகரில் தேசிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பக் கழக (NIELIT) மையத்தைத் திறந்து வைத்தார்.
- பார்தி ஏர்டெல் நிறுவனத்தின் வாரியமானது கோபால் விட்டல் என்பவரை, அதன் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக மேலும் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு மீண்டும் நியமித்துள்ளது.
- டெல்லியின் துணைநிலை ஆளுநர் அனில் பைஜால், தனிப்பட்ட காரணங்களுக்காகப் பதவி விலகுவதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களிடம் தனது பதவி விலகல் கடிதத்தினை ஒப்படைத்தார்.
- பதஞ்சலி ஆயுர்வேத நிறுவனத்தின் உணவுப் பிரிவினை, சமையல் எண்ணெய் உற்பத்தி நிறுவனமான ருச்சி சோயா கையகப்படுத்த உள்ளது.
- பணியாளர், பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதியத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங், 'Civil List – 2022 of IAS officers' என்ற புதிய இணையப் புத்தகத்தினை வெளியிட்டார்.
- துருக்கியில் நடைபெற்ற மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் நிகத் ஜரீன் வெற்றி பெற்று உள்ளார்.
  - இவர் உலகச் சாம்பியன் பட்டம் வென்ற ஐந்தாவது இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- சர்வதேச ஹோமோஃபோபியா, டிரான்ஸ்ஃபோபியா மற்றும் பைபோபியா ஆகியவற்றிற்கு எதிரான தினம் ஒவ்வோர் ஆண்டும் மே 17 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- சர்வதேச தேயிலை தினம் ஆண்டுதோறும் மே 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
  - இது உலகம் முழுவதும் தேயிலையின் நீண்ட கால வரலாறு மற்றும் அதன் ஆழமான கலாச்சார மற்றும் பொருளாதார முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்தியக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், கௌகாத்தியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தில் 2022 ஆம் ஆண்டு வட கிழக்கு ஆராய்ச்சி மாநாட்டினை (NERC) தொடங்கி வைத்தார்.
- ஜெர்மனியின் ஐன்ட்ராக்ட் பிராங்பர்ட் கால்பந்து அணியானது, 1980 ஆம் ஆண்டு முதல் 42 ஆண்டுகளுக்குப் பிறகு UEFA ஐரோப்பா லீக் என்ற தனது முதலாவது ஐரோப்பியக் கோப்பையை வென்று உள்ளது.
  - 2022 ஆம் ஆண்டில் இது ஸ்பெயின் நாட்டில் நடத்தப் பட்டது.
- ஐக்கிய அரபு அமீரகமானது (UAE) குரங்கு காய்ச்சல் பதிவான முதல் வளைகுடா நாடாக மாறியது.
- டெல்லி தலைநகரின் துணை நிலை ஆளுநராக வினய் குமார் சக்சேனா நியமிக்கப் பட்டுள்ளார்.

- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது மைசூர் நகரில் 8வது சர்வதேச யோகா தினம் நடத்தப் படும் என்பதை உறுதி செய்துள்ளது.
- மான்செஸ்டர் சிட்டி கால்பந்து அணியானது 2021/22 ஆம் ஆண்டு பிரீமியர் லீக் சாம்பியன் பட்டத்தினை வென்றுள்ளது.
    - இது கடந்த ஐந்து போட்டிகளில் நான்காவது முறையான வெற்றியாகும்.
- இம்பால் நகரில் நடைபெற்ற இந்திய ஹாக்கி மகளிருக்கான சப்-ஜூனியர் (மிக இளையோருக்கான) தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் ஜார்க்கண்ட் அணியை வீழ்த்தி ஹரியானா அணி வெற்றி பெற்றது.
- சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்ற 75வது உலக சுகாதார மாநாட்டில் சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா உரையாற்றினார்.
- கேப்டன் அபிலாஷா பராக், தனது பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து, இராணுவ விமானப் படையில் போர் விமானியாக சேர்ந்த முதல் பெண் அதிகாரி என்றப் பெருமையைப் பெற்றார்.
- இந்தியக் குத்துச்சண்டை வீரரும், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவருமான லவ்லினா போர்கோஹைன் சர்வதேசக் குத்துச்சண்டை சங்கத்தின் தடகளக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ரஸ்கின் பாண்ட் "Listen to Your Heart: The London Adventure" என்ற புதியப் புத்தகத்தினை எழுதியுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தோட்டக்கலை மற்றும் வேளாண் கல்லூரிகள்

- கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீவூரில் அமைக்கப்பட்டுள்ள தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- கரூர், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் மற்றும் சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையங்களையும் அவர் திறந்து வைத்தார்.
- ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் அமைக்கப்பட்டுள்ள மஞ்சள் ஆராய்ச்சி மையத்தினையும் திரு.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

## சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்

- தமிழகத்தில் ஒரு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தினை நிறுவுவதற்கான மசோதா தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதன் வேந்தராக செயல்படுவார்.
- பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையில், தேடல் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பெயர்களின் பட்டியலில் இருந்து அதன் துணைவேந்தரை முதல்வர் அவர்கள் நியமிப்பார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அதன் இணைநிலை வேந்தராக செயல்படுவார்.

## மூன்று புதிய சரணாலயங்கள்

- தமிழகத்தில் இந்த ஆண்டில் பின்வரும் மூன்று புதிய சரணாலயங்கள் உருவாக்கப்படும் என்று தமிழக வனத்துறை அமைச்சர் கூறியுள்ளார். அவையாவன
    - திருப்பூரில் உள்ள நஞ்சன்ராயன் ஏரியில் பறவைகளுக்கான சரணாலயம் ஒன்றும்
    - கிருஷ்ணகிரியில் ஒரு யானைகள் சரணாலயமும்
    - திண்டுக்கல்லில் தேவாங்கு எனும் விலங்குகளுக்கு மூன்றாவது சரணாலயமும்
- தேவாங்கு எனப்படும் ஸ்லெண்டர் லோரிஸ் என்ற விலங்கானது தென்னிந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் வாழும் ஒரு வட்டார இனமாகும்.

## இறந்த உடலில் இருந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

- கடந்த இரண்டு வார காலத்தில், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இரண்டாவது முறையாக இறந்த உடலில் இருந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
- சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில், இறந்த உடலில் இருந்து உறுப்பு தானம் செய்யப் படுவது இதுவே முதல்முறை என்று தமிழ்நாடு உடலுறுப்பு தான ஆணைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.
- COVID-19 பெருந்தொற்றிற்குப் பிறகு ஸ்டான்லி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை இதுவாகும்.

## உணவு தானிய உற்பத்தியில் நிறைவுற்ற நிலை

- முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2021-22 ஆம் ஆண்டில் தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி 9% அதிகமாக பதிவாகியுள்ளது.
- இது தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி நிறைவுற்ற ஒரு நிலையை அடைந்ததைக் காட்டுகிறது.
- தமிழகத்தில், 2011-12 ஆம் ஆண்டில் இருந்து சராசரியாக ஆண்டுக்கு 100 லட்சம் டன்கள் உணவு தானிய உற்பத்தி பதிவாகியுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 127.95 லட்சம் டன்கள் உற்பத்தியும், கடந்த ஆண்டில் சுமார் 118 லட்சம் டன்கள் உற்பத்தியும் பதிவாகியுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான இலக்காக சுமார் 126 லட்சம் டன்களாக நிர்ணயிக்கப் பட்டு உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

## குட்டை வகை நாட்டு மாடுகளுக்கான வளங்காப்பு மையம்




- காட்டுப்பாக்கம் என்னுமிடத்தில் குட்டை வகை நாட்டு மாடுகளுக்கான ஒரு பாதுகாப்பு மையத்தினை நிறுவ உள்ளதாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் கால்நடை அறிவியல் துறை முடிவு செய்துள்ளது.
- இது செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் பரவலாகக் காணப்படும் ஒரு கால்நடை இனமாகும்.
- காங்கேயம், புலியூர், பர்கூர், உம்பளச்சேரி மற்றும் ஆலம்பாடி ஆகிய கால்நடை இனங்களை அழிவிலிருந்துப் பாதுகாப்பதற்கான சில வளங்காப்பு மையங்களும் ஏற்கெனவே அமைக்கப் பட்டுள்ளன.

## மலேரியா அற்ற நிலையை நோக்கி நகரும் தமிழகம்

- 2015-2021 ஆம் ஆண்டுகளில் மலேரியா ஒழிப்பில் தமிழகத்தின் சிறப்பான செயல்திறன் மற்றும் இரண்டாவது நிலையிலிருந்து முதல் நிலைக்கு தமிழகம் முன்னேறியுள்ளமை ஆகியவற்றை அங்கீகரித்து, தேசிய நோய்த் தொற்றுக் கட்டுப்பாட்டு மையம் ஒரு சான்றிதழை வழங்கியது.
- இரண்டாம் நிலை என்பது மலேரியா அற்ற நிலைக்கு முந்தையக் கட்டத்தையும், முதல் நிலையானது மலேரியா அற்ற ஒரு கட்டத்தையும் குறிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை ஒழிக்க வேண்டும் என்று இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில் 2024 ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை ஒழிப்பதற்கு தமிழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 38 மாவட்டங்களுள், 31 மாவட்டங்களில் பூஜ்ஜிய அளவு பாதிப்புகளே பதிவாகியுள்ளது.

## புதிய முறைசார் வேலைவாய்ப்புகள்

- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தமிழ்நாட்டின் முறைசார் பணித் துறையில் புதிதாக சுமார் 1.70 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.
- இது 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்ததை விட 26 சதவீதமும் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இருந்ததை விட 13 சதவீதமும் அதிகமாகும்.
- புதிதாக சேர்க்கப்பட்ட இந்த வேலைவாய்ப்புகள் ஊழியர் வருங்கால வைப்புநிதி அமைப்பில் பதிவு செய்யப்பட்ட புதிய நிகரச் சேர்க்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அளவிடப் படுகிறது.

| February 2022 | February 2021 | January 2022 |
|---|---|---|
| 1,491 | 1,924 | 1,153 |
| 36,978 | 36,616 | 29,308 |
| 45,081 | 38,868 | 35,017 |
| 20,979 | 17,135 | 17,503 |
| 30,255 | 25,897 | 25,875 |
| 35,378 | 30,001 | 26,688 |
| **1,70,162** | **150,441** | **1,35,544** |



## அதிக வரி வருவாய்

- 2021-2022 ஆம் ஆண்டில் தமிழக வணிக வரித் துறையின் வருவாய் ஆனது ஒரு லட்சம் கோடி என்ற வரம்பினைத் தாண்டியுள்ளது.
- பதிவுத் துறையானது ரூ.13,913.65 கோடி வருவாயினை ஈட்டியுள்ளது.
- இந்த இரண்டு வசூல்களும் அந்தந்தப் பிரிவில் இதுவரையில் பதிவாகாத அதிகளவு வசூல் ஆகும்.

## இதுவரை இல்லாத அளவிலான அதிகபட்ச மின்சார நுகர்வு

| POWER GENERATION ON THURSDAY (IN MW) | |
|---|---|
| Thermal | 3,885 |
| Hydro | 279 |
| Central govt share | 5,063 |
| Others | 8,143 |
| Total | 17,370 |

- ஏப்ரல் 28 ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவிலான அதிகபட்ச மின்சார நுகர்வு (387.047 மில்லியன் அலகுகள்) பதிவாகியுள்ளது.
- இதற்கு முன்பாக இந்த ஆண்டு மார்ச் 29 அன்று தமிழகத்தில் 378.328 மில்லியன் அலகுகள் என்ற அளவில் அதிகபட்ச மின்சார நுகர்வு பதிவாகியிருந்தது.
- இதுவரையில் பதிவான மாநிலத்தின் அதிகபட்ச மின் தேவையானது மார்ச் 29 அன்று பதிவு செய்யப்பட்ட 17,196 மெகாவாட் (MW) என்பதாகும்.
- தமிழகத்தின் மின் தேவையானது ஏப்ரல் 28 அன்று 17,370 மெகாவாட் அலகினைத் தொட்டது.

## ஐந்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள்

- தமிழக முதல்வர் 5 புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த அறிவிப்புகளைச் சட்ட சபையில் அறிவித்தார்.

- அந்த 5 திட்டங்களாவன
  - அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவச காலை உணவுத் திட்டம்
  - ஊட்டச் சத்துக் குறைபாட்டை நீக்குவதற்கானத் திட்டம்,
  - நகர்ப்புறங்களில் தகைசால் பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவுதல் மற்றும்
  - நகர்ப்புறப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார மருத்துவ வசதிகள் போன்ற ஆரோக்கிய நல மையங்களை ஏற்படுத்துதல்
  - 'உங்கள் தொகுதியில் முதல்வர்' என்ற திட்டத்தின் விரிவாக்கம் மூலம் 234 தொகுதிகளிலும் பொதுமக்கள் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான அமைப்பு.

**In pipeline:** Here are the five schemes announced by Chief Minister M.K. Stalin in the T.N. Assembly

- **Free breakfast** for Class **I**-V government school children in a phased manner
- Initiatives to **eradicate nutrition deficiency**
- Setting up of **Schools of Excellence**
- Setting up of **primary healthcare-like centres** in urban areas
- Expanding the 'CM in Your Constituency' **grievance redressal scheme** to all 234 constituencies in the State


## காலைச் சிற்றுண்டி திட்டம்

- அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 01 முதல் 05 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் சத்தான காலைச் சிற்றுண்டி வழங்கப்படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- மதிய உணவுத் திட்டத்துடன் சிற்றுண்டி உணவையும் வழங்கும் முதல் மாநிலமாக தமிழ்நாடு உருவாக உள்ளது.
- மாநகராட்சி மற்றும் நகராட்சி எல்லைக்குள் ஒருங்கிணைந்த நகர்ப்புறச் சுகாதார மையங்களைத் தொடங்குவதும் இத்திட்டத்தில் அடங்கும்.
- பள்ளி அமைந்துள்ள தூரம் மற்றும் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக பள்ளிக்குச் செல்லும் போது காலை உணவைத் தவிர்க்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்தத் திட்டம் உதவும்.

## தமிழகத்தில் இரும்புக் காலம்

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறை பகுதியில் தமிழகத் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியில் 4,200 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இரும்புக் காலத்தின் தொடக்கம் உள்ளது என்பது தெரிய வந்துள்ளது.
- தொல்லியல் துறையானது, 'மயிலாடும்பாறை - வேளாண் சமுதாயத்தின் ஆரம்பம்; தமிழகத்தில் 4,200 ஆண்டுகள் பழமையான இரும்புக் காலகே கலாச்சாரம்' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.

- ❖ வயது கணக்கிடப்பட்ட காலத்தில் நிலமட்டத்திற்குக் கீழே 25 செண்டிமீட்டர் வரையில் கலாச்சாரத்தினைக் காட்டும் படிமங்கள் இருப்பதால், கி.மு 2200 ஆம் ஆண்டுக்கு முன் அங்கு கற்காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த கலாச்சாரம் நிலவியதாகக் கண்டறியப் பட்டது.
- ❖ கேரளாவின் பட்டணம், கர்நாடகாவின் தலக்காடு, ஆந்திராவின் வெங்கி மற்றும் ஒடிசாவின் பாலூர் ஆகிய இடங்களில் தமிழகத் தொல்லியல் துறை அகழாய்வு மேற் கொள்ளும் என்றும் அத்துறை அறிவித்தது.




## சொத்து வரி உயர்வு

- ❖ கடந்த மாதம் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் சொத்து வரியை உயர்த்திய தமிழக அரசானது, இனி ஆண்டுதோறும் சொத்துவரியை உயர்த்த முடிவு செய்துள்ளது.
- ❖ ஆண்டுதோறும் சொத்து வரியை உயர்த்துவதற்கு நகராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதிய மசோதா கூறுகிறது.
- ❖ இந்த மசோதாவானது, 1919 ஆம் ஆண்டு சென்னை நகர நகராட்சிக் கழகச் சட்டம், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்; 1971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டம்; மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகர மாநகராட்சிக் கழகச் சட்டம் ஆகிய சட்டங்களில் இந்தப் புதிய விதியினைச் சேர்க்க முயல்கிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் - 1998


- ❖ 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தினை புதுப்பிப்பதற்கான மசோதாவினைத் தமிழக அரசு சட்டசபையில் தாக்கல் செய்தது.
- ❖ அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொதுவான இந்தச் சட்டமானது 20 ஆண்டுகளுக்கும் மேலாக இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளது.
- ❖ இந்தச் சட்டமானது புதுப்பிக்கப்பட்டால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயல்பாட்டு இடைநிறுத்தம்) சட்டம், 2000 ஆகியவை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிச் சட்டங்களும், ரத்து செய்யப் படும்.

## மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு துணை வேந்தர் நியமனம்

- தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நியமிப்பதற்குத் தமக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு சட்ட மசோதாவை தமிழக அரசு சட்டசபையில் தாக்கல் செய்தது.
- குஜராத் பல்கலைக்கழகச் சட்டம், 1949 மற்றும் தெலுங்கானா (ஆந்திரப் பிரதேசம்) பல்கலைக் கழகங்கள் சட்டம், 1991 ஆகியவை அந்தந்த மாநில அரசுகளுக்கு துணை வேந்தர்களை நியமிக்க அதிகாரம் அளித்துள்ளன.
- தற்போது, மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர் திகழ்கிறார்.
- ஆளுநர் தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட ஒரு குழுவிலிருந்துத் துணைவேந்தர்களை நியமனம் செய்கிறார்.

## ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு

- உச்சநீதிமன்றம் முழுமையான நீதியை வழங்குவதற்காக வேண்டி அதன் அசாதாரண அதிகாரங்களைப் பயன்படுத்தி, A.G. பேரறிவாளனை விடுதலை செய்ய உத்தரவிட்டது.
- மின்கலன்களை வாங்கியதற்காக வேண்டி 1991 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட போது பேரறிவாளனுக்கு வயது 19 ஆகும்.
- அவை முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்ற ஒரு பெல்ட் வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகும்.




- நீதிபதி L. நாகேஸ்வர ராவ் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வானது, இந்த வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரையும் முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி தமிழக அமைச்சரவை வழங்கிய ஒரு அறிவுரைக்கு ஆளுநர் கட்டாயமாக கட்டுப்பட வேண்டும் என்று கூறியது.
- இத்தீர்ப்பை வழங்கும் போது, "முழுமையான நீதியை" வழங்குவதற்கு வேண்டி நிலுவையில் உள்ள எந்தவொரு வழக்கு அல்லது விவகாரத்தில் அதன் சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கும் 142வது சரத்தை உச்ச நீதிமன்றம் பயன்படுத்தியது.
- 1980 ஆம் ஆண்டின் மாரு ராம் வழக்கானது மாநில அமைச்சரவையால் வழங்கப் படும் அறிவுரை மற்றும் ஆலோசனையினை ஆளுநர் ஏற்று நடக்க வேண்டும்.

- ஒருவேளை அந்த அறிவுரை ஏற்றுக் கொள்ளப் படவில்லையெனில், ஆளுநர் அதனைத் திரும்பப் பரிசீலிக்கக் கோரி திரும்பவும் மாநிலத்திற்கே அனுப்ப வேண்டும்.

*142வது சரத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட மற்ற வழக்குகள்*

- போபால் விஷவாயுக் கசிவு துயர சம்பவம் குறித்த வழக்கின் போது, பாதிக்கப் பட்டவர்களுக்கு 470 மில்லியன் டாலர் இழப்பீடு வழங்குமாறு அமெரிக்காவைச் சேர்ந்த யூனியன் கார்பைடு நிறுவனத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
- இராமர் கோவில் வழக்கின் தீர்ப்பில் அந்தக் கோவில் நிலத்தைப் பிரிக்க மறுத்து, அதற்குப் பதிலாக அந்த நிலத்தின் சர்ச்சைக்குரியப் பகுதியான 2.77 ஏக்கர் நிலத்தை மொத்தமாக இந்து சமூகத்தினைச் சேர்ந்தப் பிரிவினருக்கு வழங்கியது.

## மேட்டூர் அணை திறப்பு



- மே 24 ஆம் தேதியன்று, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.
- அந்த அணையின் முழுக் கொள்ளவான 120 அடியில், அதன் நீர்மட்டம் 115.35 அடியாக இருந்தது.
- சுதந்திரம் பெற்ற பிறகு மேட்டூர் அணை மே மாதம் திறக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.

## 12,000வது லிங்க் ஹாஃப்மேன் புஷ் இரயில் பெட்டி

- மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் 12,000வது லிங்க் ஹாஃப்மேன் புஷ் (LHB) இரயில் பெட்டியை (ICF) தொடங்கி வைத்தார்.
- லிங்க் ஹாஃப்மேன் புஷ் இரயில் பெட்டிகள் தயாரிப்பில் இத்தகைய அந்தஸ்தினைப் பெற்ற இந்திய இரயில்வேயின் முதல் உற்பத்திப் பிரிவு ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலை ஆகும்.
- மேலும், வந்தே பாரத் விரைவு இரயில் பெட்டிகளானது கட்டுமானத் தொழிற் சாலையின் லிங்க் ஹாஃப்மேன் புஷ் இரயில் பெட்டித் தயாரிப்பு முனையத்தில் தயாரிக்கப் படுகின்றன.

## 124வது ஊட்டி மலர்க் கண்காட்சி

- ஊட்டியில் உள்ள அரசுத் தாவரவியல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 124வது மலர்க் கண்காட்சியைத் தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- நீலகிரி உருவாக்கப்பட்ட 200 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் ஊட்டி 200 என்ற சின்னம் உருவாக்கப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டில், மறைந்த முன்னாள் முதல்வர் J.ஜெயலலிதா அவர்கள் 100வது மலர்க் கண்காட்சி மற்றும் அரசு ரோஜாப் பூங்கா ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.
- 22 ஆண்டுகளுக்குப் பிறகு, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சிகளை முன்னாள் முதல்வர் எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்.

## கலைஞர் கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டம்


- மு.க. ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் கலைஞர் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கிராமங்களை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படும்.
- அடுத்த சில ஆண்டுகளில் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளது.

## முன்கூட்டியே வார்த்தெடுக்கப்பட்ட அமைப்பைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட வீடுகள்

- சென்னை பெரும்பாக்கத்தில் முன்கூட்டியே வார்த்தெடுக்கப்பட்ட அமைப்பைப் பயன்படுத்திக் கட்டப்பட்ட 1,152 வீடுகளைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- முன்கூட்டியே வார்த்தெடுக்கப்பட்ட அமைப்பில், தூண்கள், தூண் தாங்கிகள், அடுக்குகள் போன்ற கட்டமைப்புகள் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, பிறகு கட்டுமான இடத்திற்கு அவை கொண்டு வரப்படுகின்றன.
- பெரும்பாக்கம் திட்டமானது, உலக வீட்டு வசதித் தொழில்நுட்பச் சவாலின் கீழான லைட் ஹவுஸ் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- தமிழகத்தின் பெரும்பாக்கம் திட்டம் உட்பட மொத்தம் ஆறு லைட் ஹவுஸ் திட்டங்கள் உள்ளன.
- மற்ற ஐந்து திட்டங்களும் குஜராத், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன.
- ஆறு திட்டங்களுள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பெரும்பாக்கம் திட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

### மு.கருணாநிதி சிலை

- சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மு.கருணாநிதியின் 16 அடி உயரச் சிலையை இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் திறந்து வைத்தார்.
- இதே சாலையில், கருணாநிதி அவர்கள் உயிருடன் இருந்தபோது 1975 ஆம் ஆண்டில் அவருக்கு சிலை நிறுவப்பட்டது.
- இருப்பினும், 1987 ஆம் ஆண்டில் இந்தச் சிலை அகற்றப்பட்டது.



## தேசியச் செய்திகள்

### 19 லட்சம் சந்தை மூலதனத்தினை எட்டிய முதல் இந்திய நிறுவனம்

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனமானது, தினசரி வர்த்தகத்தில் ரூ.19 லட்சம் கோடி சந்தை மதிப்பீட்டை எட்டிய முதல் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- கனரகச் சந்தை வர்த்தகத்தின் பங்குகள் 1.85 சதவீதம் உயர்ந்து, மும்பை பங்குச் சந்தையில் 2,827.10 ரூபாயாக உயர்ந்தது.

### உள்நாட்டு வழிகாட்டு அமைப்பு - ககன்

- ககன் (GAGAN) எனப்படும் ஒரு உள்நாட்டு வழிகாட்டு அமைப்பைப் பயன்படுத்தித் தனது விமானத்தைத் தரையிறக்கிய ஆசியாவின் முதல் விமான நிறுவனமாக இன்டிகோ மாறியது.
- இது இந்தியப் பொது விமானப் போக்குவரத்திற்கான ஒரு மாபெரும் முயற்சி மற்றும் ஆத்ம நிர்பர் பாரத் நோக்கிய ஒரு உறுதியான முயற்சியாகும்.
- தற்போது அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை அடுத்துத் தனக்கென ஒரு செயற்கைக் கோள் சார்ந்த இணைப்பு (SBAS) என்ற அமைப்பைக் கொண்ட உலகின் மூன்றாவது நாடாக இந்தியா மாறியுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா - SEHAT திட்டம்

- ஜம்மு கோட்டத்தின் சம்பா மாவட்டம் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (ABPMJAY) - SEHAT என்ற திட்டத்தின் கீழ் 100% குடும்பங்களையும் இணைத்த இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.
- ABPMJAY SEHAT திட்டமானது, அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாகும்.
- மேலும் இந்தத் திட்டத்தின் கீழ், இந்தியா முழுவதும் உள்ள அனைத்து அரசு மற்றும் பதிவு செய்யப் பட்ட தனியார் மருத்துவமனைகளிலும் ஆயுஷ்மான் பாரத் கோல்டன் கார்டு (தங்க நிற அட்டை) உள்ளவர்கள் ரூ. 5 லட்சம் வரை இலவச சிகிச்சையைப் பெறுவர்.




## மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பு காப்பீடு பற்றிய உலக மதிப்பாய்வு 2022

- உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆனது 'மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்புக் காப்பீடு' பற்றிய 2022 ஆம் ஆண்டிற்கான உலக மதிப்பாய்வை வெளியிட்டுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டில் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளில் நடத்தப்பட்ட மதிப்பாய்வுகளின் தகவல்களை முன்வைக்கிறது.
- இந்திய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் துறையில் காப்பீட்டு வசதிகளின் வழங்கீடு குறைவாக உள்ளது.
- எனவே, இந்தத் துறையை மீட்டெடுப்பதற்காக வேண்டி பொது மற்றும் தனியார் காப்பீட்டு நிறுவனங்களை ஒன்றிணைந்துச் செயல்படுமாறு இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப் பட்டது.
- இந்தியாவின் இந்த தேசிய அளவிலான அறிக்கையை மூத்த அறிவியலாளர் ஷினோஜ் பரப்புரத்து என்பவர் தயாரித்துள்ளார்.

- மீன்பிடிக் கப்பல்கள், கடலோர அசையாச் சொத்துக்கள் மற்றும் மீன்வளர்ப்பு அலகுகள் ஆகியவற்றிற்குச் சரியான காப்பீட்டு வசதிகள் வழங்கப்படவில்லை.




## டிஜிட்டல் இந்தியா RISC-V திட்டம்

- டிஜிட்டல் இந்தியா RISC-V (DIR-V) என்ற திட்டத்தினைத் தொடங்க உள்ளதாக இந்திய அரசு அறிவித்தது.
- இந்திய நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலத்திற்காக நுண்செயலிகளை உருவாக்கும் ஒரு நோக்கத்துடன் இத்திட்டமானது அறிவிக்கப்பட்டது.
- அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் கொண்ட நுண்செயலிகளுக்கான வடிவமைப்பு மற்றும் தொழில்துறை தரத்திற்கான வணிக ரீதியான சிலிக்கான் ஆகிய இலக்குகளை அடைவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## MSME நிறுவனங்களுக்கான நிலைத்தன்மை சான்றிதழ் திட்டம்

- மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான நிலைத்தன்மை சான்றிதழ் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்திய நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் உலகளாவியப் போட்டித் தன்மைக்கான ஒரு செயல்திட்டத்தை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
- இத்திட்டம் உற்பத்தி நிறுவனங்களை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கொண்டவையாக மாற்ற முயற்சிக்கும்.
- இந்தத் திட்டமானது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சுழிய மாசுபாடு மற்றும் சுழிய விளைவு நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கும் பின்பற்றுவதற்கும் உதவுகிறது.

## மலேரியா ஒழிப்புக்கான தேசியக் கட்டமைப்பு

- 2030 ஆம் ஆண்டிற்குள் மலேரியா நோயை முற்றிலும் ஒழிப்பதற்காக இந்தியா மேற் கொள்ள உள்ள உத்திகளை இது எடுத்துரைக்கிறது.
- 2022 ஆம் ஆண்டிற்குள், அனைத்துக் குறைவான (வகை 1) மற்றும் நடுத்தர (வகை 2) தொற்றுள்ள ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து மலேரியாவை முற்றிலும் ஒழிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அனைத்து ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களில் மலேரியாவின் பாதிப்பு வீதத்தை 1000 பேருக்கு 1 பாதிப்பு என்ற அளவிற்கும் கீழ் குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 31 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மலேரியாவை ஒழிக்க வேண்டும்.
- 2027 ஆம் ஆண்டிற்குள், அனைத்து ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களிலும் மலேரியாவின் உள்நாட்டுப் பரவல் (வகை 3) அகற்றப்பட வேண்டும்.

## அசுர்கர் கோட்டைக் குடியிருப்பு

- ஒடிசாவின் கலஹண்டி மாவட்டத்தில் உள்ள அசுர்கர் கோட்டை என்ற குடியிருப்பில் ஒரு மேம்பட்டக் கதிரியக்க கார்பன் வயது கணிப்பு முறையைக் கொண்டு ஆய்வு நடத்தப் பட்டது.
- இதன்படி, இந்தக் குடியிருப்புப் பகுதி கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டு அல்லது இரும்புக் காலத்தைச் சேர்ந்தது என்று கணித்துள்ளது.
- இது ஒடிசாவின் பழமையான கோட்டையான சிசுபால்கர் கோட்டையை விட இந்தக் கோட்டை 2,500 முதல் 2,600 ஆண்டுகள் பழமையானது என்று குறிப்பிடுகிறது.
- இந்தக் குடியிருப்புப் பகுதியானது மௌரியர் காலத்தைச் சேர்ந்ததாக முன்னர் நம்பப் பட்டது.
- முதுகலை வரலாற்றுத் துறையின் சார்பில் 1973 ஆம் ஆண்டு N.K. சாஹு என்பவரால் இந்த இடத்தில் முதல் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.




## ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம்




- 2022 ஆம் ஆண்டின் காரீஃப் பருவத்திற்காக பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் (P&K) உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய வீதங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குறிப்பிட்ட P&K உரங்களை விவசாயிகள் மானிய, மலிவு மற்றும் நியாயமான விலையில் பெறவும், விவசாயத் துறைக்கு ஆதரவளிக்கவும் இது உதவும்.
- அரசானது உர உற்பத்தியாளர்கள்/இறக்குமதியாளர்கள் மூலம், யூரியா மற்றும் P&K உர வகையின் 25 தரநிலைகள் ஆகிய உரங்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குகிறது.

## மிக அதிகளவில் பொருளாதாரச் சவால்கள் நிறைந்த நாடுகள்

- அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதி அமைப்பானது சீனா, ரஷ்யா மற்றும் இதர நான்கு நாடுகளுடன் சேர்த்து இந்திய நாட்டினை மீண்டும் 'முதன்மைக் கண்காணிப்புப் பட்டியலில்' சேர்த்துள்ளது.
- போதிய அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு மற்றும் அமலாக்கம் இல்லாததே இதற்குக் காரணம் ஆகும்.
- அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு மற்றும் அமலாக்கம் ரீதியாக உலகின் மிகவும் சவால் நிறைந்த பெரியப் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா உள்ளது.





## இராணுவப் பணியாளர்களின் துணைத் தளபதி

- லெப்டினன்ட் ஜெனரல் பாகவல்லி சோமசேகர் ராஜு, மே 01 ஆம் தேதி முதல் இராணுவத்தின் அடுத்த துணைத் தளபதியாக பதவி ஏற்றுள்ளார்.
- இவர் லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே என்பவரை அடுத்து இப்பதவியை ஏற்க உள்ளார்.
- லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே 29வது இராணுவத் தளபதியாக நியமிக்கப் பட்டார்.
- ஜெனரல் M.M. நரவனே என்பவரைத் தொடர்ந்து இவர் இப்பதவியை ஏற்றார்.

## அதிகபட்ச சரக்கு மற்றும் சேவை வரி வசூல்

- சிறப்பான வரிவிதிப்பு இணக்கம் மற்றும் விரைவானப் பொருளாதார மீட்சி ஆகியவற்றின் காரணமாக ஏப்ரல் மாதத்தில், சரக்கு மற்றும் சேவை வரி வசூலானது இது வரை இல்லாத அளவிற்கு ரூ.1,67,540 கோடியை எட்டியது.
- தற்போது பதிவான வசூலானது, மார்ச் மாதத்தில் வசூலிக்கப்பட்ட முந்தைய அதிக பட்ச வசூலான ரூ.1,42,095 கோடியை விட ரூ.25,000 கோடி அதிகமாகும்.
- 2022 ஏப்ரல் மாதத்தில், அதிகபட்சமாக ஏப்ரல் 20 அன்று ஒரே நாளில் அதிக வரி வசூல் செய்யப் பட்டது.
- மாநில வாரியாக, மகாராஷ்டிராவில் அதிகபட்சமாக ரூ.27,495 கோடியும், அதனைத் தொடர்ந்து கர்நாடகா (ரூ.11,820 கோடி), குஜராத் (ரூ.11,264 கோடி), உத்தரப் பிரதேசம் (ரூ.8,534 கோடி), ஹரியானா (ரூ.8,197 கோடி) ஆகிய மாநிலங்களில் முறையே வரி வசூல் அளவானது பதிவாகியது.
- மிகக் குறைவான அளவில் சரக்கு மற்றும் சேவை வரி வசூலித்த மாநிலங்களில் மிசோரம் வெறும் 46 கோடி என்ற வரி வசூலுடன் கடைசி இடத்தினையும் அதனைத் தொடர்ந்து நாகாலாந்து (ரூ 68 கோடி), மணிப்பூர் (ரூ 69 கோடி), திரிபுரா (ரூ 107 கோடி), மற்றும் அருணாச்சலப் பிரதேசம் (ரூ 196 கோடி) போன்ற மாநிலங்களும் உள்ளன.




## கர்மயோகி திட்டத்திற்கு உலக வங்கி நிதி




- இந்திய அரசின் கர்மயோகி திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கான 47 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 18 மில்லியன் அரசு ஊழியர்கள் பணியமர்த்தப் பட்டு உள்ள நிலையில் அவர்களுள் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு பணியாளர்கள் மாநில அரசு மற்றும் உள்ளாட்சி நிலையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- இந்தியாவில் உலக வங்கியின் நான்கு பிரிவுகளில் ஒன்றாக பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்தச் செய்வதை உள்ளடக்கிய FY18-22 இந்தியத் தேசியக் கூட்டாண்மைக் கட்டமைப்பினுடன் இத்திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

## தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்பின் உறுதிப்பாட்டு ஆவணம்

- மத்தியக் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சர் தர்மேந்திர பிரதான் தேசிய கல்விக் கொள்கையின் கீழ் தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்பிற்கான உறுதிப்பாட்டு ஆவணத்தை பெங்களூரு நகரில் வெளியிட்டார்.
- உறுதிப்பாட்டு ஆவணம் என்பது தேசியக் கல்விக் கொள்கை மற்றும் தேசியப் பாடத் திட்டக் கட்டமைப்பிற்கு இடையிலான ஒரு முன்னேற்றப் படிநிலை ஆகும்.
- புதிய தேசிய அளவிலானப் பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களை உருவாக்கச் செய்வதற்கான ஒரு படியாக இந்த உறுதி ஆவணம் விளங்குவதாக அவர் குறிப்பிடச் செய்தார்.


## உஜ்வாலா திவாஸ்

- உஜ்வாலா யோஜனா என்ற திட்டமானது 2016 ஆம் ஆண்டு மே 01 அன்று உத்தரப் பிரதேசத்தில் உள்ள பாலியா எனும் நகரில் பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகமானது 2022 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியை உஜ்வாலா திவாஸ் ஆக கொண்டாட முடிவு செய்துள்ளது.
- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டமானது வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவச LPG இணைப்பினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா அல்லது உஜ்வாலா சமையல் எரிவாயுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இப்போது இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் மேலும் 10 மில்லியன் அளவிலான பயனாளிகளைச் சேர்ப்பதை உஜ்வாலா 2.0 திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 2021-22

- 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் மருந்துத் துறையானது ஏற்றுமதியில் சிறப்பான முறையில் செயல்பட்டுள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டுகளில் இருந்து இந்தியாவின் மருந்தியல் துறை 103% வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- உலகளவில் ஏற்றுமதி செய்யப்படும் தடுப்பூசிகளில் 60 சதவீதமும் இனம்சார் (ஜெனிரிக்) மருந்துகளில் 20 சதவீதமும் இந்தியாவிலிருந்து வருவதால், இந்தியா மருந்துப் பொருட்களின் முக்கிய ஏற்றுமதியாளராக திகழ்கிறது.

- ஆப்பிரிக்காவின் இனம்சார் மருந்துகளுக்கான தேவைகளில் 50 சதவீதத்திற்கும் மேல் இந்தியா ஏற்றுமதி செய்கிறது.
- இந்திய நாடானது DPT, BCG மற்றும் தட்டம்மை தடுப்பூசி ஆகியவற்றை வழங்குவதில் முன்னணியில் உள்ளது
- உலக சுகாதார அமைப்பின் 70% அளவிலான தடுப்பூசிகள் (அத்தியாவசிய நோய்த் தடுப்பு அட்டவணையின் படி) இந்தியாவில் இருந்து பெறப்படுகின்றன.
- இந்தியா 'உலகின் மருந்தகமாக' செயல்பட்டு வருகிறது.
- இந்திய மருந்துத் துறையானது, உலகளவில் அளவீட்டில் 3வது இடத்திலும், மதிப்பின் அடிப்படையில் 14வது இடத்திலும் உள்ளது.




## பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான மரபணு வங்கி

- மகாராஷ்டிர மாநில அமைச்சரவையானது, இந்தியாவிலேயே முதல்முறையாக தனது மாநிலத்தில் மரபணு வங்கியை நிறுவுவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இயற்கை வளங்கள் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்வதற்காக பூர்வீகப் பல்லுயிர் பெருக்கத்தினைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டமானது கடல்சார் பல்லுயிர்ப் பெருக்கம்; பூர்வீகப் பயிர் விதைகள்; உள்ளூர் கால்நடை இனங்கள்; நன்னீர் பல்லுயிர்ப் பெருக்கம்; தரிசு நிலம், மேய்ச்சல் நிலம் மற்றும் புல்வெளிப் பல்லுயிர்ப் பெருக்கம்; வன நிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை; மற்றும், வன நிலங்கள் புத்துயிராக்கம் ஆகிய ஏழு பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது.

## பிளாஸ்ட்இந்தியா 2023

- "பிளாஸ்ட்இந்தியா 2023 எனப்படும் 11வது சர்வதேச நெகிழிக் கண்காட்சி மற்றும் மாநாட்டினை" சமீபத்தில் மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சர் மன்சுக் மாண்டவ்யா தொடங்கி வைத்தார்.

- இது தொழில்துறையினர் தங்களது சிறந்த நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களைப் பரிமாற்றம் செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும்.
- உள்நாட்டு நெகிழி உற்பத்தி மற்றும் நுகர்வானது 25 மில்லியன் டன்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது
- இந்தியாவின் நெகிழித் தொழில் துறையின் தற்போதைய மதிப்பு 5 லட்சம் கோடி ரூபாயாகும்.

## நிரந்தர லோக்பால் அலுவலகம்




- இந்தியாவின் லோக்பால் ஆனது, தெற்கு டெல்லியின் நௌரோஜி நகரில் உள்ள உலக வர்த்தக மையத்தில் உள்ள ஒரு புதிய நிரந்தர அலுவலகத்திற்கு மாற்றப்பட உள்ளது.
- 2013 ஆம் ஆண்டு லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டமானது, மத்திய நிலையில் லோக்பால் மற்றும் மாநில அளவில் லோக் ஆயுக்தா ஆகியவற்றை நிறுவுவதற்கு வழி வகை செய்தது.
- அவை ஒரு "ஓம்புட்ஸ்மேன் (குறைகேட்பு)" அதிகாரியின் செயல்பாட்டை மேற் கொள்கின்றன.
- மேலும், சில பொதுப் பணியாளர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்புடைய விடயங்களையும் அவை விசாரிக்கின்றன.
- லோக்பால் அமைப்பு ஒரு தலைவர் மற்றும் அதிகபட்சமாக 8 உறுப்பினர்கள் என்று பல உறுப்பினர்கள் கொண்ட ஒரு அமைப்பாகும்.

## சதாரக் நடவடிக்கை

- இரயில்வேப் பாதுகாப்புப் படையானது சமீபத்தில் சதாரக் என்ற நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- "சதாரக் நடவடிக்கையின்" கீழான ஈடுபாட்டு நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 முதல் ஏப்ரல் 30 ஆம் தேதி வரை மேற்கொள்ளப்பட்டன.

- ❖ வரி ஏய்ப்பு மற்றும் கடத்தல் ஆகிய நோக்கத்திற்காக இரயில்வே அமைப்பின் மூலம் கடத்தப் படும் சட்டவிரோதமான மதுபானம்/போலி இந்திய ரூபாய் நோட்டுகள் / சட்ட விரோதமான புகையிலைப் பொருட்கள்/கணக்கில் காட்டப்படாத தங்கம் மற்றும் பிற பொருட்கள் மீது நடவடிக்கை எடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் குடிமைப் பதிவு முறை பற்றிய அறிக்கை



- ❖ பிறப்பு மற்றும் இறப்பு அறிக்கைகளின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டின் குடிமைப் பதிவு முறை அறிக்கையினை மத்திய அரசு வெளியிட்டது.
- ❖ 2019 ஆம் ஆண்டை விட 2020 ஆம் ஆண்டில் இறப்புப் பதிவு 4.75 லட்சம் அதிகரித்து உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ பீகாரில் இறப்பு விகிதமானது அதிகபட்சமாக 18.3 சதவீதமும், அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிராவில் 16.6 சதவீதமும், அசாமில் 14.7 சதவீதமும் அதிகரித்துள்ளது.
- ❖ இறப்பு விகிதத்தில், மணிப்பூர் மாநிலமானது 25.4 சதவிகிதமும், சண்டிகர் மாநிலமானது 22.1 சதவிகிதமும் சரிவினைக் கண்டுள்ளன.
- ❖ தெலுங்கானா மாநிலத்தில் இறப்பு விகிதம் 1.0 சதவீதம் வரை குறைந்துள்ளது.
- ❖ அதிகபட்ச பிறப்புப் பாலின விகிதம்: 2020 ஆம் ஆண்டில், லடாக் முதலிடத்திலும் (1104) அதைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம் (1011), அந்தமான் & நிக்கோபார் தீவுகள் (984), திரிபுரா (974) மற்றும் கேரளா (969) ஆகியவையும் இதில் இடம்பெற்றுள்ளன.
- ❖ 2020 ஆம் ஆண்டில் பதிவான குறைந்தபட்ச பிறப்புப் பாலின விகிதம் பதிவான முதல் ஐந்து மாநிலங்களின் பட்டியலில் மணிப்பூர் முதலிடத்திலும் (880), அதைத் தொடர்ந்து தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ (898), குஜராத் (909), ஹரியானா (916) மற்றும் மத்தியப் பிரதேசம் (921) ஆகியவையும் இதில் இடம் பெற்றுள்ளன.

## தேசியக் குடும்பநல சுகாதாரக் கணக்கெடுப்பு- 5

- ❖ 4வது மற்றும் 5வது தேசிய குடும்பநல சுகாதாரக் கணக்கெடுப்புகளுக்கு இடைப்பட்ட காலத்தில், ஒரு பெண் சராசரியாக பெற்றெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையான மொத்தக் கருவுறுதல் விகிதமானது, தேசிய அளவில் 2.2 என்ற அளவிலிருந்து 2.0 ஆக குறைந்துள்ளது.

- இந்தியாவில் பீகார் (2.98), மேகாலயா (2.91), உத்தரப் பிரதேசம் (2.35), ஜார்க்கண்ட் (2.26) மணிப்பூர் (2.17) ஆகியவை 2.1 என்ற கருவுறுதல் மீட்சி அளவுக்கு மேல் உள்ள ஐந்து மாநிலங்கள் ஆகும்.
- இந்தியாவில் மருத்துவமனையில் நிகழும் பிறப்புகள் 79% என்ற அளவிலிருந்து 89% என்ற அளவாக பதிவாகி உள்ளது.
- இது கிராமப்புறங்களில் 87% ஆகவும், நகர்ப்புறங்களில் 94% ஆகவும் பதிவாகியுள்ளது.
- கடந்த 4 ஆண்டுகளில், இந்தியாவிலுள்ள ஐந்து வயதுக்குட்பட்டக் குழந்தைகளின் வளர்ச்சி குன்றிய நிலையானது 38% என்ற அளவிலிருந்து 36% ஆக குறைந்துள்ளது.
- வங்கி அல்லது சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை 53 சதவீதத்திலிருந்து 79% ஆக அதிகரித்துள்ளது.
- 6வது தேசியக் குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பை 2023-24 ஆம் ஆண்டில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.


**TOTAL FERTILITY RATE**

NFHS 5 vs NFHS 4

| LOWEST | | |
|---|---|---|
| Punjab | 1.6 | 1.6 |
| West Bengal | 1.6 | 1.8 |
| Maharashtra | 1.7 | 1.9 |
| Karnataka | 1.7 | 1.8 |
| Andhra | 1.7 | 1.8 |
| **HIGHEST** | | |
| Bihar | 3.0 | 3.4 |
| Meghalaya | 2.9 | 3.0 |
| UP | 2.4 | 2.7 |
| Jharkhand | 2.3 | 2.6 |
| Manipur | 2.2 | 2.6 |

## இந்தியாவின் முதலாவது மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பு

- தேசியத் தலைநகர மண்டலப் போக்குவரத்து கழகமானது (NCRTC) இந்தியாவின் முதலாவது மித-அதிவேக இரயிலை மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பைப் பெற உள்ளது.
- மணிக்கு 180 கிலோமீட்டர் என்ற வேகத்தில் செல்லக்கூடிய மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பின் இரயில் பெட்டிகளானது இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படுகிறது.
- டெல்லி மற்றும் மீரட் ஆகிய நகரங்களுக்கு இடையே இந்தியாவின் முதல் மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பின் வழித்தடத்தினைச் செயல்படுத்துவதற்கு தேசியத் தலைநகர மண்டலப் போக்குவரத்து கழகமானது பொறுப்பேற்றுள்ளது.




## திரைப்பட மீள்புதுப்பித்தல் திட்டம்

- மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் அனுராக் தாகூர், தேசியத் திரைப்பட பாரம்பரியத் திட்டத்தின் கீழ், உலகின் மிகப்பெரிய திரைப்பட மீள்புதுப்பித்தல் திட்டம் ஒன்றினை அறிவித்தார்.
- தேசியத் திரைப்படப் பாரம்பரியத் திட்டத்தின் கீழ், சுமார் 2,200 திரைப்படங்கள் மீள் புதுப்பிக்கப் படும்.
- திரைப்படத் தயாரிப்பாளர்கள், ஆவணப்படத் தயாரிப்பாளர்கள், திரைப்பட வரலாற்றாசிரியர்கள், தயாரிப்பாளர்கள் போன்றவர்களைக் கொண்ட மொழி வாரியான குழுக்களால் திரைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.
- அபர்ணா சென், ஸ்ரீராம் ராகவன், அஞ்சலி மேனன் மற்றும் வெற்றிமாறன் போன்ற பிரபலத் திரையுலகப் பிரமுகர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

## நடமாடும் கொள்கலன் மருத்துவமனை

- ரெயில்டெல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனமானது "ஹெல்த் கிளவுட்" எனப்படும் மேகக் கணிமை அமைப்பு ஒன்றை வடிவமைத்துச் செயல்படுத்தி உள்ளது.
- இது ஆந்திரப் பிரதேச மருத்துவத் தொழில்நுட்ப மண்டலத்தின் விசாகப்பட்டினம் வளாகத்தில் அமைந்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மருத்துவத் தொழில்நுட்ப மண்டலம் என்பது உலகின் முதலாவது ஒருங்கிணைந்த மருத்துவச் சாதன உற்பத்தி மையமாகும்.

## PM MITRA திட்டம் குறித்த தேசிய மாநாடு

- பிரதம மந்திரி மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பிராந்தியங்கள் மற்றும் ஆடைப் பூங்காக்கள் திட்டம் (PM MITRA) குறித்த தேசிய மாநாடானது சமீபத்தில் நடைபெற்றது.
- PM MITRA பூங்காக்கள் என்பவை நூற்பு, நெசவு, செயல்முறைக்குட்படுத்துதல் / சாயம் இடுதல் மற்றும் அச்சிடுதல் முதல் ஆடை உற்பத்தி வரை அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து ஒருங்கிணைந்த ஜவுளி மதிப்புத் தொடர் சங்கிலி அமைப்பினை உருவாக்குவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கும்.
- இந்தத் திட்டமானது ஒரு பூங்காவிற்கு வீதம் சுமார் 1 லட்சம் நேரடி மற்றும் 2 லட்சம் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

## தேசிய இளைஞர் கொள்கையின் புதிய வரைவு

- தேசிய இளைஞர் கொள்கையின் புதிய வரைவினை மத்திய அரசு தயாரித்துள்ளது.
- தற்போதுள்ள 2014 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் கொள்கையினை அரசாங்கம் மதிப்பாய்வு செய்த பின்னர் இந்தப் புதிய வரைவினைத் தயாரித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா அடைய விரும்பும், இளைஞர்களின் மேம்பாட்டிற்கான பத்தாண்டுத் தொலைநோக்குத் திட்டங்கள் இந்த வரைவுக் கொள்கையின் மூலம் முன் வைக்கப் பட்டுள்ளன.

## உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகள்

- நீதிபதி சுதன்ஷு துலியா மற்றும் நீதிபதி ஜாம்ஷெட் பர்ஜோர் பர்திவாலா ஆகியோர் உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக பதவியேற்றனர்.
- உச்ச நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையை நிறைவு செய்யும் வகையில் இவர்கள் 33வது மற்றும் 34வது நீதிபதிகளாக செயல்படுவர்.
- நீதியரசர் பர்திவாலா இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட உள்ளார்.
- நீதிபதி பர்திவாலா உச்ச நீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்ற ஆறாவது பார்சி சமூகத்தினர் ஆவார்.

## வருடாந்திரத் தொழிலாளர் வளம் மீதான கணக்கெடுப்பு

- 2021 ஆம் ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில், இந்தியாவின் நகர்ப்புறங்களில் உள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு இடையே நிலவிய வேலையின்மை விகிதமானது 10.3 சதவீத அளவிற்குச் சரிந்தது.
- இது ஓர் ஆண்டிற்கு முன்பு இதே காலாண்டில் 8.7 சதவீதமாக இருந்தது.
- வருடாந்திரத் தொழிலாளர் வளத்தின் மீதான கணக்கெடுப்பானது தேசியப் புள்ளியியல் அலுவலகத்தினால் வெளியிடப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டின் ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில், இந்தியாவின் நகர்ப்புறங்களில் உள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் மத்தியில் நிலவிய வேலையின்மை விகிதமானது, 9.8 சதவீதமாக இருந்தது.

- இது 13வது வருடாந்திரத் தொழிலாளர் வளத்தின் மீதான கணக்கெடுப்பில் (PLFS) குறிப்பிடப் பட்டுள்ளது.
- நகர்ப்புறங்களில், 2021 ஆம் ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலாண்டில் தற்போதைய வாராந்திர நிலையில் தொழிலாளர் மக்கள் தொகை விகிதமானது 43.2 சதவீதமாக உள்ளது.

## துதி நடவடிக்கை



- துணை ராணுவப் படையான அசாம் ரைபிள்ஸ் துதி நடவடிக்கையில் உயிர் பிழைத்த வீரர்களைப் கௌரவித்தது.
- 30 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இந்த நடவடிக்கை இந்தியாவின் மிக வெற்றி கரமான பதில் எதிர்ப்பு நடவடிக்கையாக நாட்டின் பாதுகாப்பு வரலாற்றில் குறிப்பிடப் படுகிறது.
- 1991 ஆம் ஆண்டில், ஜம்மு & காஷ்மீரில் ஒரே ஒரு பதில் எதிர்ப்பு நடவடிக்கையில் 72 தீவிரவாதிகளை அசாம் ரைபிள்ஸ் அழித்தது.

## கலாம் இணையதளம்

- மக்களவைச் சபாநாயகர் ஓம் பிர்லா வட்டார மொழி இலக்கியத்தை ஆதரிக்கவும் அதற்கு ஊக்கமளிப்பதற்காகவும், பிரபா கைதான் என்ற ஒரு அறக் கட்டளையினால் மேற்கொள்ளப்பட்ட அம்சங்களுள் ஒரு வகை இலக்கிய முன்னெடுப்பான கலாம் இணைய தளத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்த இணையதளத்தின் நோக்கமானது, இந்தி இலக்கியத்தைப் பிரபலப்படுத்துவது மற்றும் மூத்த மற்றும் இளம் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் தங்கள் படைப்புகள் பற்றியும், வடமொழி இலக்கியத்தின் மீதான நேசம் பற்றிப் பேசுவது ஆகியவற்றிற்கு ஒரு தளத்தை வழங்குவதாகும்.

## தேசத் துரோகச் சட்டம் 124A பிரிவு மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124A வது பிரிவின் (தேசத் துரோகம்) கீழ் நிலுவையில் உள்ள குற்றவியல் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகளை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

- தேசத் துரோகச் சட்டத்தின் கீழ் சுமார் 13,000 பேர் ஏற்கனவே சிறையில் இருப்பதாக நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.
- இந்தியாவில் சட்டத்தால் நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது வெறுப்பு அல்லது அவ மதிப்பைக் கொண்டு வந்தாலோ, அல்லது தூண்டிவிட்டாலோ அல்லது வெறுப்பைத் தூண்ட முயற்சித்தாலோ, ஒரு நபர் தேசத் துரோகக் குற்றத்தைச் செய்கிறார் என்று 124Aவது பிரிவு கூறுகிறது.
- இது வார்த்தைகள் மூலமாகவோ, பேசப்பட்டதாகவோ அல்லது எழுதப்பட்டதாகவோ அல்லது குறியீடுகள் மூலமாகவோ அல்லது கண்ணுக்குப் புலப்படும் விதமான அடையாளங்கள் மூலமாகவோ என எதன் மூலமாக வெளியிடப் பட்டிருந்தாலும் அதற்கு இந்த விதிமுறை பொருந்தும்.
- இப்பிரிவு இதற்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கிறது.
- 1862 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தேசத் துரோகம் தொடர்பான விதிமுறை எதுவும் இல்லை.
- இது 1870 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு, சுதந்திரப் போராட்ட இயக்கத்தை அடக்கும் நோக்கில் 1898 ஆம் ஆண்டில் அதன் வரம்பு விரிவாக்கப்பட்டது.



## PMJJBY, PMSBY மற்றும் APY ஆகிய திட்டங்களின் 7 ஆம் ஆண்டு நிறைவு

- சமூகப் பாதுகாப்புத் திட்டங்களான பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), பிரதான் மந்திரி சுரக்ச பீமா யோஜனா (PMSBY) மற்றும் அடல் பென்ஷன் யோஜனா (APY) ஆகியவை தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.
- இந்த மூன்று திட்டங்களும் 2015 ஆம் ஆண்டு மே 09 அன்று கொல்கத்தா நகரில் பிரதமர் அவர்களால் தொடங்கப்பட்டது.
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்பது ஒரு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஆகும்.

- இது இறப்பவர்களுக்கு எந்தவொருக் காரணத்திற்காகவும் வேண்டி காப்பீட்டுப் பயன்களை வழங்குகிறது.
- 18 முதல் 50 வயதிற்குட்பட்ட, வங்கியில் சேமிப்புக் கணக்கு அல்லது தபால் அலுவலகக் கணக்கு வைத்திருக்கும் எந்தவொருத் தனிநபரும் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவர்.
- பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா என்பது ஒரு விபத்துக் காப்பீட்டுத் திட்டமாகும்.
- இது விபத்தினால் ஏற்படும் இறப்பு அல்லது உடல் உறுப்பு இழப்பிற்குக் காப்பீட்டு வசதியினை வழங்குகிறது.
- 18 முதல் 70 வயதிற்குட்பட்ட, வங்கியில் சேமிப்புக் கணக்கு அல்லது தபால் அலுவலகக் கணக்கு வைத்திருக்கும் எந்தவொரு தனிநபரும் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவர்.
- அடல் பென்ஷன் யோஜனா என்பது அமைப்புசாரா துறைகளில் பணிபுரியும் மக்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும்.
- 18 முதல் 40 வயதிற்குட்பட்ட, வங்கிக் கணக்கு வைத்திருக்கும் அனைத்து நபர்களும் இத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்ய தகுதியுடையவர்கள் ஆவர்.
- தேர்ந்தெடுக்கப்படும் ஓய்வூதியத் தொகையின் அடிப்படையில் அடல் பென்ஷன் யோஜனா திட்டத்திற்கான பங்களிப்புகள் வேறுபடுகின்றன.

## 15 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குக் குறைந்த கோதுமை கொள்முதல்



- அரசு நிறுவனங்களின் கோதுமை கொள்முதல் அளவானது, கடந்த ஆண்டு இருந்த இது வரை இல்லாத உயர்ந்த அளவிலிருந்து, நடப்புச் சந்தைப் பருவத்தில் 15 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குக் குறைய உள்ளது.

- இந்த முறை அரசு நிறுவனங்களால் 18.5 மில்லியன் டன்கள் அளவிலான கோதுமை கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2007-08 ஆம் ஆண்டில் 11.1 மில்லியன் டன்கள் கொள்முதல் செய்யப்பட்டப் பிறகு, மிகக் குறைவாக கொள்முதல் செய்யப்படுவது இந்த முறையே ஆகும்.
- ஏற்றுமதி தேவைக்கான அதிகரிப்பானது, முக்கியமாக ரஷ்யா - உக்ரைன் போரினால் ஏற்பட்டதாகும்.
- விண்ணை முட்டும் விலை உயர்வு மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் தானியங்களுக்கான தேவை மேலும் அதிகரித்தது ஆகியவற்றிற்கு இந்தப் போரே காரணமாகும்.
- விவசாயிகள் தற்போது ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக இலாபம் பெறுவர்.
- விதைக் கருவில் ஸ்டார்ச், புரதம் மற்றும் பிற உலர் பொருட்கள் உருவாகி வரும் நிலையில் பயிர்த் தானியங்கள் முழுமையடையும் சமயத்தில் மார்ச் மாதத்தின் இரண்டாம் பாதியில் வெப்பநிலை திடீரென அதிகரித்ததன் காரணமாக விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு உற்பத்தி குறைந்துள்ளது.

## வீரதீர மற்றும் பிற இராணுவ விருதுகள்




- இராணுவ நடவடிக்கைகளின் போது அவர்கள் ஆற்றிய துணிச்சல் மிக்கப் பங்களிப்பிற்காக இந்திய ஆயுதப் படைகளின் வீரர்களுக்கு 13 சௌர்ய சக்ரா விருதுகளை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கினார்.
- இவற்றுள் வீரர்களின் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்ட ஆறு விருதுகளும் அடங்கும்.
- குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இராணுவ விருது வழங்கும் விழாவில், இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே அவர்களுக்கு, அவரது சிறப்பான சேவையைப் பாராட்டி பரம் விசிஷ்ட் சேவா என்ற பதக்கம் வழங்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் அவர்கள் 14 பரம் விசிஷ்ட் சேவா பதக்கங்கள், நான்கு உத்தம் யுத் சேவா பதக்கங்கள் மற்றும் 24 அதி விஷிஷ்ட் சேவா பதக்கங்கள் ஆகியவற்றை அவர்களது சிறப்பானச் சேவைக்காக வேண்டி வீரர்களுக்கு வழங்கினார்.

## 100 இரயில் நிலையங்களில் அருகலை வசதி

❖ ரெயில்டெல் நிறுவனமானது, பிரதம மந்திரி அருகலை (வைஃபை) அணுகல் வசதி இடைமுகத் திட்டத்தை (PM-WANI) தொடங்கியது.

❖ 22 மாநிலங்களில் உள்ள 100 இரயில் நிலையங்களில் தனது பொது அருகலை சேவைகளுக்கான அணுகல் வசதியை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

❖ PM-WANI அனைத்து கோபுர வழி அருகலை வசதி கட்டமைப்புகளை எளிமையாகப் பயன்படுத்துவதற்காகவும் பொதுமக்களிடையே ஆலலை ஏற்பை அதிகரிக்கச் செய்வதற்காகவும் தொலைத் தொடர்புத் துறை மேற்கொண்ட முன்னெடுப்பாகும்.

## குழந்தைப் படுக்கை வசதி - வடக்கு இரயில்வே அறிமுகம்

❖ இந்திய இரயில்வே நிர்வாகமானது  தனது இரயில்களில் 'குழந்தைப் படுக்கை வசதியை' சேர்த்துள்ளது.

❖ இந்த அசாதாரண அமைப்பு பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு அருகில் நிம்மதியாக தூங்கிக் கொண்டே இரயிலில் பயணிக்க வழி வகை செய்யும்.

❖ அன்னையர் தினத்தன்று, வடக்கு இரயில்வேயின் லக்னோ பிரிவானது, 194129/B4 என்ற எண் கொண்ட ஒரு பெட்டியில், 12வது எண் மற்றும் 60வது எண் என்று குறிப்பட்ட இருக்கைகளில் குழந்தைப் படுக்கை வசதியை நிறுவி அதனைப் பரிசோதித்தது.

## ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உள்ளாட்சி தேர்தல்




❖ அரசியலமைப்பு ஆணையின்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ளாட்சி அமைப்பின் ஐந்தாண்டு பதவிக் காலம் முடிவதற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

- மத்தியப் பிரதேச மாநிலத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் நடைபெறாமல் உள்ள 23,000க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளைத் தொடங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களின்படி அவற்றின் ஒவ்வொரு நிலையிலும் ஐந்தாண்டுகள் பதவிக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

## தேசிய முக்கியத்துவம் வாய்ந்த போட்டிகள்

- தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது, பல விளையாட்டுப் போட்டிகளைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவித்துள்ளது.
- இது விளையாட்டுப் போட்டிகள் ஒளிபரப்பு சமிஞ்கைகள் (பிரசார் பாரதி ஊடகத்திடம் கட்டாயமாகப் பகிர்தல்) என்ற சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்ட முந்தைய அறிவிப்பை இந்த அறிவிப்பு புதுப்பித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு அறிவிப்பானது, அனைத்து ஒலிம்பிக் விளையாட்டுகள், காமன் வெல்த் விளையாட்டுகள் மற்றும் ஆசிய விளையாட்டுகள் ஆகியவற்றைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த போட்டிகளாக அறிவித்துள்ளது.

## AIM-PRIME Playbook

- நிதி ஆயோக் அமைப்பானது AIM-PRIME Playbook என்ற ஒன்றை வெளியிட்டுள்ளது.
- அடல் புத்தாக்கத் திட்டம் என்பது இந்திய நாட்டில் புதுமை மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் முதன்மையான முன்னெடுப்பாகும்.
- PRIME என்பது புத்தாக்கம், சந்தைத் தயார்நிலை மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் ஆராய்ச்சியாளர்களுக்கான திட்டம் என்பதாகும்.
- ப்ளேபுக் என்பது ஆரம்ப-நிலை அறிவியல் அடிப்படையிலான, உள்ளார்ந்த தொழில் நுட்ப யோசனைகளை 12 மாத காலப் பயிற்சி மற்றும் வழிகாட்டுதலின் மூலம் கலப்பு கற்றல் பாடத்திட்டத்தைப் பயன்படுத்தி அதனை சந்தைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

## புதிய தலைமைத் தேர்தல் ஆணையர்

- தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் அடுத்தத் தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டார்.
- இவர் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.
- குடியரசுத் தலைவர் அவர்கள் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இதரத் தேர்தல் ஆணையர் ஆகியோரை நியமிக்கிறார்.
- இவர்கள் ஆறு ஆண்டுகள் வரை அல்லது 65 வயது வரை நிரம்பும் வரை இவற்றுள் எது முந்தையதோ அது வரை அந்தப் பதவியில் வகிப்பர்.

## உயிரி எரிவாயு மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் மின்சார வாகன மின்னேற்ற நிலையம்

- ❖ உயிரி எரிவாயு மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் மின்சார வாகன மின்னேற்ற நிலையமானது மகாராஷ்டிராவின் மும்பை நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த ஆற்றல் ஆலையானது, தெரு விளக்குகளை இயக்கவும், மின்சார வாகனங்களை மின்னேற்றம் செய்யவும் பயன்படுத்தப்படும்.

## SSR மற்றும் SRIMAN வழிகாட்டுதல்கள்

- ❖ தொழில்நுட்பத் தினத்தை முன்னிட்டு SSR மற்றும் SRIMAN ஆகிய வழிகாட்டுதல்கள் வெளியிடப் பட்டன.
- ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சூழல் அமைப்பைச் சமூகத் தேவைகளுக்குப் பங்களிக்கச் செய்யும் வகையில் அறிவியல் மற்றும் சமூக இணைப்புகளை வலுப் படுத்தச் செய்வதற்கு அறிவியல் சமூகப் பொறுப்பு (SSR) இன்றியமையாததாகும்.
- ❖ இந்த வழிகாட்டுதல்கள் முதன்மையாக அறிவியல்-சமூகம், அறிவியல்-அறிவியல் மற்றும் சமூகம்-அறிவியல் ஆகியவை இடையிலான இடைவெளிகளைக் குறைப்பதை உள்ளடக்கியது.
- ❖ இதன் மூலம் சமூக இலக்குகளை அடைவதற்கு விரைவான விதத்தில் அறிவியலின் நம்பகத் தன்மை, கூட்டாண்மை மற்றும் பொறுப்பை வெளிக் கொணர முடியும்.
- ❖ SRIMAN என்பது அறிவியல் ஆராய்ச்சி உள்கட்டமைப்புப் பகிர்வு மேலாண்மை மற்றும் கட்டமைப்புகள் (Scientific Research Infrastructure Sharing Maintenance and Networks) என்பதன் சுருக்கமாகும்.
- ❖ இந்த வழிகாட்டுதல்கள் நாடு முழுவதும் உள்ள அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆராய்ச்சி உள்கட்டமைப்பினைத் திறன்மிக்க முறையில் பயன்படுத்துதல் மற்றும் பரவலான முறையில் அணுகச் செய்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தகைசால் கதர் மையம்


- ❖ மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் நாராயண் தத்து ரானே தகைசால் கதர் (காதி) மையத்தினைச் சமீபத்தில் திறந்து வைத்தார்.
- ❖ இந்தச் சிறப்பு கதர் மையமானது புது டெல்லியில் உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (NIFT) அமைந்துள்ளது.
- ❖ சமீபத்திய ஆடை வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவது மற்றும் உலகளாவிய தரத்தை ஒத்த புதிய துணிகளை உருவாக்குவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நுகர்வோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது போன்றவை இந்த மையத்தின் முக்கியப் பணிகளாகும்.

## பிரதமர் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம் நீட்டிப்பு

- ❖ மத்திய அமைச்சரவையானது, பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PM-GKAY) திட்டத்தை 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையில் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.

- சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் விளிம்புநிலைப் பிரிவினருக்கான நலன் மற்றும் உதவியை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது (கட்டம் VI).
- PM-GKAY திட்டத்தின் ஐந்தாம் கட்டமானது 2022 மார்ச் மாதத்தில் முடிவடைய இருந்தது.
- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையில் உள்ள இத்திட்டமானது, உலகின் மிகப்பெரிய உணவுப் பாதுகாப்புத் திட்டமாகும்.

## கால்நடைகள் மற்றும் வளர்ப்புக் கோழிகள் பற்றிய இன வாரியான அறிக்கை




- மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா கால்நடைகள் மற்றும் வளர்ப்புக் கோழிகள் பற்றிய இன வாரியான அறிக்கையை வெளியிட்டார்.
- இனம் வாரியான தரவு சேகரிப்பானது, 20வது கால்நடைக் கணக்கெடுப்பின் போது (2018-19) மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவில் முதன்முறையாக இனம் வாரியான தரவுகள் காகித முறையில் இல்லாமல் டிஜிட்டல் முறையில் சேகரிக்கப் படுகிறது.
- கிர் என்ற கால்நடை இனம் 68.57 இலட்சம் என்ற அளவில் அதிக எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து அடுத்த நிலையில் லக்கிமி மற்றும் சாஹிவால் ஆகிய இனங்கள் உள்ளன.
- காரியார், கெரிகர், கெங்காத்தா , மோட்டு மற்றும் ஹரியானா ஆகிய கால்நடைகளின் எண்ணிக்கை அதிகளவில் குறைந்துள்ளன.
- 20வது கால்நடைக் கணக்கெடுப்பின்படி மொத்தக் கால்நடை எண்ணிக்கையில் 36.04% மட்டுமே கால்நடைகள் ஆகும்.
- இதில் நாட்டு மாடுகளின் எண்ணிக்கை 6% குறைந்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில், மொத்தக் கால்நடை எண்ணிக்கையில் 79% ஆக இருந்த நாட்டு மாடுகளின் பங்கு 2019 ஆம் ஆண்டில் 73% ஆக குறைந்துள்ளது.

## நாட்டின் முதல் புலனுணர்வுப் பூங்கா

- இந்தியாவில் முதல் முறையாக அனைத்து வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான புலனுணர்வுப் பூங்காவானது புவனேஸ்வரின் சாஹித் நகரில் திறக்கப் பட்டது.

- இந்தப் பூங்காவில் காப்பிடப்பட்டப் பாதைகள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் அனைவரும் அணுகும் வகையிலான வழிகாட்டுதல்களுக்கு இணங்கக் கூடிய பிற குழந்தைகளுக்கு ஏதுவான சேவைகள் போன்ற வசதிகள் உள்ளன.

## தேசிய இணையவெளித் தடயவியல் ஆய்வகம்

- ஐதராபாத் நகரில் அமைக்கப்பட்டுள்ள தேசிய இணையவெளித் தடயவியல் ஆய்வகத்தை (NCFL) மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திறந்து வைத்தார்.
- இது ஐதராபாத் நகரின் ராமந்தபூர் என்னுமிடத்தில் அமைந்துள்ள மத்தியத் தடய அறிவியல் ஆய்வகத்தின் வளாகத்தில் அமைந்துள்ளது.
- உள்துறை அமைச்சகத்தின் இணையவெளி மற்றும் தகவல் பாதுகாப்புப் பிரிவானது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான இணையவெளிக் குற்றத் தடுப்புத் திட்டத்தின் கீழ் மத்தியத் தடய அறிவியல் ஆய்வகத்தின் வளாகத்தில் தேசிய இணைய வெளித் தடயவியல் ஆய்வகத்தை அமைத்துள்ளது.
- தேசிய இணையவெளித் தடயவியல் ஆய்வகமானது, எண்ணிம தடயவியல் துறையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வேண்டி 4 சிறப்பு உயர் தொழில்நுட்ப அலகுகளை உருவாக்கியுள்ளது.
  - கைபேசியுடன் இணைக்கப்பட்ட அமைப்பு ஆய்வு அலகு,
  - எண்ணிமச் சேமிப்பக ஊடக ஆய்வுப் பிரிவு,
  - மேம்பட்ட எண்ணிமத் தடயவியல் பிரிவு மற்றும்
  - குற்ற நிகழ்வியல் பிரிவு.


## தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளம்

- நிதி ஆயோக் அமைப்பானது, பொது மக்கள் இலவசமாகப் பயன்படுத்தும் வகையில் தேசியத் தரவு மற்றும் பகுப்பாய்வு தளத்தினை (NDAP) தொடங்கியது.
- தரவை எளிதில் அணுகக் கூடியதாகவும், இயங்கக்கூடியதாகவும், ஊடாடக் கூடியதாகவும், பயனர்களுக்கு ஏற்ற தளத்தில் எளிதாகக் கிடைக்கச் செய்வதன் மூலம், பொது அரசாங்கத் தரவுகளுக்கான அணுகலை மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அரசின் பல்வேறு துறைகளின் அடிப்படைத் தரவுத் தொகுப்புகளை உள்ளடக்கி, அவற்றை ஒழுங்குபடுத்தி அவற்றிற்கானப் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் திறன்களை வழங்குகிறது.

## கதிசக்தி சஞ்சார் போர்டல்

- தொலைத்தொடர்புத் துறையானது "கதிசக்தி சஞ்சார்" எனப்படும், ஒரு அனுமதி வழங்கீட்டிற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பிரதான் மந்திரி கதிசக்தி தேசியப் பெருந்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.

- தேசிய அகலப்பட்ட வரிசை இணைப்புத் திட்டத்தின் இலக்குப் பகுதிகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தளமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு குடிமகனுக்கும் அகலப்பட்டை வரிசை இணைப்பு கொண்ட ஒரு உள் கட்டமைப்பை வழங்குவதே இதன் ஒரு முக்கிய நோக்கமாகும்.




## இந்தியப் பருத்திச் சபை

- மத்திய அரசானது, பருத்தி மற்றும் நூல் ஆகியவற்றின் விலை நிர்ணயம் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்கவும், அத்துறையில் உறுதியான வளர்ச்சியை ஏற்படுத்தவும் இந்தியப் பருத்திச் சபையினை அமைத்துள்ளது.
- இச்சபைக்கு மூத்த தொழிலதிபர் சுரேஷ் பாய் கோடக் தலைமை வகிக்க உள்ளார்.
- இந்தியப் பருத்திச் சபையின் முதல் சந்திப்பானது, 2022 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது.
- அதன் முதல் சந்திப்பின் போது, இத்துறையில் உறுதியான வளர்ச்சியைக் கொண்டு வருவது குறித்து விவாதித்து, ஆலோசித்து, ஒரு வலுவான செயல் திட்டத்தை இச்சபை தயாரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- உலகளவிலான பருத்தி உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவற்றை உள்ளடக்கிய மேற்கு மண்டலம் இந்தியாவில் பருத்தி உற்பத்தியில் முதல் இடத்தில் உள்ள மண்டலம் ஆகும்.
- இந்தியாவின் பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள பகுதி கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தெற்கு மண்டலம் ஆகும்.

## இந்தியாவின் முதல் 5G சோதனை அமைப்பு

- இந்தியாவின் முதல் 5ஜி சோதனை அமைப்பினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இது தொடக்க நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்கள் தங்களது தொழில் நுட்பங்களை உள்நாட்டிலேயே சோதித்து சான்றிதழைப் பெறுவதற்கு வழி வகுக்கிறது.

- மேலும் இதற்காக வெளிநாட்டு வசதிகளை சார்ந்திருக்கும் நிலையை இது குறைக்கச் செய்கிறது.
- 5G சோதனை அமைப்பானது, முக்கியமான மற்றும் நவீனத் தொழில்நுட்பங்களில் தன்னிறைவினை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றப் படியாகும்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கீழான எட்டு நிறுவனங்களுக்கிடையேயான ஒரு கூட்டுத் திட்டமாக 5ஜி சோதனை அமைப்பானது உருவாக்கப்பட்டது.

## வியத்தகு இந்தியா சர்வதேச பயணிகள் கப்பல் மாநாடு

- மகாராஷ்டிராவின் மும்பை நகரில் வியத்தகு இந்தியா சர்வதேசப் பயணிகள் கப்பல் மாநாடு (IIICC) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது மத்தியத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு (FICCI) ஆகியவை இணைந்து நடத்தும் இரண்டு நாட்கள் அளவிலான நிகழ்வாகும்.
- இந்தியாவை ஒரு பயணியர் கப்பல் மையமாக மேம்படுத்துவதற்கான உத்திகள், துறைமுக உள்கட்டமைப்பு மற்றும் இந்தியாவில் நதி-கப்பல் சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப் பட்டன.

## நவ்தூத் இன்ஜின்

- மேற்கு மத்திய இரயில்வே நிர்வாகமானது நவ்தூத் என்ற பெயரில் மின்கலம் மூலம் இயக்கப்படும் இரட்டைப் பயன்முறை இன்ஜினை (இயந்திரத்தினை) உருவாக்கி உள்ளது.
- இந்த இயந்திரம் மின்கலம் மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டு முறைகளிலும் இயங்குகிறது.
- தற்போது, இது ஜபல்பூர், முத்வாரா மற்றும் பிற நிலையங்களில் இரயில்களை இணைக்கும் பணியில் சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த இரட்டைப் பயன்முறை இரயில் இயந்திரமானது ரயில்வே வாரியத்தின் சிறந்தப் புத்தாக்க விருதையும் பெற்றுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், பசுமை எனப்படும் இதே வகையான இரட்டைப் பயன்முறை இயந்திரத்தினை தெற்கு இரயில்வேயின் சென்னை ரயில்வே பிரிவினால் உருவாக்கப் பட்டது.

## சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் பரிந்துரைகள்

- சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் பரிந்துரைகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் கட்டுப்பட்டதல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- அரசியலமைப்புச் சட்டத்தின் 279A என்ற பிரிவு எந்தவொரு தடையற்ற விதியுடனும் தொடங்கப் படவில்லை என்று நீதிமன்ற அமர்வு கூறியது.
- மேலும், 246A என்ற பிரிவு எந்தவொரு முரண்பாடான விதிமுறையையும் வலியுறுத்த வில்லை என்றும் அது கூறியது.

## எத்தனால் கலந்த பெட்ரோல்




- 2018 ஆம் ஆண்டின் உயிரி எரிபொருள் மீதான தேசியக் கொள்கையில் மேற்கொள்ளப் பட்ட திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- எரிபொருள் நிறுவனங்கள், பெட்ரோலில் எத்தனால் கலப்பதற்கான சதவீதத்தை 20% ஆக உயர்த்த வேண்டியதற்கான கால வரம்பினை 2030 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டாக நிர்ணயிப்பதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெட்ரோலில் 20% எத்தனாலைக் கலக்கும் விதிமுறையானது கொள்கை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் அமலுக்கு வர உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் 13 தேதி நிலவரப்படி இந்தியா 9.45% எத்தனால் கலப்பு என்ற நிலை அடைந்துள்ளதாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகம் கூறுகிறது.
- 2022 ஆம் நிதியாண்டின் இறுதிக்குள் இது 10% ஆக உயரும் என்று மத்திய அரசு கணித்துள்ளது.

## பாரத் குழாய் திட்டம்

- பிளம்பெக்ஸ் இந்தியக் கண்காட்சி விழாவினை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் S.ஹர்தீப் சிங் பூரி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இவர் நீர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான மேம்பாட்டின் புதிய சகாப்தத்தில் இந்தியா நுழைவதற்கு உதவும் குறைநீர் ஓட்டத்திற்கானச் சாதனங்கள் மற்றும் கழிவறை நீர் குழாய்கள் தயாரிப்பதற்கான பிரச்சாரமான பாரத் குழாய் என்ற ஒரு திட்டத்தையும் அறிவித்தார்.
- பிளம்பெக்ஸ் இந்தியா என்பது புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடத்தப் பெறும் மூன்று நாட்கள் அளவிலான ஒரு நிகழ்வு ஆகும்.
- இது குழாய் அமைப்பு, தண்ணீர் மற்றும் கழிவறை நீர்க் குழாய்கள் மீதான நாட்டின் மிகப்பெரிய தனித்துவமான கண்காட்சியாகும்.

## BioRRAP தளம்

- ❖ இந்த BioRRAP என்பது உயிரியல் ஆராய்ச்சி ஒழுங்குமுறை ஒப்புதல் தளத்தினை குறிக்கிறது.
- ❖ இந்தியாவில் மேற்கொள்ளப்படும் உயிரியல் மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சிக்கான ஒழுங்குமுறை அனுமதியை நாடுவோரின் தேவைகளை இத்தளம் பூர்த்தி செய்யும்.
- ❖ இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் உயிரித் தொழில் நுட்பத் துறையினால் உருவாக்கப்பட்ட (DBT) ஒரு தளம் ஆகும்.
- ❖ இந்தத் தளமானது ஆராய்ச்சி தொடர்பான செயல்பாடுகளுக்கு மட்டுமே ஆகும்.
- ❖ மேலும் இதனைத் தயாரிப்பு மேம்பாட்டு நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியாது.

## 25 நாடுகளில் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் கூட்டு நுழைவுத் தேர்வு

- ❖ இந்திய அரசாங்கம் இந்தப் பொறியியல் நுழைவுத் தேர்வினை 25 நாடுகளில் நடத்த திட்டமிட்டுள்ளதால், இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் கூட்டு நுழைவுத் தேர்வானது, உலகளவில் நடைபெற உள்ளது.
- ❖ இத்தேர்வானது கடந்த ஆண்டு கோலாலம்பூர் மற்றும் லாகோஸ் ஆகிய இடங்களில் நடத்தப் பட்டது.
- ❖ தற்போது, இந்தத் தேர்வுகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, சிங்கப்பூர், சீனா, நேபாளம், இந்தோனேசியா, மலேசியா, பஹ்ரைன், குவைத், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உட்பட பல நாடுகளில் நடத்தப்பட உள்ளது.
- ❖ முன்னதாக இந்திய அரசின் ஒத்துழைப்புடன் 12 நாடுகளில் இந்தத் தேர்வுகள் நடத்தப் பட்டன.

## CORPAT ரோந்துப் பயிற்சி

- ❖ இந்தியக் கடற்படை மற்றும் வங்காளதேசக் கடற்படை ஆகியவற்றின் நான்காவது ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியானது (CORPAT) தொடங்கியது.
- ❖ இந்த ரோந்துப் பயிற்சியானது வங்கக் கடலின் வடக்குப் பகுதியில் தொடங்கியது.
- ❖ இரு நாடுகளும் சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் கூட்டு ரோந்துப் பணியில் ஈடுபட உள்ளன.
- ❖ இதற்கு முன்னதாக இந்தியக் கடற்படை மற்றும் வங்காளதேசக் கடற்படைகளின் CORPAT ரோந்துப் பயிற்சியானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடத்தப் பட்டது.

## முதலாவது பல் மருத்துவக் காப்பீடு திட்டம்

- ❖ PNB மெட்லைஃப் இந்தியா காப்பீட்டு நிறுவனமானது, இந்தியாவின் முதல் பல் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ நிலையான பயன் கொண்ட, புறநோயாளிகளுக்கான செலவுகளை உள்ளடக்கிய, ஒட்டு மொத்தப் பல் ஆரோக்கியம் தொடர்பான செலவுகளுக்கான நிதி உதவியை வழங்கும் இந்தியாவின் முதல் காப்பீட்டுத் திட்டம் இதுவாகும்.

## இந்தியாவில் சமத்துவமின்மை நிலை அறிக்கை

- இந்தியாவின் சமத்துவமின்மை நிலை அறிக்கையைப் பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு (EAC-PM) வெளியிட்டது.
- சுகாதாரம், கல்வி, குடும்ப நிலை மற்றும் தொழிலாளர் சந்தை ஆகிய துறைகளில் உள்ள சமத்துவமின்மை பற்றியத் தகவல்களை இந்த அறிக்கை தொகுத்து வழங்குகிறது.
- இந்த அறிக்கையானது, பொருளாதார அம்சங்கள் மற்றும் சமூக-பொருளாதார மதிப்பீடுகள் என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- இதன் ஐந்து முக்கியப் பகுதிகள்: இவை வருமானப் பங்கீடு, தொழிலாளர் சந்தை மாற்றங்கள், சுகாதாரம், கல்வி மற்றும் குடும்ப நிலை ஆகியனவாகும்.
- இந்த அறிக்கையானது, கீழ்க்காணும் பல்வேறு கணக்கெடுப்புகளிலிருந்துப் பெறப் பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
    - வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS),
    - தேசியக் குடும்பம் மற்றும் சுகாதார ஆய்வு (NFHS) மற்றும்
    - கல்வி பிளஸ் என்ற நிலைக்கான ஒருங்கிணைந்தத் தகவல் அமைப்பு.

*முக்கிய தகவல்கள்*

- இந்தியாவின் வேலையின்மை விகிதம் 4.8% (2019-20) மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை விகிதம் 46.8% ஆகும்.
- நகர்ப்புறங்களில் 44.4% செல்வச் செறிவானது மிக உயரடுக்கில் உள்ள மக்களிடம் 20 சதவிகிதம் உள்ள நிலையில் கிராமப்புறங்களில் இது 7.1% மட்டுமே உள்ளது.
- 2005 ஆம் ஆண்டில், இந்தியாவில் 1,72,608 ஆக இருந்த மொத்த சுகாதார மையங்களின் எண்ணிக்கையானது, 2020 ஆம் ஆண்டில் அதிகரித்து 1,85,505 ஆக உள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில், 95 சதவிகித அளவிலான பள்ளிகளின் வளாகத்தில் செயல் பாட்டில் உள்ள கழிப்பறை வசதிகள் உள்ளன.
- 2018-19 மற்றும் 2019-20 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 3 நிலைகளிலும் மொத்தச் சேர்க்கை விகிதம் ஆனது அதிகரித்துள்ளது.

## ஓமைக்ரான் BA.5 திரிபின் முதல் பாதிப்பு

- இந்தியாவில் ஓமைக்ரான் துணை திரிபின் முதல் பாதிப்பானது, தெலுங்கானாவில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்திய SARS-COV-2 மரபியல் கூட்டமைப்பின் தகவலின் (INSACOG) படி, இந்தத் துணை திரிபினால் பாதிக்கப்பட்ட முதல் நபர் இவர் ஆவார்.
- ஐதராபாத் விமான நிலையத்தில் தென்னாப்பிரிக்கப் பயணி ஒருவருக்கு BA.4 திரிபின் தொற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டதை இந்திய SARS-COV-2 மரபியல் கூட்டமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் ஓமைக்ரான் BA.4 துணை திரிபின் முதல் பாதிப்பு இதுவாகும்.
- தமிழ்நாட்டில் 19 வயது சிறுமிக்கு BA.4 துணை திரிபின் பாதிப்பு இருப்பது கண்டறியப் பட்டது.
- BA.4 மற்றும் BA.5 ஆகியவை உலகளவில் பரவிக் கொண்டிருக்கும் ஓமைக்ரான் திரிபின் துணை வகைகளாகும்.

## WARDEC திட்டம்

- இராணுவப் பயிற்சிப் படைப்பிரிவு மற்றும் காந்திநகரைச் சேர்ந்த தேசியப் பாதுகாப்பு பல்கலைக் கழகம் ஆகியவை, புதுதில்லியில் போர்க்கள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இத்திட்டத்திற்கு, ஒரு முன்மாதிரியாக 'WARDEC' என பெயரிடப்பட்டது.
- இது உருவகப்படுத்துதல் அடிப்படையிலான இந்தியாவின் முதல் பயிற்சி மையமாக இருக்கும்.
- இது மெய்நிகர் தோற்றப் போர்க்களம் சார்ந்த விளையாட்டுகளை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தும்.

## குதுப்மினாரின் அந்தஸ்து



- இந்தியத் தொல்லியல் துறையானது குதுப்மினார் ஒரு வழிபாட்டுத் தலம் அல்ல என்றும் நினைவுச் சின்னம் என்ற அதனுடையத் தற்போதைய ஒரு நிலையை மாற்ற முடியாது என்றும் வாதிட்டது.
- இருப்பினும், குதுப் மினார் வளாகத்தின் கட்டுமானத்தில் இந்து மற்றும் சமணத் தெய்வங்களின் உருவங்கள் மற்றும் கட்டிடக் கலைப் பொருட்கள் மீண்டும் அதில் பயன்படுத்தப் பட்டதாக இந்தியத் தொல்லியல் துறை கூறியது.
- இந்தியத் தொல்லியல் துறையின் கூற்றுப்படி, இது 1958 ஆம் ஆண்டு பண்டையக் கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் & எஞ்சியப் பகுதிகள் சட்டத்தின் விதிகளுக்கு முரணாக இருக்கும்.
- இந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒன்றாக அறிவிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னத்தில் எந்தவொரு புதிய நடைமுறையையும் தொடங்க அனுமதிக்கக் கூடாது என்பது பாதுகாப்பு / வளங்காப்பின் ஒரு அடிப்படைக் கொள்கை ஆகும்.

## தபால் அலுவலகச் சேமிப்பு முறையில் NEFT மற்றும் RTGS வசதி

- தபால் துறையானது, தேசிய மின்னணு நிதிப் பரிமாற்ற வசதி மற்றும் நிகழ்நேரப் பெருந்திரள் தீர்வுப் பரிமாற்ற வசதி ஆகியவற்றைத் தபால் அலுவலகச் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு கிடைக்கச் செய்துள்ளது.

- தபால் அலுவலகச் சேமிப்புக் கணக்கு வாடிக்கையாளர்கள் தற்போது மின்னணு முறையில் பணத்தை அனுப்ப இயலும்.
- NEFT என்பது நிகழ்நேரப் பெருந்திரள் தீர்வு பரிமாற்ற வசதியையும், NEFT என்பது தேசிய மின்னணு நிதிப் பரிமாற்ற வசதியையும் குறிக்கிறது.

## புதுப்பிக்கப்பட்ட ABHA கைபேசிச் செயலி

- தேசிய சுகாதார ஆணையமானது, சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் சுகாதார நலக் கணக்கு கைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தியது.
- ABHA செயலியானது முன்னதாக, தேசிய எண்ணிம சுகாதாரத் திட்டத்தின் ஆவணப் பதிவேட்டுச் செயலி என்று அறியப்பட்டது.
- ABHA செயலியானது அதன் பயனர்கள் தங்களது சோதனை அறிக்கைகள், மருந்துச் சீட்டுகள், கோ-வின் தடுப்பூசி சான்றிதழ்கள் போன்றவற்றை அணுகவும் பகிரவும் வழி வகை செய்கிறது.

## பாலியல் தொழிலுக்கு தொழில் அந்தஸ்து

- உச்ச நீதிமன்றமானது, பாலியல் ரீதியிலான தொழிலுக்கு "தொழில்" என்ற ஒரு தகுதி நிலையினை வழங்கி அதனை அங்கீகரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.
- எனவே, நாடு முழுவதும் உள்ள இந்தத் தொழில் செய்யும் நபர்களுக்கு இந்தியச் சட்டத்தின் கீழ் ஒரு சமமானப் பாதுகாப்பு மற்றும் கண்ணியமான வாழ்கையினைப் பெறுவதற்கும் உரிமை உண்டு.
- பாலியல் தொழிலாளியின் குழந்தைகளை, அவர்களின் தொழிலினை மட்டுமே காரணம் காட்டி தாயிடமிருந்துப் பிரிக்கக் கூடாது.
- பாலியல் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் கண்ணியம் மற்றும் நற்பாங்கு ஆகிய அடிப்படைப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

## பாரத் ஆளில்லா விமானங்கள் மஹோத்சவ்

- இந்தியாவில் பாரத் ஆளில்லா விமானங்கள் மஹோத்சவ் என்று அழைக்கப்படும், 2022 ஆம் ஆண்டு ஆளில்லா விமானங்கள் திருவிழாவானது நடத்தப்பட்டது.
- டெல்லியில் நடத்தப் பட்ட இரண்டு நாட்கள் அளவிலான பாரத் ட்ரோன் மஹோத்சவ் (2022) இந்தியாவின் மிகப்பெரிய ஆளில்லா விமானங்கள் குறித்த ஒரு திருவிழாவாகும்.
- பிரதமர் அவர்கள் சமீபத்தில், நாடு முழுவதும் உள்ள பல்வேறு சிறு நகரங்கள் மற்றும் நகரங்களில் வேளாண் நிலங்கள் மீது பூச்சிக் கொல்லிகளைத் தெளிப்பதற்காக 100 கிசான் ட்ரோன்களை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- கிசான் ட்ரோன் சுவிதா என்ற ஒரு திட்டமானது நாட்டின் வேளாண் துறையை மேம்படுத்துவதையும் விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மாநிலங்களுக்கு இடையேயான குழு அமைப்பு

- கூட்டுறவு கூட்டாட்சிக் கொள்கையை மேம்படுத்தச் செய்வதற்காக செயல்படும் மாநிலங்களுக்கு இடையேயான குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- பிரதமர் தலைமையிலான இந்தச் சபையானது, ஆறு மத்திய அமைச்சர்களை உள்ளடக்கியதாகும்.
- தவிர, இது 28 மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத்தினைக் கொண்ட ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் சட்டமன்றம் இல்லாத ஒன்றியப் பிரதேசங்களின் நிர்வாகிகள் ஆகியோரைக் கொண்டதாகும்.
- இதில் 10 மத்திய அமைச்சர்கள் நிரந்தர உறுப்பினர்களாக விளங்குவர்.
- உள்துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு நிலைக்குழுவையும் அரசு மறு சீரமைத்துள்ளது.

## CUET 2022 விதிமுறைகள்

- வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் உத்தரகாண்டில் உள்ள மத்தியப் பல்கலைக் கழகங்களுக்கு CUET 2022 விதிமுறைகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- புவியியல் நிலைமைகள், மலைப்பாங்கான நிலப்பரப்பு, தொலைதூரப் பகுதி, வரையறுக்கப்பட்ட டிஜிட்டல் இணைப்பு, உள்கட்டமைப்பு போன்றவற்றின் காரணமாக இந்த விலக்கானது அளிக்கப்பட்டுள்ளது.

## முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தம்


- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவை ஜப்பானின் டோக்கியோ நகரில் முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இது 1997 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான முதலீட்டு ஊக்குவிப்பு ஒப்பந்தத்திற்குப் பதிலாக மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த ஒப்பந்தமானது, மேம்பாட்டு நிதிக் கழகமானது, இந்தியாவில் முதலீட்டு ஆதரவைத் தொடர்ந்து வழங்குவதற்கு ஒரு சட்டப்பூர்வமானத் தேவையாகும்.

## இந்திய எரிவாயு பரிமாற்றச் சந்தையில் ONGC

- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழக நிறுவனமானது, இந்திய எரிவாயு பரிமாற்றச் சந்தையில் வீட்டு உபயோக எரிவாயுவை வர்த்தகம் செய்யும் இந்தியாவின் முதல் ஆய்வு மற்றும் உற்பத்தி நிறுவனமாக மாறியது.
- ONGC என்பது அரசுக்குச் சொந்தமான எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு மற்றும் உற்பத்தி நிறுவனம் ஆகும்.
- இது 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதோடு, இதன் தலைமையகம் புது டெல்லியில் உள்ளது.
- இது இந்தியாவின் கச்சா எண்ணெயில் 70 சதவீதத்தினையும் அதன் இயற்கை எரிவாயுவில் 84 சதவீதத்தினையும் உற்பத்தி செய்கிறது.
- இந்திய எரிவாயு பரிமாற்றச் சந்தை என்பது இந்தியாவின் முதல் தேசிய அளவிலான தானியங்கு எரிவாயு பரிமாற்றச் சந்தையாகும்.

- இது கொள்முதல் செய்வோர் மற்றும் விற்பனையாளர் ஆகிய இரு தரப்பினரும் எரிவாயு வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற இடமாகும்.
- இது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் ஒழுங்கு முறைக் கட்டமைப்பின் கீழ் செயல்படுகிறது.

## பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைப்பு




- மே 21 ஆம் தேதியன்று, பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் மீதான கலால் வரியை முறையே லிட்டருக்கு ரூ.8 மற்றும் ரூ.6 வரை குறைப்பதாக அரசாங்கம் அறிவித்தது.
- இந்த நடவடிக்கையானது பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.9.5 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.7 ஆகவும் குறைக்கப்பட வழி வகுத்தது.
- நான்கு பெருநகரங்களுள், மும்பையில் தான் எரிபொருள் விலை அதிகமாக உள்ளது.
- மதிப்பு கூட்டப்பட்ட வரி காரணமாக மாநிலங்கள் முழுவதும் வரி விகிதங்கள் மாறுபடுகிறது.

## அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்கள்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, சமீபத்தில் அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய அறிவியல் மாநாட்டின் 104வது அமர்வானது, அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் ஒரு அவசியத்தையும் வலியுறுத்தியது.
- அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்கள் அனைத்து நிலைகளிலும் சமூகத்துடன் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அதிகளவு ஒருங்கிணைப்பினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்கள் என்பது, அறிவியலின் நன்மைகளை சமூகத்திற்கு வழங்குவது பற்றிய அறிவியலாளர்களின் ஒரு தார்மீகக் கடமையை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- எனவே, அறிவியல் அறிவு மற்றும் சமூக உளச்சான்றின் ஒருங்கிணைப்பாக அறிவியல் சமூகப் பொறுப்பு வழிகாட்டுதல்கள் விளங்கும்.

## மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியம்

- மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியமானது 7 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப் பட்டது.
- சமீபத்தில், இந்த வாரியமானது இந்தியத் தொல்லியல் துறையினால் மீண்டும் அமைக்கப் பட்டது.
- கலாச்சார அமைச்சரை இதன் தலைவராக்க வேண்டி மீண்டும் இந்த வாரியத்தினை இந்தியத் தொல்லியல் துறை அமைத்தது.
- இதில் இந்தியத் தொல்லியல் துறை மற்றும் கலாச்சார அமைச்சகத்தின் அதிகாரிகள், மாநில அரசினால் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அறிவியலாளர்கள், பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் மற்றும் சிந்துச் சமவெளி வரி வடிவங்கள் பற்றி அறிந்த நிபுணர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்று உள்ளனர்.
- இந்த வாரியமானது இந்தியத் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் தலைமை இயக்குநருடன், இந்திய அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்படும் 5 நபர்களையும் இந்த வாரியம் உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.
- இது மூன்று வருடக் காலத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

## இருதரப்பு போங்கோசாகர் பயிற்சி

- இந்தியக் கடற்படை - வங்காளதேசக் கடற்படை ஆகியவற்றிற்கு இடையிலான 3வது இருதரப்புப் பயிற்சியானது 'போங்கோசாகர்' என அறியப் படுகின்றது.
- போங்கோசாகர் பயிற்சியானது, இரு கடற்படைகளுக்கு இடையேப் பரந்த அளவிலான கடல்சார் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகளை நடத்துவதன் மூலம் அதிக அளவு செயல்பாட்டுத் தன்மை மற்றும் கூட்டுச் செயல்பாட்டுத் திறன்களை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்தியக் கடற்படைக் கப்பல்களான உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட வழிகாட்டி ஏவுகணைப் போர்க் கப்பலான கோரா மற்றும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கடல் ரோந்துக் கப்பலான சுமேதா ஆகியவை இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

## முதலாவது தேசிய மகளிர் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாடு

- குடியரசுத் தலைவர் அவர்கள் இரண்டு நாட்கள் அளவிலான முதலாவது தேசிய மகளிர் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாட்டினைத் திருவனந்தபுரத்தில் தொடங்கி வைக்க உள்ளார்.
- நாடு முழுவதிலும் இருந்து அதிக எண்ணிக்கையிலான பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்பார்கள் என எதிர் பார்க்கப் படுகிறது.
- இந்தியாவின் 75வது சுதந்திரத் தினத்தைக் கொண்டாடும் சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா நிகழ்வின் (ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்) கீழ் திட்டமிடப்பட்ட நாடு தழுவிய கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இத்தகைய முதல் நிகழ்வானது கேரள மாநிலச் சட்டமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## ஸ்வச் சர்வேக்சன் 2023

- மத்திய அரசானது, ஸ்வச் பாரத் திட்டம் - நகர்ப்புறம் 2.0 என்ற திட்டத்தின் கீழ் 8வது ஸ்வச் சர்வேக்சன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 'கழிவிலிருந்து வளத்தினை உருவாக்குதல்' என்ற கருத்துருவினை அதன் இயக்கத் தத்துவமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பானது 3 R - குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு என்ற கொள்கைக்கு முன்னுரிமை அளிக்கும்.

## தேசியச் சாதனை ஆய்வு அறிக்கை

- 2021 ஆம் ஆண்டிற்கான தேசியச் சாதனை ஆய்வு அறிக்கையானது கல்வித் துறை அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- இது மூன்று வருட சுழற்சிக் காலத்திற்கு 3, 5, 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளின் கற்றல் திறன்களின் விரிவான மதிப்பீட்டு ஆய்வினை நடத்துவதன் மூலம் நாட்டில் பள்ளிக் கல்வி முறையின் நிலையை மதிப்பிடுகிறது.
- பள்ளிக் கல்வி முறையின் ஒட்டு மொத்த மதிப்பீட்டை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இதற்கு முன்னதாக 2017 ஆம் ஆண்டில் தேசியச் சாதனை ஆய்வு நடத்தப்பட்டது.

## கூடுதல் உர மானியம்


- உரங்களின் விலை உயர்விலிருந்து விவசாயிகளைக் காப்பதற்காக வேண்டி அரசு ரூ.1.10 லட்சம் கோடி மதிப்பில் கூடுதல் உர மானியத்தினை வழங்க உள்ளது.
- சமீபத்திய இந்த அறிவிப்பின் மூலம், அரசின் மொத்த உர மானியமானது நடப்பு நிதி ஆண்டில் (2022-23) 2.15 லட்சம் கோடி என்ற மதிப்பினை எட்டும்.
- 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.1.05 லட்சம் கோடி மதிப்பிலான உர மானியமானது அறிவிக்கப்பட்டது.

## இந்தியாவின் முதல் ஒலிம்பிக் மதிப்புசார் கல்வி

- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் ஒலிம்பிக் மதிப்புசார் கல்வித் திட்டமானது ஒடிசாவில் தொடங்கப்பட்டது.
- ஒலிம்பிக் மதிப்புசார் கல்வி என்பது ஒலிம்பிக் விழுமியங்களான தகைசால்தன்மை, மரியாதை மற்றும் நட்பு ஆகியவை பற்றி இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நடைமுறை ஆகும்.
- இது முதலில் மதிப்புகள் அடிப்படையிலான ஒரு பாடத் திட்டமாக ரூர்கேலா மற்றும் புவனேஸ்வரில் உள்ள 90 பள்ளிகளில், சுமார் 32,000 குழந்தைகளுக்குச் சேவையை வழங்கும் வகையில் அமல்படுத்தப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகத்தின் உலக மதிப்பீட்டு அறிக்கை




- ❖ ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகம் ஒரு உலக மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ 2030 ஆம் ஆண்டில், இந்த உலகம் ஆண்டுக்கு சுமார் 560 பேரழிவுகளை எதிர்கொள்ளும் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ❖ கடந்த 20 ஆண்டுகளில், பூமி ஆண்டுதோறும் 350 முதல் 500 நடுத்தரம் முதல் பெரிய அளவிலான பேரழிவுகளை சந்தித்து வருகிறது.
- ❖ இது கடந்த 30 ஆண்டுகளில் பதிவாகியதை விட ஐந்து மடங்கு அதிகமாகும்.
- ❖ பேரழிவுகள் அடிக்கடி ஏற்படுவது அதிகரித்துள்ளதற்கு போதுமான பேரிடர் மேலாண்மை இல்லாமை மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவை காரணமாக இருக்கலாம்.
- ❖ மோசமான பேரிடர் மேலாண்மை அமைப்புகளும் நிர்வாகமும் அனைத்துச் சமூக-பொருளாதார ஆதாயங்களையும் ஆபத்தில் ஆழ்த்துகின்ற ஒரு உண்மையான உலக ஆபத்து நிலையைக் குறைத்து மதிப்பிடுகின்றன.

## பொது வான்வெளியில் ஆளில்லா விமானங்கள்

- ❖ பொது வான்வெளியில் ஆளில்லா விமானங்களை அனுமதித்த முதல் நாடு இஸ்ரேல் ஆகும்.
- ❖ இதற்கானச் சான்றிதழை ஹெர்ம்ஸ் ஸ்டார்லைனர் என்ற ஒரு ஆளில்லா விமான நிறுவனத்திடம் இஸ்ரேலியப் பொது விமானப் போக்குவரத்து ஆணையம் வழங்கியது.
- ❖ விவசாயம், சுற்றுச்சூழல், பொது நலன், பொருளாதார நடவடிக்கை மற்றும் குற்றங்கள் ஆகியவற்றுக்கு எதிராக இந்த ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படும்.

## கோவிட்-19 தடுப்பூசி நிறுத்தம்

- கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை நிறுத்தி வைத்த உலகின் முதல் நாடாக டென்மார்க் மாறியுள்ளது.
- டென்மார்க் நாட்டில் உள்ள 5.8 மில்லியன் மக்கள்தொகையில் சுமார் 81 சதவீதத்தினர் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு தவணைகளையும் பெற்றுள்ளனர்.
- 61.6 சதவீதத்தினர் பூஸ்டர்(ஊக்கம்) தவணையையும் பெற்றுள்ளனர்.

## உலகப் பட்டிதார் வணிக உச்சி மாநாடு 2022

- உலகப் பட்டிதார் வணிக உச்சி மாநாட்டினை சூரத்தில் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- பட்டிதார் சமூகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு உத்வேகத்தை வழங்கச் செய்வதற்காக 'திட்டம் 2026' என்பதின் கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படுகிறது.
- முதல் இரண்டு உச்சி மாநாடுகள் 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் காந்திநகரில் நடைபெற்றன.

## உலக நிலக்கரி மின் நிலையச் செயல்திறன்

- 2021 ஆம் ஆண்டில், கட்டமைப்புப் பணியில் உள்ள உலக நிலக்கரி (அனல் மின்) மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் இருந்ததை விட 13 சதவீதம் குறைந்துள்ளது.
- உலக எரிசக்திக் கண்காணிப்பு அமைப்பு மேற்கொண்ட ஒரு கணக்கெடுப்பில் இந்தத் தகவலானது தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், சுமார் 25,000 மெகாவாட் திறனுள்ள புதிய ஆலைகளை நிறுவி உலக நிலக்கரி மின்சக்தி உற்பத்தியின் விரிவாக்கத்தில் சீனா முன்னிலையில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து, சுமார் 6,100 மெகாவாட் திறனுடன் இந்தியா 2வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவை மற்ற நாடுகளில் நிறுவப்படும் புதிய நிலக்கரி ஆலைகளுக்குத் தாங்கள் நிதியளிப்பதை நிறுத்துவதாக உறுதி அளித்தன.

- இருப்பினும், உள்நாட்டில் புதிய நிலக்கரி ஆலைகளை நிறுவுவதில் அனைத்து நாடுகளையும் விட சீனா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

## சாகர் IX திட்டம்

- தற்போது இலங்கையில் நிலவி வரும் நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்கும் ஒரு நோக்குடன் தொடங்கப்பட்ட சாகர் IX திட்டத்தின் ஒரு பகுதியாக INS கரியால் எனும் ஒரு கப்பலானது கொழும்பு நகரைச் சென்று அடைந்தது.
- இது 760 கிலோவுக்கும் அதிகமான அளவில் 107 வகையான உயிர்காக்கும் மருந்துகளை இலங்கையிடம் வழங்கியது.
- இந்தக் கப்பலை இலங்கை சுகாதார அமைச்சர் சன்ன ஜெயசுமணா வரவேற்றார்.

## உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பு

- சீன அதிபர் ஜி ஜின்பிங், 2022 ஆம் ஆண்டின் ஆசிய வருடாந்திர மாநாட்டிற்கான போவா மன்றத்தில் ஒரு புதிய உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பினை முன்மொழிந்து உள்ளார்.
- இந்த முன்னெடுப்பானது உலகில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பை ஊக்குவிக்கச் செய்வதும், ஒருதலை பட்சம் மற்றும் குழு அரசியல் மற்றும் தொகுதி நாடுகளின் மோதல் ஆகியவற்றை எதிர்ப்பதற்குமானதாகும்.
- இந்த முன்னெடுப்பானது, அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் மூலோபாய உத்திகள், குவாட் அமைப்பு மற்றும் AUKUS (ஆஸ்திரேலியா - ஐக்கிய இராஜ்ஜியம் - அமெரிக்கா) பாதுகாப்பு ஒப்பந்தம் போன்ற மேற்கு நாடுகளின் சில முன்னெடுப்புகளை எதிர் கொள்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.


## இணையவெளிக் குற்றங்கள் குறித்த கட்டாய அறிக்கைத் தாக்கல்

- நாட்டில் நிகழும் அனைத்து வகையிலான இணையவெளிப் பாதுகாப்பு குற்றச் சம்பவங்கள் குறித்தும் அந்தந்த நிறுவனங்கள் ஆறு மணிநேர காலக் கெடுவிற்குள் இந்திய கணினி அவசர நிலைச் செயல்பாட்டுக் குழுவிற்கு (CERT-In) அறிக்கையினைத் தாக்கல் செய்ய வேண்டும்.
- இந்தியாவில் இயங்கும் இடைத்தரகு நிறுவனங்கள், சேவை வழங்குநர்கள், சேவை நிறுவனங்கள், தரவு மையங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் போன்ற அனைத்து நிறுவனங்களுக்கும் இந்தப் புதிய வழிகாட்டுதல்களைக் கட்டாயமாக்கியுள்ளது.


## உலக சுகாதார அமைப்பின் தொற்றுநோய் ஒப்பந்தம்

- இந்திய மற்றும் உலக வல்லுநர்கள் முதல் தொற்றுநோய் ஒப்பந்தத்திற்கான முதல் சுற்றுப் பொது கருத்துக் கேட்பில் பல்வேறு பரிந்துரைகளை வழங்கியுள்ளனர்.
- இந்தப் பொது விசாரணைகள் மற்றும் பல கூட்டங்களின் முடிவுகள் 2024 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள 77வது உலக சுகாதாரச் சபையின் போது சமர்ப்பிக்கப்படும்.

- உலக சுகாதாரச் சபையானது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், தொற்றுநோய் ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான ஒரு உலகளாவியச் செயல்முறையைத் தொடங்க ஒப்புக் கொண்டது.
- கோவிட்-19 பெருந்தொற்று ஆனது, உலக சுகாதார அமைப்புகளின் குறைபாடுகளை வெளிப்படுத்தியதை அடுத்து, புதுப்பிக்கப்பட்ட விதிகளின் தேவை உணரப்பட்டது.
- 1948 ஆம் ஆண்டில் உலக சுகாதாரச் சபை நிறுவப்பட்டதிலிருந்து, அதன் இரண்டாவது சிறப்பு அமர்வில் 'The World Together' என்ற தலைப்பில் ஒரு முடிவை ஏற்றுக்கொண்டது.




## சூரிய ஒளிச் சேமிப்பு நேரம்




- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பகல்நேர சூரிய ஒளிச் சேமிப்பு நேரத்தை நிரந்தரமாக்கும் ஒரு குறிக்கோளுடன், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமெரிக்க மேலவையானது சூரிய ஒளிப் பாதுகாப்புச் சட்டத்திற்கு (Sunshine Protection Act) ஒப்புதல் அளித்தது.
- வழக்கமாக, மார்ச் மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை 2 மணிக்கு, கடிகாரங்கள் ஒரு மணி நேரம் முன்னோக்கியும், பின்னர் நவம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை 2 மணிக்கு இதே போன்று கடிகாரங்கள் ஒரு மணி நேரம் முன்னோக்கியும் மாற்றி அமைக்கப்படும்.

## ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் டிஜிட்டல் உத்தி 2022

- 2022-2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பின் டிஜிட்டல் உத்தி என்பது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் அதன் பங்கு ர நாடுகள் ஆகியோரிடையே ஏற்கனவே உருவாக்கப் பட்டுள்ள ஒரு உத்வேகச் செயல் திட்டத்தினை மேம்படுத்துவதையும் துரிதப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதுப்பிக்கப்பட்ட டிஜிட்டல் உத்தியானது, ஓர் உத்தி சார்ந்தத் திட்டத்தை உருவாக்குகிறது.
- மேலும், இது டிஜிட்டல் முறை என்பது மக்களுக்கும் உலகிற்கும் ஓர் அதிகாரமளிக்கும் சக்தியாக இருக்கும் என்ற கருத்தினை முன்வைக்கிறது.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது, தனது அமைப்பிற்குள் டிஜிட்டல் மாற்றத்தைப் பயன்படுத்துவதற்காக வேண்டி தனது முதல் டிஜிட்டல் உத்தியை 2019 ஆம் ஆண்டின் மத்தியில் அறிமுகப்படுத்தியது.

## வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் பயிற்சிகள்

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) டிஃபென்டர் ஐரோப்பா 2022 (DE22) மற்றும் ஸ்விஃப்ட் ரெஸ்பான்ஸ் 2022 (SR22) ஆகிய பயிற்சிகளை நடத்துகிறது.
- டிஃபென்டர்-ஐரோப்பா 22 என்ற ஒரு பயிற்சியானது, வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு உடனான அமெரிக்காவின் அசைக்க முடியாத ஒரு உறுதிப்பாட்டை பறை சாற்றுகிறது.
- ஸ்விஃப்ட் ரெஸ்பான்ஸ் பயிற்சியானது, 6வது வான்வழிப் படைப்பிரிவு என்பது வான் வழி நடவடிக்கைகளை நடத்தும் படைகளின் முக்கியப் படைப்பிரிவாக இருக்கும்.
- போலந்து நாட்டில் தொடங்கிய இந்தப் பயிற்சியானது, 8 நாடுகளில் நடைபெறவுள்ளது.

## பேரிடர் தாங்கும் நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்பு பற்றிய மாநாடு

- பேரிடர் தாங்கும் நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்புக்கானக் கூட்டணியானது அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டு முகமையுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு சர்வதேசப் பேரிடர் தாங்கும் நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்புக்கான மாநாட்டினை நடத்தியது.
- இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் இந்தியப் பிரதமர் அவர்கள் உரையாற்றினார்.
- ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதமர்கள், கானா மற்றும் மடகாஸ்கர் ஆகிய நாடுகளின் அதிபர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் உரையாற்றச் செய்தனர்.

## பாக் லாங் நடைபாதை மேம்பாலம்

- வியட்நாமில் உள்ள பாக் லாங் நடைபாதை மேம்பாலமானது, தரையிலிருந்து சுமார் 500 அடி உயரத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள கண்ணாடியால் ஆன பாலமாகும்.
- புதிதாகத் திறக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் ஆனது உலகின் மிக நீளமான பாலமாகும்.
- பாக் லாங் என்றால் 'வெள்ளை டிராகன்' என்று பொருளாகும்.

- இந்தப் பாலமானது 2000 அடி அல்லது 632 மீட்டர் நீளம் கொண்டது.
- இந்தப் பாலமானது பசுமையான பள்ளத்தாக்கின் மேல் இரண்டு மலைகளை இணைப்பது போல அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பாலம் வடமேற்கு வியட்நாமின் சோன் லா மாகாணத்தில் அமைந்துள்ளது.


## நொடித்தல் மற்றும் திவால்நிலை பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

- நொடித்தல் மற்றும் திவால்நிலை பற்றிய முதலாவது இரண்டு நாட்கள் அளவிலான சர்வதேச ஆராய்ச்சி மாநாடானது சமீபத்தில் இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது அஹமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கழகத்துடன் (IIMA) இணைந்து இந்திய நொடித்தல் மற்றும் திவால்நிலை வாரியத்தினால் (IBBI) ஏற்பாடு செய்யப்பட்டது.
- கடனைத் திருப்பி செலுத்தப் போதியச் சொத்துக்கள் இல்லாததால் கடனை அடைக்க முடியாமல் ஏற்படும் நிலைதான் நொடித்தல் நிலையாகும்.
- திவால் நிலை என்பது நொடித்தல் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவித்து, திவாலாகி விட்டதாக அறிவிக்கக் கோரி ஓர் அதிகாரியிடம் விண்ணப்பிக்கும் சூழ்நிலையாகும்.

## பசுமை மற்றும் நீடித்த மேம்பாட்டிற்கான இந்திய- ஜெர்மானியக் கூட்டாண்மை

- நரேந்திர மோடி மற்றும் ஜெர்மன் அதிபர் ஓலாஃப் ஸ்கோல்ஸ் ஆகியோர் பசுமை மற்றும் நீடித்த மேம்பாட்டுக் கூட்டாண்மையை நிறுவுவதற்கான கூட்டு நோக்க (JDI) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- இது இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பை தீவிரப்படுத்துவதையும், பருவ நிலையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டாண்மையின் கீழ், இந்தியாவில் பருவநிலை மாற்றம் தொடர்பான திட்டங்களில் 10 பில்லியன் யூரோக்களை முதலீடு செய்வதற்கான தனது உறுதிப் பாட்டினை ஜெர்மனி வழங்கியது.

## இரண்டாவது இந்திய-நார்டிக் நாடுகள் உச்சி மாநாடு



- டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடைபெற்ற இரண்டாவது இந்திய-நார்டிக் நாடுகள் உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்றார்.
- முதல் இந்திய-நார்டிக் நாடுகள் உச்சி மாநாடானது 2018 ஆம் ஆண்டில் ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்றது.
- அமெரிக்காவைத் தவிர, நார்டிக் நாடுகள் உச்சி மாநாடுகள் அளவிலான பல ஈடுபாடுகளை மேற்கொண்டிருக்கும் ஒரே நாடு இந்தியாவாகும்.

## 2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆற்றல் செயல் திட்டம்

- ஐக்கிய நாடுகள் சபையானது "2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஆற்றல் திட்டம்" மற்றும் "எரிசக்தித் தொகுப்பு செயல்திட்டக் கட்டமைப்பு" ஆகிய வற்றைத் தொடங்கியது.
- இது கிட்டத்தட்ட 30 ஐ.நா. அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைக்கானக் கட்டமைப்பினை நிறுவுகிறது.
- கடந்த செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற எரிசக்தி தொடர்பான உயர்நிலைப் பேச்சு வார்த்தையின் போது இந்த அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் உறுதி மொழியை அடைவதே இதன் நோக்கமாகும்.

## ஹாங்காங்கின் அடுத்த தலைவர்

- ஹாங்காங்கின் அடுத்த தலைவராக முன்னாள் பாதுகாப்புத் தலைவர் ஜான் லீ கா-சியு சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்நகர் மீது சீன அரசு தனது பிடியை மேலும் இறுக்கும் ஒரு நடவடிக்கையாக இந்த நடவடிக்கை பரவலாகக் கருதப்படுகிறது.
- கேரி லாம்க்குப் பதிலாக ஜான் லீ என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- லீயின் தலைமையிலான ஹாங்காங் தேசியக் கட்சி தடை செய்யப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டில், ஆங்கிலேயர்கள் சீனாவிடம் இப்பகுதியை ஒப்படைத்த பிறகு ஹாங்காங்கின் சுதந்திரத்தை ஆதரித்த முதல் கட்சி இதுவாகும்.
- இந்த கட்சி 2018 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது.

## அரேபிய பயணச் சந்தை

- சுற்றுலாத் துறை அமைச்சகமானது, அரேபிய பயணச் சந்தையில் (ATM), துபாய் - 2022 என்ற நிகழ்வில்  வியத்தகு இந்தியா என்ற அடையாளத்தின் ஒரு பகுதியாக பங்கேற்க உள்ளது.
- இந்திய நாட்டினைக் "கட்டாயம் கண்டு களிக்க வேண்டிய, பயணிக்க வேண்டிய" ஒரு சுற்றுலாத் தலமாகச் சந்தைப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பசிபிக் கடல்பகுதியில் மஞ்சள் நிற செங்கல் சாலை

- கடல்சார் நிபுணர்கள் குழுவொன்று, பசிபிக் பெருங்கடலின் தரைமட்டப் பகுதியில் மஞ்சள்நிற செங்கல் சாலை போன்ற அமைப்பு இருப்பதைக் கண்டறிந்துள்ளது.

- மஞ்சள்நிற செங்கற் சாலை கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பகுதியானது சுமார் ஆயிரக் கணக்கான மீட்டர் தூரம் கடலுக்கு அடியில் அமைந்திருந்தாலும் வறண்டநிலையில் காணப்பட்டது.
- மஞ்சள்நிற செங்கற் சாலையானது உண்மையில் பண்டையக் காலத்திய, செயலில் உள்ள எரிமலையின் புவியியல் அமைப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.
- கடற்பரப்பில் படிந்த இந்தப் பல பாறைத் துண்டுகள், உயர் ஆற்றல் கொண்ட எரிமலை வெடிப்புகளில் இருந்து வெளியான எரிமலைப் பாறையாக இருக்கலாம்.



## வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் இணையவெளிப் பாதுகாப்பு குழுமத்தில் இணைந்த முதல் ஆசிய நாடு

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் கூட்டுறவு இணையவெளிப் பாதுகாப்புச் சிறப்பு மையத்தில் இணைந்த முதல் ஆசிய நாடாக தென் கொரியா மாறியுள்ளது.
- தென் கொரியாவின் தேசியப் புலனாய்வுச் சேவை அமைப்பானது இந்த மையத்தில் பங்காற்றும் பங்கேற்பு நாடாக இணைந்துள்ளது.
- இப்போது, இந்த மையமானது அதன் அதிகாரப்பூர்வ உறுப்பினர்களாக 32 நாடுகளைக் கொண்டுள்ளது.
- இதில் 27 வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகள் மற்றும் 5 ஐந்து வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பினைச் சாராத நாடுகள் பங்கேற்பு நாடுகளாக உள்ளன.
- தென் கொரியா உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான வருடாந்திர சர்வதேச நேரடி தீவிர இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியான 2022 ஆம் ஆண்டு லாக்ட் ஷீல்ட்ஸ் பயிற்சியில் பங்கேற்றுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் தென் கொரியா இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டது.

## ஆசியத் தேர்தல் ஆணையங்களின் சங்கத் தலைமை

- 2022-2024 ஆம் ஆண்டிற்கான ஆசியத் தேர்தல் ஆணையங்களின் சங்கத்தின் (AAEA) புதிய தலைமையாக இந்தியா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மணிலாவின் தேர்தல் ஆணையம் இந்த சங்கத்தின் தற்போதையத் தலைமையாக உள்ளது.

- புதிய நிர்வாகக் குழுவில் தற்போது ரஷ்யா, உஸ்பெகிஸ்தான், இலங்கை, மாலத்தீவு, தைவான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 3 பேர் கொண்ட குழு துணைத் தேர்தல் ஆணையர் நித்தேஷ் வியாஸ் தலைமையில், மணிப்பூரின் தலைமை தேர்தல் ஆணையர் ராஜேஷ் அகர்வால் மற்றும் ராஜஸ்தான் தலைமை தேர்தல் ஆணையர் பிரவீன் குப்தா ஆகியோருடன் உள்ளது.

## கடுமையான தேசிய அவசரநிலை அறிவிப்பு

- வட கொரிய நாட்டில் முதலாவது கோவிட்-19 பாதிப்பு உறுதி செய்யப் பட்டதையடுத்து, "கடுமையான தேசிய அவசரநிலையை" அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.
- 2020 முதல் அந்நாட்டு அரசாங்கம் அதன் எல்லைகளில் கடுமையான கொரோனா வைரஸ் தடுப்பு விதிமுறைகளை விதித்து இருந்த நிலையில், இந்த நாட்டில் கோவிட்-19 பாதிப்பு ஒரு போதும் பதிவானதில்லை.
- வட கொரியா அதன் 25 மில்லியன் மக்களில் யாருக்கும் தடுப்பூசி வழங்கவில்லை என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.
- உலக சுகாதார நிறுவனம், சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை வழங்கிய தடுப்பூசி மீதான சலுகைகளை இந்த நாடு நிராகரித்தது.

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ரஷ்யாவிற்கு மாற்று

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ரஷ்யாவிற்குப் பதிலாக செக் குடியரசினை நியமிக்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பெரும்பான்மையாக வாக்கு அளித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை என்பது உலகளாவிய அமைப்பின் ஒரு முன்னணி மனித உரிமைகள் அமைப்பாகும்.
- கடந்த மாதம் பொதுச் சபையில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பு மூலம் ரஷ்யா சபையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டது.
- ரஷ்யா உலகச் சுற்றுலா அமைப்பிலிருந்தும் இடைநிறுத்தம் செய்யப் பட்டது.

## உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனம்

- எண்ணெய் பெருநிறுவனமான சவுதி அராம்கோ, ஆப்பிள் நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளி, உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக மாறியது.
- 2020 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக அராம்கோ நிறுவனம் சுமார் 2.43 டிரில்லியன் டாலர் அளவிலான ஒரு சந்தை மூலதனத்துடன், அதன் மிக உயர்ந்த அளவிலான வர்த்தகத்தினை மேற்கொண்டு ஆப்பிள் நிறுவனத்தை விஞ்சியுள்ளது.
- ஐபோன் தயாரிப்பு நிறுவனத்தின் பங்கு மதிப்பானது, 5.2% சரிந்து ஒரு பங்கிற்கு 146.50 டாலராக ஆக முடிவடைந்து, 2.37 டிரில்லியன் டாலர் என்ற மதிப்பை எட்டியது.
- இந்த நடவடிக்கை குறுகிய காலத்திற்கே நீடித்தது.

## இன்டர்சோலார் ஐரோப்பா 2022

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைக்கான மத்திய இணை அமைச்சர் பகவந்த் குபா, ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெறும் இன்டர்சோலார் ஐரோப்பா 2022 எனும் நிகழ்வில் கலந்து கொள்கிறார்.
- முனிச் நகரில் நடைபெற உள்ள முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வான இந்தியாவின் சூரிய ஆற்றல் சந்தை எனும் நிகழ்வில் இந்திய மத்திய அமைச்சர் ஒரு முக்கிய உரையை ஆற்ற உள்ளார்.
- இந்திய-ஜெர்மானிய ஆற்றல் மன்றம் (IGEF) இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறது.

## வெளிநாட்டுப் பண வரவினை அதிகம் பெறும் 7வது நாடு

- உலக வங்கி இந்த வாரத்தில் இடம்பெயர்வு மற்றும் மேம்பாடு பற்றிய அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து அதிகப் பண வரவினைப் பெற்ற நாடுகளில் வங்காளதேசம் 7வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு 89 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பண வரவினைப் பெற்று இந்தியா இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இதைத் தொடர்ந்து மெக்சிகோ 54 பில்லியன் அமெரிக்க டாலர்களையும், சீனா 53 பில்லியன் டாலர்களையும் பெற்று அடுத்தடுத்த இடங்களைப் பெற்றன.

## மகோலின் உடன்படிக்கை

- சர்வதேச காவல்துறை அமைப்பின், போட்டியில் முன் நிர்ணயம் மீதான நடவடிக்கைக் குழுவின் 12வது கூட்டமானது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றது
- இது போட்டியில் முன் நிர்ணயம் போன்ற மோசடிகளைத் தடுப்பதற்கான ஒத்திசைவு மிக்க உலகளாவிய முன்னெடுப்பினை மேற்கொள்வதற்கு வேண்டி உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது.
- மத்தியப் புலனாய்வு அமைப்பானது இதில் பங்கேற்ற அமைப்புகளுள் ஒன்றாகும்.
- பந்தயம் மற்றும் விளையாட்டு சார்ந்தச் சந்தைகளில் குற்றவியல் அமைப்புகள் அதிகளவில் செயல்படுவதால், தொழில்நுட்பம், தரவுத் தொகுப்புகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் அதிகரித்து வரும் பயன்பாடுகள் குறித்து இதன் பங்கேற்பாளர்கள் விவாதித்தனர்.
- மகோலின் உடன்படிக்கை என்பது விளையாட்டுப் போட்டிகளைக் கையாள்வதற்கான ஐரோப்பிய சபையின் ஒரு உடன்படிக்கையாகும்.
- இது போட்டியில் முன் நிர்ணயம் போன்ற செயல்பாடுகளைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பலதரப்பு ஒப்பந்தமாகும்.
- இது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 முதல் அமலுக்கு வந்தது.

## ஐக்கிய நாடுகள் சபையில் இந்தி மொழிப் பயன்பாட்டிற்கான ஊக்குவிப்பு

- ஐக்கிய நாடுகள் சபையைப் பற்றி மக்களிடையேப் பரப்புவதற்கு இந்தி மொழியைப் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இந்திய அரசாங்கம் 800,000 அமெரிக்க டாலர்களை ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கியுள்ளது.
- 'இந்தி @ ஐநா' திட்டமானது, 2018 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுத் தகவல் துறையுடன் இணைந்து, உலகெங்கிலும் உள்ள இந்தி மொழி பேசும் மக்கள் மத்தியில் ஐக்கிய நாடுகள் சபையைப் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது.

## தொங்கும் பாலம் 721



- செக் குடியரசு நாட்டில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரியத் தொங்கும் பாலமானது சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பாலமானது இரண்டு மலை முகடுகளை இணைக்கிறது.
- மேலும் ஒரு பள்ளத்தாக்கிற்கு மேலே 95 மீட்டர் (312 அடி) உயரத்தில் தொங்கும்படி அமைக்கப் பட்டுள்ளது.
- ஒரு கம்பி வட வாகனம் மூலமாக இந்தப் பாலத்தில் பயணிக்கலாம்.
- இது 721 மீட்டர் அல்லது 2,365 அடி நீளம் கொண்டது.
- சுற்றுலாப் பயணிகள் இப்பாலத்தில் 1,125 மீட்டர் உயரத்தில் உள்ளே நுழைந்து அதை விட 10 மீட்டர் உயரத்தில் இருந்து வெளியேறும் வகையில் இப்பாலம் அமைக்கப் பட்டு உள்ளது.
- செக் குடியரசு நாட்டில் உள்ள இந்தப் பாலம், நேபாளத்தின் பாக்லங் பர்பத் நடைபாதை மேம்பாலத்தை விட 154 மீட்டர் நீளமானதாகும்.
- தற்போது நேபாளத்தின் பாக்லங் பர்பத் நடைபாதை உலகின் மிக நீளமான தொங்கு நடைபாதை மேம்பாலம் என்ற கின்னஸ் உலகச் சாதனையைப் பெற்றுள்ளது.

## SCO - பிராந்தியப் பயங்கரவாத எதிர்ப்பு அமைப்புச் சபையின் சந்திப்பு

- இந்திய அரசினால் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பிற உறுப்பினர் நாடுகள் பல்வேறு பிராந்தியப் பாதுகாப்புப் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுவதில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்தியப் பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பின் (RATS) ஒரு பகுதியாக இந்த மாநாடு நடத்தப்படுகிறது.
- இந்தியா கடந்த ஆண்டு அக்டோபர் 28 ஆம் தேதியன்று, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்தியப் பயங்கரவாத எதிர்ப்பு அமைப்புச் சபையின் ஒரு வருட கால தலைமைப் பொறுப்பினை ஏற்றது.
- பிராந்தியப் பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் (RATS) தலைமையகம் உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரில் அமைந்துள்ளது.

## முதலாவது சர்வதேசப் புலம்பெயர்வு மதிப்பீட்டு மன்றம்

- முதலாவது சர்வதேசப் புலம்பெயர்வு மதிப்பீட்டு மன்றமானது ஐக்கிய நாடுகள் பொது சபையின் சார்பில் நடைபெற உள்ளது.
- பாதுகாப்பான, முறையான மற்றும் ஒழுங்கான புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் உள்ளாட்சி, தேசிய, பிராந்திய மற்றும் உலக அளவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான முதன்மையான அரசுகளுக்கிடையேயான உலகளாவிய தளமாக இது செயல்படும்.
- இது நான்கு தகவல் பரிமாற்றப் பல்நாட்டு பங்குதாரர்கள் வட்ட மேசை மாநாடு, ஒரு கொள்கை உரையாடல் மற்றும் ஒரு முழு அளவிலான கூட்டம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

## பிரான்சு நாட்டின் முதல் பெண் பிரதமர்

- பிரான்சு நாட்டின் தொழிலாளர் துறை அமைச்சர் எலிசபெத் போர்ன் அந்நாட்டுப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக அமைச்சர் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி ஆவார்.
- மேலும், இவர் நவீனப் பிரெஞ்சு வரலாற்றின் இரண்டாவது பெண் பிரதமர் ஆவார்.
- எடித் கிரெஸனுக்குப் பிறகு, போர்ன் பிரான்சு நாட்டின் முதல் பெண் பிரதமர் ஆவார்.
- 1991 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை கிரெஸன் அமைச்சரவைக்குத் தலைமை வகித்தார்.

## 4வது பெரிய வாகனச் சந்தை

- இந்தியா ஜெர்மனியை பின்னுக்குத்' தள்ளி உலகின் 4வது பெரிய வாகனச் சந்தையாக மாறியுள்ளது.
- முதல் இடத்தை சீனாவும், அதைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் உள்ளன.

- இந்த அறிக்கையை ஆர்கனைசேஷன் இன்டர்நேஷனல் டெஸ் கன்ஸ்ட்ரக்டர்ஸ் டி ஆட்டோமொபைல்ஸ் (OICA) அல்லது சர்வதேச வாகனத் தயாரிப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியா மூன்றாவது பெரிய வாகனச் சந்தையாக மாறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இருப்பினும், இதற்காக 2021 ஆம் ஆண்டில் 4,448,340 அலகுகளை விற்பனை செய்த ஜப்பானை இந்தியா விஞ்ச வேண்டும்.

## பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

- பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பானது சீன நாட்டினால் நடத்தப்பட்டது
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், பிரிக்ஸ் தலைவர் பதவி சீனாவிடம் இந்தியாவால் ஒப்படைக்கப்பட்டது.
- இந்த வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பின் போது, பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பல்வேறு வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் முன்னேறி வரும் நாடுகளின் மற்ற வெளியுறவு அமைச்சர்களுடன் "BRICS +" பேச்சுவார்த்தையை மேற்கொள்ள உள்ளனர்.
- 'உலக மேம்பாட்டிற்கான புதிய சகாப்தத்தில் பிரிக்ஸ் நாடுகளின் உயர்தர வழி காட்டல்' என்பது 2022 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் மாநாட்டின் கருத்துருவாகும்.

## இந்தியா-ஜமைக்கா நட்புறவுப் பூங்கா

- ஜமைக்காவின் செயின்ட் ஆண்ட்ரூ நகரில் உள்ள ஹோப் ராயல் தாவரவியல் பூங்காவில் ‘இந்தியா-ஜமைக்கா நட்புறவுப் பூங்கா’ சமீபத்தில் திறக்கப்பட்டது.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் இந்தப் பூங்காவினைத் திறந்து வைத்தார்.
- குடியரசுத் தலைவர் மற்றும் பிற அதிகாரிகள், தென்னிந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட மூன்று சந்தன மரங்களின் கன்றுகளை இந்த வளாகத்தில் நட்டனர்.
- அவர் “டாக்டர். B.R. அம்பேத்கர் வளாகத்தினையும்" திறந்து வைத்தார்.

## ஜனநாயகத்திற்கான உச்சி மாநாடு

- இந்தியத் தேர்தல் ஆணையமானது, 100 ஜனநாயக நாடுகளுடன் இணைந்து ‘தேர்தல் ஒருமைப்பாடு’ மீதான ‘ஜனநாயகத்திற்கான உச்சி மாநாட்டினை’ நடத்துகிறது.
- ‘ஜனநாயகத்திற்கான உச்சி மாநாட்டின்’ ஒரு பகுதியாக, இந்தியா நாடானது, ‘தேர்தல் ஒருமைப்பாட்டிற்கான ஜனநாயகக் கூட்டமைப்பை’ வழி நடத்த உள்ளது.
- அதன் அறிவு, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை உலகின் பிற ஜனநாயக நாடுகளுடன் இந்தியா பகிர்ந்து கொள்ள உள்ளது.
- 100க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், குடிமைச் சமூக அமைப்புகள், தனியார் துறை, ஊடகங்கள் மற்றும் பிற உறுப்பினர்கள் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

## பருவநிலை மாற்றம்: பசுமை இல்ல வாயு, கடல் மட்ட உயர்வு

- நான்கு முக்கியப் பருவநிலை மாற்ற குறிகாட்டிகளில் புதிய உயர்வை எட்டியுள்ளன.
- பசுமை இல்ல வாயுச் செறிவுகள், கடல் மட்ட உயர்வு, கடல் வெப்பம் மற்றும் கடல் அமில மயமாக்கல் ஆகியவற்றில் புதிய உயர்வை எட்டியுள்ளன.
- கோவிட்-19 பெருந்தொற்று காலப் பொது முடக்கமானது வளிமண்டலப் பசுமை இல்ல வாயுக்களின் செறிவுகளில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.
- உலகளாவியச் சராசரி கடல் மட்டமானது, 2013 முதல் 2021 வரையில் ஓர் ஆண்டிற்கு சராசரியாக 4.5 மில்லி மீட்டர்கள் உயர்ந்து 2021 ஆம் ஆண்டில் ஒரு புதிய உச்சத்தை எட்டியது.
- இது 1993 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கு இடையில், ஓர் ஆண்டிற்குச் சராசரியாக 2.1 மில்லி மீட்டர் உயர்ந்த அளவை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

## இந்தியாவில் புதிய மேம்பாட்டு வங்கி

- பிரிக்ஸ் நாடுகளின் புதிய மேம்பாட்டு வங்கியானது, குஜராத் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நகரில் (GIFT City) இந்தியாவின் பிராந்தியப் புதிய மேம்பாட்டு வங்கி அலுவலகத்தைத் திறக்க திட்டமிட்டுள்ளது.
- இது நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் நிலையான வளர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய மேம்பாட்டு வங்கியானது ஷாங்காய் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட பிரிக்ஸ் நாடுகளால் நிறுவப்பட்டது.
- புதிய மேம்பாட்டு வங்கியானது 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அதிகாரப் பூர்வமாக திறக்கப்பட்டது.

## உலகளாவிய உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான அழைப்புக் கூட்டம்

- 30 நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்களின் "உலகளாவிய உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான அழைப்பு" என்ற ஒரு கூட்டத்திற்கு அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் தலைமை தாங்கினார்.
- இது விரைவான வளர்ச்சி மற்றும் மனிதாபிமானத் தேவைகளை மதிப்பாய்வு செய்வதையும், உலகளாவிய ஊட்டச்சத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் பின்னடைவு ஆகியவற்றிலுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை அடையாளம் காண்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோதுமை ஏற்றுமதியைத் தடை செய்ய இந்தியா முடிவு செய்த சில நாட்களுக்குப் பிறகு இந்த கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.
- இதன் மூலம் நாட்டில் நிலவும் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள அதீத விலைவாசி உயர்விற்குச் சரியான தீர்வினைக் கொண்டு வர முடியும்.

## இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு

- அமெரிக்கா தலைமையிலான ஆசிய-பசிபிக் வர்த்தக முன்னெடுப்பான, செழுமைக்கான இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பில் 13 நாடுகள் இணைந்துள்ளன.
- அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் உட்பட 13 நாடுகள் இந்த வர்த்தக முன்னெடுப்பின் ஒரு அங்கமாகும்.
- ஆஸ்திரேலியா, புருனே, இந்தோனேசியா, மலேசியா, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென் கொரியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகியவை தொடக்க உறுப்பினர் நாடுகள் பட்டியலில் உள்ள மற்ற நாடுகள் ஆகும்.
- இந்தக் கட்டமைப்பானது, ஆசிய-பசிபிக் பகுதி முழுவதும் சீன நாட்டின் வளர்ந்து வரும் வணிகப் பங்கேற்பிற்கு மாற்றாக ஒரு வாய்ப்பினை அமெரிக்க நட்பு நாடுகளுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமர்

- ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக தொழிலாளர் கட்சியின் தலைவர் அந்தோணி அல்பனீஸ் பதவியேற்றுள்ளார்.
- அந்நாட்டின் 31வது பிரதமராக இவர் பதவியேற்றுள்ளார்.
- ஆஸ்திரேலிய நாட்டின் தலைவர் ஆஸ்திரேலியாவின் இராணி (இங்கிலாந்து), பேரரசி இரண்டாம் எலிசபெத் ஆவார்.
- ஆஸ்திரேலிய நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், அந்நாட்டின் நிர்வாக அதிகாரம் பேரரசியின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரலால் உபயோகிக்கப்படுகிறது.
- ஆஸ்திரேலியப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் பேரரசி கவர்னர் ஜெனரலை நியமிக்கிறார்.
- பிரதமர் அந்நாட்டு அரசாங்கத்தின் தலைவர் ஆவார்.

## குரங்கு காய்ச்சலுக்குக் கட்டாயத் தனிமைப்படுத்தல்




- குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களைக் கட்டாயமாக தனிமைப்படுத்த வேண்டும் என்ற விதிமுறையை அறிமுகப்படுத்திய முதல் நாடு பெல்ஜியம் ஆகும்.

- அந்நாட்டில் யாரேனும் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டால், அவர்கள் கட்டாயமாக 21 நாட்கள் (மூன்று வாரங்கள்) தனிமைப்படுத்தப்பட வேண்டும்.
- உலக சுகாதார அமைப்பானது, 12 வெவ்வேறு நாடுகளில் 100 உறுதிப்படுத்தப்பட்ட குரங்கு காய்ச்சல் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.
- குரங்கு காய்ச்சல் என்பது ஒரு அரிய வைரஸ் தொற்று ஆகும்.
- இது பொதுவாக மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவின் வெப்பமண்டலப் பகுதிகளில் பரவுகிறது.
- இது முதன் முறையாக 1958 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- மனிதர்களில் இந்த நோய்த் தொற்றானது, முதல்முறையாக 1970 ஆம் ஆண்டில் காங்கோ ஜனநாயகக் குடியரசில் பதிவானது.
- அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் முறையே 2003 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முதல் பாதிப்பானது பதிவாகியுள்ளது.

## ஆளில்லா விமானங்கள் மற்றும் பறக்கும் கார்களுக்கான முதல் விமான நிலையம்


- மின்சாரத்தில் இயங்கும் ஆளில்லா விமானங்கள் மற்றும் பறக்கும் கார்களுக்கான உலகின் முதல் விமான நிலையம் ஐக்கியப் பேரரசில் உள்ள ஒரு நகரத்தின் மையப் பகுதியில் திறக்கப்பட்டுள்ளது.
- பாப்-அப் ஏர்-ஒன் என்ற இந்த விமான நிலையமானது கோவென்ட்ரி நகரில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இது பூஜ்ஜிய உமிழ்வு அம்சத்தினைக் கொண்ட மின்சாரத்தில் இயங்கும் ஆளில்லா விமானங்கள் மற்றும் வாடகை விமானச் சேவைகள் ஆகியவற்றிற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- மேலும், இந்த விமான நிலையமே ஹைட்ரஜன் எரிபொருள் கலன்கள் மூலம் இயக்கப் படுகிறது.
- நெரிசல் மற்றும் காற்று மாசுபாட்டைக் குறைப்பதில் நகர்ப்புற வான்வழிப் போக்குவரத்துத் திறனைப் பறைசாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.



## தேசிய மேம்பாட்டு வங்கியின் ஆளுநர்கள் குழு சந்திப்பு

- நிர்மலா சீதாராமன் அவர்கள் தேசிய மேம்பாட்டு வங்கியின் ஆளுநர்கள் குழுவின் 7வது வருடாந்திரச் சந்திப்பிற்கு தலைமை தாங்கினார்.
- இந்தச் சந்திப்பில் பிரேசில், சீனா, ரஷ்யா, தென் ஆப்பிரிக்கா மற்றும் புதிதாக இணைந்த உறுப்பினர்களான வங்காளதேசம் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகிய நாடுகளின் ஆளுநர்கள்/மாற்று ஆளுநர்களும் கலந்து கொண்டனர்.
- வருடாந்தரச் சந்திப்பிற்கான இந்த ஆண்டின் கருத்துரு, "தேசிய மேம்பாட்டு வங்கி: மேம்பாட்டின் தாக்கத்தை மேம்படுத்துதல்" என்பதாகும்.

## நேட்டோ உறுப்பினர் அந்தஸ்து - பின்லாந்து மற்றும் ஸ்வீடன்





- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் பின்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் இணைவதற்கு துருக்கியின் அதிபர் நாட்டின் எதிர்ப்பை அறிவித்தார்.
- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகள், நார்வே, டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் அனைத்தும் ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆகியவை ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளன.
- ஐக்கியப் பேரரசு ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இந்த இடைநிலைக் காலத்தைச் சமாளிப்பதற்கு பாதுகாப்பு அளிப்பதாக உத்தரவாதங்களை வழங்கியுள்ளது.
- இருப்பினும், அனைத்து வடக்கு அட்லாண்ட்டிக் ஒப்பந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் ஆதரவு இல்லாமல், ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆகியவை இராணுவக் கூட்டணியில் சேர முடியாது.

## இலங்கையில் வங்கி திவால் நிலை பிரகடனம்

- இலங்கையில் எரிபொருள் நெருக்கடி மற்றும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், அந்த நாடு திவாலானதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே அறிவித்து உள்ளார்.
- இதற்கிடையில், இலங்கையின் மத்திய வங்கியானது எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு ஏற்றுமதிகளுக்குச் செலுத்துவதற்காக முடங்கிய தட்டுப்பாட்டை தணிக்கும் வகையில் அந்நிய செலாவணியைச் சேமித்து வைத்துள்ளது

- 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதிலிருந்து இதுவரை இல்லாத அளவில், இந்தத் தீவு நாடு அதன் மிக மோசமானப் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருவதால், இலங்கையின் பெரும்பாலான பெட்ரோல் நிலையங்கள் மோசமான நிலையில் இயங்கி வருகின்றன.

## போலியோ வைரஸ் பாதிப்பு




- மொசாம்பிக் நாட்டில் ஒரு குழந்தைக்கு இந்த நோய்ப் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து, தீவிர போலியோ வைரஸ் முதல் வகையின் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.
- இது 1992 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டில் பதிவான முதல் பாதிப்பாகும்.
- மேலும், இந்த ஆண்டு தென்னாப்பிரிக்காவில் வெளிநாட்டில் இருந்து தொற்றிய இரண்டாவது தீவிர போலியோ வைரஸ் பாதிப்பும் இதுவே ஆகும்.
- இன்றைய நிலவரப்படி, தீவிரமான போலியோ வைரஸ் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் மட்டுமே உள்ளது.
- போலியோ வைரசில் 1 முதல் 3 என்ற எண் முறையில் பெயரிடப்பட்டுள்ள மூன்று வகைகள் உள்ளன.
- ஒரு நாடு போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட வேண்டுமானால், மூன்று வகையான தீவிரமான போலியோ வைரஸ்களின் பரவல்களும் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்.
- போலியோ வைரஸினை ஒழிப்பதற்கு, தீவிரமான மற்றும் தடுப்பூசி மூலம் தூண்டப் பட்ட போலியோ நோய்த் தொற்றின் பாதிப்புகள் சுழியமாகக் குறைக்கப்பட வேண்டும்.
- மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து சுழியப் பாதிப்புகள் பதிவானதற்குப் பிறகு, 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்தியா போலியோ இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது.

## உதவிகர உபகரணத் தொழில்நுட்பம் பற்றிய உலகளாவிய அறிக்கை

- உலக சுகாதார அமைப்பு மற்றும் UNICEF ஆகியவை இணைந்து உதவிகர உபகரணத் தொழில்நுட்பம் (GREAT) பற்றிய முதல் உலகளாவிய அறிக்கையை வெளியிட்டன.

- ❖ இந்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற 71வது உலக சுகாதாரச் சபையில் மேற்கொள்ளப்பட்ட, உதவிகர உபகரணத் தொழில்நுட்பத்திற்கான பயனுள்ள அணுகல் குறித்த உலகளாவிய அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஒரு தீர்மானத்தின் இறுதிக் கட்டமாகும்.
- ❖ 2.5 பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்குச் சக்கர நாற்காலிகள், செவித் துணைக் கருவிகள் அல்லது தகவல் தொடர்பு மற்றும் அறிவாற்றல் தொடர்பான உதவிகளை வழங்கும் செயலிகள் போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவிகர உபகரணங்கள் தேவைப்படுகின்றன.
- ❖ அவர்களில் ஒரு பில்லியனுக்கும் மேலானவர்களுக்கு இவற்றிற்கான அணுகல் மறுக்கப் படுகிறது.
- ❖ குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில், இந்த வாழ்க்கையை மாற்றும் தயாரிப்புகளுக்கான தேவையில் 3 சதவீதத்திற்கும் குறைவான அளவினையே அணுக முடிகிறது.
- ❖ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவிகர உபகரணங்களின் தேவை உள்ளோரின் எண்ணிக்கையானது 2050 ஆம் ஆண்டிற்குள் 3.5 பில்லியனாக உயரும்.
- ❖ உதவிகர உபகரணத் தொழில்நுட்பம் என்பது மாற்றுத்திறனாளிகளின் செயல் பாட்டுத் திறன்களை அதிகரிக்க, பராமரிக்க அல்லது மேம்படுத்தப் பயன்படும் எந்தவொரு பொருள், உபகரணங்கள், மென்பொருள் நிரல் அல்லது தயாரிப்பு அமைப்பு ஆகும்.

## உலகின் மிக உயரமான வானிலை நிலையம்

- ❖ தேசியப் புவியியல் சங்கமானது எவரெஸ்ட் சிகரத்தில் "உலகிலேயே மிக உயரமான வானிலை நிலையத்தை" நிறுவியுள்ளது.
- ❖ 8,830 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த வானிலை நிலையம் பல்வேறு வானிலை நிகழ்வுகளைத் தன்னிச்சையாக அளவிடுகிறது.
- ❖ இந்த வானிலைக் கண்காணிப்பு அமைப்பானது, சூரிய சக்தியால் இயக்கப்படுகிறது.

## 75வது உலக சுகாதார கூடுகை

- ❖ 75வது உலக சுகாதார மாநாடானது சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடத்தப் பட்டு வருகிறது.
- ❖ கோவிட்-19 பெருந்தொற்று பரவத் தொடங்கிய பிறகு நேரடியாக நடத்தப்படும் முதல் சுகாதார கூடுகை இதுவாகும்.
- ❖ "அமைதிக்கான ஆரோக்கியம், ஆரோக்கியத்திற்கான அமைதி" என்பது இந்த ஆண்டு மாநாட்டின் கருத்துருவாகும்.
- ❖ இந்தியாவில் சுகாதாரப் பாதுகாப்புச் சேவை வழங்கும் முன்களப் பணியாளர்களாக விளங்கும் இந்தியாவின் ஒரு மில்லியன் ஆஷா (அங்கீகாரம் பெற்ற சமூகச் சுகாதாரப் ஆர்வலர்) பணியாளர்கள், 2022 ஆம் ஆண்டிற்கான உலக சுகாதாரத் தலைவர்கள் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## குவாட் உச்சி மாநாடு 2022

- சமீபத்தில் இது ஜப்பானின் டோக்கியோ நகரில் நடத்தப் பட்டது.
- குவாட் அல்லது நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை அமைப்பு என்பது இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளை உள்ளடக்கிய குழுவாகும்.
- இது அவ்வப்பொழுது நடைபெறும் உச்சிமாநாடுகள், தகவல் பரிமாற்றம் மற்றும் இராணுவ பயிற்சிகளைக் கொண்ட ஒரு உத்திசார் மன்றமாகும்.
- பயங்கரவாதம், தவறான தகவல் மற்றும் பிராந்தியத் தகராறுகள் போன்ற அச்சுறுத்தல்களைப் பற்றி முன்னிலைப்படுத்தும் ஓர் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தினை உருவாக்குவதே இந்த உச்சிமாநாட்டின் முக்கிய மையக் கருத்தாகும்.

## உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர அமர்வு

- உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர அமர்வானது, பெருந்தொற்று ஏற்பட்ட காலத்திற்குப் பிறகு நடத்தப்படும் உலகத் தலைவர்களின் முதல் நேரடிச் சந்திப்பாக 2022 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நிகழ உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர அமர்வின் கருத்துரு "ஒன்றுபட்டுச் செயலாற்றி, நம்பிக்கையை மீட்டெடுத்தல்" என்பதாகும்.
- பொதுப் பிரமுகர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் மீண்டும் இணைவதற்கும், நுண்ணறிவுகளைப் பரிமாறிக் கொள்வதற்கும், புதிய முன்னோக்குக் கருத்துகளைப் பெறுவதற்கும், தீர்வுகளை முன்னெடுப்பதற்கும் நேரில் சந்திக்கும் ஒரு உத்தி சார்ந்த இடத்தில் இந்த அமர்வு நடைபெறுகிறது.

## 3வது உலக இயற்கைப் பொருள்கள் பொருட்காட்சி

- 3வது உலக இயற்கைப் பொருள்கள் கண்காட்சியானது (2022) புது டெல்லியில் உள்ள பூசா என்றழைக்கப்படும் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது.
- இது உலக அளவிலான மாநாட்டை நடத்துவதன் மூலம் இயற்கை முறை விவசாய உற்பத்தியாளர்கள், தொகுப்பாளர்கள், செயலிகள், மதிப்புச் சங்கிலித் தளத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொழில் பங்குதாரர்களுக்கான ஒரு தளத்தை வழங்குகிறது.
- இந்தப் பொருட்காட்சியின் கருத்துரு, "மனிதகுலத்திற்கான இலாபகரம்" என்பதாகும்.

## ஆப்கானிஸ்தான் தொடர்பான 4வது பிராந்தியப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை

- தஜிகிஸ்தானின் துஷான்பே நகரில் ஆப்கானிஸ்தான் குறித்த இரண்டு நாட்கள் அளவிலான பாதுகாப்புப் பேச்சுவார்த்தையானது நடைபெற்றது
- இந்தியா, தஜிகிஸ்தான், ரஷ்யா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஈரான், கிர்கிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றன.
- இந்தச் சந்திப்பானது, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புது தில்லியில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் தொடர்பான 3வது பிராந்தியப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாகும்.

## ஐரோப்பாவில் சாதனை அளவில் அணைகள் அகற்றல்




- 2021 ஆம் ஆண்டு அணை அகற்றல் முன்னேற்ற அறிக்கையின் படி, 17 ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஆறுகளில் இருந்து சுமார் 239 அணைகள் அகற்றப்பட்டன.
- இது முந்தைய ஆண்டை விட 137% அதிகமாகும்.
- இதுவரையில் 4,984 அணைகள் அகற்றப்பட்டுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில், ஸ்பெயின் தனது நாட்டில் உள்ள ஆறுகள் மீது கட்டப்பட்டிருந்த அதிக எண்ணிக்கையிலான அணைகளை அகற்றியது (108).
- போர்ச்சுகல், மாண்டினீக்ரோ மற்றும் ஸ்லோவாக்கியா போன்ற நாடுகள் முதன் முறையாக ஆற்றில் அமைக்கப்பட்டிருந்த அணைகளை அகற்றின.

## உலக வர்த்தக அமைப்புக் குழுவின் புதிய தலைவர்

- இந்தியாவின் அன்வர் ஹுசைன் ஷேக், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள் குறித்த உலக வர்த்தக அமைப்பின் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மெக்சிகோவைச் சேர்ந்த எலிசா மரியா ஓல்மெடா டி அலெஜான்ட்ரோ என்பவரை அடுத்து ஷேக் இந்தப் பொறுப்பினை ஏற்க உள்ளார்.
- உலக வர்த்தக அமைப்பு என்பது 164 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பலதரப்பு அமைப்பாகும்.
- இது உலகளாவிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான விதிகளை உருவாக்கச் செய்வதோடு வர்த்தகம் தொடர்பானப் பிரச்சினைகளில் நாடுகளுக்கு இடையே எழும் சர்ச்சைகளையும் தீர்க்கச் செய்கிறது.
- இந்தியா 1995 ஆம் ஆண்டு முதல் இந்த அமைப்பின் அடிப்படை உறுப்பினராக விளங்குகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## உலகின் மிகப்பெரிய நிகழ்நேர பணப் பரிவர்த்தனைகள்


- கடந்த ஆண்டில், இந்தியாவின் பணவழங்கீட்டு அமைப்பில் 48 பில்லியன் மதிப்பில் உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான நிகழ்நேர பணப் பரிவர்த்தனைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- 18 பில்லியன் மதிப்பிலான நிகழ்நேர பணப் பரிவர்த்தனைகள் பதிவான சீனாவை இந்தியா விஞ்சியது.
- மேலும், இது அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளை விட 6.5 மடங்கு அதிகமாகும்.

## நிதிக் கொள்கைக் குழுவின் புதிய உறுப்பினர்

- ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியம் ஆனது, அதன் நிதிக் கொள்கைக் குழுவின் உத்தியோகப் பூர்வ உறுப்பினராக ராஜீவ் ரஞ்ஜன் என்பவரை நியமிக்க ஒப்புதல் அளித்தது.
- மிருதுல் சாகருக்குப் பதிலாக ராஜீவ் ரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நிதிக் கொள்கைக் குழு ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் மற்றும் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று வெளிப்புற உறுப்பினர்கள் இதில் உள்ளனர்.
- இந்தக் குழுவின் தலைவர் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ஆவார்.

## நாடு வாரியாக இணைய சங்கேதப் பணம் மூலம் பெற்ற இலாபங்கள்

- செயினலிசிஸ் என்ற அமைப்பு வெளியிட்ட 2021 ஆம் ஆண்டிற்கான நாடு வாரியான இணைய சங்கேதப் பணம் மூலம் பெற்ற இலாபங்கள் பட்டியலில் இந்தியா 21வது இடத்தைப் பெற்றுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் 2020 ஆம் ஆண்டில் இணைய சங்கேதப் பணம் மூலம் பெற்ற 32.5 பில்லியன் டாலர் இலாபத்துடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் அவர்கள் மொத்தம் 162.7 பில்லியன் டாலர் இணைய சங்கேதப் பணம் மூலம் பெற்ற இலாபத்தினைப் பெற்றுள்ளனர்.
- இணைய சங்கேதப் பணச் சொத்துக்களில் ஈத்திரியம் எனும் நிறுவனமானது மிகவும் குறிப்பிடத் தக்க அளவிலான இலாபத்தினை ஈட்டுகிறது.
- 49.95 பில்லியன் டாலர் மதிப்பிலான இணைய சங்கேதப் பண இலாபத்துடன் அமெரிக்கா இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அமெரிக்காவைத் தொடர்ந்து ஐக்கிய இராஜ்ஜியம், ஜெர்மனி, ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் உள்ளன.





## வருவாய்ப் பற்றாக்குறை மானியம்

- நிதி அமைச்சகத்தின் செலவினங்கள் துறையானது 14 மாநிலங்களுக்கு வருவாய்ப் பற்றாக்குறை மானியமாக ரூ.7,183.42 கோடியை வழங்கியது.
- இது மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை மானியத்தின் 2வது மாதத் தவணையாகும்.
- மதிப்பிடப்பட்ட நிதிப் பகிர்வைக் கருத்தில் கொண்டு ஒரு மாநிலத்தின் வருவாய் மதிப்பீட்டிற்கும் செலவினங்களின் மதிப்பீட்டிற்கும் இடையே உள்ள இடைவெளியின் அடிப்படையில் மாநிலங்கள் எவ்வளவு நிதியினைப் பெற வேண்டும் என்ற ஒரு தகுதியைப் பதினைந்தாவது நிதிக்குழு ஆணையம் நிர்ணயம் செய்தது.
- இந்திய அரசியலமைப்பின் 275வது விதியின் படி, மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப் பட்ட வருவாய்ப் பற்றாக்குறை மானியம் வழங்கப்படுகிறது.

## UPI வழியாக 5.58 பில்லியன் பரிவர்த்தனைகள்

- இந்தியாவின் முதன்மை டிஜிட்டல் பணவழங்கீட்டுத் தளமான ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகத்தில் (UPI), 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.9.83 டிரில்லியன் மதிப்புள்ள 5.58 பில்லியன் பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளது.
- ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகத்தில் இதுவரையில் பதிவுசெய்யப்பட்ட அதிகபட்சப் பரிவர்த்தனைகள் இதுவாகும்.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும் போது, பரிவர்த்தனைகளின் அளவு 111 சதவீதமும், பரிவர்த்தனைகளின் மதிப்பானது கிட்டத்தட்ட 100 சதவீதமும் அதிகரித்து உள்ளது.

## சில்லறை விற்பனை பணவீக்கம்





- இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் உணவு விலைகள் 8.5% என்று வேகமாக உயர்ந்ததையடுத்து, மார்ச் மாதத்தில் 7.7% ஆக இருந்த நுகர்வோர் உணவு விலைக் குறியீடானது 8.4% ஆக உயர்ந்தது.
- சில்லறைப் பணவீக்கமானது தொடர்ந்து நான்காவது மாதமாக 6 சதவீதத்திற்கு மேல் நிலைத்து உள்ளது.
- மார்ச் மாதத்தில் வெறும் 8% ஆக இருந்த போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு சார்ந்த பணவீக்கமானது ஏப்ரல் மாதத்தில் கிட்டத்தட்ட 11% ஆக உயர்ந்துள்ளது.
- ஆடைகள் மற்றும் காலணி விலைகள் குடும்பங்களுக்கு ஒரு அச்சுறுத்தலைத் தரக் கூடிய அளவிலேயே தொடர்ந்தன.
- இரண்டும் இணைந்து இருந்த அதன் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 9.4% என்ற நிலையில் இருந்து ஏப்ரல் மாதத்தில் 9.85% ஆக உயர்ந்துள்ளது.
- மாநில அளவில், மேற்கு வங்காளம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தேசியச் சராசரியை விட அதிக பணவீக்க விகிதம் (9.1%) பதிவாகியுள்ளது.
- அதனைத் தொடர்ந்து தெலுங்கானா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் பணவீக்கம் 9% ஆகப் பதிவாகியுள்ளது.
- அதற்கு மாறாக, கேரளா (5.08%) மற்றும் தமிழ்நாடு (5.37%) ஆகிய மாநிலங்களில் ஏப்ரல் மாதத்தில் மிகக் குறைந்தப் பணவீக்க விகிதமே பதிவாகியுள்ளது.

## கோதுமை, வெங்காய விதைகள் ஏற்றுமதி

- ❖ உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதைக் காரணம் காட்டி, அரசாங்கம் கோதுமை ஏற்றுமதியை "தடை" செய்துள்ளது.
- ❖ இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது வெங்காய விதைகளின் ஏற்றுமதியை "தடை செய்யப்பட்ட" பிரிவின் கீழ் சேர்த்துள்ளது.
- ❖ இந்தியா அதன் அண்டை நாடுகளுக்கு கோதுமையை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் மிக முக்கியத்துவம் வாய்ந்த நாடாகும்.
- ❖ மனிதாபிமான அடிப்படையில் சமீபத்தில் இந்தியாவில் இருந்து அதிக அளவிலான கோதுமைப் பொருட்களைப் பெற்ற ஆப்கானிஸ்தானைத் தவிர்த்து, இந்தியாவிடம் இருந்து அதிகளவில் கோதுமையை இறக்குமதி செய்யும் மற்றொரு பெரிய இறக்குமதி நாடாக வங்காளதேசம் உள்ளது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 7 மில்லியன் டன் கோதுமையை உற்பத்தி செய்தது.
- ❖ அதில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தினை வங்காளதேசம் இறக்குமதி செய்தது.


## ஏப்ரல் மாத மொத்த விற்பனை விலைக் குறியீடு (WPI)




- ❖ ஏப்ரல் மாதத்தில், மொத்த விற்பனை விலைக் குறியீடு (WPI) அடிப்படையிலான பண வீக்க விகிதம், 2011-12 ஆம் ஆண்டிற்குப் பிறகு, 15.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- ❖ மார்ச் மாதத்தில், மொத்த விலைக் குறியீட்டு விகிதம் 14.55 சதவீதமாக இருந்தது.
- ❖ ஏப்ரல் மாதத்தில் உற்பத்திப் பொருட்களுக்கான பணவீக்கம் 10.85 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- ❖ இதற்கு இரசாயனங்கள், அடிப்படையான உலோகங்கள், இரசாயனப் பொருட்கள், இயந்திரங்கள், ஜவுளிகள், மின்சார மற்றும் இதர உபகரணங்கள் காரணமாகும்.
- ❖ டீசல், பெட்ரோல், விமான எரிபொருள் மற்றும் LPG போன்ற முக்கிய பிரிவுகளில் நிலவிய அதிகப் பணவீக்கம் காரணமாக எரிபொருள் பணவீக்க விகிதம் 38.66 சதவீதமாக இருந்தது.
- ❖ எரிபொருள் அல்லாத மற்றும் உணவு அல்லாத கூறுகளுக்கான அசல் மொத்த விற்பனை விலைக் குறியீட்டுப் பணவீக்கமானது நான்கு மாதங்களில் இல்லாத அளவு அதிகபட்சமாக 11.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## அந்நிய நேரடி முதலீட்டு வரவானது வரலாறு காணாத உச்சம்

- 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் வருடாந்திர அன்னிய நேரடி முதலீட்டு வரவானது முன்பு "எப்போதும் இல்லாத"அளவான 83.57 பில்லியன் டாலராக பதிவாகியுள்ளது .
- 2020-21 ஆம் ஆண்டில், அன்னிய நேரடி முதலீட்டு வரவு 81.97 பில்லியன் டாலராக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் உற்பத்தித் துறையில் அன்னிய நேரடி முதலீட்டு பங்கு வரவானது 76% அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் வரையிலான கோவிட் பெருந் தொற்றிற்குப் பிந்தைய காலகட்டத்தில் அன்னிய நேரடி முதலீடு 22% அதிகரித்து 171.84 பில்லியன் டாலரை எட்டியது.
- 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி வரையிலான கோவிட் பெருந் தொற்றிற்கு முந்தைய காலகட்டத்தில் அன்னிய நேரடி முதலீடு வரவுகள் 141.10 பில்லியன் டாலராக பதிவாகியுள்ளன.





## சூரியகாந்தி மற்றும் சோயா எண்ணெய் மீதான இறக்குமதி வரி

- இந்த ஆண்டு மற்றும் 2023-24 ஆம் ஆண்டில் கச்சா சோயா எண்ணெய் மற்றும் கச்சா சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றினைத் தலா 20 லட்சம் மெட்ரிக் டன்கள் வரையில் வரியில்லாமல் இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது.
- முன்னதாக, அக்டோபர் மாதத்தில், சமையல் எண்ணெய்களின் விலைகள் உச்ச கட்டமாக இருந்த சமயத்தில் அவற்றின் மீதான அடிப்படை இறக்குமதி வரிகளை அரசாங்கம் குறைத்தது.
- கச்சா பாமாயில் மீதான இறக்குமதி வரியானது 10 சதவீதத்தில் இருந்து 2.5% ஆக குறைக்கப் பட்டுள்ளது.
- கச்சா சோயா மற்றும் சூரியகாந்தி எண்ணெய் மீதான வரி 7.5 சதவீதத்தில் இருந்து 2.5% ஆக குறைக்கப் பட்டது.

## மத்திய அரசுக்கு உபரித் தொகைப் பரிமாற்றம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2021-22 ஆம் நிதியாண்டில் 30,307 கோடி ரூபாயை மத்திய அரசுக்கு உபரித் தொகையாக மாற்ற அனுமதித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்தியக் குழுவின் 596வது கூட்டமானது, ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையில் நடைபெற்றது.

- தற்போதையப் பொருளாதார நிலை, உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பிரச்சனைகள் மற்றும் சமீபத்தியப் புவிசார் அரசியல் முன்னேற்றங்களின் விளைவு ஆகியவற்றை ஆய்வு செய்த பின்னர், எதிர்பாரா இடர்த் தொகையை 5.50 சதவீதமாக வைத்திருக்க அந்த வாரியம் ஒப்புக் கொண்டது.




## ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்தின் பங்குகள் விற்பனை

**THE STORY SO FAR**

**2002:**
- Atal Bihari Vajpayee-led NDA govt decides to divest majority shareholding in Hindustan Zinc
- Vedanta's Sterlite Industries acquires 26%; additional 20% purchased through open offer

**2003:** Anil Agarwal-led group further buys 19% stake in HZL

**2009:** Sterlite exercises call option, which was contested by Centre; Vedanta invokes arbitration to claim settlement

**2022:** Vedanta withdraws arbitration

- ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் (HZL) நிறுவனத்தில் அரசு கொண்டிருந்தப் பங்குகளில் மீதமுள்ள 29.5% பங்குகளை விற்பதற்குப் பொருளாதார விவகாரங்கள் மீதான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தில் வேதாந்தா குழுமத்தின் பங்கு 64.92% ஆகும்.
- ஐடிசி குழுமத்தில் உள்ள அதன் 7.91% பங்குகளை விற்கவும் அரசுத் திட்டமிட்டுள்ளது.
- 2023 ஆம் நிதி ஆண்டிற்கான அரசின் முதலீட்டு விலக்கிற்கான இலக்கு 65,000 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான முதல் தனியார் பயணம்

- மூன்று தொழிலதிபர்கள் மற்றும் நாசாவின் முன்னாள் விண்வெளி வீரர் ஆகியோர் ஒரு விண்வெளிப் பயணத்தை முடித்து அமெரிக்காவின் புளோரிடா கடற்கரையில் வந்து இறங்கினர் .
- அவர்கள் இரண்டு வாரங்களுக்கும் மேலாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி உள்ளனர்.
- இது வணிகத் துறைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பயணமாகும்.

## பழமையான மற்றும் தொலைதூர நட்சத்திரம்

- புதிதாக கண்டறியப்பட்ட எரெண்டல் என்ற நட்சத்திரமானது இதுவரையில் கண்டறியப் பட்டதில் தொலைதூரத்தில் உள்ள நட்சத்திரமாகும்.
- இது நமது புவியில் இருந்து 12.9 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பதாக கருதப் படுகிறது.
- புதிதாக கண்டறியப்பட்ட இந்த நட்சத்திரமானது பெருவெடிப்பு நிகழ்ந்த ஒரு பில்லியன் ஆண்டுகளுக்குள் உருவான ஆரம்பகால நட்சத்திரங்களில் ஒன்றாகும்.

*ஈர்ப்புப் புல ஒளிவிலகல்*

- ஈர்ப்புப் புல ஒளிவிலகல் எனப்படும் ஒரு நிகழ்வின் காரணமாக மட்டுமே இந்த குறிப்பிட்ட நட்சத்திரத்தைக் கண்டறிய முடிந்தது.
- ஒரு நட்சத்திரம் அல்லது ஒரு அண்டத்திலிருந்து வரும் ஒளியானது மற்றொரு அண்டம், கருந்துளை அல்லது ஏதேனும் ஒரு பெரும்பரப்பு போன்ற ஒரு பெரும்பொருளின் அருகில் செல்லும் போது, அது ஈர்ப்பு விசையால் வளைகிறது என்பது இதிலிருந்து அறியப் படுகிறது.
- இதனால் ஒளி மூலத்தின் உருவம் அதன் அசல் வடிவிலிருந்து சிதைந்து தோன்றலாம்.
- இந்த நிகழ்வு ஈர்ப்புப் புல ஒளி விலகல் என்று அழைக்கப் படுகிறது.

## புதிய ரக மீக்கடத்திப் பொருள்

- நகோயா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் துல்லியக் கோண இரு அடுக்குத் திருகு கிராபைன் எனப்படும் ஒரு புதிய வகை மீக்கடத்திப் பொருளின் மீக்கடத்திப் பண்புகளை விவரித்துள்ளனர்.
- ஒரு பொருள் மீக்கடத்தியாக செயல்பட -270°C போன்ற ஒரு குறைந்த வெப்பநிலை தேவைப் படுகிறது.
- மீக்கடத்திகள் என்பது செயல்முறையில் எந்த விதமான ஒரு மின் தடையும் இன்றி ஒரு மின்னோட்டத்தைக் கடத்தும் பொருட்கள் ஆகும்.

## கோள்களின் அணிவகுப்பு

- வெள்ளி, வியாழன், செவ்வாய் மற்றும் சனி ஆகிய நான்கு கோள்கள் 1,000 ஆண்டுகளுக்குப் பிறகு 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் ஒரே நேர்க்கோட்டில் அமைந்தன.
- 'கோள்களின் அணிவகுப்பு' என்றும் பிரபலமாக அறியப்படும் இந்த அரிய மற்றும் தனித்துவமான கோள்களின் ஒருங்கிணைப்பானது சூரிய உதயத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாக நிகழும்.
- சூரியனின் ஒரு பக்கத்தில் 3 கோள்களும் ஒரே நேர்க்கோட்டில் அமைவது மிகவும் பொதுவான நிகழ்வாகும்.





## உலகின் மிகப்பெரிய இணையவழிப் பாதுகாப்பு பயிற்சி

- தி டாலின் எனப்படும் எஸ்டோனியா வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் கூட்டுறவு இணையவெளிச் சிறப்புப் பாதுகாப்பு மையமானது, 'லாக்டு ஷீல்ட்ஸ் 2022' என்ற ஒரு பயிற்சியை ஏற்பாடு செய்கிறது.
- இது உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் கடினமான வருடாந்திர சர்வதேச இராணுவ இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியாகும்.
- உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பினைத் தொடர்ந்து அதிகரித்து வரும் இணையத் தாக்குதல்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இந்த ஆண்டு இந்தப் பயிற்சி நடத்தப் படுவது குறிப்பிடத்தகுந்த அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

## மெத்தனால் கலந்த பெட்ரோல் சோதனை


- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமானது அசாமின் தின்சுகியா மாவட்டத்தில் M15 பெட்ரோலைச் சோதனை அடிப்படையில் அறிமுகம் செய்துள்ளது.
- M15 என்பது 15% மெத்தனால் மற்றும் 85% பெட்ரோல் ஆகியவற்றின் கலவையாகும்.
- இது பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தை 5% முதல் 10% அளவு வரையில் குறைக்க உதவுகிறது.
- பெட்ரோலில் 15% மெத்தனாலைக் கலப்பது, நுண்துகள்கள், NOx மற்றும் Sox ஆகிய மூலக்கூறுகளின் அடிப்படையில் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை 20% அளவு வரை குறைக்கும்.

- மெத்தனால் என்பது CH3OH வாய்ப்பாட்டினைக் கொண்ட ஒரு திரவ இரசாயனமாகும்.
- இது ஒரு மிதமான, ஆவியாகும் தன்மை கொண்ட, நிறமற்ற மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய திரவமாகும்.




## இந்த ஆண்டின் முதல் சூரியக் கிரகணம்

- இந்த ஆண்டின் முதல் சூரியக் கிரகணமானது, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி சனிக் கிழமையன்று உலகின் சில பகுதிகளில் தென்பட்டது.
- சூரியக் கிரகணம் என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் கடந்து செல்லும் ஒரு நிகழ்வாகும்.
- இது பூமியின் சில பகுதிகளில் சூரிய ஒளியை முழுமையாகவோ பகுதியாகவோ தடுத்து ஓர் இருள் சூழ்ந்த நிலையை உருவாக்குகிறது.
- இது மாதத்தின் இரண்டாவது அமாவாசை அல்லது கருப்பு நிலவு என்றும் அழைக்கப் படுகின்ற மற்றொரு வான் நிகழ்வுடன் இணைந்து நிகழ்ந்தது.



### PK2 மூலக்கூறு

- மண்டியிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிக்கப் பயன்படும் சிறப்பு மருந்து மூலக்கூறு ஒன்றை அடையாளம் கண்டுள்ளனர்.
- PK2 எனப்படும் இந்த மூலக்கூறானது, கணையத்தின் இன்சுலின் சுரப்பினைத் தூண்டக் கூடியது.
- இந்த மருந்தினை நீரிழிவு நோய்க்கு வாய்வழியாக வழங்கப்படும் ஒரு மருந்தாகப் பயன்படுத்தலாம்.
- PK2 ஆனது இன்சுலின் உற்பத்திக்கு அவசியமான ஒரு உயிரணுவான பீட்டா செல் இழப்பைத் தடுக்கவும் மற்றும் மாற்றியமைக்கவும் செய்கிறது.
- இது வகை 1 நீரிழிவு மற்றும் வகை 2 நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பயன் உள்ளதாக இருக்கும்.




### ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் மின்சாரக் கப்பல்

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகமானது, கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் மின்சாரக் கப்பல்களை வடிவமைத்து உருவாக்க உள்ளது.
- ஹைட்ரஜன் மூலம் எரிசக்தியைப் பெறும் எரிபொருள் கலன்கள் ஒரு திறன்மிக்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த, சுழிய உமிழ்வு கொண்ட ஒரு நேரடி மின்னோட்ட ஆற்றல் மூலமாகும்.
- இது ஏற்கனவே கனரகப் பேருந்து, சரக்குந்து மற்றும் இரயில்களில் பயன்படுத்தப் பட்டது.
- மேலும், தற்போது கடல்சார் பயன்பாடுகளுக்காக உருவாக்கப்பட்டு வருகிறது.

### இந்தியக் கடலோரக் காவல்படைக் கப்பல் 'கமலா தேவி'

- சமூகச் சீர்திருத்தவாதியும் ஒரு சுதந்திரப் போராட்ட ஆர்வலருமான கமலாதேவி சட்டோபாத்யாயாவின் நினைவாக விரைவு ரோந்துக் கப்பலான இந்தியக் கடலோரக் காவல்படைக் கப்பலுக்கு கமலா தேவி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ஐந்து விரைவு ரோந்து கப்பல் வரிசையில் நான்காவது கப்பலாக கமலா தேவி உருவாக்கப் பட்டுள்ளது.

- ஆனால் 2021 ஆம் ஆண்டில், நான்காவது கப்பலானது SCG PS சோராஸ்டர் கப்பல் ஆக செஷல்ஸ் குடியரசிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதால் இது ஐந்தாவது கப்பலாகக் கணக்கிடப் பட்டது.

*கமலாதேவி சட்டோபாத்யாய்*

- நாடு முழுவதும் உள்ள கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்களின் மேம்பாட்டிற்காக இவர் பணியாற்றினார்.
- இவர் இந்தியாவில் பெண்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காகவும் பணி ஆற்றினார்.
- இவருக்கு பத்ம பூஷன், பத்ம விபூஷன் மற்றும் ராமன் மகசேசே விருதுகள் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.

## P-75I மற்றும் காற்று சாரா உந்துவிசைத் தொழில்நுட்பம்

- பிரான்சு நாட்டின் கடற்படைக் குழுவானது, இந்தியக் கடற்படையின் P-75I நீர்மூழ்கிக் கப்பல் கட்டமைப்புத் திட்டத்தில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.
- P-75I (திட்டம் 75 இந்தியா) ரக நீர்மூழ்கிக் கப்பல்கள் டீசல்-மின்சார நீர்மூழ்கிக் கப்பல்கள் பிரிவில் கட்டத் திட்டமிடப்பட்ட ஒரு கப்பலாகும்.
- P-75I திட்டம் ஆனது உத்திசார் கூட்டாண்மை மாதிரியின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் முதல் திட்டமாகும்.
- வளிமண்டல ஆக்சிஜனைப் பயன்படுத்தாமல் அணுசக்தி சாரா நீர்மூழ்கிக் கப்பலை இயக்கச் செய்யும் தொழில்நுட்பமே காற்று சாரா உந்துவிசைத் தொழில்நுட்பம் ஆகும்.

*பின்னணி*

- 1999 ஆம் ஆண்டில், பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவானது, 2030 ஆம் ஆண்டிற்குள் 24 நீர்மூழ்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயே உருவாக்கிப் படையில் இணைப்பதற்கான ஒரு 30 ஆண்டு காலத் திட்டத்தினைத் தொடங்க இந்தியக் கடற் படைக்கு ஒப்புதல் அளித்தது.
- முதல் கட்டத்தில், P-75 மற்றும் P-75I என்ற இரண்டு கப்பல் கட்டமைப்புத் திட்டங்கள் உருவாக்கப் பட்டன.
- ஒவ்வொரு திட்டத்தின் கீழும் ஆறு நீர்மூழ்கிக் கப்பல்கள் உருவாக்கப்படும்.
- P-75 திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட முதல் நீர்மூழ்கிக் கப்பலானது 2017 ஆம் ஆண்டில் படையில் இணைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இறுதி நீர்மூழ்கிக் கப்பலான வாக்சீர் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் படையில் இணைக்கப்பட்டது.

## நாசா மனித ஆய்வு ஊர்திக் கல சவால் 2022

- பஞ்சாப் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு இந்திய மாணவர் அணிகளானது மனித ஆய்வு உலாவிக் கல சவால் போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.
- 33 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 58 கல்லூரிகள் உட்பட 91 அணிகள் இந்தச் சவாலில் பங்கேற்றன.

| Award | Winners |
|---|---|
| **STEM Engagement Award** | High School Division: Decent Children Model Presidency School, Punjab, India<br><br>College/University Division: Institute Tecnologico de Santa Domingo, Santa Domingo, Dominician Republic |
| **Social Media Award** | High School Division: Bledsoe Country High School, Pikeville, Tennessee<br><br>College/University Division: Vellore Institute of Technology, Vellore, India |

## வெள்ளிக் கோளுக்கான இஸ்ரோவின் திட்டம்


- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது வெள்ளிக் கோளின் மேற்பரப்பிற்கு கீழே உள்ள கூறுகளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு விண்கலத்தை அனுப்ப உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இஸ்ரோ இந்த விண்கலத்தினை அனுப்ப உள்ளது.
- அதற்கடுத்து ஒரு வருடத்திற்குப் பிறகு, அதனைச் சுற்றும் விண்கலப் பணியைத் தொடங்க அது திட்டமிட்டுள்ளது.
- சுற்றும் விண்கலப் பணி என்பது விண்கலத்தின் சுற்றுப்பாதையை மாற்றுவதற்கு உந்து விசை அமைப்புகளைப் பயன்படுத்துவதாகும்.
- இது ஒரு விண்கலத்தை ஒரு கிரகத்தின் சுற்றுப்பாதையில் நுழையச் செய்கிறது.
- சல்பூரிக் அமிலத்தின் மேகங்கள் இந்தக் கிரகத்தை மூடியுள்ளதால், நச்சுத்தன்மையும் அரிக்கும் தன்மையும் கொண்ட வெள்ளியின் வளிமண்டலத்தைப் பற்றி ஆராய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## ஷிகெல்லா பாக்டீரியா

- நச்சு உடைய உணவை உண்டதனால் சிறுமி உயிரிழந்ததைத் தொடர்ந்து கேரளாவின் காசர்கோட்டிலுள்ள செருவத்தூர் எனுமிடத்தில் உள்ள உணவகத்தில் இருந்து உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டது.
- மேற்கொள்ளப்பட்ட அந்த சோதனையில் சால்மோனெல்லா மற்றும் ஷிகெல்லா என்ற பாக்டீரியாக்கள் அந்த உணவில் இருந்தது தெரிய வந்தது.
- ஷிகெல்லா என்பது மனிதர்களுக்கு நோயை ஏற்படுத்தாத வகையில் குடலில் வசிக்கும் பாக்டீரியாக்களின் குழுவான என்டோரோபாக்டர் என்ற குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாக்டீரியாவாகும்.
- மனிதர்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் நான்கு வகையான ஷிகெல்லா பாக்டீரியாக்கள் உள்ளன - அவை ஷிகெல்லா சோனி, ஷிகெல்லா ஃப்ளெக்ஸ்னெரி, ஷிகெல்லா பாய்டி மற்றும் ஷிகெல்லா டிசென்டீரியா ஆகியனவாகும்.
- நான்காவது வகை பாக்டீரியமானது, அது உருவாக்கும் நச்சுப்பொருளின் காரணமாக மிகக் கடுமையான நோயை ஏற்படுத்துகிறது.





## செவ்வாய்க் கோளில் நிலநடுக்கம்




- நாசா நிறுவனமானது, தனது இன்சைட் செவ்வாய்க் கிரக தரையிறங்கு விண்கலம், எந்தவொருக் கிரகத்திலும் இதுவரை பதிவாகாத மிகப்பெரிய நிலநடுக்கம் செவ்வாய் கோளில் பதிவானதாகக் கண்டறிந்துள்ளது என்று தெரிவித்துள்ளது.
- இந்த உலாவி விண்கலமானது, 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் செவ்வாய் கிரகத்தில் முதன்முதலில் தரையிறங்கியது.
- அதன் பின்னர் 1,313 நிலநடுக்கங்களை இது பதிவு செய்துள்ளது.
- பூமியில் நிலநடுக்கங்கள் மேலோட்டு இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகின்றன.
- இருப்பினும், செவ்வாய்க் கிரகத்தில் மேலோட்டு இயக்கங்கள் இல்லை என்பதால் அதன் மேலோடு ஒரு மாபெரும் தட்டு போன்ற அமைப்பாகும்.
- எனவே, பாறைப் பிளவுகள் அல்லது கோளின் மேலடுக்கில் ஏற்பட்ட பிளவுகள் ஏற்படுத்தும் அழுத்தங்களால் ‘செவ்வாய்க் கோளில் நிலநடுக்கம்’ ஏற்படுகிறது.

## டபிள்யூ போசான் மூலக்கூறு

- அறிவியலாளர்கள் "டபிள்யூ போசான்" துகள்களின் நிறையை மீண்டும் அளவிட்டனர்.
- அவர்கள் அது நிர்ணயிக்கப்பட்ட ஒரு மாதிரியைக் காட்டிலும் அதிக எடை கொண்டது என்பதைக் கண்டறிந்தனர்.
- புதிய அளவீடானது, டபிள்யூ போசானின் நிறையின் மிக துல்லியமான அளவீடு ஆகும்.
- புதிய அளவீடானது, நிர்ணயிக்கப்பட்ட மாதிரி முழுமையடையவில்லை என்று தெரிவிக்கிறது.




## கருந்துளையின் முதல் புகைப்படம்



- வானியலாளர்கள் நமது பால்வெளி அண்டத்தின் மையத்தில் உள்ள மிகப்பெரிய கருந் துளையின் முதல் புகைப்படத்தை வெளியிட்டுள்ளனர்.

- உலகளாவிய ரேடியோ தொலைநோக்கிகள் வலையமைப்பின் ஆய்வுகளைப் பயன்படுத்தி, ஈவென்ட் ஹாரிஸான் தொலைநோக்கி (EHT) கூட்டமைப்பு எனப்படும் உலகளாவிய ஆராய்ச்சிக் குழுவால் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது.
- இது Sgr A* அல்லது சாகிட்டரியஸ் A எனப்படும் நமது பால்வெளி அண்டத்தின் மையத்தில் உள்ள ஒரு மிகப்பெரிய கருந்துளையாகும்.
- இந்த கருந்துளை இருப்பதற்கான முதல் நேரடிக் காட்சி சார்ந்த ஆதாரம் இதுவாகும்.

## நிலவின் மண்ணில் வளர்க்கப்பட்ட தாவரங்கள்

- அறிவியலாளர்கள் முதல் முறையாக நிலவின் மண்ணில் தாவரங்களை வளர்த்து உள்ளனர்.
- இது மனித வரலாற்றிலும் சந்திர மற்றும் விண்வெளி ஆய்விலும் ஒரு புதிய சாதனை ஆகும்.
- இது வருங்காலத்தில், நிலவில் அல்லது விண்வெளிப் பயணங்களின் போது உணவு மற்றும் ஆக்ஸிஜனுக்காக தாவரங்களை வளர்ப்பதற்கான முதல் படியாகும்.
- நிலவுக்கு அனுப்பப்பட்ட அப்பல்லோ 11, 12 மற்றும் 17 ஆகிய ஆய்வுக்கலங்களின் மூலம் 12 கிராம் அல்லது சில தேக்கரண்டி அளவில் நிலவிலிருந்து மண் சேகரிக்கப் பட்டது.


## பூமியைக் கடந்து சென்ற குறுங்கோள்




- 1,600 அடி அளவுள்ள ஒரு மாபெரும் குறுங்கோளானது, மே 15 ஆம் தேதியன்று பூமியைக் கடந்து சென்றது.
- 388945 (2008 TZ3) எனப்படும் குறுங்கோளானது மே 16 ஆம் தேதியன்று நமது புவியை நெருங்கி கடந்து சென்றது.
- இந்தக் குறுங்கோள் பூமியை சுமா1ர் 2.5 மில்லியன் மைல் தொலைவில் கடந்து சென்றது.
- இருப்பினும், 388945 என்ற குறுங்கோள் நமது புவியை நெருங்குவது இது முதல் முறை அல்ல.
- இது 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் பூமிக்கு மிக அருகில் 1.7 மில்லியன் மைல் தொலைவில் புவியைக் கடந்து சென்றது.
- அறிவியலாளர்களின் கூற்றுப்படி, இந்த விண்வெளிப் பாறையானது சூரியனைச் சுற்றி வரும் போது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியைக் கடந்து செல்வது வழக்கமாக உள்ளது.

- அடுத்த முறை இது 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் புவியை நெருங்கி வரும்.
- ஆனால் வெகு தொலைவில் 6.9 மைல் தொலைவில் புவியை இது கடந்து செல்லும்.

## அமல்தியா





- அமல்தியா என்பது வியாழனின் 53 துணைக்கோள்களில் ஒன்றாகும்.
- இது நான்கு கலிலியன் நிலவுகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்ட துணைக்கோள் ஆகும்.
- மேலும் இது மற்ற எல்லாவற்றையும் விட பெரிதான துணைக் கோள் (5வது) ஆகும்.
- வியாழனுக்கு அருகாமையில் உள்ள துணைக் கோள்களின் வரிசையில், அமல்தியா அதன் மூன்றாவது துணைக்கோள் ஆகும்.
- இது ஒரு முறை வியாழனைச் சுற்றி வர எடுத்துக் கொள்ளும் நேரம் வெறும் 12 மணி நேரமே ஆகும்.
- 1979 ஆம் ஆண்டில் வாயேஜர் 1 மற்றும் வாயேஜர் 2 ஆகியவற்றாலும், 2002 ஆம் ஆண்டில் கலிலியோ விண்கலம் ஆகிய மூன்று விண்கலங்களால் மட்டுமே இது கண்டறியப் பட்டது.
- அமல்தியாவிற்கு இரண்டு விண்கலங்கள் மட்டுமே சென்றுள்ளன - அவை வாயேஜர் மற்றும் கலிலியோ ஆகியனவாகும்.

## திட ஏவுகல உந்திகள் சோதனைகள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது, HS200 எனப்படும் திட ஏவுகல உந்திகள் சோதனைகள் நிலைச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- இந்தச் சோதனையை வெற்றிகரமாக முடித்தது இஸ்ரோவின் புகழ்பெற்ற ககன்யான் மனித விண்வெளிப் பயணத் திட்டத்திற்கு ஒரு முக்கியமான மைல்கல் ஆகும்.

- HS200 என்ற உந்தியானது திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தினால் வடிவமைக்கப் பட்டு உருவாக்கப்பட்டது.
- அதே சமயம் உந்திகளின் வார்ப்புச் செயல்முறை ஸ்ரீஹரிக்கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் நிறைவு செய்யப்பட்டது.
- S200 மோட்டார் என்பது LVM3 ஏவுகலத்தின் முதல் நிலையில் செயல்படும்.
- இது 4,000 கிலோ எடையுள்ள ஒரு செயற்கைக் கோளைப் புவிநிலைப் பரிமாற்ற சுற்றுப் பாதையில் நிலை நிறுத்துவதற்கான கூடுதலாக பொருத்தப்பட்ட ஏவுகல உந்திகளாக வடிவமைக்கப் பட்டுள்ளது.





## ஐஎன்எஸ் சூரத் & ஐஎன்எஸ் உதயகிரி

- உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட இரண்டு இந்தியக் கடற்படைப் போர்க்கப்பல்கள் சமீபத்தில் படையில் இணைக்கப்பட்டன.
- அவை, திட்டம் 15 பி அழிப்புக் கப்பலான இந்திய கடற்படைக் கப்பல் (INS) சூரத் மற்றும் திட்டம் 17 ஏ போர்க் கப்பலான இந்தியக் கடற்படைக் கப்பல் உதயகிரி ஆகியனவாகும்.
- திட்டம் 15 பி அழிப்புக் கப்பல்களின் வரிசையில் ‘சூரத்’ நான்காவது கப்பலாகும்.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள மலைத் தொடரின் நினைவாக பெயரிடப்பட்ட ‘உதயகிரி’ திட்டம் 17 ஏ போர்க் கப்பல்களின் வரிசையில் மூன்றாவது கப்பலாகும்.
- இவை மேம்படுத்தப்பட்ட ரேடாருக்குப் புலப்படாத அம்சங்கள், மேம்பட்ட ஆயுதங்கள் மற்றும் உணர்விகள் மற்றும் இயங்குதள மேலாண்மை அமைப்புகளுடன் கூடிய P17 ரக போர் விமானங்களை (ஷிவாலிக் வகுப்பு ) வரிசையில் உருவாக்கப்பட்டவை ஆகும்.

## இரட்டை வளிமண்டலவியல் ஆய்வுக் கலன்


- பூமியின் வளிமண்டலத்தில் நிகழும் விண்வெளிச் சார்ந்த வானிலை நிகழ்வுகளின் விளைவுகளைப் பற்றித் தகவல் சேகரிப்பதற்காக இஸ்ரோ ஒரு இரட்டை வளிமண்டல வியல் ஆய்வுக் கலனை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- பூமியின் உயரடுக்கு வளிமண்டலத்தில் விண்வெளி சார்ந்த வானிலை நிகழ்வுகளால் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகையில் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இதற்கு DISHA-H&L ஆய்வுப் பணி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தில் இரண்டு செயற்கைக் கோள்கள் அனுப்பப்படும்.
    - உயர் சாய்வு சுற்றுப்பாதையில் ஒன்றும் (DISHA-H)
    - தாழ்மட்ட சாய்வு சுற்றுப்பாதையில் ஒன்றுமாக (DISHA-L) இவை நிலை நிறுத்தப் படும்.
- DISHA என்பது ''Disturbed and Quiet time Ionosphere-Thermosphere systems at High Altitudes' என்பதன் சுருக்கமாகும்.




## லித்தியம்-சல்பர் மின்கலங்கள்

- பிலடெல்பியாவில் உள்ள ட்ரெக்சல் பல்கலைக்கழகத்தின் பொறியாளர்கள் புதிய லித்தியம்-சல்பர் (Li-S) செல் (மின்கலம்) தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது தற்போதைய லித்தியம்-அயனி (லி-அயனி) மின்கலங்களை விட திறன்மிக்க, நிலையான மற்றும் செலவு குறைந்த மின்கலங்களை உருவாக்குவதற்கு வழி வகுக்கும்.
- இது லித்தியம்-அயனி மின்கலங்களில் காணப்படும் கோபால்ட்டுக்குப் பதிலாக கந்தகத்தைப் பயன்படுத்துகிறது.
- சல்பர் (கந்தகம்) என்பது மிக அதிகமாகக் கிடைக்கக் கூடிய தனிமமாக, ஒரு மலிவான விலையில் கிடைக்கிறது.
- அதே சமயம் கோபால்ட் அரிதான மற்றும் விலை உயர்ந்த ஒரு தனிமமாகும்.
- மேலும், இவை அதிக ஆற்றல் அடர்த்தியைக் கொண்டுள்ளன.
- மேலும் வழக்கமான லித்தியம்-அயனி மின்கலங்களை விட இரண்டு மடங்கு அளவு மின்னாற்றலைச் சேமித்து வைத்திருக்கும் பண்பு உடையவையாகும்.





## கப்பல் எதிர்ப்பு ஏவுகணை




- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, உள்நாட்டில் உருவாக்கப் பட்ட கப்பல் எதிர்ப்பு ஏவுகணையின் முதல் சோதனையை வெற்றிகரமாக மேற் கொண்டது.
- இந்த ஏவுகணை ஒடிசாவில் உள்ள பாலசோர் என்னுமிடத்திலுள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் (ITR) இருந்து சீக்கிங் 42B எனும் கடற்படை ஹெலிகாப்டர் மூலம் செலுத்திப் பரிசோதிக்கப்பட்டது.
- இந்தியக் கடற்படைக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, விமானம் மூலம் ஏவப் படக் கூடிய முதல் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு இதுவாகும்.

## சூப்பர் ஃப்ளவர் ப்ளட் மூன் சந்திர கிரகணம்




- 2022 ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணம் மே 15 ஆம் தேதி ஏற்பட்டது.
- நிலவானது பிரமிக்க வைக்கும் வகையில் சிவப்பு நிறத்தில் காணப்பட்டது.
- இதை சூப்பர் மூன் என்றும் பிளட் மூன் என்றும் அழைப்பர்.
- இது ஒரு 'முழு சந்திர கிரகணம்' ஆகும்.
- பூமிக்கு அருகில் வரும் போது பெரிதாகத் தோன்றும் முழு நிலவு தான் சூப்பர் மூன் எனப்படும்.
- சந்திரன் சிவப்பு நிறத்தில் தோன்றினால் அது இரத்த நிலவு (பிளட் மூன்) எனப்படும்.
- பூமியின் நிழலின் உள் பகுதியினுள் சந்திரன் நகரும் போது, புவியின் நிழல் சந்திரனை முழுவதுமாக மூடுவது முழு சந்திர கிரகணம் ஆகும்.

## உலகின் முதல் உயிர்வாழத் தகுந்த கிரகம்





- விண்வெளியில் பயணிக்கும் தொலைநோக்கி மூலம் வானத்தை ஆய்வு செய்யும் விண்வெளித் திட்டத்தை சீன அறிவியலாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.
- பூமியில் இருந்து சுமார் 32 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள சூரியக் குடும்பத்திற்கு வெளியே வாழும் பூமி போன்ற கிரகங்களைக் கண்டறிவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ க்ளோஸ்பை வாழத்தகுந்த புறக்கோள் ஆய்வு (க்ளோஸ்பை ஹாபிடபிள் எக்ஸோ பிளானெட் சர்வே (CHES) என்று இத்திட்டத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ அருகிலுள்ள சூரியனைப் போன்ற நட்சத்திரங்களைச் சுற்றி உயிர் வாழத் தகுந்த நிலப் பரப்பு கோள்களைத் தேடுவதற்காக வேண்டிப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட முதல் விண்வெளிப் பயணமாக இது இருக்கும்.

## புளூட்டோவில் பனிக்கட்டி எரிமலைக் குழம்புகள்

- ❖ புளூட்டோ பற்றிய புதிய கண்டுபிடிப்புகள் நாசாவின் நியூ ஹாரிஸான் செயற்கைக் கோள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன.
- ❖ பனிக்கட்டி எரிமலைக் குழம்புகள் அதன் மேற்பரப்பின் கணிசமான பகுதிகளில் பரவி உள்ளதாக இந்த ஆய்வு தெரிவித்தது.
- ❖ இந்தக் கண்டுபிடிப்புகள், புளூட்டோவில் உள்ள ரைட் மோன்ஸ் என்ற மலை போன்ற நிலப்பரப்பு அம்சத்தினைக் குறித்த கவனத்தை ஈர்த்தது.
- ❖ புளூட்டோவில் ரைட் மோன்ஸ் என்ற மலைபோன்ற நிலப்பரப்பு அம்சம் கண்டு பிடிக்கப் பட்டது.
- ❖ இது அதன் சுற்றுப்புறப் பகுதிகளை விட 4-5 கி.மீ. உயர்ந்து காணப்படுகிறது.
- ❖ புளூட்டோவைச் சென்றடைந்த ஒரே விண்கலம் நாசாவின் நியூ ஹாரிஸான் ஆகும்.
- ❖ 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்த விண்கலம் அந்தக் குறுங்கோளின் அருகில் சென்றது.

## கருந்துளையின் தோற்றம்



- இந்தியாவின் ஆஸ்ட்ரோசாட் விண்வெளி தொலைநோக்கியானது, 500வது முறையாக விண்வெளியில் கருந்துளை தோற்றத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இதன் ஈர்ப்பிலிருந்து ஒளி கூட தப்ப முடியாத நிலையில் கருந்துளை என்பது விண்வெளியில் ஈர்ப்பு விசை மிகவும் வலுவாக உள்ள இடமாகும்..
- ஐந்து ஆய்வுக் கருவிகளைக் கொண்ட ஆஸ்ட்ரோசாட், புற ஊதா, ஒளியியல் மற்றும் ஊடுகதிர் கதிர்வீச்சு ஆகியவற்றில் பேரண்டத்தினைக் குறித்து ஆய்வு செய்கிறது.
- 2015 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட ஆஸ்ட்ரோசாட், ஒரு நட்சத்திரம் செயல் இழக்கும் போது ஏற்படும் காமா-கதிர் வெடிப்புகளைப் பற்றி ஆய்வு செய்து வருகிறது.

## மரபணு மாற்றப்பட்டப் பயிர்களுக்கான ஆராய்ச்சி விதிமுறைகள்

- உயிரித் தொழில்நுட்பத் துறையானது, மரபணு மாற்றப்பட்ட (GM) பயிர்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் பயிர்களின் மரபணுக்களை மாற்ற அயல் மரபணுக்களைப் பயன்படுத்தச் செய்வதற்கான சவால்களைத் தவிர்ப்பது ஆகியவற்றிற்கான விதிமுறைகளை தளர்த்தும் வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

*மரபணு மாற்றப்பட்ட தாவரங்களின் பாதுகாப்பு மதிப்பீடு- 2022*

- இந்த வழிகாட்டுதல்களானது, இந்தியாவில் மரபணு மாற்றத் தொழில்நுட்பங்களின் மேம்பாடு மற்றும் நிலையானப் பயன்பாட்டிற்கான செயற்திட்டமாகும்.
- மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தாவரத்தின் மரபணுவை மாற்றி அமைக்கும்.
- ஆராய்ச்சியாளர்களுக்கு மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழுவின் அனுமதியைப் பெறுவதில் இருந்து இது விலக்கு அளிக்கிறது.
- மரபணு மாற்றப்பட்ட விதைகளை உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய அனைத்து விதிமுறைகளும், மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி தேவைப்படுகின்ற உட்பிரிவுகளைத் தவிர மற்ற மரபணு திருத்தப்பட்ட விதைகளுக்குப் பொருந்தும் என்று இந்த வழிகாட்டுதல்கள் கூறுகின்றன.

## பயிற்சி விமானம் HANSA-NG

- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை அமைப்பின் தேசிய வான்வெளி ஆய்வகங்கள் (CSIR-NAL) மூலம் உருவாக்கப்பட்டது.
- HANSA-NG, அல்லது HANSA-புதிய தலைமுறை என்பது மிகவும் மேம்படுத்தப்பட்டப் பயிற்சி விமானங்களில் ஒன்றாகும்.
- HANSA-NG என்பது 1993 ஆம் ஆண்டில் முதல் முறையாக வானில் பறந்து, 2000 ஆம் ஆண்டில் சான்றிதழ் பெற்ற HANSA விமானத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- இது குறைந்த விலை மற்றும் குறைந்த எரிபொருள் நுகர்வு காரணமாக வணிக ரீதியிலான பைலட் (வானூர்தி ஓட்டுநர்) உரிம வழங்கீட்டு (CPL) செயல்முறைக்கு உகந்த சிறந்த விமானமாகும்.

## பரம் பொருள் மீத்திறன் கணினி




- பரம் பொருள் என்பது திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் தொடங்கப்பட்டுள்ள ஒரு அதிநவீன மீத்திறன் கணினி ஆகும்.
- தேசிய மீத்திறன் கணினி திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் கீழ் பரம் பொருள் மீத்திறன் கணினி வசதியானது நிறுவப்பட்டுள்ளது.
- பரம் சித்தி-AI என்பது தேசிய மீத்திறன் கணினி திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட இந்தியாவின் அதிவிரைவான மற்றும் 5.26 பெடாபிளாப்ஸ் திறன் கொண்ட மீத்திறன் கணினி ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலக நிலக் கண்ணோட்ட அறிக்கை 2

- ஆப்பிரிக்காவில் நடைபெற உள்ள 15வது உறுப்பினர்கள் மாநாட்டிற்கு முன்னதாக, பாலைவனமாக்குதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்த அமைப்பானது 2வது நிலக் கண்ணோட்ட அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- பூமியின் நிலப்பரப்பில் 40% நிலப்பரப்பானது குறிப்பாக நவீன வேளாண்மையின் காரணமாக ஏற்கனவே சீரழிந்துவிட்டது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் தென் அமெரிக்காவின் பரப்பளவினை ஒத்த அளவிலான நிலத்தின் தரம் மேலும் கெடும் என்று இந்த அறிக்கை கணித்துள்ளது.

## இயற்கை அன்னை - ஒரு 'உயிருள்ள நபர்'




- ❖ சென்னை உயர்நீதிமன்றமானது இயற்கை அன்னையை உயிர் வாழும் ஒரு நபரின் அனைத்து உரிமைகளும் கடமைகளும் பொறுப்புகளும் கொண்ட ஓர் உயிரினமாக அறிவித்துள்ளது.
- ❖ 2017 ஆம் ஆண்டில், உத்தரகாண்டில் உள்ள கங்கை, யமுனை, அவற்றின் துணை நதிகள் மற்றும் இந்த நதிகளுக்கு நீரினை அளிக்கும் பனிப்பாறைகள் மற்றும் நீர்ப் பிடிப்புகள் ஒரு உயிரினமாக உரிமைகளைக் கொண்டுள்ளன என்று உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ❖ 2018 ஆம் ஆண்டில், அதே உயர்நீதிமன்றம் ஒட்டு மொத்த முழு விலங்குக் குடும்பமும் உயிருள்ள ஒரு நபர் கொண்டுள்ள அனைத்து உரிமைகளையும் கொண்டுள்ளது என்று ஒரு தீர்ப்பினை அளித்தது.
- ❖ 2020 ஆம் ஆண்டில், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் ஆனது சண்டிகர் நகரத்தில் உள்ள சுக்னா ஏரியை ஓர் உயிருள்ள அமைப்பாக அறிவித்து உத்தரவிட்டது.

## சிமெண்ட் கலவையில் ஒற்றைப் பயன்பாட்டு முகக்கவசங்களின் பயன்பாடு

- ❖ அதிக நாட்கள் நீடிக்கக் கூடிய மற்றும் வலிமையான கற்காரையினை உருவாக்கச் செய்வதில், சிமெண்ட் கலவையில் ஒருமுறை உபயோகித்துத் தூக்கி எறியப்படும் முகக் கவசங்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு வழிமுறையை ஆராய்ச்சியாளர்கள் செயல் விளக்கம் செய்து காட்டினர்.
- ❖ முகக்கவசம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இழைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப் பட்ட சிமெண்ட் கலவையானது, பொதுவாகப் பயன்படுத்தப்படும் சிமெண்டை விட 47 சதவீதம் வலிமையானது.
- ❖ மறுசுழற்சி செய்யப்படாவிட்டால், ஒருமுறை உபயோகித்துத் தூக்கி எறியப்படும் முகக் கவசங்கள் பல ஆண்டுகளுக்கு மேல் சிதையாமல் உள்ளதால் அவை சுற்றுச் சூழலுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

## உலக காடுகளின் நிலை அறிக்கை – 2022

- ❖ இது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் வெளியிடப்படும் ஒரு முதன்மையான அறிக்கையாகும்.
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது.

- பூமியின் புவியியல் பரப்பில், 4.06 பில்லியன் ஹெக்டேர் (31%) பரப்பில் காடுகள் அமைந்துள்ளன.
- காடுகளின் அழிப்பு காரணமாக கடந்த 30 ஆண்டுகளில் (1990 மற்றும் 2020 ஆண்டுகளுக்கு இடையில்) உலகிலுள்ள மொத்தக் காடுகளில் சுமார் 10.34% (420 மில்லியன் ஹெக்டேர்) காடுகள் அழிந்துள்ளது.
- 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஒவ்வோர் ஆண்டிலும் 10 மில்லியன் ஹெக்டேர் அளவிலான காடுகள் அழிக்கப்படுகின்றன.
- காடுகளின் மீதான மனித அழுத்தம் தொடர்ந்து அதிகரித்தால், அடுத்த சில தசாப்தங்களில் புதிய விலங்குகள் மூலம் பரவக்கூடிய வைரஸ் நோய்களுக்கான மிகப் பெரிய மையமாக இந்தியாவும் சீனாவும் உருவாகலாம்.

## தீவிர வெப்பக்காற்று


- அதிகபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸுக்கு மேலும், இயல்பை விட குறைந்த பட்சமாக 4.5 புள்ளிகள் அதிகமாக இருக்கும் போதும் வெப்பக்காற்று வீசுவதாக அறிவிக்கப் படுகிறது.
- கடந்த 122 ஆண்டுகளில் இல்லாத வகையில் வடமேற்கு இந்தியாவில் ஏப்ரல் மாதம் அதிக வெப்ப நிலை பதிவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.
- பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளத்தின் பெரும் பகுதிகளில் 40 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெப்பநிலை அதிகரித்ததால், வழக்கத்திற்கு மாறாக மிக வெப்பமான ஏப்ரல் மாதமாகவும் இது மாறியுள்ளது.
- ஏப்ரல் 27 ஆம் தேதி வரை சராசரி அதிகபட்ச வெப்பநிலை 35.7 டிகிரி செல்சியஸ் ஆகும்.
- இது கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த மாதத்தில் பதிவாகாத அதிகபட்ச வெப்ப நிலை ஆகும்.
- முழு அளவில் பதிவு செய்யப்பட்ட வெப்பநிலைகளின் அடிப்படையில், ஒரு புவிப் பரப்பில் அதிகபட்சமாக 45 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகும் போது வெப்பக் காற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.
- அதிகபட்ச வெப்பநிலை 47 டிகிரியைத் தாண்டினால் கடுமையான வெப்பக்காற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப் படும்.

| SIZZLING SPOTS | |
|---|---|
| 46.5 | Hathras (UP) |
| 46 | Hisar AMFU (Haryana) |
| 45.9 | Patiala (Punjab) |
| 45.9 | Allahabad (UP) |
| 45.8 | Chandrapur (Maha) |

| DELHI-NCR | |
|---|---|
| 46* | Sports Complex (C'wealth Games Village) |
| 45.8 | Mungeshpur |
| 45.6 | Gurgaon |

* Temps in °C on Thurs | Some stns may be affected by urban heat islands

## புதிய மின்மினிப் பூச்சி இனங்கள்




- ஆனைமலை புலிகள் காப்பகத்தில் ஒரு புதிய வகை மின்மினிப் பூச்சி இனமானது கண்டறியப் பட்டுள்ளது.
- பல இலட்சம் மின்மினிப் பூச்சிகள் இந்தக் காடு முழுவதும் தங்கள் ஒளிகளை ஒருங்கே ஒளிரச் செய்து கொண்டிருந்தன.
- ஒரு மரத்தில் தென்பட்ட வெளிச்சமானது, காடு முழுவதும் சுழற்சி முறையில் காடு முழுவதும் கொண்டு செல்லப்பட்டது.
- மேலும் இந்த சுழற்சி இரவு முழுவதும் தொடர்ந்தது.
- ஒவ்வொரு மரமும் வெவ்வேறு ஒளிரும் வடிவத்தைக் கொண்டிருப்பதாகத் தோற்றம் அளித்தன.

## மிகப்பெரிய மெகாராப்டர் டைனோசர்

- அர்ஜென்டினாவின் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் உயிர்ச் சங்கிலியின் உயர் நிலையிலுள்ள வேட்டையாடும் டைனோசர் இனம் ஒன்றைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- இந்த டைனோசரின் அறிவியல் பெயர் "மெய்ப் மேக்ரோதோரஸ்" என்று சூட்டப் பட்டு உள்ளது.
- இந்த டைனோசர் படிமமானது அர்ஜென்டினாவின் சாண்டா குரூஸ் மாகாணத்தில் 2019 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த டைனோசர் இனமானது சுமார் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கிரெட்டேசியஸ் காலத்தின் இறுதிக் கட்டத்தில் ஏதோ ஒரு பகுதியில் வாழ்ந்ததாகும்.
- இந்த இனம் சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முற்றிலுமாக அழிந்தது.

## உலகின் மிகச்சிறிய கடல்வாழ் பாலூட்டி இனம்




- உலகின் மிகச்சிறிய கடல்வாழ் பாலூட்டி இனமான 'வாக்கிடா போர்போயிஸ்' எனப் படும் ஒருவகை கடல்வாழ் ஓங்கில்களானது அதன் ஒரேயொரு வாழ்விடமான மெக்சிகோவின் கலிபோர்னியா வளைகுடா பகுதியில் வெறும் 10 மட்டுமே உள்ளதால் அவை அழிவின் விளிம்பில் உள்ளன.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு கூட்டமைப்பு ஆனது (IUCN) அழிவின் ஆபத்தில் உள்ள போர்போயிஸ் இனங்களை மீண்டும் தனது பட்டியலில் சேர்த்துள்ளது.
- இவை 55 கிலோ வரை எடையும், 1.5 மீட்டர் நீளமும் கொண்டதாகும்.
- இது அனைத்து செட்டேசியன்களிலும் (நீர்வாழ் பாலூட்டிக் குழுமம்) மிகச் சிறியதாகும்.

## உலகப் பறவைகளின் நிலை

- உலகப் பறவைகளின் நிலை என்பது சுற்றுச்சூழல் வளங்களின் மீதான ஒரு வருடாந்திர மதிப்பாய்வு ஆகும்.
- இது BirdLife International என்ற நிறுவனத்தின் புகழ்வாய்ந்த ஒரு அறிவியல் பதிப்பாகும்.
- 'உலகப் பறவைகளின் நிலை' என்ற ஓர் புதிய மதிப்பாய்வின்படி, உலகளவில் தற்போதுள்ள பறவை இனங்களில் தோராயமாக 48% இனங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது அல்லது கருதப்படுகிறது.
- கண்டறியப்பட்ட 10,994 பறவை இனங்களில் ஏறக்குறையப் பாதி இனங்கள் இயற்கை மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றில் விரிவடைந்து வரும் மனிதத் தாக்கம் காரணமாக இந்த அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
- 146 இனங்கள் மீதான சமீபத்திய வருடாந்திரப் போக்குகள் கணக்கிடப்பட்ட நிலையில் இந்தியாவில் பறவைகளின் பன்முகத்தன்மை குறைந்து வரும் போக்கு மிக ஆபத்தான ஒன்றாக உள்ளது.
- இவற்றுள், கிட்டத்தட்ட 80% அளவிலான பறவை இனங்கள் எண்ணிக்கையில் குறைந்து வருவதோடு, கிட்டத்தட்ட 50% அளவிலான பறவை இனங்கள் வலுவான சரிவினைக் கண்டுள்ளன.

- ஆய்வு செய்யப்பட்ட உயிரினங்களில் 6 சதவீதத்திற்கும் மேலானவை நிலையான எண்ணிக்கையைக் கொண்டுள்ளதோடு, மேலும், 14% இனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் போக்குகளைக் கொண்டுள்ளன.
- உலகில் எஞ்சியிருக்கும் பறவை இனங்களில் 14 சதவீதத்தினை மனிதர்கள் உணவாக உட்கொள்கின்றனர்.

## பாண்டனல் ஈரநிலம்


- தென் அமெரிக்காவில் உள்ள பாண்டனல் எனப்படும் உலகின் மிகப்பெரிய சதுப்பு நிலமானது அழிந்து விடும் அபாயத்தில் உள்ளது.
- இது பூமியிலேயே அதிகளவு பல்லுயிர்த் தன்மையைக் கொண்டிருக்கும் அமைப்புகளில் ஒன்றின் மீதான ஒட்டுமொத்தத் தாக்கத்தை கருத்தில் கொள்ளத் தவறிய உள்நாட்டு மற்றும் வெளிப்படையான சில சிறிய முடிவுகளே இதற்குக் காரணமாகும்.
- இது பிரேசில், பராகுவே மற்றும் பொலிவியா ஆகிய நாடுகளில் 179,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான பரப்பளவில் பரவிக் காணப்படுகிறது.




## UNCCD COP15

- கோட் டி ஐவரி நாட்டில் நடைபெற்ற (மேற்கு ஆப்பிரிக்கா) பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகளின் சபையின் மாநாட்டு அமைப்பின் 15வது உறுப்பினர்கள் மாநாட்டில் (COP15) இந்தியா பங்கேற்றது.
- COP 15 மாநாடானது, பாலைவனமாக்கல், நிலச் சீரழிவு மற்றும் வறட்சி ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் ஒரு முக்கிய இயக்கமாகும்.
- இதற்கான கருத்துரு: 'நிலம். வாழ்வு. மரபு: பற்றாக்குறையிலிருந்துச் செழிப்பினை நோக்கி' என்பதாகும்.
- 2019 ஆம் ஆண்டின் டெல்லிப் பிரகடனமானது பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகளின் சபையின் மாநாட்டு அமைப்பின் 14வது பங்குதார மாநாட்டில் கையெழுத்திடப்பட்டது.
- பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகளின் சபையின் மாநாட்டு அமைப்பானது 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## Drought in Numbers 2022 – அறிக்கை




- தற்போது நடைபெற்று வரும் பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகளின் சபையின் மாநாட்டு அமைப்பின் 15வது பங்குதாரர் மாநாட்டில் (CoP15) 'Drought in Numbers 2022' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்தச் சமீபத்திய மதிப்பீடானது, 196 நாடுகளில் கடந்த 122 ஆண்டுகளில் பதிவான வறட்சிகள் பற்றியும், வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தின் மீதான அதன் தாக்கங்கள் பற்றியும் பகுப்பாய்வு செய்தது.
- 2000 ஆம் ஆண்டிலிருந்து, உலகில் வறட்சிகள் அடிக்கடி ஏற்படும் நிலைகள் மற்றும் அதன் கால அளவு ஆகியவை 29 சதவீதம் அதிகரித்துள்ளது.
- புவியியல் ரீதியாக, இந்தியாவின் வறட்சிப் பாதிப்பு நிலையானது, ஆப்பிரிக்காவின் துணை சஹாராப் பகுதி நாடுகளுடன் ஒப்பிடப் படுகிறது.
- கடுமையான வறட்சியின் விளைவானது, 1998 முதல் 2017 வரையிலான 20 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2முதல் 5 சதவீதம் வரை குறைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## உலகளாவிய வருடாந்திரம் முதல் பத்தாண்டு கால பருவநிலை தகவல் அறிக்கை

- உலகளாவிய வருடாந்திரம் முதல் பத்தாண்டு கால பருவநிலை தகவல் அறிக்கை என்பது சமீபத்தில் உலக வானிலை அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் உலகம் 1.5 டிகிரி செல்சியஸ் வெப்பமயமாதல் என்ற ஒரு வரம்பினைத் தற்காலிகமாக மீறுவதற்கு 50 சதவீத வாய்ப்பு உள்ளது.
- 2022 மற்றும் 2026 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் குறைந்தபட்சமாக ஒரு ஆண்டாவது 2016 ஆம் ஆண்டிற்குப் பதிலாக மிகவும் வெப்பமான ஆண்டாக மாற 93 சதவீத வாய்ப்பு உள்ளது.
- தற்காலிகமாக 1.5 டிகிரி செல்சியஸ் என்ற வெப்பநிலையைத் தாண்டுவதற்கான ஒரு வாய்ப்பு 2015 ஆம் ஆண்டில் அது பூஜ்ஜியத்தை நெருங்கியதில் இருந்து படிப்படியாக உயர்ந்து உள்ளது.

- உலக அளவில் 2022 ஆம் ஆண்டு மற்றும் அடுத்த நான்கு ஆண்டுகளில் இயல்பை விட குறைவான வெப்பநிலை பதிவாகும் என கணிக்கப்பட்டுள்ள நாடுகளில் சில பகுதிகளில் இந்தியாவும் இடம் பெறலாம்.
- இது கடந்தப் பத்தாண்டுகளில் நிலவிய மழைப் பொழிவுகளின் ஒரு சாத்தியமான அதிகரிப்பு காரணமாகவும் இருக்கலாம்.
- இந்தியாவின் பல பகுதிகளில் இயல்பை விட அதிகமாக மழை பெய்யும்.
- இது வெப்ப நிலையை குறைவாக வைத்திருக்கும்.

## பட்டைகள் கொண்ட வெளிர்நிற சிறுபாம்பு

- நீலகிரி வனப் பிரிவில் இருந்து பட்டைகள் கொண்ட வெளிர்நிற சிறிய தலை கொண்ட பாம்பின் (சைலோஃபிஸ் பெரோடெட்டி) மாதிரியானது சேகரிக்கப்பட்டது.
- இந்தப் பாம்பு மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதியில் மட்டுமே காணப் படுகிறது.
- இது பொதுவாகக் கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டருக்கு மேல் உள்ள புல்வெளிச் சோலை என்ற பல்வாழிடச் சூழல் அமைப்புகளில் காணப்படுகிறது.
- நீலகிரி காடுகளில் இருந்துச் சேகரிக்கப்பட்ட இனங்களில் முதல் முறையாக வெளிர் நிறம் கொண்ட இனங்கள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளன.


## சியோல் வனப் பிரகடனம்

- 15வது உலக வனவியல் மாநாடானது, தென் கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்றது.
- அதில் சியோல் வனப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்நிகழ்ச்சியை தென் கொரிய அரசாங்கம் சியோல் நகரில் நடத்தியது.
- உலக வனவியல் மாநாடானது ஐந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) இந்த மாநாட்டினை நடத்தியது.
- பல்லுயிர்த் தன்மை இழப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் பாலைவனமாக்கல் போன்ற உலகளாவிய சுற்றுச்சூழல் மற்றும் வனம் தொடர்பான பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் இந்த நிகழ்வு ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படுகிறது.
- மேலும், இந்த நிகழ்வில் பல்வேறு தீர்வுகள் வகுக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்றன.
- சியோல் வனப் பிரகடனமானது, சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்குகளை 2030 ஆம் ஆண்டிற்குள் அடைய, உலகம் முழுவதும் உள்ள நிலப்பரப்பு மற்றும் வனங்களின் மறுசீரமைப்புக்கான முதலீட்டினை மூன்று மடங்காக அதிகரிக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.
- முதல் உலக வனவியல் மாநாடானது 1926 ஆம் ஆண்டில் இத்தாலி நகரில் நடத்தப் பட்டது.

## இந்தியாவின் 52வது புலிகள் காப்பகம்

- இராஜஸ்தானில் உள்ள ராம்கர் விஷ்தாரி சரணாலயமானது, இந்தியாவின் 52வது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.

- இது ரந்தம்போர், சரிஸ்கா மற்றும் முகுந்த்ரா ஆகியவற்றினை அடுத்து, இராஜஸ்தானின் நான்காவது புலிகள் காப்பகமாக மாறியுள்ளது.
- ராம்கர் விஷ்தாரி சரணாலயமானது, வடகிழக்கில் ரந்தம்பூர் புலிகள் காப்பகத்திற்கும் தெற்கே முகுந்த்ரா மலைக் குன்றுகள் புலிகள் காப்பகத்திற்கும் இடையில் உள்ள புலிகளின் வாழிடத்தை உள்ளடக்கியதாகும்.




## 'நகராட்சி திடக் கழிவு மற்றும் திரவக் கழிவுகளின் மறுசுழற்சி பொருளாதாரம்' பற்றிய அறிக்கை


- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது, 'நகராட்சி திடக் கழிவு மற்றும் திரவக் கழிவுகளின் மறுசுழற்சிப் பொருளாதாரம்' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு நகரங்கள் நகராட்சிக் கழிவுகளை அகற்றப் போராடி வரும் சமயத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- நாட்டின் நகரங்களும் குப்பைக் கழிவுகளை நிரப்புவதற்கான புதிய நிலப்பரப்புத் தளங்களை உருவாக்க இயலாமல் உள்ளன.

## பல்லுயிர்ப் பெருக்கப் பதிவேடு

- பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ஒரு விரிவான பதிவேட்டினைத் தயாரித்த இந்தியாவின் முதல் பெருநகரமாக கொல்கத்தா மாறியது.
- இந்த ஆவணம் 399 வகையான தாவரங்களைப் பட்டியலிட்டுள்ளது.
- இவற்றுள் 138 மரங்கள், 126 சீனக் காய்கறிகள், 33 மருத்துவத் தாவரங்கள் மற்றும் கிட்டத்தட்ட 100 தாவரங்கள் அடங்கும்.
- கிட்டத்தட்ட 70 பட்டாம்பூச்சி இனங்கள், 47 மீன் வகைகள், 84 பறவை இனங்கள் மற்றும் 22 பாலூட்டிகள் உட்பட 283 விலங்கினங்களை இந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது.

## நீல நிற வயிருடைய குக்ரி வகை பாம்பு

- ❖ நீல நிற வயிருடைய குக்ரி (பனையன்) வகை பாம்பானது (ஒலிகோடன் மெலனியஸ் வால்) மனாஸ் தேசியப் பூங்காவில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ ஒலிகோடன் மெலனியஸ் வகை பாம்பானது 112 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ இது கடைசியாக 1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மேற்கு வங்காளத்தில், மனாஸிற்கு மேற்கே 267 கிமீ தொலைவில் உள்ள திண்டாரியா என்ற பகுதியில் இருந்து கண்டறியப் பட்டது.
- ❖ இது கிழக்கு இந்தியப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டது.
- ❖ 1909 ஆம் ஆண்டில் ஃபிராங்க் வால் என்பவரால் டின்டாரியா, டார்ஜிலிங் மற்றும் லண்டன் ஆகிய பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட இரண்டு மாதிரிகளின் அடிப்படையில் இந்த இனங்கள் குறித்து விவரிக்கப்பட்டது.




## தலைமை நிர்வாக அதிகாரிகளின் பருவநிலை நடவடிக்கைக்கான தலைவர்களின் கூட்டணி

- ❖ தலைமை நிர்வாக அதிகாரிகளின் பருவநிலை நடவடிக்கைக்கான தலைவர்களின் கூட்டணியின் இந்திய அமர்வானது உலகப் பொருளாதார மன்றத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இது இந்தியாவின் கார்பன் நீக்கம் மற்றும் பருவநிலை நடவடிக்கை முயற்சிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2070 ஆம் ஆண்டிற்குள் நிகர சுழியம் என்ற இந்தியாவின் இலக்கை அடைவதற்காக, இந்தக் கூட்டணியின் இந்திய அமர்வானது வணிகங்கள், அரசாங்கம் மற்றும் பல்வேறு முக்கியப் பங்குதாரர்களை ஒன்றிணைக்கிறது.

### செலா மக்காக் குரங்கு



- அருணாச்சல பிரதேசத்தில் இருந்து கண்டறியப்பட்ட உலகின் ஒரு பழைய குரங்கு இனத்தினைச் சேர்ந்த ஒரு புதிய இனத்திற்கு அருணாச்சலப் பிரதேசத்தின் சேலா கணவாயின் நினைவாகப் பெயரிடப்பட்டது.
- சேலா கணவாய் ஆனது கடல் மட்டத்திலிருந்து 13,700 அடி உயரத்தில் உள்ள ஒரு உத்தி சார்ந்த முக்கியத்துவம் கொண்ட மலைப்பாதையாகும்.
- இந்தப் புதிய இனத்திற்கு செலா மக்காக் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த இரண்டு இனங்களையும் வேறுபடுத்துவதற்கு சில தனித்துவமான உருவவியல் பண்புகள் உள்ளன.
- செலா மக்காக் இனம் வெளிர் முகத்தையும் பழுப்பு நிற மேல்தோலினையும் கொண்டு இருக்கும்.
- அருணாச்சல மக்காக் இனம் கருமையான முகத்தையும் அடர்பழுப்பு நிற மேல் தோலினையும் கொண்டிருக்கும்.

## மாநிலச் செய்திகள்

### மலேரியா அற்ற மாநிலமாக மாற கர்நாடகா இலக்கு

- 2027 ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை முற்றிலும் ஒழிப்பதற்கு கர்நாடகா அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- மத்திய அரசு இலக்காக நிர்ணயித்த 2030 ஆம் ஆண்டிற்கு 3 ஆண்டுகளுக்கு முன்னதான ஒரு இலக்கை கர்நாடக அரசு நிர்ணயித்துள்ளது.
- மலேரியா என்பது ஒரு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய, ஒட்டுண்ணிகளால் ஏற்படுகின்ற ஒரு நோயாகும்.
- அந்த ஒட்டுண்ணிகள் பாதிக்கப்பட்ட பெண் அனோபிலிஸ் என்ற கொசுக்கள் மூலம் மக்களுக்குப் பரவுகிறது.

## இந்தியாவின் முதல் அமிர்த சரோவர்

- உத்தரப் பிரதேச மாநிலம் ராம்பூரில் உள்ள படவாய் எனும் கிராமப் பஞ்சாயத்துப் பகுதியில் `அம்ரித் சரோவர்` முன்னெடுப்பின் கீழ், முதல் நீர்நிலையானது சீரமைத்து முடிக்கப் பட்டுள்ளது.
- அம்ரித் சரோவர் என்ற திட்டத்தின் கீழ், சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர்நிலைகள் மேம்படுத்தப்பட்டு அவை புணரமைக்கப் படும்.
- ராம்பூரில் உள்ள எழுபத்தைந்து குளங்கள் அம்ரித் சரோவராக உருவாக்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டன.

## இந்திய ஆட்சிப் பணி அதிகாரியை மீண்டும் பணியமர்த்திய அரசு

- இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஷா பைசலின் விண்ணப்பத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதையடுத்து அவர் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஃபைசல் தனது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.
- அவர் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உருவான ஒரு அரசியல் கட்சியான ஜம்மு & காஷ்மீர் மக்கள் இயக்கத்தினை நிறுவியவர் ஆவார்.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட உடனே அவர் கடுமையானப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.
- 2020 ஆம் ஆண்டு ஜூன் 03 அன்று அவர் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.


## இந்தியாவின் முதல் எத்தனால் ஆலை

- பீகார் மாநிலம் பூர்னியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் எத்தனால் ஆலையைப் பீகார் முதல்வர் நிதிஷ் குமார் திறந்து வைத்தார்.
- இது நாட்டின் முதல் தானிய அடிப்படையிலான எத்தனால் ஆலை ஆகும்.
- பீகாரில், 17 எத்தனால் உற்பத்தி ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- இவை ஒவ்வோர் ஆண்டும் 35 கோடி லிட்டர் எரிபொருளை உற்பத்தி செய்யும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- இந்த ஆலைகள் கரும்பு, வெல்லப்பாகு, மக்காச்சோளம் மற்றும் உடைந்த அரிசி ஆகியவற்றை எரிபொருள் உற்பத்திக்குப் பயன்படுத்துகின்றன.

## 10 ஜிகாவாட் செயல்திறன் கொண்ட சூரிய சக்தி ஆலைகளை நிறுவிய முதல் மாநிலம்

- 10 ஜிகாவாட் செயல்திறன் கொண்ட சூரிய சக்தி ஆலைகளை நிறுவிய இந்தியாவின் முதல் மாநிலமாக இராஜஸ்தான் மாறியது.
- இம்மாநிலத்தில் நிறுவப்பட்ட மொத்த மின் திறன் அளவு 32.5 ஜிகாவாட் ஆகும்.
- இதில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் 55 சதவீதமும், வெப்ப ஆற்றல் 43 சதவீதமும், மீதமுள்ள 2 சதவீதத்தில் அணுசக்தியும் அடங்கும்.

## ஜம்மு & காஷ்மீர் எல்லை நிர்ணய ஆணையம்




- ஓய்வு பெற்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையிலான ஆணையமானது, தலைமை தேர்தல் ஆணையர் சுஷீல் சந்திரா மற்றும் ஜம்மு & காஷ்மீர் மாநில தேர்தல் ஆணையர் K.K.சர்மா ஆகியோரை உத்தியோகப்பூர்வ உறுப்பினர்களாகக் கொண்டது ஆகும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புவியியல் அம்சங்கள் மற்றும் அணுகல் போன்ற பிற கருத்தாய்வுகளின் அடிப்படையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப் பட்டது.
- புதிய சட்டமன்றமானது காஷ்மீரில் 47 இடங்களையும், ஜம்முவில் 43 இடங்களையும் கொண்டு 90 இடங்களைக் கொண்டிருக்கும்.
- கூடுதலாக ஜம்முவில் ஆறு இடங்களும் காஷ்மீரில் ஒரு இடமும் சேர்க்கப்பட்டு முன்பு 83 ஆக இருந்த எண்ணிக்கையானது தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.
- ஜம்மு & காஷ்மீரில் முதல் முறையாக, ஒன்பது இடங்கள் பட்டியலினப் பழங்குடி இனத்தவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- பட்டியலினப் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டில் ஆறு இடங்கள் ஜம்முப் பிராந்தியத்திற்கும், மூன்று இடங்கள் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிகளுக்கும் ஒதுக்கப் பட்டுள்ளன.
- இதில் ஏழு இடங்கள் பட்டியலினச் சாதியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
- இந்தப் பிராந்தியத்திற்கு ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன.

## பசவா ஜெயந்தி 2022

- பசவா ஜெயந்தி என்பது பசவண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள லிங்காயத்து இன மக்களால் கொண்டாடப்படும் ஒரு இந்துப் பண்டிகையாகும்.
- இந்து நாட்காட்டியின்படி, பசவண்ணாவின் பிறந்தநாளானது வைசாக மாதத்தின் 3 ஆம் நாளில் சுக்ல பட்ச்த்தில் வருகிறது.
- "வசுதேவக் குடும்பகம்" என்ற ஒரு உலகளாவியச் சகோதரத்துவத்தின் படி பண்டைய ஞானத்தைப் பகிர்ந்து கொள்வதே இந்தக் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- பசவண்ணா சாரண சமூக மேம்பாட்டில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை ஆற்றியவர் ஆவார்.
- இந்தச் சமூகமானது அக்கா மகாதேவி, அல்லம் பிரபு போன்ற சிறந்த சமூக சீர்திருத்த வாதிகளையும் கவிஞர்களையும் உருவாக்கிய ஒரு சமூகமாகும்.

## முதல் பழங்குடியினர் சுகாதாரக் கண்காணிப்பகம்

- ஒடிசா மாநிலத்தின் பழங்குடியின மக்களின் ஆரோக்கியம் குறித்த தரவுகளைக் கொண்டிருக்கும் இந்தியாவின் "ஒரே" கண்காணிப்பு மையத்தை உருவாக்க ஒடிசா அரசு திட்டமிட்டுள்ளது.
- இது அந்த மாநிலத்தில் உள்ள பழங்குடியினரின் ஆரோக்கியம் தொடர்பான நோயினால் ஏற்படும் சுமை, ஆரோக்கியத்தை நாடும் பண்பு மற்றும் சுகாதார விநியோக முறை ஆகியவற்றை முறையாகவும் தொடர்ந்தும் கண்காணிக்கும்.

## இந்தியாவின் முதல் ‘பாய்வு வேதியியல் தொழில்நுட்ப மையம்’

- இந்தியாவின் முதல் ‘பாய்வு வேதியியல் தொழில்நுட்ப மையமானது’ ஐதராபாத்தில் திறக்கப் பட்டது.
- "பாய்வு வேதியியல்" ஆனது "தொடர் ஓட்ட வேதியியல்" என்றும் அழைக்கப்படுகிறது.
- இது ஒரு குழல் அல்லது குழாயில் வேதி வினைகளை நிகழ்த்தும் செயல்முறையாகும்.
- இதில், ஒரு வேதி வினையானது தொகுதிப் பாய்வினை விட தொடர்ச்சியாக பாயும் ஓட்டத்தில் நிகழ்கிறது.

## மால்பே மிதவைப் பாலம்

- சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில், உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் மால்பே கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கர்நாடகாவின் முதல் மிதவைப் பாலமானது தொடங்கி வைக்கப்பட்டது.
- இது 100 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட ஒரு பாலமாகும்.

## ஹாதி மித்ராஸ்

- ❖ ஹாதி மித்ராக்கள் அல்லது 'யானைகளின் நண்பர்கள்' என அழைக்கப்படும் கிராம வாசிகளின் குழுவானது, உயிரிழப்புகள் மற்றும் பயிர் இழப்பைத் தடுப்பதற்காக வேண்டி யானைகளின் நடமாட்டத்தினைப் பிரத்தியேகமாக கண்காணிக்கின்றது.
- ❖ மனித-யானை மோதலுக்கான புதிய பகுதியாக சத்தீஸ்கர் உருவாகியுள்ள நிலையில் இவர்களின் இந்தச் சேவைகள் மிக முக்கியமானவை ஆகும்.
- ❖ இவர்கள் யானைகளின் நடமாட்டத்தினைப் பற்றி மக்களை எச்சரிக்கச் செய்து, இந்த நோக்கத்திற்காக வேண்டி உருவாக்கப்பட்ட வாட்ஸ்அப் குழுவில் தகவல்களை அனுப்பச் செய்கின்றனர்.

## டெல்லி தொழில் தொடக்க நிறுவனங்கள் கொள்கை




- ❖ டெல்லி முதல்வர் சமீபத்தில், 'டெல்லி தொழில்தொடக்க நிறுவனங்கள் கொள்கை' என்ற கொள்கையினை அறிமுகப்படுத்தினார்.
- ❖ மக்கள் தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கு ஏதுவான ஒரு சூழல் அமைப்பை உருவாக்குவதன் மூலம் டெல்லியில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.
- ❖ டெல்லியை "உலகின் தொழில் தொடக்கங்களின் மையமாக" மாற்றுவதே அரசின் ஒரு நோக்கமாகும்.

## நேரடி நெல் விதைப்பு முறைக்கு ஊக்கத் தொகை

- பஞ்சாப் அரசானது, நேரடி நெல் விதைப்பு முறையைத் தேர்ந்தெடுக்கும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்க உள்ளதாக சமீபத்தில் அறிவித்தது.
- நேரடி நெல் விதைப்பு முறையில், நாற்றுகளை இடம் மாற்றி நடவு செய்யும் முறைக்குப் பதிலாக, விதைகள் நேரடியாக வயலில் விதைக்கப்படுகின்றன.
- விதைகளை மண்ணில் விதைக்க டிராக்டரின் உதவியுடன் இயங்கும் இயந்திரம் பயன் படுத்தப் படுகிறது.
- நாற்றங்கால் விதைப்பதற்கு நிலத்தினைத் தயார்படுத்த வேண்டியதன் அவசியம் இந்த முறையில் இல்லை.
- நேரடி நெல் விதைப்பு முறையானது 15% முதல் 20% வரை தண்ணீரை சேமிக்க உதவும்.

## தக்காளி காய்ச்சல்

- கேரளாவின் கொல்லம் நகரில், தற்போது 82 பேருக்கு தக்காளி காய்ச்சல் ஏற்பட்டு உள்ளது.
- தக்காளி புளு காய்ச்சல் என்றும் அழைக்கப்படும் இந்த நோய் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கும் ஓர் அரிய வகை வைரஸ் தொற்றாகும்.
- தக்காளி காய்ச்சலின் முக்கிய அறிகுறிகளாவன சொறி, தோல் எரிச்சல் மற்றும் நீரிழப்பு ஆகியவை ஆகும்.
- தக்காளிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, கிட்டத்தட்ட தக்காளி அளவு உள்ள சிவப்பு நிறத் தடிப்புகள் தோன்றுவதுடன் நாக்கில் நீரிழப்பு போன்ற சில அறிகுறிகளும் தென்படும்.



## ஷைலி செயலி

- கேரள அரசானது, ‘ஷைலி’ எனப்படும் ஒரு ஆண்ட்ராய்டு செயலியை அறிமுகப்படுத்த உள்ளது.
- இது கேரள மாநில மக்களிடையே நிலவும் வாழ்க்கைமுறை சார்ந்த நோய்களைக் கண்டறிந்து அதனைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- நவ கேரள கர்மா என்ற திட்டத்தின் கீழ் சுகாதாரத் துறையினால் தொடங்கப்பட்ட மக்கள் தொகை அடிப்படையிலான பரிசோதனைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த செயலி அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

## முதல் 'புகை இல்லாத மாநிலம்'

- இமாச்சலப் பிரதேசம் மாநிலமானது, அனைவருக்கும் LPG இணைப்பினை வழங்கிய முதல் மாநிலமாகவும், புகை இல்லாத முதல் மாநிலமாகவும் ஆனது.
- மத்திய அரசின் உஜ்வாலா திட்டம் மற்றும் கிரஹினி சுவிதா யோஜனா ஆகியவற்றின் காரணமாக இந்தச் சாதனை எட்டப்பட்டது.
- மாநிலத்தினைப் புகை இல்லா மாநிலமாக மாற்றுவதற்காக உஜ்வாலா திட்டம் மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- கிராமப்புறப் பெண்களுக்கு உதவும் வகையில் கிரஹினி சுவிதா திட்டம் அறிமுகப் படுத்தப் பட்டது.

## அசானி மற்றும் கரீம் சூறாவளி

- புவியின் வடக்கு அரைக்கோளத்தில் ஒன்றும், தெற்கு அரைக்கோளத்தில் ஒன்றுமாக இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஒரு இணைப் புயல்கள் உருவாயின.
- இவற்றிற்கு முறையே அசானி மற்றும் கரீம் சூறாவளி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இவை ஒரே தீர்க்கரேகையில் தோன்றி தற்போது ஒன்றுக்கொன்று விலகிச் செல்லும் இரட்டைப் புயல்களாகும்.
- 'அசானி' இடஞ்சுழி திசையிலும், அதன் இரட்டையான 'கரீம்' பூமத்திய ரேகைக்கு தெற்கே வலஞ்சுழி திசையிலும் சுழல்கின்றன.
- அசானி என்ற பெயர் இலங்கையாலும், 'கரீம்' என்ற பெயர் தென்னாப்பிரிக்க நாடான செசல்ஸ் நாட்டினாலும் வழங்கப்பட்ட பெயர்களாகும்.

## புத்தவனம் திட்டம்

- புத்தவனம் என்பது நல்கொண்டா மாவட்டத்தில் உள்ள நாகார்ஜுனசாகர் என்ற இடத்தில் தெலுங்கானா மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு புத்தப் பாரம்பரியக் கருத்துருப் பூங்கா ஆகும்.
- இது 274 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரியப் புத்தச் சுற்றுலா மையமாகும்.
- இந்தப் பூங்கா 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் அமல்

- சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகேல், அம்மாநில அரசின் ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளதாக அறிவித்தார்.
- மாதாந்திரச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளாட்சிப் பகுதி மேம்பாட்டுத் தொகையை நான்கு மடங்காக உயர்த்துவதாகவும் அவர் அறிவித்தார்.
- இருப்பினும், இது இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் மற்றும் இந்தியக் காவல்பணி அதிகாரிகள் போன்ற அகில இந்தியப் பணியாளர்களுக்கு பொருந்தாது.

## உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சேமிப்பு நிலையம்

- ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, உலகின் மிகப்பெரிய 5,230 மெகா வாட் திறன் கொண்ட ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திச் சேமிப்பு நிலையத்திற்கு (IRESP) அடிக்கல் நாட்டினார்.
- பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் உலகின் முதல் நிலையம் இதுவாகும்.
- மேலும், ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு நிலையம் என்பது காற்று மற்றும் சூரிய ஆற்றல்களைக் கொண்ட இது போன்ற முதல் வகையான ஒற்றை இடத்தில் அமைந்த ஆற்றல் சேமிப்புத் திட்டங்களில் முதன்மையானதாகும்.

## லோக் மிலினி திட்டம்

- பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் லோக் மிலினி என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதற்கான இது போன்ற முதல்-வகையான திட்டமாகும்.
- இந்த மக்கள் தொடர்புத் திட்டமானது, அம்மாநில மக்களிடம் உள்ள புகார்களைத் தீர்ப்பதற்கு ஓர் ஒற்றைச் சாளரத் தளத்தை வழங்கும் நோக்கத்துடன் தொடங்கப் பட்டது.

## அரசுக்கு சொந்தமான இணையதள ஒளிபரப்புச் சேவை வழங்கும் தளம்

- கேரள அரசானது, நவம்பர் 01 ஆம் தேதியன்று அரசுக்கு சொந்தமான இணையதள ஒளிபரப்புச் சேவை வழங்கும் (OTT) தளத்தை தொடங்க உள்ளது.
- இது திரைப்படப் பிரியர்களுக்கு அவர்கள் விரும்பும் திரைப்படங்கள், குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்களின் தொடர்களை வழங்கும்.
- இந்தியாவில் அரசுக்குச் சொந்தமான இணையதள ஒளிபரப்புச் சேவை வழங்கும் தளத்தைக் கொண்ட முதல் மாநிலமாக கேரளா மாற உள்ளது.
- இந்தத் தளத்திற்கு CSPACE எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## நேரடி நெல் விதைப்புக்கு ஊக்கம்

- நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.1,500 ஊக்கத் தொகை வழங்க பஞ்சாப் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தும் மற்றும் மிகவும் செலவு குறைந்த நேரடி நெல் விதைப்பு நுட்பத்தை உபயோகிக்கும் விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது,
- இது நீர்ப்பாசனத்திற்கு கணிசமாக குறைந்த அளவுத் தண்ணீரைப் பயன்படுத்துகிறது, ஊடுருவலை அதிகரிக்கிறது, பண்ணை தொழிலாளர்களின் பங்களிப்பினை சார்ந்து இருப்பதை குறைக்கிறது
- மேலும் இது மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்தச் செய்வதோடு, நெல் மற்றும் கோதுமை ஆகியவற்றின் விளைச்சலை 5 முதல் 10% வரை அதிகரிக்கிறது.

## சுகாதாரச் சேவையில் ஆளில்லா விமானங்களின் பயன்பாடு

- அமெரிக்காவில் உள்ள ராட்க்லிஃப் லைஃப்டெக் நிறுவனத்தின் பிரிவான ராட்க்லிஃப் ஆய்வகங்கள், நாட்டின் சுகாதாரத் துறையில் தனது முதல் வணிக ரீதியான ஆளில்லா விமானங்களின் பயன்பாட்டினைக் கொண்டு வந்துள்ளது.
- இந்த நிறுவனமானது, சமீபத்தில் உத்தரகாசி மற்றும் டேராடூன் ஆகிய பகுதிகளின் இடையே தனது வணிக ஆளில்லா விமான வழித் தடத்தினைத் திறந்துள்ளது.
- இதன் மூலம், சுகாதார நலப் பாதுகாப்பில் ஆளில்லா விமானங்களை அறிமுகப் படுத்திய முதல் இந்திய மாநிலமாக உத்தரகாண்ட் மாறியுள்ளது.

## 4வது ஷிருய் லில்லி திருவிழா

- மணிப்பூர் மாநிலத்தில், மாநில அளவிலான 4வது ஷிருய் லில்லி திருவிழா (2022) தொடங்கியது.
- இந்த ஆண்டு இத்திருவிழாவானது, மணிப்பூர் அரசின் சுற்றுலாத் துறையால் நடத்தப் படுகிறது.
- இந்த நான்கு நாட்கள் அளவிலான இத்திருவிழாவானது சிருய் லில்லி மலரைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மணிப்பூரின் மாநில மலரும் ஆகும்.

## காட்டுப்பன்றிகளை வேட்டையாடுதல்




- வேளாண் பயிர்களுக்கு அல்லது மனித உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் காட்டுப் பன்றிகளை அழிப்பதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கேரள அரசு அதிகாரம் அளித்துள்ளது.
- சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் செயலாளர்கள் இதற்கான பிரதிநிதித்துவ அதிகாரிகளாக செயல்படுவார்கள்.
- 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டமானது, அதன் அட்டவணை I, II, III மற்றும் IV ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு காட்டு விலங்குகளையும் வேட்டையாடுவதைத் தடை செய்கிறது.
- இந்த அட்டவணையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள வனவிலங்குகளை மாநிலத்தின் தலைமை வனவிலங்குக் காப்பாளரிடம் அனுமதி பெற்ற பின்னரே வேட்டையாடச் செய்யலாம்/கொல்லலாம்.

- 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் 62வது பிரிவின் கீழ், மாநிலங்கள் அவற்றைக் குறிப்பிட்டு வேட்டையாடுவது என்று அறிவிக்க வேண்டிய வகையில், வன விலங்குகளின் பட்டியலை மத்திய அரசிற்கு அனுப்பலாம்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பத்ம பூஷன் விருது பெற்ற வினோத் ராய் எழுதிய புத்தகம்

- பத்ம பூஷன் விருது பெற்ற வினோத் ராய் "Not Just A Nightwatchman: My Innings in the BCCI" என்ற தலைப்பில் ஒரு புதியப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இவர் இந்தியாவின் முன்னாள் (11வது) தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ஆவார்.
- உச்ச நீதிமன்றம் நியமித்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகிகள் குழுவில் தான் ஆற்றிய 33 மாத காலப் பணி அனுபவங்களை இந்தப் புத்தகத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.
- இந்தப் புத்தகத்தை ரூபா பப்ளிகேஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- குடிமைப் பணிக்காக அவருக்கு 2016 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் இவர் வங்கிகள் வாரியப் பணியகத்தின் முதல் தலைவராக நியமிக்கப் பட்டார்.

## இந்திய ஹஜ் குழு – தலைவர்

- இந்திய ஹஜ் குழுவின் தலைவராக ஏ.பி.அப்துல்லா குட்டி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- மேலும் முதன்முறையாக இந்த குழுவின் துணைத் தலைவர்களாக இரு பெண்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- இவர்கள் முன்னாவாரி பேகம் மற்றும் மஃபுஜா காதுன் ஆகியோர் ஆவர்.
- இந்தியாவில் ஹஜ் யாத்திரையை நடத்துவதற்கான ஒரு முதன்மையான அமைச்சகம் சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சகமாகும்.
- இந்திய யாத்திரையாளர்களுக்கான ஹஜ் யாத்திரையானது இந்திய ஹஜ் குழு (HCoI) மூலமாகவோ அல்லது அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் குழு அமைப்பாளர்கள் மூலமாகவோ (HGOs) மேற்கொள்ளப்படுகிறது.

## இந்திய மருந்து மற்றும் இந்திய மருத்துவச் சாதனங்கள் விருதுகள் 2022

- இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் பக்வந்த் குபா இந்திய மருந்து விருதுகள் 2022 மற்றும் இந்திய மருத்துவச் சாதன விருதுகள் 2022 ஆகியவற்றை வழங்கினார்.
- மருத்துவம் மற்றும் மருந்துச் சாதனங்கள் துறையில், பல்வேறு துறை சார்ந்தவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| Winner of the award Indian Pharma Leader of the Year | This award was given to Cipla Ltd. |
| Winner of the award for the category India Pharma Innovation of the Year | This award was bestowed upon Glenmark Pharmaceuticals Ltd. |
| Winner of the award Indian Pharma (Formulation) | The winner of this award is Micro Labs Ltd. |
| Winner of the award Indian Pharma CSR of the year | Zydus Lifesciences Ltd received this award for its works in the field of rural healthcare. In this category, the runner-up is Glenmark Pharmaceuticals while Lupin Ltd took third place. |
| Winner of the award for the category of India Medical Device Leader of the Year | This award was conferred upon Poly Medicure Ltd. The runner-up in this category was Healthium Medtech Ltd and Transasia Bio-Medicals Ltd took third place. |
| Winner of the award India Medical Device Company of the Year | This award was conferred to Chennai-based Trivitron Healthcare Pvt Ltd. In the second place was Nice Neotech Medical Systems Pvt Ltd and Kanak Latex Industries Pvt Ltd. was placed third. |
| Winner of the award India Medical Device MSME of the Year | This award was conferred upon Nice Neotech Medical Systems Pvt Ltd. Premium Healthcare Disposables Pvt Ltd came second in this category and AVI Healthcare Pvt Ltd came third. |
| Winner of the award Indian Medical Device Start-up of the Year | This award was bestowed upon Vanguard Diagnostics Pvt Ltd, which manufactures high-quality in-vitro diagnostics products and reagents. |
| Winner of the award Indian Medical Device Innovation of the Year | This award was handed out to Vapi-based Meril Lifesciences Pvt Ltd. |

## ஃபோர்ப்ஸ் கோடீஸ்வரர்கள் பட்டியல் 2022

- உலகம் முழுவதும் உள்ள கோடீஸ்வரர்களைப் பட்டியலிடும் வருடாந்திர 36வது தர வரிசையைப் போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க் முதலிடம் பெற்றுள்ளார்.
- எலான் மஸ்க் முதல் முறையாக இப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானி 10வது இடத்தைப் பெற்று உள்ளார்.

- இந்தப் பட்டியலின் முதல் 10 இடங்களில் இடம் பெற்றுள்ள ஒரே இந்தியர் முகேஷ் அம்பானி மட்டுமே ஆவார்.




## விட்லி தங்க விருது

- ஒரு பனிச்சிறுத்தை நிபுணரும் வனவிலங்கு வளங்காப்பாளருமான சாருதத் மிஸ்ரா மதிப்பு மிக்க விட்லி தங்க விருதினை வென்றுள்ளார்.
- இது பசுமை ஆஸ்கார் விருது என அழைக்கப் படுகின்றது.
- இது ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த விட்லி இயற்கைக்கான நிதியம் என்ற ஒரு அமைப்பால் வழங்கப் படுகின்றது,
- ஆசியாவின் உயரிய மலைச்சூழல் அமைவுகளில் வாழும் பெரிய பூனை இனங்களைச் சேர்ந்த இந்த விலங்கினைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டல் நடவடிக்கைகளில் பழங்குடி சமூகங்களை ஈடுபடுத்துவதில் அவர் ஆற்றிய ஒரு பங்களிப்பை அங்கீகரித்து இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இது இவரது இரண்டாவது விட்லி இயற்கை நிதியத்தின் விருது ஆகும்.
- இவர் 2005 ஆம் ஆண்டில் முதல் விருதைப் பெற்றார்.

## சிறந்த உள்கட்டமைப்புத் திட்ட விருது

- எல்லைச் சாலைகள் அமைப்பினால் கட்டமைக்கப்பட்ட அடல் சுரங்கப் பாதையானது, இந்தியக் கட்டிட மாநாட்டு அமைப்பின் 'சிறந்த உள்கட்டமைப்புத் திட்டம்' விருதினைப் பெற்றது.
- இது இமாச்சலப் பிரதேசத்தின் ரோஹ்தாங் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 03 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## பெரு நாட்டின் உயரிய இராஜதந்திர விருது

- மும்பையில் உள்ள பெருவின் முன்னாள் கௌரவத் தூதர் அர்தேஷிர் P.K. துபாஷ் "பெரு ஜோஸ் கிரிகோரியோ பாஸ் சோல்டனின் இராஜதந்திரப் பணி விருது" என்ற ஒரு விருதினைப் பெற்றுள்ளார்.
- துபாஷ், 1973 ஆம் ஆண்டில் பெருவின் கௌரவத் தூதராக நியமிக்கப்பட்டார்.
- தி ஆர்டர் ஆஃப் மெரிட் விருதானது 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதற்கு பெருவின் முன்னாள் பிரதமரான ஜோஸ் கிரிகோரியோ பாஸ் சோல்டனின் நினைவாகப் பெயரிடப்பட்டது.

## தலைவர்கள், அரசியல்வாதிகள், குடிமக்கள் - புத்தகம்

- தலைவர்கள், அரசியல்வாதிகள், குடிமக்கள்: இந்திய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்திய ஐம்பது நபர்கள் என்ற ஒரு புத்தகத்தினை எழுத்தாளரும் பத்திரிக்கைத் துறையாளருமான ரஷீத் கித்வாய் எழுதியுள்ளார்.
- இது இந்திய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்திய 50 நபர்கள் பற்றியக் கதைகளைத் தொகுத்து வழங்குகிறது.
- தேஜி பச்சன், பூலான் தேவி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ஜெயலலிதா, APJ அப்துல் கலாம் மற்றும் கருணாநிதி உள்ளிட்ட 50 நபர்களின் கதைகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன

## ENBA விருது 2021

- தூர்தர்ஷன், செல்லப்பிராணிப் பராமரிப்பு குறித்த தனது ‘பெஸ்ட் ஃபிரண்ட் ஃபாரெவர்’ என்ற தொலைக்காட்சித் தொடருக்காக, 2021 ஆம் ஆண்டின் சிறந்த தூய இந்தித் தொடருக்கான ENBA விருதினை வென்றுள்ளது.
- இது 14வது எக்ஸ்ஜேஞ்4மீடியா செய்தி ஒளிபரப்பு விருது வழங்கும் விழாவில் வழங்கப் பட்டது.

## உலக உணவுப் பரிசு 2022

- பருவநிலை மற்றும் உணவு முறை ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பினைப் புரிந்து கொள்வதற்கும், எதிர்காலத்தில் இந்த இரண்டும் எப்படியெல்லாம் மாறும் என்பதைப் பற்றிக் கணிப்பதற்காகவும் ரோசன்ஸ்வீக் என்பவர் மேற்கொண்ட தனது ஆராய்ச்சிக்காக அவர் இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2021 ஆம் ஆண்டில் முன்னணி ஊட்டச்சத்து நிபுணர் டாக்டர் சகுந்தலா ஹரக்சிங் தில்ஸ்டெட் இந்தப் பரிசினை வென்ற நிலையில் 2020 ஆம் ஆண்டில் இந்திய -அமெரிக்க மண் அறிவியலாளரான டாக்டர் ரத்தன் லால் இந்தப் பரிசினை வென்றார்.
- உலக உணவுப் பரிசு என்பது உலகில் உணவின் தரம், அளவு அல்லது கிடைக்கும் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் மனித மேம்பாட்டினை மேம்படுத்தியத் தனிநபர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் முதன்மையான ஒரு சர்வதேச கௌரவ விருதாகும்.

- ஒவ்வோர் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் ஐ.நா. உலக உணவுத் தினத்தன்று (அக்டோபர் 16) இந்தப் பரிசானது வழங்கப்படுகிறது.
- இது 1986 ஆம் ஆண்டில் நோபல் அமைதிப் பரிசு பெற்ற நார்மன் போர்லாக் என்பவரால் தோற்றுவிக்கப் பட்டது.
- இது உணவு மற்றும் விவசாயத் துறையால் உயர்ந்த விருதுகள் அல்லது நோபல் என்று ஊக்குவிக்கப் படுகின்றது.
- இது தற்போது உலக உணவுப் பரிசு அறக்கட்டளை என்ற அமைப்பால் நிர்வகிக்கப் படுகின்றது.

## ஐந்து சிகரங்களில் ஏறி சாதனைப் படைத்த முதல் இந்தியப் பெண்

- 8,000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்ட ஐந்து சிகரங்களில் ஏறி சாதனைப் படைத்த முதல் இந்தியப் பெண்மணி என்ற ஒரு பெருமையைப் பிரியங்கா மோஹிதே என்பவர் பெற்றுள்ளார்.
- அன்னபூர்ணா என்ற மலைச் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணியும் இவரே ஆவார்.
- 30 வயதான பிரியங்கா மோஹிதே 2020 ஆம் ஆண்டின் டென்சிங் நோர்கே சாகச விருதினையும் வென்றவர் ஆவார்.
- அந்த ஐந்து சிகரங்கள்:
    - அன்னபூர்ணா மலைச்சிகரம் (8,091 மீ)
    - எவரெஸ்ட் மலைச்சிகரம் (8,849 மீ)
    - லோஸ்டே மலைச்சிகரம் (8,516 மீ)
    - மகாலு மலைச்சிகரம் (8,849 மீ) மற்றும்
    - கிளிமஞ்சாரோ மலைச்சிகரம் (5,895 மீ).

## கமி ரீட்டா ஷெர்பா

- நேபாளத்தினைச் சேர்ந்த கமி ரீட்டா ஷெர்பா என்பவர் உலகின் மிக உயரமான மலைச்சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் 26வது முறையாக ஏறி ஒரு புதிய உலகச் சாதனையைப் படைத்துள்ளார்.
- இவர் தனது முந்தைய உலகச் சாதனையை முறியடித்துள்ளார்.
- 1994 ஆம் ஆண்டில் இவர் முதன்முதலாக இந்தச் சிகரத்தில் ஏறினார்.
- இவர் ஏறக்குறைய ஒவ்வோர் ஆண்டும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளார்.

## ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் உறுப்பினர் அந்தஸ்து

- பென்லோன் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி குருசுவாமி கிருஷ்ண மூர்த்தி, மிகவும் மதிப்புமிக்க 2022 ஆம் ஆண்டு ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் (குடிமைப் பிரிவு) விருதை (ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் கௌரவ உறுப்பினர் அந்தஸ்து) பெற உள்ளார்.

- குருசுவாமி கிருஷ்ணமூர்த்தி இந்தியாவின் தமிழக மாநிலத்திலுள்ள மதுரையைச் சேர்ந்தவர் ஆவார்.
- இந்தப் பிரிட்டிஷ் கௌரவ விருதுகளானது, முதலில் புத்தாண்டிலும், ராணியின் அதிகாரப்பூர்வ பிறந்த நாள் மாதமான ஜூன் மாதத்திலும் என ஆண்டிற்கு இரண்டு முறை வழங்கப்படுகிறது.
- குருசுவாமி, பென்லோன் நிறுவனத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குழுமத்தில் அடங்கிய நிறுவனக் குழுமங்களுக்குத் தலைமை வகிக்கிறார்.
- இந்த நிறுவனம் மூலம் 12 வாரங்களில் 11,700 செயற்கை சுவாசக் கருவிகள் ஐக்கியப் பேரரசுக்கு வழங்கப்பட்டன.

## ரோமெய்ன் ரோலண்ட் புத்தகப் பரிசு 2022

- ஐந்தாவது ரொமைன் ரோலண்ட் புத்தகப் பரிசானது (2022) ஒரு பிரெஞ்சு நாவலான "மெர்சாவால்ட் கான்டெர் எங்குவேட்" (மெர்சாவால்ட் விசாரணை) என்ற புத்தகத்தின் வங்காள மொழிபெயர்ப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது மொழிபெயர்ப்பாளர் திரிநஞ்சன் சக்ரவர்த்தி மற்றும் பத்ர பாரதி என்ற அச்சக நிறுவனத்தின் தலைவர் ஈஷா சாட்டர்ஜி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ரோமெய்ன் ரோலண்ட் புத்தகப் பரிசானது, ஆங்கிலம் உட்பட எந்தவொரு இந்திய மொழியிலும் மொழிபெயர்க்கப் படும் ஒரு பிரெஞ்சுப் புத்தகத்தின் சிறப்பான மொழிபெயர்ப்பிற்கு வழங்கி கௌரவிக்கப் படுகிறது.

## புலிட்சர் பரிசு 2022

- 2022 ஆம் ஆண்டுக்கான புலிட்சர் பரிசானது பத்திரிகை, புத்தகங்கள், நாடகம் மற்றும் இசை ஆகிய துறைகளில் சாதனைப் படைத்தவர்களுக்கு சமீபத்தில் வழங்கப்பட்டது.
- வெற்றியாளர்கள் பட்டியலில் செய்தித் தாள் பிரிவில் இந்தியரான அட்னன் அபிதி, சன்னா இர்ஷாத் மட்டூ, அமித் டேவ் மற்றும் ராய்ட்டர்ஸ் இதழின் மறைந்த டேனிஷ் சித்திக் ஆகியோர் உட்பட வாஷிங்டன் போஸ்ட் பத்திரிக்கையும் இடம் பெற்றது.
- இந்தியாவில் இரண்டாவது கோவிட்-19 பெருந்தொற்றின் போது நகரும் புகைப் படங்களை எடுத்ததற்காக டேனிஷ் சித்திக் இரண்டாவது முறையாக 2022 ஆம் ஆண்டில் புலிட்சர் பரிசினைப் பெற்றார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான புலிட்சர் பரிசு இவரது மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.
- இவர் 2021 ஆம் ஆண்டு ஜூலை 16 அன்று தனது 38 வயதில் காலமானார்.
- இந்த மதிப்பிற்குரியப் புகைப்படக்கலைஞர் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அந்த நாட்டைக் கைப்பற்றியது குறித்து செய்தி சேகரிக்கும் போது உயிரிழந்தார்.

## சிறப்பு வங்காள அகாடமி விருது

- மேற்கு வங்க முதல்வர், மம்தா பானர்ஜி அவர்கள் தனது "தளராத இலக்கியப் பணிக்காக" வங்காள அகாடமி விருதினைப் பெற்றார்.

- சாகித்ய அகாடமியினால் இந்த ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட இந்த விருதானது, பானர்ஜியின் "கபிதா பிதான்" என்ற புத்தகத்திற்காக அவருக்கு வழங்கப்பட்டது.
- மேற்கு வங்காளத்தின் சிறந்த எழுத்தாளர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையில் இந்தப் புத்தகம் எழுதப் பட்டுள்ளது.
- பரிசு வழங்கும் மேடையில் இருந்த போதிலும், மம்தா பானர்ஜி இந்த விருதைத் தான் ஏற்க வில்லை.
- அந்த விருதினை அவரின் சார்பாக மாநிலக் கல்வி அமைச்சர் பிரத்யா பாசு பெற்றுக் கொண்டார்.

## உலகின் மூத்த செஸ் கிராண்ட்மாஸ்டர்

- உலகின் மிக மூத்த கிராண்ட் மாஸ்டரான யூரி அவெர்பாக் தனது 100வது வயதில் காலமானார்.
- இவர் 1949 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாஸ்கோ சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றிப் பட்டத்தையும் 1952 ஆம் ஆண்டில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தையும் பெற்றார்.
- சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட கிராண்ட் மாஸ்டர் பட்டத்தினையும் இவர் பெற்றார்.

## Modi @20: Dreams Meeting Delivery - புத்தகம்

- குடியரசுத் துணைத் தலைவர் M.வெங்கையா நாயுடு அவர்கள் புதுதில்லியில் "Modi @20: Dreams Meeting Delivery" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- மோடி அவர்களின் உத்தியில் அதிகளவில் வெளிப்பட்ட வித்தியாசமான சிந்தனைச் செயல்முறை, முன்னோடித்துவம், சார்பு-செயல்பாட்டு அணுகுமுறை மற்றும் மிகச் சிறந்தப் பரிமாற்றத் தலைமைத்துவ பாணி ஆகியவற்றுடன் தொடர்புடைய பல்வேறு உண்மைகளை இப்புத்தகம் முன்வைக்கிறது.

## அரசத் தங்கப் பதக்கம் 2022

- 94 வயதான, புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் பால்கிருஷ்ணா விட்டல்தாஸ் தோஷிக்கு, 2022 ஆம் ஆண்டின் மதிப்புமிக்க ராயல் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- கட்டிடக்கலைத் துறைக்கான உலகில் மிக உயரிய கௌரவமாக இது கருதப்படுகிறது.
- கட்டிடக்கலை துறையில் ஒரு குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு நபரின் வாழ்நாள் அளவிலான சிறப்பானப் பணியை அங்கீகரித்து கௌரவிப்பதற்காக இந்த விருது வழங்கப் படுகிறது.
- 2018 ஆம் ஆண்டில், பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- இந்திய அரசானது, 2020 ஆம் ஆண்டில் இவருக்கு பத்ம பூஷன் விருது வழங்கியது.

## டெம்பிள்டன் பரிசு

- அமெரிக்கக் கோட்பாட்டு இயற்பியலாளரும் எழுத்தாளருமான டாக்டர் ஃபிராங்க் வில்செக் என்பவருக்கு 2022 ஆம் ஆண்டிற்கான டெம்பிள்டன் பரிசு வழங்கப்பட்டது.
- இது உலகின் மிகப்பெரிய தனிநபர் வாழ்நாள் சாதனையாளர் விருதாகும்.
- இவர் ஏற்கனவே 2004 ஆம் ஆண்டில் நோபல் பரிசினை (இயற்பியல்) வென்றுள்ளார்.
- 1972 ஆம் ஆண்டில், தொடங்கப்பட்டதில் இருந்து டெம்பிள்டன் பரிசினைப் பெற்ற 6வது நோபல் பரிசு பெற்ற நபர் இவர் ஆவார்.

## உலகின் சிறந்த செவிலியர்

- அன்னா கபாலே துபா முதலாவது ஆஸ்டர் கார்டியன் உலகளாவிய சிறந்த செவிலியர் விருதை வென்றார்.
- இவர் மார்சபிட் கவுண்டி ரெஃபரல் என்ற மருத்துவமனையில் பணி புரியும் கென்ய நாட்டினைச் சேர்ந்த ஒரு செவிலியர் ஆவார்.
- இது இவரின் கல்வியை அங்கீகரிப்பதற்கும், பெண் பிறப்புறுப்புச் சிதைவு போன்ற பழங்காலக் கலாச்சார நடைமுறைகளுக்கு எதிராக இவர் மேற்கொண்ட பிரச்சாரம் ஆகியவற்றிற்குமான ஒரு அங்கீகாரமாகும்.

## புனிதராக அறிவிக்கப்பட்ட முதல் இந்தியப் பாமரர்

- தேவ சகாயம், புனிதராக அறிவிக்கப்பட்ட முதல் இந்தியப் பாமரர் ஆனார்.
- இவர் 1745 ஆம் ஆண்டில் கிறித்தவ மதத்தைத் தழுவிய பிறகு "லாசரஸ்" என்ற ஒரு பெயரைப் பெற்றார்.
- போதனை செய்யும் போது, அனைத்து மக்களும் சமத்துவத்தைப் பேண வேண்டும், குறிப்பாக சாதி வேறுபாடுகள் இருந்தாலும், என அவர் வலியுறுத்தினார்.
- இது உயர் வகுப்பினரிடையே வெறுப்பைத் தூண்டியது.
- இதனால் இவர் 1749 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார்.
- அதிகளவு துன்பங்களை எதிர்கொண்ட இவர், 1752 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று சுட்டு கொல்லப் பட்டார்.
- தேவ சகாயம் 2014 ஆம் ஆண்டில் போப் பிரான்சிஸ் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டார்.
- இது இவர் 2022 ஆம் ஆண்டில் புனிதர் பட்டத்தினைப் பெறுவதற்கான பாதைக்கு வழி வகுத்தது.
- தேவ சகாயத்துடன் சேர்த்து நான்குப் பெண்கள் உட்பட ஒன்பது பேர் புனிதர்களாக அறிவிக்கப் பட்டனர்.

## பில்போர்டு இசை விருதுகள் 2022

- சிறந்த இரட்டையர்/குழு, சிறந்தப் பாடல் விற்பனை கலைஞர் மற்றும் அதிகம் விற்பனையாகும் பாடல் உள்ளிட்ட மூன்று பிரிவுகளில் BTS குழு இசை விருதுகளை வென்றது.

- இக்குழுவானது 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டிலும் சிறந்த இரட்டையர்/குழு விருதை வென்றது.
- BTS குழு தற்போது 12 பில்போர்டு இசை விருதுகளைப் பெற்றுள்ளது.
- மேலும், 11 பில்போர்டு இசை விருதுகளை வென்ற டெஸ்டினிஸ் சைல்டின் பல சாதனைகளை இக்குழு முறியடித்துள்ளது.

## வங்காரி மாத்தாய் வன சாம்பியன் விருது

- கேமரூன் ஆர்வலர், சிசெல்லே ஜபேத் 2022 ஆம் ஆண்டின் வங்காரி மாத்தாய் வன சாம்பியன் விருதை வென்றுள்ளார்.
- காடுகளைப் பாதுகாப்பதிலும், அவற்றைச் சார்ந்துள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் இவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்கான அங்கீகாரமாக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- காடுகள் மீதான கூட்டாண்மை அமைப்பினால் (CPF) இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) தலைமையின் கீழ் உள்ளது.

## வாழ்நாள் சாதனையாளர் விருது

- A.R. வெங்கடாசலபதி, கனடாவைச் சேர்ந்த தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் விருதிற்கு (இயல் விருது) தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இவர் சென்னை மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தில் (MIDS) வரலாற்றாசிரியர் மற்றும் பேராசிரியராக உள்ளார்.
- தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தை வெளி நாடுகளில் உள்ள மக்களிடம் கொண்டு செல்வதில் இவர் பெரும் பங்கு வகித்தவர் ஆவார்.
- கடந்த 40 ஆண்டுகளாக வரலாறு, மொழி, கலாச்சாரம், சமூகம் மற்றும் அரசியல் குறித்து எழுதி வரும் இவர், 60க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- நீதியரசர் சந்துருவும் 'நான் நீதிபதியானேன்' என்ற புத்தகத்திற்காக இயல் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்

## கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர்

- பிரமல் குழுமத்தின் தலைவர் அஜய் பிரமால் இங்கிலாந்து அரசியின் பெயரில் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி பிரிட்டிஷ் எம்பயர் (CBE) என்ற ஒரு கௌரவ விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்தியா இணைத் தலைவராக விளங்கும் ஐக்கிய இராஜ்ஜியம்-இந்தியா தலைமை நிர்வாக அதிகாரிகள் மன்றத்திற்கும் இங்கிலாந்து-இந்தியா வர்த்தக உறவுகளுக்கும் இவர் ஆற்றியச் சேவைகளுக்கான இந்த விருதைப் பெற்றார்.
- இவ்விருதானது 1917 ஆம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் நிறுவப்பட்டது.

## வில்லியம் E. கோல்பி விருது 2022

- எழுத்தாளரும் பத்திரிகையாளருமான வெஸ்லி மோர்கன், தனது இராணுவ மற்றும் உளவுத் துறை பற்றியப் படைப்பிற்காக 2022 ஆம் ஆண்டு வில்லியம் E. கோல்பி விருதினை வென்றுள்ளார்.
- "The Hardest Place: The American Military Adrift in Afghanistans Pech Valley" என்ற இவரது புத்தகத்திற்காக இவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- வெர்மான்ட்டின் நார்த்ஃபீல்டு நகரில் உள்ள நார்விச் பல்கலைக் கழகத்தினால் கோல்பி விருதானது வழங்கப்படுகிறது.
- கோல்பி விருதானது 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## அமேசான் சம்பவ் தொழில்முனைவோர் சவால் 2022

- சுபாஷ் ஓலா, 2022 ஆம் ஆண்டின் அமேசான் சம்பவ் தொழில்முனைவோர் சவாலின் முதல் பரிசை வென்றுள்ளார்.
- அவரது நிறுவனமான "ஜீனியஸ்எனர்ஜி கிரிட்டிகல் இன்னோவேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனமானது இந்த ஆண்டின் புத்தாக்க நிறுவனத்திற்கான விருதை வென்றுள்ளது.
- இந்த நிறுவனம் பல்வேறு தொழில்துறைகளின் ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவற்றின் வணிகத்திற்கு உதவி வழங்கி, அதன் செலவைக் குறைக்க உதவுவதோடு, சுற்றுச்சூழலையும் பாதுகாக்கிறது.

## உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர்

- உலக சுகாதார அமைப்பானது, டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸஸை உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநராக இரண்டாவது முறையாக மீண்டும் நியமித்துள்ளது.
- சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற 75வது உலக சுகாதார அமைப்பின் போது அவரது மறுநியமனம் குறித்து உறுதி செய்யப்பட்டது.
- இவர் தான் இப்பதவிக்குத் தேர்வு செய்யப்பட்ட ஒரே வேட்பாளர் ஆவார்.
- டாக்டர் டெட்ரோஸ் முதன்முதலில் 2017 ஆம் ஆண்டில் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- உலக சுகாதார அமைப்பில் சேருவதற்கு முன்பு, இவர் எத்தியோப்பியாவில் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், சுகாதார அமைச்சராகவும் பணியாற்றினார்.

## CII EXCON உறுதியான தலைவர் விருது


- கம்மின்ஸ் இந்தியா நிறுவனத்தின் அஞ்சலி பாண்டேவுக்கு 2022 ஆம் ஆண்டு CII EXCON விருது விழாவில் உறுதியான தலைவர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- மிகவும் மாறுபட்ட, சமமான மற்றும் உள்ளார்ந்த பணியிடத்தை உருவாக்குவதற்கான அவரது முன்னெடுப்புகளை இந்த விருதானது அங்கீகரிக்கிறது.

## எவரெஸ்ட் தாழ்மட்ட முகாமை அடைந்த ரிதம் மாமேனியா

- 10 வயது சிறுமியான ரிதம் மாமேனியா, எவரெஸ்ட் தாழ்மட்ட முகாமை (EBC) அடைந்த இளம் இந்திய மலையேறும் வீரர்களில் ஒருவராக ஆனார்.
- இவர் தாழ்மட்ட முகாமில் ஏறுவதற்காக இளம் இந்திய மலை ஏறும் வீரர்கள் குழுவுடன் இணைந்துள்ளார்.
- 11 நாட்களில் 5,364 மீட்டர் உயரத்தில் உள்ள தாழ்மட்ட முகாமிற்கு ஏறிச் சென்று ரிதம் ஒரு அரிய சாதனையைப் படைத்துள்ளார்.

## ராம் மோகன் ராய் அவர்களின் 250வது பிறந்தநாள்

- ராஜா ராம் மோகன் ராய் அவர்களின் 250வது பிறந்தநாளானது இந்த ஆண்டு மே 22 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- இவர் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என்று பிரபலமாக நினைவு கூறப் படுகிறார்.
- இவர் 1772 ஆம் ஆண்டில் 22 மே மாதத்தில் ராதாநகர் என்னுமிடத்தில் (வங்காள மாகாணம்) பிறந்தார்.
- இவர் இங்கிலாந்தில் இரண்டாம் அக்பரின் சார்பாக முன்னின்று, அவரது ஓய்வூதியக் கோரிக்கைக்காக வாதிட்டார்.
- இரண்டாம் அக்பர் இவருக்கு 'ராஜா' என்ற பட்டத்தை வழங்கினார்.




- இவர் சதி என்னும் நடைமுறைக்கு எதிராகப் போராடியதால் 1829 ஆம் ஆண்டு சதி ஒழிப்புச் சட்டமானது நடைமுறைக்கு வந்தது.
- இவர் சிலை வழிபாடு, அர்த்தமற்றச் சடங்குகள் மற்றும் மூட நம்பிக்கைகளுக்கு எதிரான அறப் போராட்டத்திற்காக வேண்டி 1814 ஆம் ஆண்டில் ஆத்மிய சபையைத் தொடங்கினார்.
- 1817 ஆம் ஆண்டில் டேவிட் ஹேர் என்பவருடன் இணைந்து கல்கத்தாவில் ஓர் இந்துக் கல்லூரியை நிறுவினார்.

- 1821 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வில்லியம் ஆடம் மற்றும் ராம்மோகன் ராய் ஆகியோரால் இணைந்து கல்கத்தா ஒற்றுமைக் குழு நிறுவப் பட்டது.
- இவர் 1828 ஆம் ஆண்டில் 'பிரம்ம சபையை' உருவாக்கினார் (தேபேந்திரநாத் தாகூருடன் இணைந்து அமைக்கப்பட்டது).
- இவர் 1822 ஆம் ஆண்டில் இயந்திரவியல் மற்றும் வால்டேரின் தத்துவங்களைக் கற்பித்த ஆங்கிலேய-இந்துப் பள்ளியை நிறுவினார்.
- இவர் 1825 ஆம் ஆண்டில், இந்திய முறையிலான கற்றல், மேற்கத்தியச் சமூகம் மற்றும் இயற்பியல் அறிவியல் கற்பிக்கப்பட்ட வேதாந்தக் கல்லூரியைத் தொடங்கினார்.

## சங்கீத கலாநிதி விருதுகள் 2020-22

- மதராஸ் சங்கீத அகாடமி இந்த விருதுகளை அறிவித்தது.
- சந்தான கோபாலன் 2020 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலாநிதி விருதைப் பெற உள்ளார்.
- பக்தவத்சலம் 2021 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலாநிதி விருதிற்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- கிருஷ்ணன் மற்றும் அவரது சகோதரி விஜயலட்சுமி ஆகியோர் 2022 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலாநிதி விருதைப் பெற உள்ளனர்.
- 2020 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலா ஆச்சார்யா விருதிற்கு நாதஸ்வர கலைஞர் கீழ் வேளூர் G.கணேசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2021 ஆம் ஆண்டிற்கான விருதிற்குப் பாடகரும் இசையமைப்பாளருமான ரீத்தா ராஜன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இசையமைப்பாளர் வைனிகா R.S.ஜெயலட்சுமி 2022 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான TTK விருது பாடகர் தாமரக்காடு கோவிந்தன் நம்பூதிரிக்கு வழங்கப் பட உள்ளது.
- மிருதங்கம் மற்றும் ஜலதரங்கம் கலைஞர் நேமணி சோமயாஜுலு 2021 ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற உள்ளார்.
- கஞ்சிரா கலைஞர் A.V.ஆனந்த் 2022 ஆம் ஆண்டிற்கான விருதைப் பெற உள்ளார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இசைக்கலைஞர் விருதானது V.பிரேமலதாவுக்கு வழங்கப்பட உள்ளது.
- நிருத்ய கலாநிதி விருது பெறுபவர்கள் ராம வைத்தியநாதன் (2020), நர்த்தகி நடராஜ் (2021) மற்றும் பிரகா பெஸ்ஸல் (2022) ஆகியோர் ஆவர்.

## 75வது கேன்ஸ் திரைப்பட விருது விழா

- இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் ஷௌனக் சென்னின் 'ஆல் தட் ப்ரீத்ஸ்' திரைப் படமானது, 75வது கேன்ஸ் திரைப்பட விருது விழாவில் ஆவணப் படங்களுக்கான உயரிய விருதான லியொல் டி ஓர் 2022 விருதை வென்றது.
- தில்லியின் வசிராபாத் அருகே ஒரு அடித்தளத்தில் காயமடைந்தப் பறவைகளை குறிப்பாக கரும் பருந்துகளை மீட்டுச் சிகிச்சை அளிக்கும் இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையைப் பற்றி இந்தப் படம் சித்தரிக்கிறது.

- சிறப்பு நடுவர் விருதானது லிதுவேனியன் திரைப்படத் தயாரிப்பாளர் மன்டாஸ் குவேடராவிசியஸின் இறுதிப் படமான மரியுபோலிஸ் 2 என்ற திரைப்படத்திற்கு வழங்கப் பட்டது.
- லியொல் டி ஓர் என்பது 2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு ஆவணத் திரைப்பட விருது ஆகும்.
- இது முதல் முறையாக 2015 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதியன்று வழங்கப்பட்டது.
- கேன்ஸ் திரைப்பட விழாவின் ஒரு பிரிவில் திரையிடப்பட்ட ஒரு சிறந்த ஆவணப் படத்திற்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

## முதல் தலித் பெண் மேயர்

- இங்கிலாந்தின் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த இந்திய வம்சாவளி அரசியல்வாதியான மொஹிந்தர் கே மிதா மேற்கு லண்டனில் உள்ள ஈலிங் சபையின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தலித் சமூகத்தைச் சேர்ந்த முதல் பெண் மேயராக லண்டன் உள்ளாட்சி சபையில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## வாஸ்விக் தொழில்துறை ஆராய்ச்சி விருது 2020

- இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையின் மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் A . கோபாலகிருஷ்ணன் 2020 ஆம் ஆண்டிற்கான வாஸ்விக் தொழில்துறை ஆராய்ச்சி விருதினை வென்றுள்ளார்.
- மீன் இனங்களின் மரபியல் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளில் அவர் ஆற்றிய குறிப்பிடத் தக்கப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இது வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அழிந்து வரும் பல உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பான மீன் இனங்களின் மரபியல் குறித்த ஒரு ஆராய்ச்சியாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## வில்வித்தை உலகக் கோப்பை முதல் நிலைப் போட்டி

- துருக்கியில் நடைபெற்ற வில்வித்தை உலகக் கோப்பை முதல் நிலைப் போட்டியில் இந்திய வீரர்கள் 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- ஆண்கள் கூட்டு அணிப் பிரிவில் அபிஷேக் வர்மா, ரஜத் சவுகான் மற்றும் அமன் சைனி ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.
- கலப்பு குழுப் போட்டியில் தருண்தீப் ராய் மற்றும் ரிதி ஆகியோர் மற்றொரு தங்கப் பதக்கத்தை வென்றனர்.

## 2022 ஆம் ஆண்டின் லாரஸ் விளையாட்டு வீரர்

- F1 சாம்பியனான மேக்ஸ் வெர்ஸ்டப்பென் 2022 ஆம் ஆண்டின் லாரஸ் விளையாட்டு வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஜமைக்கா நாட்டின் ஒலிம்பிக் ஓட்டப்பந்தய வீராங்கனை எலைன் தாம்சன்-ஹேரா ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- விருது பெற்ற மற்ற வீரர்கள்

| Category | Winner |
|---|---|
| **Breakthrough of the Year prize** | Emma Raducanu |
| **Laureus Sporting Icon Award** | Valtentino Rossi |
| **Laureus Lifetime Achievement Award** | Tom Brady |
| **Exceptional Achievement Award** | Robert Lewandowski |
| **World Team of the Year Award** | Italy Men's Football T eam |
| **World Comeback of the Year Award** | Sky Brown (Skateboa rd) |
| **Sportsperson of the Year with a Disability Award** | Marcel Hug |
| **Laureus Sport For Good Society Award** | Real Madrid |
| **Action Sportsperson of the Year** | Bethany Shriever |

## ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி

- 86 கிலோ எடைப் பிரிவில் தீபக் புனியா வெள்ளிப் பதக்கத்தையும், 92 கிலோ எடைப் பிரிவில் விக்கி சாஹர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.
- மங்கோலியாவின் உலான்பத்தரில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் தீபக் வென்ற நான்காவது பதக்கம் இதுவாகும்.
- இதற்கு முன்பு இவர் ஒரு வெள்ளி (2021) மற்றும் இரண்டு வெண்கலம் (2019, 2020) ஆகிய பதக்கங்களை வென்றுள்ளார்.
- இந்தப் போட்டியில், 17 பதக்கங்களுடன் இந்திய அணி தனது பங்கேற்பினை நிறைவு செய்தது.
- இந்தியாவின் சார்பாக தங்கப் பதக்கம் வென்ற ஒரே நபர் ரவி தாஹியா ஆவார்.

## ஏழாவது சந்தோஷ் டிராபி போட்டி

- கேரள அணியானது மேற்கு வங்காள அணியை வீழ்த்தி, 2022 ஆம் ஆண்டில் நடத்தப் பட்ட 75வது சந்தோஷ் டிராபி போட்டியில் வென்றது.
- இது இந்த அணி வென்ற ஏழாவது சந்தோஷ் டிராபி பட்டமாகும்.
- மேலும், தனது சொந்த மண்ணில் நடைபெற்ற சந்தோஷ் டிராபி போட்டியில் இந்த அணி பெற்ற மூன்றாவது வெற்றி இதுவாகும்.
- இதற்கு முன்னதாக, 1973-74 மற்றும் 1992-93 ஆம் ஆண்டுகளில் கொச்சியில் நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் இந்த அணி வெற்றி பெற்றது.

## கேலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகள் 2021




- 20 தங்கம், 7 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களுடன் ஜெயின் கல்லூரியானது, (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) 2021 ஆம் ஆண்டிற்கான 2வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில்) வென்றுள்ளது.
- லவ்லி புரொபஷனல் பல்கலைக்கழகமானது, 17 தங்கங்களுடன் இரண்டாவது இடத்தையும், பஞ்சாப் பல்கலைக்கழகம் 15 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- சிவா ஸ்ரீதர், 11 தங்கப் பதக்கங்களை வென்று நட்சத்திர நீச்சல் வீரர் என்ற ஒரு பெருமையைப் பெற்றுள்ளார்.

## IWF உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி

- IWF உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற வரலாற்றை ஹர்ஷதா ஷரத் கருட் படைத்து உள்ளார்.
- IWF உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இதற்கு முன் இரண்டு இந்தியர்கள் மட்டுமே பதக்கம் வென்றுள்ளனர்.
- மீராபாய் சானு 2013 ஆம் ஆண்டில் வெண்கலப் பதக்கத்தினையும், அதற்கு முந்தைய ஆண்டில் அச்சிந்தா ஷூலி வெள்ளிப் பதக்கத்தினையும் வென்றனர்.

## உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி 2022

- சத்தீஸ்கரின் ராஜ்நந்த்கானைச் சேர்ந்த ஞானேஸ்வரி யாதவ், உலக இளையோர் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து சென்று உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்று இளையோர் பிரிவில் பதக்கம் வென்ற முதல் வீராங்கனை இவரே ஆவார்.

## காது கேளாதோருக்கான 24வது ஒலிம்பிக் போட்டிகள்

- காது கேளாதோருக்கான 24வது ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் துப்பாக்கி சுடும் வீரர் தனுஷ் ஸ்ரீகாந்த் தங்கப் பதக்கத்தினையும், சௌர்யா சைனி வெண்கலப் பதக்கத்தினையும் வென்றுள்ளனர்.
- காது கேளாதோருக்கான 24வது ஒலிம்பிக் போட்டிகளானது பிரேசிலின் காக்சியாஸ் டோ சுல் நகரில் நடைபெற்றது.
- இந்தியப் பேட்மிண்டன் அணியும் ஜப்பான் அணியை வீழ்த்தி தங்கப் பதக்கத்தினை வென்றது
- 19 தங்கம், 6 வெள்ளி மற்றும் 13 வெண்கலப் பதக்கங்களுடன் உக்ரைன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்துடன் இந்தியா பதக்கப் பட்டியலில் எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

## மாட்ரிட் ஓபன் போட்டி 2022

- கார்லோஸ் அல்கராஸ் (ஸ்பெயின்) 2022 ஆம் ஆண்டு மாட்ரிட் ஓபன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்றார்.
- 2022 ஆம் ஆண்டு மியாமி போட்டிக்குப் பிறகு இவர் பெற்ற இரண்டாவது மாஸ்டர்ஸ் 1000 பட்டம் இதுவாகும்.
- மேலும் இந்த ஆண்டில் இவர் பெறும் நான்காவது பட்டம் இதுவாகும்.
- WTA 1000 போட்டியின் ஒற்றையர் பிரிவில் வென்ற முதல் ஆப்பிரிக்க வீராங்கனை என்ற பெருமையை ஓன்ஸ் ஜபியர் (துனிசியா) கைப்பற்றியுள்ளார்.

| Category | Winner |
|---|---|
| Men’s singles: | **Carlos Alcaraz (Spain)** |
| Women’s singles: | **Ons Jabeur (Tunisia)** |
| Men’s doubles: | **Wesley Koolhof (Netherlands) & Neal Skupski (United Kingdom)** |
| Women’s doubles: | **Gabriela Dabrowski (Canada) & Giuliana Olmos (Mexico)** |

## தாமஸ் கோப்பை இறகுப் பந்து இறுதிப் போட்டி 2022

- 2022 ஆம் ஆண்டு தாமஸ் உபெர் கோப்பை இறுதிப் போட்டியில் 14 முறை சாம்பியன் பட்டம் வென்ற இந்தோனேஷிய அணியினை வீழ்த்தி இந்திய அணி வரலாறு படைத்தது.
- இந்திய அணி தாமஸ் கோப்பை சாம்பியன் பட்டத்தினை வெல்வது இதுவே முதல் முறையாகும்.
- 1982 ஆம் ஆண்டு முதல், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த சாம்பியன்ஷிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

## ஆசிய வில்வித்தை கோப்பைப் போட்டி 2022 - 2வது கட்டம்

- ஈராக்கின் சுலைமானியா நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ஆசிய வில்வித்தை கோப்பையின் 2 ஆம் கட்டப் போட்டியில் இந்திய வில்வித்தை வீரர்கள் பங்கேற்று வெற்றிகரமாக விளையாடினர்.
- இந்திய வில்வித்தை வீரர்கள் 8 தங்கம், நான்கு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலம் என மொத்தம் 14 பதக்கங்களுடன் ஈராக்கின் சுலைமானியா நகரில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ஆசிய வில்வித்தை கோப்பையின் 2 ஆம் கட்டப் போட்டியில் தங்களது பங்கேற்பினை மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்தனர்.
- பர்னீத் கவுர், அதிதி சுவாமி மற்றும் சாக்சி சௌத்ரி ஆகியோர் கொண்ட இந்திய மகளிர் அணி ஈராக்கில் நடைபெற்ற கண்ட அளவிலானப் போட்டியில் கஜகஸ்தான் அணியை வீழ்த்தி இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.
- பிரதமேஷ் ஃபுகே, ரிஷப் யாதவ் மற்றும் ஜாவ்கர் சமாதான் அடங்கிய ஆண்கள் அணி இந்தியாவுக்கு இரண்டாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- ஆசியா வில்வித்தை கோப்பைப் போட்டியில் பிரத்மேஷ் ஃபுகே & பர்னீத் கவுர் ஆகியோர் அடங்கிய கலப்பு இணை அணி இந்தியாவிற்கான மூன்றாவது தங்கப் பதக்கத்தை வென்றது.

## ISSF இளையோர் உலகக் கோப்பைப் போட்டி

- ஜெர்மனியின் சுஹல் நகரில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டு போட்டிக் கூட்டமைப்பின் இளையோர் உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய துப்பாக்கிச் சுடும் வீரர்களான ஈஷா சிங் மற்றும் சவுரப் சவுத்ரி ஆகியோர் கலப்பு அணி துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றனர்.
- இதே போட்டியில் பாலக் மற்றும் சரப்ஜோத் சிங் ஆகியோர் கொண்ட அணியினர் வெள்ளிப் பதக்கத்தை வென்றனர்.
- 10 மீட்டர் ஏர் ரைபிள் கலப்பு குழுப் போட்டியில் ரமிதா மற்றும் பார்த் மகிஜா ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தை வென்றனர்.
- இந்திய அணி இதுவரை நான்கு தங்கம் உட்பட 10 பதக்கங்களை வென்றுள்ளது.

## அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் பட்டியல் 2022

- ஃபோர்ப்ஸ் பத்திரிகையின் அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் பட்டியலில் (2022) 130 மில்லியன் டாலர் வருமானத்துடன் லியோனல் மெஸ்ஸி முதலிடத்தில் உள்ளார்.
- அவரைத் தொடர்ந்து கூடைப்பந்தாட்ட வீரர் லெப்ரான் ஜேம்ஸ் 121.2 மில்லியன் டாலர்களுடன் இரண்டாமிடத்திலும், கிறிஸ்டியானோ ரொனால்டோ 115 மில்லியன் டாலர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.
- பரிசுத் தொகை, ஊதியம் மற்றும் ஊக்கத் தொகை மற்றும் நிதித் திரட்டுதல் தொடர்பான ஒப்பந்த விளையாட்டுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மதிப்பீடுகளை போர்ப்ஸ் கணக்கிடுகிறது.




## இத்தாலிய ஓபன் போட்டி 2022

- இத்தாலிய ஓபன் போட்டியானது, ஆடவருக்கான "ரோம் மாஸ்டர்ஸ்" என்றும் அழைக்கப் படுகிறது.
- உலகின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் என்பவரை வீழ்த்தி 79வது இத்தாலிய ஓபன் பட்டத்தினை வென்றுள்ளார்.
- ஓபன் பிரிவு போட்டிகளில் மொத்தம் 1,000 போட்டிகளில் வெற்றிகளைப் பெற்ற ஐந்தாவது வீரராக நோவக் ஜோகோவிச் ஆனார்.
- மகளிர் ஒற்றையர் பிரிவில், இகா ஸ்வியாடெக் ஒன்ஸ் ஜபியூர் என்பவரை வீழ்த்தி இத்தாலிய ஓபன் பட்டத்தை வென்றுள்ளார்.

| Category | Winner | Runner-up |
|---|---|---|
| **Men's singles** | Novak Djokovic (Serbia) | Stefanos Tsitsipas (Greece) |
| **Women's singles** | Iga Świątek (Poland) | Ons Jabeur (Tunisia) |
| **Men's doubles** | Nikola Mektić and Mate Pavić (Croatia) | John Isner (United States) & Diego Schwartzman (Argentina) |
| **Women's doubles** | Veronika Kudermetova and Anastasia Pavlyuchenkova (Russia) | Gabriela Dabrowski (Canada) & Giuliana Olmos (Mexico) |

## 36வது ரெய்காவிக் ஓபன் போட்டி 2022

- ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா தனது 16 வயதில் ஐஸ்லாந்தில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ரெய்க்ஜாவிக் ஓபன் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- உலகச் சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனைத் தோற்கடித்த இளைய வீரர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- 3 மாதங்களுக்குள் இரண்டாவது முறையாக உலகச் சாம்பியன் மேக்னஸ் கார்ல்சனை இவர் வென்றுள்ளார்.

- 2013 ஆம் ஆண்டில், பிரக்ஞானந்தா 8 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலக இளையோர் சதுரங்க சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.

## சர்வதேச தொழில்முறை குத்துச்சண்டைப் போட்டி

- வங்காள தேசத்தின் முதல் தொழில்முறை சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியானது டாக்கா நகரில் நடத்தப் பட்டது.
- இரண்டு முறை தேசிய சாம்பியன் பட்டம் பெற்ற இந்தியாவினைச் சேர்ந்த ஹர்ஷ் கில் வங்காள தேசத்தின் ஹிரா மியா என்பவரைத் தோற்கடித்து இந்தப் போட்டியில் வென்றார்.

## ஆஸ்திரேலிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் உலகச் சாதனை

- ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற ஆரியர்னே டிட்மஸ், ஆஸ்திரேலிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 400 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் நிகழ்த்தப்பட்ட முந்தைய உலகச் சாதனையை முறியடித்துள்ளார்.
- அடிலெய்டு நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் டிட்மஸ் 3 நிமிடம் 56.40 வினாடிகளில் நீந்தி வெற்றி பெற்றார்.
- 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் இவரது அமெரிக்கப் போட்டியாளரான கேட்டி லெடெக்கி நிகழ்த்திய 3:56.46 நேரம் என்ற ஒரு முந்தையச் சாதனையினை முறியடித்து உள்ளார்.

## ஐபிஎல் 2022

| Category | Winners |
|---|---|
| IPL 2022 Champions | Gujarat Titans |
| Emerging Player of the Season | Umran Malik |
| Super Striker of the Season | Dinesh Karthik |
| Game Changer of the Season | Jos Buttler |
| Perfect Catch of the Season | Evin Lewis |
| Purple Cap | Yuzvendra Chahal |
| Orange Cap | Jos Buttler |
| Most Valuable Player | Jos Buttler |
| Super Striker of the Season | Jos Buttler |
| Fairplay Award | Gujarat Titans and Rajasthan Royals |
| Runner-up trophy | Sanju Samson |
| Fastest Delivery of the Season | Lockie Ferguson |
| Let’s Crack it Sixes Award | Jos Buttler |
| Powerplay of the Season | Jos Buttler |

- அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் தொடக்கச் சாம்பியன் அணியான ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை வீழ்த்தி குஜராத் டைட்டன்ஸ் அணி 2022 ஆம் ஆண்டு ஐபிஎல் கோப்பையை வென்றது.
- 2022 ஆம் ஆண்டு ஐபிஎல் விருதுகளை வென்ற வெற்றியாளர்களின் முழு பட்டியல்

# முக்கிய தினங்கள்

## மே தினம் – மே 01

- ❖ மே தினமானது, சர்வதேச தொழிலாளர் தினம் அல்லது தொழிலாளர் தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ ஹேமார்க்கெட்டில் நிகழ்ந்த நிகழ்வுகளை நினைவு கூரும் வகையில் மே 01 ஆம் தேதி என்பது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- ❖ இந்த நிகழ்வானது, அமெரிக்காவின் சிகாகோ நகரில் 1886 ஆம் ஆண்டு மே 04 அன்று நடந்தது.
- ❖ இந்தியாவில் முதல் தொழிலாளர் தினமானது 1923 ஆம் ஆண்டில் சென்னையில் தொழிலாளர் கிசான் கட்சியினால் சிங்காரவேலரின் தலைமையில் அனுசரிக்கப் பட்டது.

## மகாராஷ்டிரா தினம் - மே 01

- ❖ இத்தினமானது, மகாராஷ்டிரா மாநிலம் உருவான நாளை நினைவு கூறுகின்றது.
- ❖ பம்பாய் மாநிலம் ஆனது 1960 ஆம் ஆண்டில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
- ❖ குஜராத்தி மற்றும் கச்சி போன்ற மொழி பேசும் மக்கள் வாழும் பகுதி குஜராத் என்ற மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- ❖ கொங்கணி மற்றும் மராத்தி ஆகிய மொழிகளைப் பேசும் மற்ற பிற பகுதிகள் மகாராஷ்டிரா மாநிலமாக உருவாக்கப்பட்டது.

## உலக சிரிப்பு தினம் - மே 01

- ❖ மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையானது உலக சிரிப்பு தினமாக கொண்டாடப் படுகிறது.
- ❖ இது 1998 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது.
- ❖ சிரிப்பு மற்றும் அதன் பல குணப்படுத்தும் நன்மைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக சூரை மீன் தினம் - மே 02

- ❖ சூரை மீன்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் இந்தத் தினமானது நிறுவப்பட்டது.
- ❖ சூரை மீன்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்பு உணர்வைப் பரப்புவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சூரை மீன்களில் ஒமேகா 3, வைட்டமின் பி12, புரதங்கள் மற்றும் பிற தாதுக்கள் போன்ற பல வளமான சத்துக்கள் நிறைந்துள்ளன.
- ❖ இந்த ஆண்டு "நமது சூரை மீன் வகை, நமது பாரம்பரியம்" என்ற கருத்துருவின் கீழ் இந்தத் தினமானது அனுசரிக்கப்பட்டது.




## உலகப் பத்திரிகைச் சுதந்திர தினம் – மே 03

- பத்திரிக்கைச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவை அடிப்படை மனித உரிமைகள் என்பதை அறிவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- பணியாற்றும் போது தங்கள் உயிரைப் பணயம் வைத்த அல்லது தங்கள் உயிரை இழந்த ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "டிஜிட்டல் முறை சூழ்ந்த உலகில் பத்திரிகையியல்" என்பதாகும்.
- யுனெஸ்கோ அமைப்பானது, 1993 ஆம் ஆண்டு மே 3 ஆம் தேதியன்று விண்ட்ஹோக் என்ற பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- அது தடையற்ற, சுதந்திரமான மற்றும் பன்மைத்துவப் பத்திரிகை அமைப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

## உலக ஆஸ்துமா தினம் – மே 03

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு இத்தினம் மே 03 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இது ஆஸ்துமாவிற்கான சிகிச்சை வசதிகளின் நிலை குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் ஆஸ்துமா சிகிச்சைக்கான சிறந்த சுகாதார வசதிகளைக் கொண்டு வருவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, 'ஆஸ்துமா சிகிச்சையில் நிலவும் இடைவெளிகளைக் குறைத்தல்' என்பதாகும்.

## நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் தினம் - மே 04

- நமது எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் ஆற்றும் பங்களிப்பினைக் கௌரவிக்கும் வகையில் இந்த தினமானது கொண்டாடப் படுகிறது.
- நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் இதுநாள்வரையில் செய்த சாதனைகள் மற்றும் தியாகங்களை இந்த தினம் போற்றுகிறது.
- முதலாவது நிலக்கரிச் சுரங்கமானது 1575 ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தின் கார்னாக் நகரைச் சேர்ந்த ஒன் ஜார்ஜ் புரூஸ் என்பவரால் திறக்கப்பட்டது.
- இந்தியாவில், நிலக்கரி சுரங்க வணிகமானது 1774 ஆம் ஆண்டில் மேற்கு வங்கத்தின் ராணிகஞ்ச் நிலக்கரி சுரங்கப்பகுதியில் தொடங்கியது.

## சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - மே 4

- பணியின் போது உயிர்நீத்தத் தீயணைப்பு வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 02 அன்று ஆஸ்திரேலியாவின் லிண்டன் நகரில் நடந்தேறிய ஒரு துயரச் சம்பவத்திற்குப் பிறகு இத்தினம் உருவாக்கப்பட்டது.
- மே 04 ஆம் தேதியானது செயிண்ட் ஃப்ளோரியன் தினமாகவும் அனுசரிக்கப்படுகிறது.
- செயிண்ட் ஃப்ளோரியன் தீயணைப்பு வீரர்களின் ஒரு புரவலர் ஆவார்.
- இவர் ஒரு ரோமானிய படைப்பிரிவின் முதல்நிலை தீயணைப்பு வீரர்களில் ஒருவராகவும் பல உயிர்களைக் காப்பாற்றியவராகவும் கூறப்படுகின்றார்

## உலகப் போர்த்துகீசிய மொழி தினம் - மே 05

- இது போர்த்துகீசிய மொழி பேசும் நாடுகளின் சமூகத்தால் 2009 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில், யுனெஸ்கோவின் பொது மாநாட்டின் 40வது அமர்வானது, ஒவ்வோர் ஆண்டும் மே 05 ஆம் தேதியை "உலகப் போர்த்துகீசிய மொழி தினமாக" அனுசரிக்க முடிவு செய்தது.
- இம்மொழி அனைத்து கண்டங்களிலும் 265 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப் படுகிறது.

## சர்வதேசப் பேறுகால உதவியாளர் தினம் - மே 05

- பேறுகால உதவியாளர்களின் பணியை அங்கீகரிப்பதற்காகவும், தாய்மார்களுக்கும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் அவர்கள் வழங்கும் அத்தியாவசியப் பராமரிப்பிற்காக பேறுகால உதவியாளர்களின் நிலை குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1992 ஆம் ஆண்டில் சர்வதேசப் பேறுகால உதவியாளர்கள் கூட்டமைப்பால் (ICM) சர்வதேசப் பேறுகால உதவியாளர்கள் தினம் ஆனது நிறுவப்பட்டது.

- இந்த ஆண்டு சர்வதேசப் பேறுகால உதவியாளர்கள் கூட்டமைப்பின் நூற்றாண்டு விழாவாகும்.
- எனவே இதைக் கொண்டாடும் வகையில், இந்த ஆண்டின் கருத்துரு, 100 ஆண்டு கால முன்னேற்றம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## உலக கை மீதான சுகாதார தினம் - மே 05

- சுகாதாரப் பாதுகாப்பில் கை மீதான சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்து உலகளவில் ஊக்குவித்தல், தெரிவுநிலை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை மேற் கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, 2009 ஆம் ஆண்டில் "உயிர்களை காப்போம்: கைகளை சுத்தம் செய்வோம்" என்ற உலகளாவிய வருடாந்திரப் பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- இது அறிவிக்கப்பட்ட தினமான மே 05 ஆம் தேதியானது உலக கை மீதான சுகாதார தினமாக கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டின் இந்தத் தினத்திற்கான உலக சுகாதார அமைப்பின் கருத்துரு, 'பாதுகாப்பிற்காக ஒன்றுபடுவோம் : கைகளை சுத்தம் செய்வோம்' என்பதாகும்.


## உணவுமுறை எதுவும் பின்பற்றாத சர்வதேச தினம் - மே 06

- அனைத்து வடிவங்கள் மற்றும் அளவுகள் உள்ளவர்களையும் துயரப்படுத்தும் உருவக் கேலி போன்ற நடத்தைகளை ஒதுக்கி வைத்து, தங்களது உடலை உள்ளவாறே ஏற்றுக் கொள்வது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்காக வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உடல் பருமன், உடல் எடை அதிகரிப்பு, பலவீனம், தொப்பை மற்றும் கொழுப்பு போன்ற பிரச்சனைகளை மறந்து, இந்த நாளில் மக்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தச் செய்கிறார்கள்.
- 1992 ஆம் ஆண்டில், பிரிட்டன் பெண்மணி மேரி எவன்ஸ் என்பவரால் இங்கிலாந்தில் முதன்முறையாக இந்த தினம் அனுசரிக்கப்பட்டது.

## இரவீந்திரநாத் தாகூர் ஜெயந்தி - மே 07

- வங்காள நாட்காட்டியின்படி, இரவீந்திரநாத் தாகூர் ஜெயந்தியானது போயிசாக்கின் 25 ஆம் நாளன்று கொண்டாடப்படுகிறது.
- ஆங்கில நாட்காட்டியின்படி, இது 2022ஆம் ஆண்டு மே 07 அன்று கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டு இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 161வது பிறந்தநாளாகும்.
- இரவீந்திரநாத் தாகூர் கொல்கத்தாவில் உள்ள ஜோராசங்கோ தாகுர்பாய் என்னும் இடத்தில் 1861 ஆம் ஆண்டு மே மாதம் 07ஆம் தேதியன்று பிறந்தார்.
- கல்விச் சேவையை வழங்குவதற்காக இவர் சாந்திநிகேதனைத் தோற்றுவித்தார்.
- பின்னர் இது விஸ்வபாரதி பல்கலைக்கழகமாக உருமாறியது.
- இவர் கீதாஞ்சலி, பிகாரினி, காபுலிவாலா, அமர் சோனார் பங்களா, ஜன கன மன மற்றும் பல இலக்கியங்கள், பாடல்கள் மற்றும் கவிதைகளை எழுதியுள்ளார்.

- இவர் தனது வாழ்நாளில் சுமார் 2230 பாடல்களை எழுதியுள்ளார்.
- இவர் தனது வாழ்நாளின் கடைசி 13 வருடங்களில், சுமார் 3000 ஓவியங்களை வரைந்து தனது படைப்பாற்றலை வெளிப்படுத்தினார்.




## உலக தடகள தினம் - மே 07

- உடற்தகுதியின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், விளையாட்டுகளில் குறிப்பாக தடகளப் போட்டிகளில் விளையாட ஊக்குவிப்பதும் இத்தினத்தின் நோக்கமாகும்.
- 1996 ஆம் ஆண்டில், அப்போதைய சர்வதேசப் பயில்முறைத் தடகளக் கூட்டமைப்பின் தலைவர் ப்ரிமோ நெபியோலோ என்பவரால் உலக தடகள தினம் தொடங்கப்பட்டது.

## சர்வதேச வானியல் தினம் - மே 07

- சர்வதேச வானியல் தினமானது முதன்முதலில் 1973 ஆம் ஆண்டில் டக் பெர்கர் என்பவரால் அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது பரந்த வானியல் துறையில் பொது மக்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச வானியல் தினமானது, ஆண்டிற்கு இரண்டு முறை அனுசரிக்கப்படுகிறது.
- ஒருமுறை வசந்த காலத்திலும் மற்றொரு முறை இலையுதிர் காலத்திலும் இத்தினம் கொண்டாடப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், இத்தினமானது மே 07 மற்றும் அக்டோபர் 01 ஆகிய தேதிகளில் அனுசரிக்கப் படுகிறது.

## இரண்டாம் உலகப் போரின் போது உயிர் இழந்தவர்களுக்கான நினைவு மற்றும் நல்லிணக்க நேரம் - மே 08/09

- இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்த அனைவருக்கும் இந்த தினத்தில் அஞ்சலி செலுத்தப் படுகிறது.
- இந்த ஆண்டானது இரண்டாம் உலகப் போரின் 77வது ஆண்டு நிறைவு விழாவாகும்.
- 2010 ஆம் ஆண்டு மார்ச் 02 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒரு தீர்மானத்தின் மூலம் மே 08-09 ஆகிய தேதிகளை இதற்கான ஒரு நினைவு தினமாக அறிவித்தது.

## உலகச் செஞ்சிலுவை தினம் - மே 08

- செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் நிறுவனரான ஹென்றி டுனான்ட் என்பவரின் பிறந்தநாளை நினைவு கூரும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இவர் 1828 ஆம் ஆண்டு மே 08 ஆம் தேதியன்று ஜெனீவா நகரில் பிறந்தார்.
- மேலும், இவர் அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்றவர் ஆவார்.
- 1948 ஆம் ஆண்டு மே 08 ஆம் தேதியன்று உலகம் முதலாவது செஞ்சிலுவை தினத்தைக் கொண்டாடியது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'மனித நேயமாக இருத்தல்' என்பது ஆகும்.

## அன்னையர் தினம் - மே 08


- ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று அன்னையர் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு இத்தினம் மே 08 ஆம் தேதியன்று கிட்டத்தட்ட 100 நாடுகளில் அனுசரிக்கப் பட்டது.
- அன்னை ஜார்விஸ் என்பவர் 1908 ஆம் ஆண்டில் தன்னையும் "அனைத்துத் தாய்மார்களையும்" கௌரவிக்கும் விதமாக அன்னையர் தினத்தினைத் தோற்றுவித்தார்.

## உலக தலாசீமியா தினம் – மே 08

- தலாசீமியா ஒரு இரத்தம் தொடர்புடைய பிழற்சி என்பதைக் குறித்தும் அந்த நோய் தொடர்பான கட்டுக்கதைகள் குறித்து விழிப்புணர்வைப் பரப்புவது மற்றும் அந்த நோயாளிகள் தங்களது இயல்பான வாழ்க்கையை நடத்த உதவுவது ஆகியவற்றைக் குறித்தும் இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "விழிப்புடன் இருங்கள். பகிர்ந்து கொள்ளுங்கள். கவனித்துக் கொள்ளுங்கள் : தலாசீமியா குறித்த அறிவை மேம்படுத்த உலகளாவியச் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுதல்" என்பதாகும்.




## உலக லூபஸ் தினம் - மே 10




- லூபஸ் என்பது உலகம் முழுவதும் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதிக்கும் ஒரு கொடிய நோயாகும்.
- சிஸ்டமிக் லூபஸ் எரிதிமடோசஸ் என்றும் அழைக்கப்படும் இந்தத் தன்னுடல் தாங்கு திறன் நோயைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 2004 ஆம் ஆண்டு லூபஸ் கனடா என்பவரால் இந்தத் தினமானது உருவாக்கப்பட்டது.
- இந்த நோய் ஏற்படுவதற்கான சரியான காரணம் இன்னும் அறியப்படவில்லை.
- ஆனால் இது மரபணுக்கள், ஹார்மோன்கள் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற சிலபல காரணிகளால் உருவாகலாம் என்று கருதப்படுகிறது.

## சர்வதேச அர்கானியா தினம் - மே 10

- ஐக்கிய நாடுகள் சபையானது, 2022 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியை இரண்டாவது சர்வதேச அர்கானியா தினமாக அனுசரித்தது.
- இந்தத் தினமானது ஆர்கன் மரத்தை மனிதகுலத்தின் ஒரு வியத்தகுக் கலாச்சாரப் பாரம்பரியமாகவும், நெகிழ்திறன் மற்றும் நிலையான மேம்பாட்டின் ஒரு மூதாதைய ஆதாரமாகவும் சித்தரிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினமானது "ஆர்கன் மரம், நெகிழ்திறனின் சின்னம்" என்ற கருத்துருவின் கீழ் கொண்டாடப்படுகிறது.
- ஆர்கன் மரம் (அர்கானியா ஸ்பினோசா) ஆப்பிரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மொராக்கோவின் துணை-சஹாரா பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு இனமாகும்.
- இது வறண்ட மற்றும் அரை வறண்டப் பகுதிகளில் வளரும் தன்மைக் கொண்டது.

## தேசியத் தொழில்நுட்ப தினம் – மே 11

- இந்தத் தினமானது 1998 ஆம் ஆண்டில் மே மாதத்தில் நடத்தப்பட்ட பொக்ரான் அணு சக்திச் சோதனைகளின் (பொக்ரான்-II) ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இவை 1998 மே 11 முதல் 13 வரை ராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் உள்ள இந்திய இராணுவத்தின் பொக்ரான் சோதனைத் தளத்தில் டாக்டர். A.P.J. அப்துல் கலாம் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் நடத்தப்பட்ட ஐந்து அணுகுண்டு சோதனைகளாகும்.
- ஆபரேஷன் சக்தி என்பது பொக்ரான்-II அணுசக்தி சோதனைக்கு வழங்கப்பட்ட ஒரு குறியீட்டுப் பெயராகும்
- 1974 ஆம் ஆண்டில் இந்தியா அரசினால் முதல் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது.
- இதற்கு ஸ்மைலிங் புத்தா (சிரிக்கும் புத்தர்) என்ற குறியீட்டுப் பெயர் இடப்பட்டது.
- தேசியத் தொழில்நுட்ப தினம் முதன் முதலில் 1999 ஆம் ஆண்டு மே 11 அன்று அனுசரிக்கப் பட்டது.

## சர்வதேச செவிலியர் தினம் - மே 12

- இது செவிலியர்களின் சேவைகளைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஆங்கிலேயச் சமூகச் சீர்திருத்தவாதியும், புள்ளியியல் நிபுணரும், நவீனச் செவிலியத்தினை நிறுவியவருமான புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளாகும்.
- இவர் லேடி வித் தி லாம்ப் என்றும் அழைக்கப்பட்டார்.
- இந்த ஆண்டு செவிலியர் தினத்தின் கருத்துரு, "Nurses: A Voice to Lead – Invest in Nursing and respect rights to secure global health" என்பதாகும்.

## சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் - மே 12

- தாவர ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது பசியை ஒழிக்கவும், வறுமையைக் குறைக்கச் செய்யவும், பல்லுயிர்த்தன்மை மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கச் செய்யவும், பொருளாதார மேம்பாட்டினை அதிகரிக்கவும் எவ்வாறு உதவும் என்பது குறித்த ஒரு உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, (UNGA) 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தத் தினத்தினை அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 2020 ஆம் ஆண்டானது, ஐக்கிய நாடுகள் சபையினால், சர்வதேச தாவர ஆரோக்கிய ஆண்டாக (IYPH) அறிவிக்கப்பட்டது.
- இருப்பினும், கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் கடுமையாக பாதிக்கப்பட்டு, நிலுவையில் உள்ள செயல்பாடுகளை முடிப்பதற்காக சர்வதேச தாவர ஆரோக்கிய ஆண்டானது 2021 ஆம் ஆண்டு ஜூலை 01 வரை நீட்டிக்கப்பட்டது.

## உலக புலம்பெயர் பறவை தினம் - மே 14

- புலம்பெயர் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை எடுத்துரைப்பதும் அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- புலம்பெயர் பறவைகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், அவற்றின் சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கு வேண்டி சர்வதேச ஒத்துழைப்பின் அவசியம் குறித்து கவனத்தை ஈர்ப்பதே இந்த நாளின் ஒரு முக்கிய நோக்கம் ஆகும்.
- ஆண்டுக்கு இருமுறை என்ற வகையில் மே மாதம் மற்றும் அக்டோபர் மாதம் ஆகியவற்றின் இரண்டாவது சனிக்கிழமையன்று இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- "புலம்பெயர் பறவைகள் மீது ஒளி மாசுபாட்டின் தாக்கம்" என்பது இந்த ஆண்டின் உலக புலம்பெயர் பறவை தினத்தின் கருத்துருவாகும்.


## சர்வதேச குடும்ப தினம் - மே 15

- சர்வதேச குடும்ப தினமானது, ஆரோக்கியமான மற்றும் சமநிலையான குடும்பத்தின் மதிப்பை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், குடும்பங்களில் குறிப்பிட்டத் தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார, மக்கள்தொகை மற்றும் சமூக காரணிகள் பற்றிய ஒரு புரிதலையும் அதிகரிக்கிறது.
- உலக அமைதிக் கூட்டமைப்பானது, முழுச் சமூகத்தின் ஒரு நுண்ணிய வடிவமாகக் குடும்பத்தை கருதுவதால் இந்தத் தினத்தினைக் கடைப்பிடிக்கிறது.
- 1993 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது மே 15 ஆம் தேதியானது சர்வதேச குடும்பங்கள் தினமாக அனுசரிக்கப்படும் என அறிவித்தது.
- ‘குடும்பங்கள் மற்றும் நகரமயமாக்கல்’ என்ற இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவானது குடும்பங்களுக்கு ஏற்ற வகையிலான ஒரு நகரக் கொள்கையை வகுத்தலின் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வெசாக் தினம் - மே 16

- இந்த ஆண்டு வெசாக் தினம் அல்லது புத்த பூர்ணிமா தினம் மே 16 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- "வெசாக்" என்பது மே மாதத்தில் வரும் ஒரு முழு நிலவு நாளாகும்.
- 2500 ஆண்டுகளுக்கு முன்பு, கி.மு. 623 ஆம் ஆண்டின் வெசாக் தினத்தன்று, கௌதம புத்தர் அவர்கள் பிறந்தார்.
- புத்தர் ஞானம் அடைந்ததும் இந்த வெசாக் நாளிலேயே ஆகும்.
- மேலும் புத்தர் தனது எண்பதாம் வயதில் உயிர் துறந்ததும் இந்த வெசாக் நாளிலேயே ஆகும்.

## தேசிய டெங்கு தினம் - மே 16




- டெங்கு மற்றும் அதன் தடுப்பு நடவடிக்கைகள், நோய் பரவும் பருவம் தொடங்கும் முன், நோய்த் தொற்று கிருமிகளால் பரவும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தயார் நிலை ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெண் கொசு (ஏடிஸ் எஜிப்தி) கடிப்பதன் மூலம் டெங்கு பரவுகிறது.
- இந்தக் கொசுக்கள் மேற்கு நைல் வைரஸ் நோய் மற்றும் மஞ்சள் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ்களைப் பரப்புகின்றன.
- டெங்கு என்பது கொசுக்களால் பரவும் ஒரு நோயாகும்.
- இது டென்-1, டென்-2, டென்-3 மற்றும் டென்-4 ஆகிய நான்கு வகையான குருதி நுண்ணுயிர் வகைகளைக் கொண்ட டெங்கு வைரஸால் ஏற்படுகிறது.

## அமைதியுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான சர்வதேச தினம் - மே 16


- 2017 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, உள்ளடக்கம், ஒருமைப்பாடு மற்றும் அமைதி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக வேண்டி மே 16 ஆம் தேதியை அமைதியுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான ஒரு சர்வதேச தினமாக அனுசரிக்க உள்ளதாக அறிவித்தது.
- இந்தத் தினம் பல்வகைத் தன்மை மற்றும் வேற்றுமையில் ஒற்றுமையைக் குறிக்கும் தினமாகும்.

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, 2001 முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளை "உலகக் குழந்தைகளுக்கான அமைதி மற்றும் அகிம்சை கலாச்சாரத்திற்கான சர்வதேசப் பத்தாண்டு" என்று அறிவித்தது.

## சர்வதேச ஒளி தினம் - மே 16

- இத்தினமானது, அறிவியலாளரும் பொறியாளருமான தியோடர் மைமன் அவர்களால் 1960 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட முதல் லேசர் செயல்முறையை நினைவு கூருகிறது.
- தகவல் தொடர்பு, சுகாதாரம் மற்றும் பல துறைகளில் அறிவியல் முன்னேற்றம் ஒரு சமூகத்திற்கு எவ்வாறு உதவக்கூடும் என்பதற்கு லேசர் ஒரு முக்கிய எடுத்துக் காட்டாகும்.
- இத்தினமானது, அறிவியல் சார்ந்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும், அமைதி மற்றும் நிலையான மேம்பாட்டினை உருவாக்குவதில் அதன் திறனைப் பயன்படுத்தச் செய்வதற்குமான ஓர் அழைப்பாகும்.

## சிக்கிம் மாநில உருவாக்க தினம் – மே 16





- 1975 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதியன்று சிக்கிம் இந்திய ஒன்றியத்துடன் இணைந்தது.
- 1950 ஆம் ஆண்டில், இந்திய-சிக்கிம் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இதன் மூலம், சிக்கிம் இந்தியாவினால் பாதுகாக்கப்படும் பகுதியாக மாறியது.
- சிக்கிம் பகுதியை, 1975 ஆம் ஆண்டு வரையில் நம்கியால் வம்சத்தினர் ஆட்சி செய்தனர்.
- 1975 ஆம் ஆண்டில் சிக்கிம் பிரதமர், இந்திய ஒன்றியத்தில் சிக்கிம் மாநிலம் இணைய விரும்புவதாக இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்தார்.
- இதனையடுத்து ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில் அதில் 97.5% மக்கள் மன்னராட்சியை ஒழித்து சிக்கிம் இந்தியாவுடன் இணைவதற்கு ஆதரவளித்தனர்.
- 35வது சட்டத் திருத்தமானது, சிக்கிம் மாநிலத்தை "இணை மாநிலமாக" மாற்றியது.

- இந்த அந்தஸ்தினைப் பெற்ற ஒரே மாநிலம் சிக்கிம் மட்டுமே ஆகும்.
- 36வது சட்டத் திருத்தமானது, 35வது சட்டத்திருத்தத்தை ரத்து செய்து சிக்கிமை முழு மாநிலமாக மாற்றியது.

## உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்க தினம் – மே 17

- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) நிறுவப்பட்டதையும், 1865 ஆம் ஆண்டில் முதலாவது சர்வதேச தந்தி ஒப்பந்தம் கையெழுத்தானதையும் உலக தொலைத் தொடர்பு தினம் நினைவு கூருகிறது.
- உலகத் தகவல் தினமானது, தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தையும், உலக தகவல் சங்க (WSIS) உச்சி மாநாட்டில் எழுப்பப்பட்ட ஒரு பரந்த அளவிலான பிரச்சினைகளையும் எடுத்துரைக்கிறது.
- 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இவ்விரண்டு தினங்களுக்கான தகுந்த நிகழ்ச்சிகள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு, அதன் பிறகு ஆண்டுதோறும் ஒரே நாளில் கொண்டாடப்படுகின்றன.

## உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17




- உலக உயர் இரத்த அழுத்த தினமானது, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதன் அறிகுறிகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு அனுசரிக்கப் படுகிறது.
- இரத்த அழுத்தம் 140/90 என்ற ஆரோக்கியமற்ற நிலையை எட்டும் போது உயர் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.
- இரத்த அழுத்த அளவீடு 180/120 என்ற நிலைக்கு மேல் செல்லும் போது இது ஆபத்தான நிலையை எட்டியதாகக் கருதப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு - 'உங்களது இரத்த அழுத்தத்தை துல்லியமாக அளவிட்டு, கட்டுப்படுத்தி, நீண்ட நாட்கள் உயிர் வாழுங்கள்' என்பதாகும்.

## உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் - மே 17

- உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினத்தின் தோற்றமானது, 1997 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் ஆற்றிய உரையில் தொடங்கியது.
- 1998 ஆம் ஆண்டில், கிளின்டன் ஆற்றிய உரையின் முதலாம் ஆண்டு நினைவாக முதல் முறையாக உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் அனுசரிக்கப்பட்டது.
- எச்ஐவி வைரசானது முதன்முதலில் 1983 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

## சர்வதேச அருங்காட்சியக தினம் - மே 18

- கலாச்சாரப் பரிமாற்றம் மற்றும் பரஸ்பர புரிதல், ஒத்துழைப்பு மற்றும் மக்களிடையே அமைதியை மேம்படுத்துவதற்கான முக்கிய இடமாக அருங்காட்சியகங்கள் விளங்குவது பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச அருங்காட்சியக தினத்தின் கருத்துரு, "அருங் காட்சியகங்களின் சக்தி" என்பதாகும்.
- சர்வதேச அருங்காட்சியக சபையானது, 1977 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச அருங்காட்சியக தினத்தை ஏற்பாடு செய்து வருகிறது.

## உலக தேனீ தினம் - மே 20

- 1734 ஆம் ஆண்டில் இத்தினத்தில்தான், தேனீ வளர்ப்பின் முன்னோடியான ஆன்டன் ஜான்சா அவர்கள் பிறந்தார்.
- சுற்றுச்சூழல் அமைப்பில் தேனீக்கள் மற்றும் மகரந்தச் சேர்க்கை செய்யும் பிற உயிரினங்களின் பங்கை அங்கீகரிப்பதே இந்த சர்வதேச தினத்தின் நோக்கமாகும்.
- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், மே 20 ஆம் தேதியினை உலக தேனீ தினமாக அறிவிப்பதற்கு ஸ்லோவேனியா அளித்த ஒரு முன்மொழிதலுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகள் ஒப்புதல் அளித்தன.

## உலக அளவியல் தினம் – மே 20

- இது அளவியல், அளவீட்டு அறிவியல் மற்றும் அதன் பயன்பாடு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிவியல் துறைகள், கண்டுபிடிப்புகள், தொழில்கள், வர்த்தகம் மற்றும் பிற துறைகளில் அளவியலின் பயன்பாட்டை இந்தத் தினம் சிறப்பித்துக் காட்டுகிறது.
- 1875 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதி மீட்டர் உடன்படிக்கை கையெழுத்தானதன் ஆண்டு விழாவாக இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டின் உலக அளவியல் தினத்தின் கருத்துரு, 'டிஜிட்டல் யுகத்தில் அளவியல்' என்பதாகும்.

## அருகி வரும் உயிரினங்களுக்கான தேசிய தினம் – மே 20

- அருகி வரும் உயிரினங்களுக்கான தேசிய தினமானது, ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது, 2006 ஆம் ஆண்டில் டேவிட் ராபின்சன் மற்றும் அருகி வரும் உயிரினங்கள் கூட்டணி ஆகியவற்றால் இந்த தினமானது உருவாக்கப்பட்டது.
- அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் மற்றும் அவற்றைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்வதன் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத்தன்மைக்கான உலக தினம் – மே 21

- இந்தத் தினமானது, உலகக் கலாச்சாரங்களின் செழுமையைக் கொண்டாடுவதையும், அமைதி மற்றும் நிலையான மேம்பாட்டினை அடைவதற்கான உள்ளடக்கம் மற்றும் நேர்மறையான மாற்றத்தின் முகமையாக விளங்குகின்ற அதன் பன்முகத் தன்மையின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2001 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் உள்ள பாமியான் புத்தர் சிலைகளை அழிக்கப் பட்டதன் விளைவாக யுனெஸ்கோ அமைப்பானது 2001 ஆம் ஆண்டில் கலாச்சார பன்முகத் தன்மை குறித்த உலகளாவியப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- பின்னர் 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, மே 21 ஆம் தேதியானது பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத் தன்மைக்கான உலக தினமாக அறிவித்தது.

## பயங்கரவாத எதிர்ப்புத் தினம் – மே 21



- 1991 ஆம் ஆண்டு இதே நாளில்தான் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்.
- மக்கள் மத்தியில் அமைதி, மனிதநேயம், ஒற்றுமை, நல்லிணக்கம் போன்ற செய்திகளைப் பரப்புவதும், பயங்கரவாதத்தின் சமூக விரோதச் செயல்கள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுமே பயங்கரவாத எதிர்ப்பு தினத்தைக் கடைபிடிப்பதன் நோக்கமாகும்.

## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் – மே 22

- பல்லுயிர்த் தன்மைப் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலை அதிகரிப்பதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1993 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், டிசம்பர் 29 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் இரண்டாவது குழுவால் இத்தினம் முதன்முதலில் உருவாக்கப் பட்டது.
- இந்த தேதி உயிரியல் பன்முகத்தன்மை ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நாளினைக் குறிக்கிறது.
- ஆரம்பத்தில் இந்தத் தேதியே சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மைத் தினமாக நியமிக்கப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மே 22 ஆம் தேதியினை சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மைத் தினமாக ஏற்றுக் கொண்டது.
- 2022 ஆம் ஆண்டின் கருத்துரு, "அனைத்து உயிர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு எதிர்காலத்தை உருவாக்குதல்" என்பதாகும்.

## மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - மே 23

- இது வளர்ந்து வரும் நாடுகளில், பிரசவத்தின் போது பல பெண்களைப் பாதிக்கும் ஒரு நிலையாகும்.
- 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) மற்றும் அதன் உறுப்பினர் நாடுகள் மகப்பேறின் போது பிறப்புறுப்பினுள் ஏற்படும் காயம்/சிதைவு நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு உலகளாவியப் பிரச்சாரத்தைத் தொடங்கின.
- இந்தத் தினமானது 2012 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் சிதைவு நிலை என்பது (மகப்பேறியல்) ஒரு மோசமான பிரசவ காயம் மற்றும் புறக்கணிக்கப்பட்ட பொது சுகாதார மற்றும் மனித உரிமைகள் சார்ந்த ஒரு பிரச்சினையாகும்.

## உலக ஆமை தினம் - மே 23

- உலகெங்கிலும் உள்ள ஆமைகள் மற்றும் அவற்றின் அழிந்து வரும் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- பூமியின் சூழலியல் வடிவமைப்பில் கடல் ஆமைகள் மற்றும் ஆமைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- இந்த ஊர்வன இனங்களானது, உலகெங்கிலும் உள்ள பல்வேறு வாழ்விடங்களில் உயிர் வாழ்வதாகவும் செழித்து வளர்வதாகவும் அறியப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான உலக ஆமை தினத்தின் கருத்துரு, “ஷெல்பிரேட்” (Shellebrate) என்பதாகும்.
- இந்தக் கருத்துரு, "எல்லோரும் ஆமைகளை நேசிக்கவும் காப்பாற்றவும்" என்று எடுத்து உரைக்கிறது.

## காமன்வெல்த் தினம் - மே 24

- பேரரசு தினம் என்று அழைக்கப்பட்ட காமன்வெல்த் தினமானது ஒவ்வோர் ஆண்டும் 54 காமன்வெல்த் நாடுகளின் கூட்டமைப்பினால் கொண்டாடப்படுகிறது.
- இந்த நாடுகளுள் பெரும்பாலான நாடுகளில் இத்தினம் மே மாதத்தின் இரண்டாவது திங்கட் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஆனால் இந்தியாவிலும் இன்னும் சில நாடுகளிலும் இத்தினம் மே 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த 54 நாடுகள் பல்வேறு பொதுவான இலக்குகளுக்காக ஒன்று கூடுகின்றன.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, ‘பொதுவான ஒரு எதிர்காலத்தை வழங்குதல்’ என்பதாகும்.

## உலக மனச் சிதைவு நோய் தினம் – மே 24




- இந்தக் கோளாறு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் நோயாளிகள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து மக்களிடம் எடுத்துரைப்பது ஆகியவை இத்தினத்தின் நோக்கமாகும்.
- பிரான்சு நாட்டினைச் சேர்ந்த டாக்டர் பிலிப் பினெல் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் மே 24 ஆம் தேதியானது உலக மனச்சிதைவு நோய் தினமாக அறிவிக்கப் பட்டது.
- மனநலம் குன்றியவர்களுக்குச் சிகிச்சை அளித்தல் மற்றும் ஒரு கவனிப்பு நலனை அளிக்கும் குறிப்பிடத்தக்க நபர்களுள் ஒருவராக இவர் போற்றப்பட்டார்.
- மனச்சிதைவு நோய் (ஸ்கிசோஃப்ரினியா) என்பது சிந்தனை, கருத்து, உணர்ச்சிகள், மொழி, சுய உணர்வு மற்றும் நடத்தை ஆகியவற்றில் ஏற்படும் சிதைவுகளால் குறிப்பிடப் படும் ஒரு தீவிரமான மனநலக் கோளாறு ஆகும்.

## உலகளாவிய அணுகல் விழிப்புணர்வு தினம் – மே 19

- குறைபாடுகள் அல்லது இயலாமையுடன் வாழும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு டிஜிட்டல் அணுகல் மற்றும் உள்ளடக்கத்தினை அடைய வழி வகை செய்தலில் கவனம் செலுத்துவதற்கான ஒரு விழிப்புணர்வு தினமாகும்.
- இந்தத் தினமானது ஆண்டுதோறும் மே மாதத்தின் மூன்றாவது வியாழன் அன்று அனுசரிக்கப் படுகிறது.

## சுயாட்சி அல்லாத பிரதேசங்களின் மக்களுடனான சர்வதேச ஒற்றுமை வாரம் - மே 25 முதல் 31 வரை

- 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, சுயாட்சி அல்லாதப் பிரதேசங்களில் உள்ள மக்களுடனான ஒற்றுமை வாரத்தை ஆண்டுதோறும் கடைபிடிப்பதற்கான ஒரு அழைப்பினை விடுத்தது.
- ஒரு பிரதேசத்தின் மக்கள் இன்னும் முழு அளவிலான ஒரு சுயாட்சியைப் பெறாத பிரதேசமானது சுயாட்சி அல்லாதப் பிரதேசம் என்று வரையறுக்கப்படுகிறது.



## உலக தைராய்டு விழிப்புணர்வு தினம் - மே 25

- இந்தத் தினமானது தைராய்டு நோய்கள், அவற்றின் அறிகுறிகள், தடுப்பு மற்றும் சிகிச்சைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது, ஐரோப்பியத் தைராய்டு சங்கத்தின் முன்மொழிதலின் பேரில் 2008 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- தைராய்டு விழிப்புணர்வு வாரமானது மே 22 முதல் 28 வரை அனுசரிக்கப்பட்டது.
- சர்வதேசத் தைராய்டுக் கூட்டமைப்பானது, "இது உங்களுக்காக அல்ல. இது உங்கள் தைராய்டிற்காக" என்ற கருத்துருவினை 2022 ஆம் ஆண்டிற்கு வழங்கியது.

## காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - மே 25

- காணாமல் போன மற்றும் கடத்தப்பட்டக் குழந்தைகளுக்குக் கௌரவம் செலுத்தும் விதமாகவும், மீட்கப்பட்டவர்களைக் கொண்டாடும் விதமாகவும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 1983 ஆம் ஆண்டில், முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் முதன்முதலில் அமெரிக்காவின் காணாமல் போன குழந்தைகளுக்கான ஒரு தேசிய தினத்தை அறிவித்தார்.
- காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட (கொடுமைப் படுத்தப்பட்ட) குழந்தைகளுக்கான சர்வதேச மையம், ஐரோப்பிய ஆணையம் மற்றும் காணாமல் போன குழந்தைகள்- ஐரோப்பா ஆகியவற்றின் முயற்சிகள் மூலம் இந்தத் தினமானது முதன் முதலில் 2001 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

## பெண்களின் ஆரோக்கியத்திற்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மே 28



- பெண்களின் ஆரோக்கியம் மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இந்தத் தினத்தின் முக்கிய நோக்கமாகும்.
- சர்வதேச மகளிர் சுகாதார தினமானது 1987 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்க அரசாங்கம் இதனை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்ததைத் தொடர்ந்து நடைமுறைக்கு வந்தது.

## உலக மாதவிடாய் சுகாதார தினம் – மே 28

- இத்தினமானது ஆரோக்கியமான மாதவிடாய் சுகாதர நலன் பேணுதல் குறித்த முக்கியத்துவத்தினை உலகளவில் முன்னிலைப்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் உள்ள வாஷ் யுனைடெட் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் தொடங்கப்பட்டது.

## உலக பட்டினி தினம் – மே 28

- உலகளவில் 820 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நீண்டகாலப் பட்டினியால் வாடுவதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தத் தினத்தின் ஒரு நோக்கம் ஆகும்.
- இத்தினமானது 2011 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது.
- இத்தினமானது நாள்பட்ட பட்டிளியின் துயரத்தைப் பற்றிய விழிப்புணர்வை பரப்பச் செய்வதோடு, நிலையான முயற்சிகள் மூலம் பட்டினி மற்றும் வறுமையைத் தீர்ப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆப்பிரிக்கா தினம் – மே 25


- ஆப்பிரிக்கா தினமானது, 1963 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதியன்று ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பு நிறுவப்பட்டதை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- இது ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள பல்வேறு நாடுகளிலும், உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- இந்த அமைப்பானது, தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் 2002 ஆம் ஆண்டு ஜூலை 09 அன்று ஆப்பிரிக்க ஒன்றியமாக மாற்றப்பட்டது.

## ஐக்கிய நாடுகளின் அமைதி காப்பு வீரர்களுக்கான சர்வதேச தினம் – மே 29

- 1948 ஆம் ஆண்டு முதல் நீலக் கொடி என்றப் பிரிவின் கீழ் பணியாற்றிய ஒரு மில்லியனுக்கும் அதிகமான பணியாளர்களின் சேவை மற்றும் தியாகத்தை அங்கீகரிப்பதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1948 ஆம் ஆண்டில் முதலாவது ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் திட்டமானது நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டின் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படை வீரர்களுக்கான சர்வதேச தினத்திற்கான கருத்துரு, “மக்கள். அமைதி. முன்னேற்றம். கூட்டாண்மைகளின் சக்தி" என்பதாகும்.

## கோவா மாநில உருவாக்க தினம் - மே 30

- 1961 ஆம் ஆண்டில், இந்திய அரசானது ஆபரேஷன் விஜய் என்ற நடவடிக்கையைத் தொடங்கி, டாமன் மற்றும் டையூ தீவுகள் மற்றும் கோவாவை இந்திய நிலப்பரப்புடன் இணைத்தது.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 19 ஆம் தேதியன்று கோவா சுதந்திர தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று, இந்தப் பிரதேசம் பிரிக்கப்பட்டு கோவா உருவாக்கப் பட்டது.
- டாமன் மற்றும் டையூ ஒன்றியப் பிரதேசமாகவே இருந்தது.




## உலகப் புகையிலை எதிர்ப்புத் தினம் – மே 31

- இது புகையிலையை உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு, உலகப் புகையிலை எதிர்ப்புத் தினத்தின் கருத்துருவானது "புகையிலை: நமது சுற்றுச்சூழலுக்கு ஓர் அச்சுறுத்தல்" என்பதாகும்.
- உலக சுகாதார அமைப்பின் உறுப்பினர் நாடுகள், 1987 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி அன்று உலகப் புகையிலை எதிர்ப்புத் தினத்தைக் கடைபிடிக்க ஒப்புக் கொண்டன.

# இதரச் செய்திகள்

## டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பல்கலைக்கழகத் தாக்கம் குறித்த தரவரிசை 2022

- இந்திய நாட்டிலுள்ள அனைத்து மத்திய மற்றும் மாநில அரசு உதவி பெறும் பொதுப் பல்கலைக் கழகங்களில் கல்கத்தா பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- 'சிறப்பான பணி மற்றும் பொருளாதார மேம்பாடு' என்ற துணைப் பிரிவில் இந்தப் பல்கலைக் கழகம் உலகளவில் 14வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவிலிருந்து 64 பல்கலைக் கழகங்கள் இந்தத் தரவரிசையில் இடம் பெற்றுள்ள வகையில் இது இந்தியாவை இத்துறையில் நான்காவது சிறந்த நாடாக மாற்றியது.
- இந்தத் தரவரிசையில் இந்திய நாட்டினைச் சேர்ந்த எட்டு பல்கலைக்கழகங்கள் உலக அளவில் முதல் 300 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- அமிர்த விஷ்வ வித்யாபீடம் பல்கலைக்கழகமானது ஒட்டு மொத்தப் பட்டியலில் 41வது இடத்தையும், 3வது நிலையான மேம்பாட்டு இலக்கு (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு) மற்றும் 5வது நிலையான மேம்பாட்டு இலக்கு (பாலினச் சமத்துவம்) ஆகியவற்றில் எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

TOP 10 INDIAN UNIVERSITIES IN TIMES HIGHER EDUCATION'S IMPACT RANKINGS 2022

| RANK | UNIVERSITIES |
|---|---|
| 41 | Amrita Vishwa Vidyapeetham |
| 74 | Lovely Professional University |
| 101-200 | Shoolini University of Biotechnology and Management Sciences |
| 201-300 | Amity University, Gurugram |
| 201-300 | University of Calcutta |
| 201-300 | Chitkara University |
| 201-300 | KIIT University |
| 301-400 | JSS Academy of Higher Education and Research |
| 301-400 | Symbiosis International University |
| 301-400 | VIT University |

## உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீடு 2022

- எல்லைகளைக் கடந்த நிருபர்கள் எனும் அமைப்பானது, 2022 ஆம் ஆண்டிற்கான உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இது 180 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் உள்ள பத்திரிகைகளின் நிலைமையை மதிப்பிடுகிறது.
- இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் 157வது இடத்தில் உள்ள நிலையில் இந்தியா 150வது இடத்திற்குத் தள்ளப் பட்டுள்ளது.

- மூன்று நார்டிக் நாடுகளான நார்வே முதல் இடத்தையும், அதைத் தொடர்ந்து டென்மார்க் மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகளும் முன்னணியில் இடம் பெற்றுள்ளன.
- அதேசமயம், பத்திரிகைச் சுதந்திரக் குறியீட்டில் கீழ் நிலையில் உள்ள முதல் 10 நாடுகளுள் சீனா, வட கொரியா, ஈரான், கியூபா மற்றும் மியான்மர் போன்ற நாடுகள் அடங்கும்.

| Rank | Countries | Rank | Countries |
|---|---|---|---|
| 1. | Norway | 176 | Myanmar |
| 2. | Denmark | 177 | Turkmenistan |
| 3. | Sweden | 178 | Iran |
| 4. | Estonia | 179 | Eritrea |
| 5. | Finland | 180 | North Korea |

## கேன்ஸ் திரைப்பட விழா 2022

- பிரான்சில் நடைபெற உள்ள 2022 ஆம் ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழா உடன் ஏற்பாடு செய்யப் படும் மார்ச்சேஸ் டு திரைப்பட விழாவில் இந்தியா அதிகாரப்பூர்வ 'கௌரவ பங்கேற்பாளர் நாடாக' பங்கேற்க உள்ளது.
- ஒரு நாட்டிற்கு இத்தகைய கௌரவம் வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்த அதே சமயம், கேன்ஸ் திரைப்பட விழாவின் 75வது ஆண்டு விழாவும் கொண்டாடப்படுகிறது.




## உலக உணவு நெருக்கடிகள் பற்றிய அறிக்கை

- 2022 ஆம் ஆண்டிற்கான உலக உணவு நெருக்கடிகள் குறித்த ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- இது உலகளவில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலவுவதை எடுத்துக் காட்டுகிறது.
- உணவு நெருக்கடிகளுக்கு எதிரான உலகக் கட்டமைப்பு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 53 நாடுகள் அல்லது பிரதேசங்களில் உள்ள சுமார் 193 மில்லியன் மக்கள் 2021 ஆம் ஆண்டில் நெருக்கடிக் காலம் அல்லது மோசமான சூழ்நிலைகளில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டனர்.
- எத்தியோப்பியா, தெற்கு மடகாஸ்கர், தெற்கு சூடான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில், சுமார் 6 லட்சம் பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையின் மிகக் கடுமையான கட்டத்தில் இருந்ததாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
- இதற்கான மூன்று முக்கிய காரணிகள் மோதல், மோசமான வானிலை, பொருளாதார நெருக்கடிகள் ஆகியனவாகும்.

## எல்லைப்புற சாலைகள் அமைப்பின் 62வது நிறுவன தினம்

- எல்லைப்புற சாலைகள் அமைப்பானது 1960 ஆம் ஆண்டு மே 07 அன்று ஒரு முன்னணி சாலைக் கட்டுமான நிறுவனமாக நிறுவப்பட்டது.
- இது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- ஷ்ரமேண சர்வம் சத்யம் (கடின உழைப்பால் அனைத்தையும் அடையலாம்) என்பது இதன் முழக்கமாகும்.
- இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் சாலை இணைப்புகளை வழங்குவதே இதன் முதன்மைப் பணியாகும்.

## ராக்கிகர்ஹி ஹரப்பா தளம்

- பழமையான சிந்து சமவெளித் தளங்களில் ஒன்றான ஹரியானாவின் ராகிகர்ஹி கிராமத்தில் இந்தியத் தொல்லியல் துறை முக்கியமானச் சுவடுகளைக் கண்டறிந்து உள்ளது.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் செம்பு மற்றும் தங்கம் ஆகியவற்றால் ஆன பொருட்களோடு சேர்த்து, தொல்பொருள்கள், மணிகள், மோதிப் எனப்படும் முத்திரையிடப்பட்ட எழுத்து வடிவம் மற்றும் ஹரப்பன் எழுத்து வடிவங்கள் & யானை உருவங்களுடன் கூடிய கூரைகள் ஆகியவற்றைக் கண்டறிந்துள்ளனர்.
- இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் பல அடுக்குமாடி வீடுகள், பாதைகள் மற்றும் வடிகால் அமைப்பு ஆகியவற்றின் கட்டமைப்பு இங்கு இருந்ததை வெளிப் படுத்தியுள்ளன.
- இந்த அகழாய்வுத் தளத்தில் உள்ள ஏழு குவியல்களுள் மூன்றில் செம்பு மற்றும் தங்க நகைகள், டெரகோட்டா (சுடுமண்) பொம்மைகள் மற்றும் ஆயிரக்கணக்கான களி மண் பானைகள் மற்றும் முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த இடமானது, 5000 ஆண்டுகள் பழமையான நகைகள் தயாரிக்கும் இடமாக இருந்து இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## மகாராணா பிரதாப் ஜெயந்தி 2022

- இராஜஸ்தானில் மகாராணா பிரதாப் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது
- ஆங்கில நாட்காட்டியின்படி மேவாரின் 13வது அரசர் மகாராணா பிரதாப்பின் பிறந்த நாள் ஆனது 1540 ஆம் ஆண்டு மே 09 அன்று கொண்டாடப்பட்டது.
- பிரதாப்பின் தந்தை, இரண்டாம் உதய் சிங், மேவார் வம்சத்தின் 12வது ஆட்சியாளர் மற்றும் உதய்ப்பூரை நிறுவியவர் ஆவார்.
- மகாராணா பிரதாப் முகலாயர்களுடன் பல போர்களில் ஈடுபட்டார்.
- ஆனால் அவற்றுள் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர் 1576 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஹல்திகட்டி போர் ஆகும்.




## மிகப்பெரிய வெள்ளைநிற வைரம்

- தி ராக் எனப்படும் உலகின் மிகப்பெரிய வெள்ளை வைரமானது, 18.6 மில்லியன் சுவிஸ் பிராங்குகளுக்கு (18.8 மில்லியன் டாலர்) ஏலம் போனது.
- ஆனால் இது போன்ற ஒரு இரத்தினத்திற்கான முந்தைய ஏலப்பதிவை விட இது மிகவும் குறைவாகும்
- சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள கிறிஸ்டியன் என்ற ஒரு ஏல நிறுவனமானது, கோல்ஃப் பந்தைக் காட்டிலும் பெரிய அளவிலான 228.31 காரட் எடையுடைய இந்தக் கல்லை விற்றது.

## மாதவிடாய் விடுப்பு

- கடுமையான மாதவிடாய் வலி உள்ள பெண்களுக்கு மாதத்திற்கு மூன்று நாட்கள் ஒரு மருத்துவ விடுப்பு வழங்கும் முறையை அறிமுகப்படுத்திய முதல் ஐரோப்பிய நாடாக ஸ்பெயின் மாற உள்ளது.
- சில சூழ்நிலைகளில் இந்த விடுப்பு ஐந்து நாட்களுக்குக் கூட நீட்டிக்கப்படலாம்.
- இந்தியா, ஜப்பான், தைவான், இந்தோனேசியா, தென் கொரியா மற்றும் ஜாம்பியா போன்ற நாடுகளும் மாதவிடாய் விடுப்புகளை வழங்குகிறது.
- இந்தியாவில், பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு பெறச் சட்டப்பூர்வ உரிமை இல்லை.
- ஆனால் பீகார் மாநிலத்தில், மாதவிடாய்க் காலத்தில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்ட வகையில் இரண்டு நாட்கள் விடுப்பு வழங்கப்படுகிறது.

## திறன்மிக்க ஆற்றல் மாற்ற மேம்பாட்டு அறிக்கை 2022

- இது அக்சென்ச்சர் நிறுவனத்துடன் இணைந்து உலகப் பொருளாதார மன்றத்தினால் வெளியிடப்பட்ட உலக ஆற்றல் மாற்றம் குறித்த ஒரு சிறப்பு அறிக்கையாகும்.
- நெகிழ்திறன் மிக்க ஆற்றல் மாற்றத்தை உறுதி செய்வதற்குப் பொது மற்றும் தனியார் துறைகளின் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள இது அழைப்பு விடுத்துள்ளது.
- மாற்றத்திற்கான அதிகரித்து வரும் ஒரு அவசியத்துடன் தற்போதுள்ள ஆற்றல் மாற்ற நிலை பொருந்தவில்லை என்று இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- ஆற்றலைப் பெறும் தன்மை, ஆற்றல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவை முன்னெப்போதையும் விட மிக முக்கியமானவையாக மாறி வருகின்றன.
- எனவே, நீண்ட காலப் பருவநிலை இலக்குகளை அடைவதற்கு என்று சரியான காலக் கெடுவுடன் கூடிய ஒரு விரிவான அணுகுமுறை மிகவும் முக்கியமானதாகும்.

## அரிய வகை பாம்பின் 35 மில்லியன் ஆண்டுகள் பழமையான படிமம்

- லடாக்கில் உள்ள மொலாஸ் படிவுகளில் இருந்து 35 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த மேட்சோயிடே என்ற ஒரு இனத்தினைச் சேர்ந்த பாம்பின் படிமத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- இது முன்னர் கணிக்கப்பட்டதை விட நீண்ட காலமாக இந்திய துணைக்கண்டத்தில் இந்த இனங்கள் வாழ்ந்தது குறித்த ஒரு தகவலை வெளிப்படுத்துகிறது.
- மேட்சோயிடே என்பது அழிந்து போன, நடுத்தர அளவு முதல் பிரம்மாண்டமான அளவிலான பாம்புகளின் இனமாகும்.
- இவை முதன்முதலில் கிரெட்டேசியஸ் காலத்தின் பிற்பகுதியில் தோன்றின.
- இவை பெரும்பாலும் கோண்ட்வானா நிலப்பகுதிகளில் பரவிக் காணப்பட்டன.
- செனோசோயிக் காலத்தில் இவை வாழ்ந்ததற்கானப் பதிவுகள் மிகவும் அரிதாகவே உள்ளன.
- புதைபடிவப் பதிவுகளிலிருந்து, பேலியோஜின் காலத்தின் மத்தியில் கோண்ட்வானா நிலப் பகுதியின் பெரும்பாலானப் பகுதிகளிலிருந்து முழு இனமும் மறைந்து விட்டதாக கருதப்படுகிறது.
- இருப்பினும், இந்த இனமானது ஆஸ்திரேலியாவில், வோனாம்பி என்று கடைசியாக அறியப் பட்ட அதன் மற்றொரு இனமாக, ப்ளீஸ்டோசீன் காலத்தின் பிற்பகுதி வரை உயிர் வாழ்ந்தது.

## உலகளாவிய நோய்த் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பற்றிய அறிக்கை

- உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையானது, நல்ல கை சுகாதாரம் மற்றும் பிற திறன்மிக்க நடைமுறைகளைப் பின்பற்றினால், நோய்த் தொற்றுகள் 70% வரை தடுக்கப் படலாம் என்று குறிப்பிடுகிறது.
- சுகாதார நலன் சார்ந்த நோய்த்தொற்றுகள் சுகாதாரச் சேவை வழங்கீட்டின் போது அடிக்கடி ஏற்படும் பாதகமானப் பதிப்புகளில் ஒன்றாகும்.
- அதிக வருமானம் உள்ள நாடுகளில் சராசரியாக 7% நோயாளிகளும், குறைந்த மற்றும்

நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் 15% நோயாளிகளும் மருத்துவமனையில் அவர்கள் இருக்கும் காலத்தில் சுகாதார நலன் சார்ந்த நோய்த் தொற்றுகளைப் பெறுவர்.

- மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படும் தொற்றுப் பதிவுகளில் ஏறத்தாழ நான்கில் ஒன்று மற்றும் வயது வந்தோருக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை அளிக்கப் படும் உறுப்புச் செயலிழப்புடன் கூடிய தொற்றுப் பாதிப்புகளில் கிட்டத் தட்ட பாதியளவு சுகாதார நல வழங்கீட்டுடன் தொடர்புடையவையாகும்.

## உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2022

- சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமானது, 2022 ஆம் ஆண்டின் உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கையினை வெளியிட்டது.
- 2030 ஆம் ஆண்டில் இந்தியாவின் உணவு உற்பத்தி 16% குறையலாம் என்றும், பருவ நிலை மாற்றத்தின் காரணமாக பட்டினியால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை 23% அதிகரிக்கலாம் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- 2030 ஆம் ஆண்டில் பட்டினியால் பாதிக்கப்படும் இந்தியர்களின் எண்ணிக்கை 73.9 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியா முழுவதும் நிலவும் சராசரி வெப்பநிலையானது 2100 ஆம் ஆண்டில் 2.4°C முதல் 4.4°C வரை உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.
- இதே போல், இந்தியாவில் வீசும் கோடை வெப்ப அலைகள் 2100 ஆம் ஆண்டில் மூன்று மடங்காக உயரும் என்றும் கணிக்கப் பட்டுள்ளது.
- பருவநிலை மாற்றத்தின் பின்னணியில் 2050 ஆம் ஆண்டில் உலகளாவிய உணவு உற்பத்தி 2010 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட சுமார் 60% அதிகரிக்கும்.
- கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்காவில் 28 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உட்பட உலகளவில், பருவநிலை மாற்றத்தின் காரணமாக சுமார் 70 மில்லியன் மக்கள் பசியால் பாதிக்கப் படுவார்கள்.

## உலகளாவிய 2000 பொது நிறுவனங்களின் பட்டியல்

- போர்ப்ஸ் நிறுவனமானது, விற்பனை, லாபம், சொத்துக்கள் மற்றும் சந்தை மதிப்பு ஆகிய நான்கு அளவுருக்களைப் பயன்படுத்தி உலகின் மிகப்பெரிய 2000 பொது நிறுவனங்களை தரவரிசைப் படுத்துகிறது: .
- முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனமானது, இந்தப் பட்டியலில் இரண்டு இடங்கள் முன்னேறி 53வது இடத்தைப் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து பாரத் ஸ்டேட் வங்கி 105வது இடத்திலும், HDFC வங்கி 153வது இடத்திலும், ஐசிஐசிஐ வங்கி 204வது இடத்திலும் உள்ளன.
- பெர்க்சயர் ஹாத்வே நிறுவனம் முதல் முறையாக இந்தப் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தது.
- சீனாவின் தொழில்துறை மற்றும் வணிக வங்கியானது, தொடர்ந்து ஒன்பது வருடங்கள் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருந்த பிறகு தற்போது 2வது இடத்திற்கு தள்ளப் பட்டது.
- சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்த எண்ணெய் நிறுவனம் (சவுதி அராம்கோ) 3வது இடத்தைப் பிடித்தது.

| Indian firms | Position |
|---|---|
| Oil and Natural Gas Corporation | 228 |
| Housing Development Finance Corporation Ltd | 268 |
| Indian Oil Corporation | 357 |
| Tata Consultancy Services Ltd | 384 |
| Tata Steel | 407 |
| Axis Bank | 431 |

## உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள்

- உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் (WESP) என்ற ஒரு அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையினால் (DESA) வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு உலகப் பொருளாதாரம் 3.1 சதவீதம் மட்டுமே வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- முன்னதாகக் கணிக்கப்பட்ட ஜனவரி மாத வளர்ச்சி 4.0 சதவீதமாகும்.
- ரஷ்யா-உக்ரைன் மோதல் உலகம் முழுவதும் உள்ள நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பாதித்தாலும், இந்தியா இன்னும் உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாகவே உள்ளது என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியா 6.4 சதவீதம் வளர்ச்சி அடையும் என இந்த அறிக்கையில் கணிக்கப் பட்டுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டில் கணிக்கப்பட்ட 8.8 சதவீதத்தை விட மிகவும் மெதுவான வளர்ச்சியாகவே உள்ளது.

## முக்கியப் பயிர்களின் உற்பத்தி குறித்த மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகள்

- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகமானது, 2021-22 ஆம் ஆண்டிற்கான முக்கிய விவசாயப் பயிர்களின் உற்பத்தி குறித்த மூன்றாவது முன் கூட்டிய மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்திய நாட்டின் உணவுத் தானிய உற்பத்தியானது 314.51 மில்லியன் டன்களாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- இது சாதனை அளவை எட்டியதாக உள்ளது.
- இது 2020-21 ஆம் ஆண்டில் பதிவான உணவு தானிய உற்பத்தியை விட 3.77 மில்லியன் டன்கள் அதிகமாக உள்ளது.
- 2016-17 முதல் 2020-21 வரையிலான முந்தைய ஐந்து ஆண்டு காலத்துடன் ஒப்பிடச் செய்கையில், 2021-22 ஆம் ஆண்டின் சராசரி உணவு தானிய உற்பத்தியானது 23.80 மில்லியன் டன்கள் அதிகமாக இருந்தது.
- மக்காச்சோளம், அரிசி, எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், கடுகு வகை, உளுந்து, கரும்பு மற்றும் கடுகு ஆகியவற்றின் உற்பத்தியில் சாதனை அளவிலான உற்பத்தியானது பதிவாகியுள்ளது.

## உலக விமானப் படை திறன் குறியீடு 2022




- ❖ உலக நவீன இராணுவ விமான இயக்குநரகமானது (WDMMA) 2022 ஆம் ஆண்டின் உலக விமானப் படைத் திறன்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- ❖ உலகின் பல்வேறு நாடுகளின் பல்வேறு விமானச் சேவைகளின் மொத்தப் போர் வலிமையின் அடிப்படையில் இந்திய விமானப் படையானது (IAF) உலக வான்வழிப் பாதுகாப்புத் திறன் குறியீட்டில் மூன்றாவது இடத்தில் வைக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையானது, இந்திய விமானப் படையை (IAF) சீன விமானப்படை சார்ந்த ஆயுதப் படைகள் (PLAAF), ஜப்பான் வான்வழி சுய-பாதுகாப்புப் படை (JASDF), இஸ்ரேலிய வான்வழிப் பாதுகாப்பு சார்ந்த ஆயுதப் படைகள் மற்றும் பிரெஞ்சு வான் மற்றும் விண்வெளிப் படை ஆகியவற்றிற்கு மேலான இடத்தில் வைத்துள்ளது.
- ❖ அமெரிக்க விமானப் படையானது முதலிடத்திலும், அடுத்த இடத்தில் ரஷ்ய நாட்டின் விமானப் படையும் உள்ளன.

## வேலை நிலை பற்றிய அறிக்கை

- ❖ சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஒன்பதாவது உலக வேலை பற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிற்கும் 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கும் இடையில் 2 கோடி வேலைகள் இழக்கப்பட்டிருக்கலாம்.
- ❖ குறைந்த & நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வேலை நேரங்களில் நிலவும் பாலின இடைவெளியில் சரிவு ஏற்பட்டுள்ளது.
- ❖ பெருந்தொற்றிற்கு முன்னர், அறிக்கையில் கருத்தில் கொள்ளப்பட்ட முழு கால கட்டத்திலும் பணி புரிந்த ஒவ்வொரு 100 பெண்களுக்கும் சராசரியாக 12.3 பெண்கள் தங்கள் வேலையை இழந்திருப்பர்.
- ❖ பெருந்தொற்றிற்கு முன்னர், அறிக்கையில் கருத்தில் கொள்ளப்பட்ட முழு கால கட்டத்திலும் பணி புரிந்த ஒவ்வொரு 100 ஆண்களுக்கும், சராசரியாக 7.5 ஆண்கள் வேலையை இழந்திருப்பர்.


- "பணக்கார மற்றும் ஏழ்மையான நாடுகளுக்கு இடையே ஒரு பெரிய மற்றும் வளர்ந்து வரும் வேறுபாடு" மீட்சியினைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

## டைம் இதழின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களின் பட்டியல்

- இந்தப் பட்டியலானது முன்னோடிகள், சிறப்பு நபர்கள், கலைஞர்கள், டைட்டன்ஸ், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் என ஆறு வகைகளாகப் பிரிக்கப் பட்டு உள்ளது.
- இந்தியத் தொழிலதிபர் கௌதம் அதானி, உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கருணா நுண்டி, காஷ்மீரைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் குர்ரம் பர்வேஸ் ஆகியோர் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

## பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2021

- 2021 ஆம் ஆண்டு பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டில் இந்தியா 54வது இடத்தில் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியா 46வது இடத்தில் இருந்தது.
- இது உலகப் பொருளாதார மன்றத்தால் வெளியிடப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு குறியீட்டில், ஜப்பான் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்தப்படியாக அமெரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★